T. 3660

மாஜினியின் சரித்திரமும்

மனிதர் கடமைகளும்.

எம். ஆர். ஜம்புநாதன்,

சத்தியார்த்த பிரகாசம், திரிமூர்த்தி உண்மை, சிவவேதம்,

யோகாசனங்கள், குலிஸ்தான், விவேகானந்தர் சரித்

திரம் முதலிய நூல்களை ஆக்கியோன் எழுதியது.

OFFICE OF THE CURATOR
GOVT. ORIENTAL MA[illegible]
Ac 19873
2 6 [illegible] 1970

M. R. JAMBUNATHAN
Radha Nivas, 375, 1st Road
Khar, BOMBAY-52
Phone: 533767

சூடன் அண்டு கம்பெனி

14, பள்ளியப்பன் தெருவு, சென்னை.

1931

உரிமை பதிவு செய்தது.] [விலை ரு. 2.

THE LIFE OF MAZZINI
and
THE DUTIES OF MAN

BY

M. R. Jambunathan.

மாஜினி சரித்திரமும்
மனிதர் கடமைகளும்.

Choodan and Company,

Sowcarpet, : : Madras.

பொருளடக்கம்.

அத்தியாயம் 1.

பக்கம்

வாலிபப் பருவம்—கலாசாலை மாணவன்-தேசியமே சாஹித்தியம்—சிறைச்சாலை—அஞ்ஞாதவாசம். ... 1 — 8

அத்தியாயம் 2.

1831-ம் வருஷப் புரட்சி—நவீன இதாலி-அதன் நோக்கங்கள்—தேசத்திலே நம்பிக்கை-கடமையின் உணர்வு—தேச ஐக்கியம்—இரகசிய சங்கங்கள். ... 9—20

அத்தியாயம் 3.

மார்செல்—இளம் இதாலி—அரசருக்குக் கடிதம்—மாறுவேஷம். .... 20—27

அத்தியாயம் 4.

மாறுவேஷம் — மனோ கஷ்டங்கள் — வைதீகமும் தேசபக்தியும்—புரோகிதர்களே—தேசபக்தர்களே—துக்கநிலை—அமுத மொழிகள். ... 27—37

அத்தியாயம் 5.

பிரான்ஸ்—வால்டைர்—மான் டிஸ்கியோ மனோ ஆராய்ச்சி — உபதேசம் — ஸ்விட்ஜர்லண்டு. ... 37—46

அத்தியாயம் 6. பக்கம்

லண்டன்—மனக் கலக்கம்—கடிதங்கள்—சாஹித்தியம். ... 46 — 58

அத்தியாயம் 7.

புரட்சி—இளம் இதாலி. .... 58 — 66

அத்தியாயம் 8.

சுய சரிதை — பிரார்த்தனை — புரட்சி—புகையிலைப்போர் — மன்னனின் துரோகம்—அனித்தியக் குடியரசு—தேசீயப்போர். ... 67 — 85

அத்தியாயம் 9.

லண்டன்—தாய் மறைவது—வேதாந்தம்-மிதவாத தந்திரம் — கடுங்கொள்கை — என் நோக்கம். ... 85 — 96

அத்தியாயம் 10.

தொழிலாளிகளே—கல்வி-விண்ணப்பம்-உபதேசம். .... 97 — 126

அத்தியாயம் 11.

ஈசன் — வழிபடும் முறை — வைதீகர்கள் தோல்வி — பூமி கனவல்ல—சுதந்திர மென்ப தென்ன—சுவர்க்கமும் பூமியும் ஒன்றே—சத்தியத்தால் கொடுமையை எதிர். .... 127—147

அத்தியாயம் 12.

சட்டம்—உண்மையை உணர்—சர்வஜன சம்மதம்—மனச்சாட்சி—அறிவுடைய ஜீவன்-ஒழுக்கத்தின் முன்னேற்றம். .... 147—163

அத்தியாயம் 13. பக்கம்

சனசமூகமும் நமது கடமையும்—தேச பக்தி—உபாசனைகள்—சமூக ஐக்கியம்—அந்நியர் வியாபாரம்—பிறற்கென வாழுங்கள். .... 163—180

அத்தியாயம் 14.

தேசக் கடமை—இதாலிய நிலைமை—தேசத்தை நேசியுங்கள்—பிளவுகள் வேண்டாம்—தேசமென்பதென்ன—இதாலியின் சிறப்பு—சுதந்திரத்தின் புனிதம். .... 181—196

அத்தியாயம் 15.

குடும்பமும் கடமையும்—பெண்களின் பெருமை—குழந்தைக்கு தேசபக்தி—ஆண் பெண் சமத்துவம்—குடும்ப வாழ்க்கை—புத்திரச் சிறப்பு. .... 196—208

அத்தியாயம் 16.

உங்கள் கடமை—சுதந்திரக் கல்வி—சமூக ஐக்கியம்—புராதீனக் கொள்கை—மனித உயர்வு—எதிர்கால தர்மம். .... 209—225

அத்தியாயம் 17.

சுதந்திரம்—அறிவுப் பயிற்சி—சமூக ஆதாரம்—சர்க்கார் விளக்கம்—இறைவனே தலைவன்—உங்கள் உரிமைகள்—சுதந்திரத்தின் உண்மைப் பொருள். .... 225—248

அத்தியாயம் 18. பக்கம்

கல்வி—கல்வியும் கற்பனையும் — அரசுரிமை தத்துவம் — தேசியக் கல்வி — சுதந்திர கர்ஜனை. .... 249—258

அத்தியாயம் 19.

பொருளாதார பிரசினை—அறிஞரும் செல்வமும்—முதலாளியும் தொழிலாளரும்-தொழிலாளர்கள்—அபிவிருத்தி—பூஸ்திதி. .... 258—269

அத்தியாயம் 20.

பூஸ்திதி—பொது உடைமைக் கொள்கை-தொழிலாளர் அடிமைகளா?—ஆதிக்கம் வேண்டாம்—தொழிலாளர் கடமை. .... 269—278

அத்தியாயம் 21.

சங்க அமைப்பு — முயற்சித் திருவினையாக்கும். .... 279—283

அத்தியாயம் 22.

வேண்டுகோள் — போலிகளை நம்பாதீர்கள்—புனித வாழ்க்கை — ஒற்றுமையாலேயே விடுதலை. .... 283—292

முகவுரை.

"தமிழ்நாடு" பத்திரிகையின் வாரப் பதிப்பிலே மாஜினியின் சரித்திரமும் மனிதர் கடமைகளும் தொடர்ச்சியாக சில வருடங்கள் பிரசுரமாயிற்று. பல நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பொழுது இவை புஸ்தக வடிவமாக வெளி வருகின்றது.

மாஜினியைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. உலகத்திலுள்ள அறிஞர்கள் எல்லாம் அவரை அறிவார்கள். இருள் நிறைந்த நாடுகள் எல்லாம் அவரை இகத்தைக் காக்கவந்த அவதார புருஷன் என்பார்கள். அவர்கூறிய மொழிகளை தேசியம் கனிந்த மறைகள் என தரணியிலுள்ளோர் புகழ்வதுண்டு. அவரை, விரும்பாத சத்துருக்களும், வையகத்திலே விளங்கிய புனித புருஷர்களில் ஒருவர் எனச் சொல்வார்கள்.

ஐரோப்பாவிலே 19-வது நூற்றுண்டிலே தோன்றி நாட்டிலுள்ள மகா சனங்கள் எல்லாம் தலையோங்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் அவர் செய்யாத செயலே இல்லை. அச்செயல்கள் செய்யுங்கால் சமர் செய்வது அவசியமெனத் தோன்றினுல் அதைச் செம்மையாக்கவும் அவர் பின்வாங்கவில்லை. அச் சமரிலே சிறந்தது மக்கள் மனத்திலே நிறைந்துள்ள நீதியற்ற நம்பிக்கையுடன் புரிந்த சண்டையேயாகும். நீதிகுறைந்த நம்பிக்கை நாளடைவில் பெரும் வழக்கமாகி, வழக்கம் கடைசியில் தர்ம

சின்னமாக மாறிவிடும். நீதியற்ற நம்பிக்கை தர்ம சின்னமானல் தீமைக் குவியல் தூய வேஷமணிவதாகும். தூய வேஷத்தால் தரணியிலுள்ளோர்களை ஏமாற்றுவது ஒரு புறமிருக்க உன்னையும் தவிக்கச் செய்யும்; தரணியில் தர்மத்தின் பெயரால் நிகழும் அதர்மங்களுக்கும் தலைவன் தாழ்ந்தவன் எனத் தோன்றும் தீமைகளுக்கும், சாதிமத வேற்றுமையான எல்லா சச்சரவுகளுக்கும் நீதியற்ற நம்பிக்கையே யாகும். ஆதலால் நீதியற்ற நம்பிக்கையை நாட்டினின்று களைந்து எல்லாத் துறைகளிலும் அதை நாசமாக்க வேண்டுமென கர்ச்சனை செய்தார்.

நீதியற்ற நம்பிக்கையால், நாடு படமுடியாத கஷ்டங்களை அனுபவிப்பதுபோல், சாஹித்ய வேலையில் சாய்ந்து மகா சனங்களின் தலைவர்கள், மாரீசனைபோல் சனங்களை ஏமாற்றுகிறார்கள் என மாஜினி மதிப்பது வழக்கம். சனங்கள் எல்லாம் சீரழிந்த நிலையிலிருக்குங்கால், சாஹித்திய சேவையால் செம்மையாக முயல்வது, வீடு நெருப்புப் பற்றி எரியுங்கால் சுந்தர காண்டம் பாராயணம் செய்வது போலாகும். மனிதர்கள் பசித்து படுங் கஷ்டங்களிருக்குங்கால், மொழி யலங்காரத்தில் மயக்க முயற்சிப்பது மதியீனமாகும். சாஹித்தியத்திலே மொழியழகைக் காட்டிலும், மர்மமாய் மலரும் உணர்வே வேண்டுமென பகிரங்கஞ் செய்து, நான் இனிக் கவிச் சக்கிரவர்த்தியாக விரும்பவில்லை என நிலையாகி தேசப் பணியிலேயே தனது வாழ்நாட்களை எல்லாம் கழித்தார்.

மாஜினி மேன்மையாக செய்துள்ள எல்லாப் பணிகளையும் நாம் விளக்கமாய் இந்நூலில் புகன்றுள்ளதால் அதைப்பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமென எண்ணவில்லை. ஆனால் அவரின் நல்ல நினைவுகளை நிறைவேற்ற அவர் செய்த எல்லா செயல்களையும் சரி என ஒரு பொழுதும் நாம் சொல்லப் போவதில்லை. அச் செயல்களில் முதன்மையாயுள்ள, இரகசிய சங்க முயற்சியையும் குரங்குச் சண்டை குணத்தையும் நாம் சதா காலமும் கண்டனஞ் செய்வோம்.

இரகசிய சங்கம் அவசியமெனவும், அதனால் நமது நோக்கத்தை அடையலாம் என மாஜினி மொழிவதின் நீதியை நாம் உணரமுடியவில்லை. நான் இரகஸியமாகவே ஒரு வேலையைச் செய்வேன் என ஒருவன் உரைத்தால் நீ பகிரங்கமாய்ச் செய்ய பயப்படுகிறாய் என நாம் நிச்சயமாய்ச் சொல்லிவிடலாம். இரகசியமாய்ச் செய்யும் எந்த வேலையும் பேடி சுபாவத்தையேப் புலனாக்கும். பேடி குணமுள்ளவன் கள்ளங் கபடம் வஞ்சகத்தை அதிகரிப்பான். பரஸ்பரம் நம்பிக்கையை பாழாக்குவான். புனித வாழ்க்கை பிரியும். எங்குமுள்ள பரமனையும் அவமதிப்பதாகும். நாஸ்திகம் நிலவ உதவி அளிப்பதாகும். ஆனால் தெய்வாதீனமாக மாஜினி, பேடியில்லை, பயம் நிறைந்தவரில்லை, பரம நாஸ்திகருமில்லை. கள்ளங் கபடமும் அவரிடம் சூன்யம். ஆனால் இரகசிய சங்கத்தின் அவசியத்திற்கு அவர் சொல்லும் காரணங்கள் ஒருபொழுதும் நீதியாகாதென சற்று சிந்தனை செய்தால் புலனாகும்.

அவர் இரகசிய சங்கத்தின் மொழிகளை நாம் விரும்பாதது போல், குரங்குச் சண்டைசெய்யவும் என அவர் கூறிய மொழிகளை எவரும் கனிந்த மொழிகள் எனக் கனவிலும் கருதார்கள். பகிரங்கமாய் நிலையான திட்டங்களுடன் சதாகாலமும் சமர் செய்யும் பயிற்சியுள்ள வீரர்களுடன், மர்மமாய் நிலையற்ற நியமங்களுடன், திடீரென பழக்க மன்னியில் குரங்குச் சண்டைசெய்தால் ஜயம் பெறலாம் என்பது கனல் சலத்தைக்கண்டு கனிந்த நீர் எனக் கருதுவதாகும். குரங்குச் சண்டையில் ஒருவேளை ஜயம் தோன்றினும், நமக்கும் இதனால் வெற்றி தோன்றும் என ஒரு கட்சி சதாகாலமும் கிளம்பி நாட்டின் நிலையான சாந்தத்தை அழித்துவிடும். ஒருவேளை தோல்வி தோன்றினாலோ அதனால் பெருங் கஷ்டங்கள் எங்கும் புலனாகி, சாதாரண சனங்கள் பெரும் திகிலடைந்து நித்தியமான அச்சத்தில் சாய்ந்து பேடிகளாகவும் மாறலாம். இக்காரணங்களை உத்தேசித்து நாம் அவர் குரங்குச் சண்டைகளைப்பற்றிக் கூறுவதை ஒருபொழுதும் சாத்தியம் என சிந்திக்கவில்லை. அல்லது சீலமான வழி எனவும் சொல்ல மனஞ் செல்லவில்லை.

அவரின் இவ்விரண்டு செயல்களின் சொற்கள் நீங்கலாக, மற்றவைகளெல்லாம் பொன்னேபோல் போற்றப்படவேண்டும். நாம் அதன் பெருமையைப் பற்றி புகலவேண்டுமென எண்ணுவதற்குள் நம்முடைய மனம், புராதனத்தில் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையே நம்முடைய மனத்திலாகின்றது.

மாஜினியைப் படிப்பவன் ஒரு வேளை கீதையைப் படிக்காமலிருந்த போதிலும் குற்றமில்லை. கீதையை அறிய வேண்டுமானால் மாஜினியின் மொழிகளை மனத்திலாக்கவேண்டும். பகவத் கீதைக்கு உரை என பிரசுரமாகும் நூல்களெல்லாம் உயிரன்னியிலுள்ள உடல் போலவே விளங்குகின்றன. ஆனால் மாஜினியைப் படித்து பகவத் கீதையின் சாரத்தை உண்மையாய் அறியலாம். பகவத் கீதை பாஷ்யம் எழுதியவர்களெல்லாம் சூட்சமமான பொருள்கள் தத்துவங்களை யறிந்து, மொழி இலக்கணம் இலக்கியங்களைக் கற்று, புவியிலுள்ள மதங்களை யெல்லாம் பார்த்து மூக்கைப் பிடித்து மூச்சின் மர்மத்தைக் கற்று, ஹடயோகம், கர்மயோகம் பயிற்சி செய்து ஞானயோகம் சன்னியாசம் பெற்ற இந் நிலைகளினின்றே குரு க்ஷேத்திரத்தில் கூடிய மனித கோடிகளின் உண்மை நிறைந்த கீதையை கண்டார்களே யொழிய, மாஜினியைப்போல் துர் யோதனர்களின் கஷ்டங்களை அனுபவித்து, மனிதர்களின் ஏற்றத் தாழ்வுகளை அறிந்து, மாந்தர்களின் துக்கங்களை யெல்லாம் செவியுற்று எல்லாச் சித்தங்களையும் சிந்தனை செய்து யுத்தகளமான குருக்ஷேத்ரத்தில் நின்று தன்னுயிர் இனி இல்லை என்பதையும் கண்டு, பசி தாகம் வருந்தி எண்ணிறந்த சித்திரவதைக் குள்ளாகி சுவாத்மானுபவத்தால் அறியவில்லை. இதுவரை பகவத்கீதை பாஷ்யஞ் செய்தவர்கள் தங்கள் புத்தியைப் பெருமை யாக்கினார்களே யொழிய, அதன் மர்மத்தை அறியும் வன்மை அவர்களிடமில்லை. தங்கள் உணர்வை தெளிவாக்கும் திடத்தைத்

தவிர மாஜினியைப்போல் மனிதகோடிகளின் உணர்வை மலரச் செய்வது அவர்கள் வன்மை கடந்ததாகும். குருடன் காட்சியை, செவிடன் கானத்தை விளக்குவதுபோல், சுதர்சனம் ஏந்திய கிருஷ்ணனின் கீதையை மானிட வாழ்க்கையைத் துறந்தவரும், பரமபதத்தையே நாடுபவரும் வியாக்கியானஞ் செய்தார்கள். கிருஷ்ணன் விரும்பாத துரியோதனுதி அரசர்கள் நிலையினின்று, பீஷ்மரின் போக்குப் போல், பாஷ்யம் எழுதினுர்களே யொழிய், விதுரன், குசலன் நண்பராய்க் கஞ்சி குடித்து குதிரைப் பாகனுன கிருஷ்ணனின் நிலையி லுரைக்கும் தன்னந் தனிப்பாக்கியம் மாஜினியுடையதாகும். அதிகங் கற்றவர்களெல்லாம் விபசாரிகளுக்கு ஒப்பாகும். எவர் அதிகம் பொருள் கொடுப்பார்களோ அங்கு செல்வார்கள். நவீனமாய் பகவத்கீதையை பிரசங்கஞ் செய்பவர்கள் அங்ஙனமே. நமது நாட்டில் அறிஞர்கள் அதிகமிருந்து நாம் இந்த இழிந்த நிலையிலிருப்பதற்கு அவர்களின் இந்தப் பேய்க் குணங்களேயாகும். ஆனுல் மகா ஜனங்களும் இதன் உண்மையை யறிய மாஜினியைப் படிப்பது பெரும் சந்தர்ப்ப மளிக்கும்.

இனி நூலில் அடங்கியுள்ளதை பகவத் கீதையுடன் இணைத்துச் சுருக்கமாய்க் கூறுவோம்.

முதல் ஒன்பது அத்தியாயம் அவர் சரித்திரத்தைக் கூறும். இச் சரித்திரத்திலே, அவர் சொந்த வாழ்க்கையைப் பற்றி அதிகம் கூருமல், பொதுஜன ஊழியத்தில் அவர் பெருமையாய்ச் செய்த பெருஞ் செயல்களையே புலனுக்கி யுளோம். இந்த வாழ்க்கை அர்ச்சுனன் வாழ்க்கை

யைப்போலத தோன்றும். ஆனால் அவர் சொல்லும் மொழிகள் கிருஷ்ணமுதம்போல் கவனித்தால் கனிந்து உருகும். மற்ற அத்தியாயங்களில் சொல்லியவற்றை நோக்குவோம்.

நீ செய்யும் செயல்களில், பற்றன்னியில் சதாகாலமும் சாய்ந்து, சுக துக்கம் களைந்து, நீர் அனலுக்கஞ்சாமல், முன் செல்லவும் என ஸ்ரீ கிருஷ்ணன் கூறியதையே, உரிமைக் காகவும், உற்சாகத்திற்காகவும் போராடாமல், களிப்பு கலக்கம் கழிந்து கஷ்டம் கொடுமைக் கஞ்சாமல் கடமை செய்யவும் என மாஜினி கர்ச்சனை செய்துளார்.

சும்மாயிருக்கவேண்டாம், நானும் சும்மாயிராமல் செயலையே செய்கிறேன், இச்சக மில்லையேல், சுவர்க்கமு மில்லை. ஆதலால், இச்சகத்திற்கான செயல்களை செய்து சிறப்பாகவும் என கீதை கூறுவதையே, சுவர்க்கத்தையும் சுகத்தையும் பிரிக்கவேண்டாம். இச்சகமும் சர்வேச னுடையதாகும். சுவர்க்கஞ் செல்ல இதுவே வழி. அதற் கான அவர் எப்பொழுதும் செயலில் சாய்ந்ததுபோல் நீ செய்வதும் உன் கடமை என இந்நூல் கூறும்.

உலகம் ஒரு சக்கிரத்தைப்போல் சுழலும். உணவி னின்று உலகம், உணவு மழையினலாகும். மழை யாகத் தால் மலரும். யாகம் செயல்க ளின்ருகும். செயல் களின் தலைவன் சர்வேசனுகும். சர்வேசன் சாசு வதத்தினின்ருவன். இச் சக்கிரத்தில் சாய்ந்தே ஒரு வன் செல்லவேண்டும் என்பதையே, சீவன் என்பது சட்டம். அச் சட்டமில்லையேல் வாழ்க்கை இல்லை. இச்

சட்டம் சர்வேசனிடமே சிறந்தது. இதைச் சரிவர அறிந்து, சீவனைச் செம்மையாக்கினால் ஒருவன் சிறந்த நிலையில் சாய்வான் என, புது மொழியில் இங்கு புலனாகும்.

உமது சரீரத்தில் எல்லாத் தேவர்களையும் பொருள்களையும் பெருமைகளையும், புலவர்களையும், கை, கால், முகம், கண், பற்பல வடிவங்களையும் வையகத்தையும் கண்டு, உமது அடி, நுனி, நடு நான் காணவில்லை என கீதையில் கூறியதுபோல், மாஜினி ஈசன் எங்கும் நிறைந்துளார். அவர் ஐக்கிய நினைவே மனித சமூகமாகும். ஒரு நோக்கத்தில் பல அங்கங்களிருப்பதுபோல் ஒருமையான ஈசனிலேயே உலகிலுள்ள மனித சமூகங்களைக் காண்கிறோம். ஒரு தலைவனும் ஆட்டு மந்தையுமாகும். ஆதலால் அடி முடி நடுவில்லாத மகா ஜனங்களை சகோதரர்கள்போல் எண்ணி அவர்களின் நன்மைக்காகப் பாடுபட்டு அவர்களைத் துதிசெய்யவும் என மனிதர் கடமையில் விளக்கமாயுரைத்துளார்.

அர்ச்சுனா! நீ தர்மத்திற்காக உழைக்கவும். அதர்மத்தை யழிக்கவும். தர்மம் என்பது சூட்சுமமான பொருளாகும். சனகரும் லோக சங்கிரகத்திற்காகவே சிறந்தார், தர்மத்திலே தலையோங்க நிலையான நினைவு வேண்டும், எனக் கூறியதையே,தேசம் என்பது ஒரு தேவாலயமாகும். தேவாலயத்தின் உச்சியில் ஈசன் உளார். நாட்டிலே சமத்துவத்திற்கு மாறான எல்லா மூடப் பழக்கங்களை யழிக்கவும், அதற்காக நிலையான நினைவுடன் நீ உழைக்கவும் என்பதின் விளக்கத்தையே ஒரு அத்தியாயத்தில் காண்போம்.

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் சமமாய் நோக்கி உயர்வு தாழ்வு என்பதை நீக்கி சமத்துவமாய் செம்மையாவதே சிறந்த நிலை எனச் சொல்லும் கிருஷ்ணன் மொழிகளையே மாஜினியானவர் தனிமையாய் அடிமைபோல் எண்ணும் ஸ்திரீகளை மரியாதையுடன் மதித்து சமத்துவமாய் நடத்தவும். ஈசன் முன்னிலையில் ஆண், பெண் எனவும் வேற்றுமையில்லை, என அற்புதமா யுரைத்துள்ளார்.

ஆன்மாவினாலே ஆன்மாவை எழுச்சியாக்கவும். ஆன்மாவே உனது நண்பனும் பகைவனு மாவன். தன்னுடைய ஆன்மாவை அறிந்து அதற்கேற்றவைகளைச் செய்பவனுக்கே ஆன்மா நண்பன் போலாவான். மற்றவர்களுக்கில்லை யென்பதையே மாஜினியானவர் உனக்கு உயிர் உண்டு, உன் உயிரும் ஒரு சட்டத்தில் உட்பட்டது, நீயே அபிவிருத்தியாகவும் இதுவே உன் கடமை.' உன் மனத்திலே மலரும் பெரும் நோக்கங்களை யெல்லாம் சிதறடிக்காமல் செம்மையாக உழைக்கவும் என, உன் கடமைகளை ஓங்கிக் கூறியுளார்.

பசை பிரியவும். பந்தம் வேண்டாம். இது தான் இனி அதிகமில்லை என்னும் எண்ணத்தை விட்டுவிடவும். எல்லா சீவன்களினும் என்னையும், என்னை எல்லா ஜீவன்களினும் அறிபவனே விடுதலைபெற்ற என்னில் சாய்ந்தவன் என கீதை கூறுவதையே மாஜினி சுதந்திரம் எனச் சொல்லி, அறியாமை அதோகதியினின்று அகலவும், மனிதன் இவ் வதோகதியினின்று நீங்கவில்லையேல் சடபதார்த்

தத்தைப்போ லாவான். அதனால் அவன் இயற்கைக்கு விரோதமாகி, ஈசன் சட்டத்திற்கு மாறாகி, கஷ்டங்களுக் குள்ளாவான் என கர்ச்சனை செய்துளார்.

இப் பகவத்கீதையின் அமுதம் நிறைந்துள்ள இந் நூலைப் படித்து, சுக துக்கம் கழிந்து, பசை பிரிந்து, பயம் கோபம் நீங்கி, நிலையான நினைவுடனாகி, எங்கும் அன்பு நிறைந்து, வெறுப்புக் களைந்து, சிறிய விஷயங்களில் ஆத் மாவை அழித்து புத்தியை படுகொலை செய்து ஞாபக மழித்து மயக்கம் புலனுக்கும் கோபாவேசத்தினின்று நீங்கி, தனக்குத் தானே துணையாகி, தனது அறிவை பெருக்கிக்கொண்டு, சதாகால சர்வேசனில் சாய்ந்து ஒரு பொழுதும் சும்மாயிராமல் பூவுலகை எல்லாம் ஆட்டிவைக் கும் ஏதாவது செயலில் சாய்ந்தவண்ணமாய், நிஷ்காம கர்மத்துடன் கடமை என்னும் தன் செயல்களைச் செய் வதற்கு உற்சாகம் உதயமானால், அதுவே நமக்குப் பேரா னந்தத்தை அளிக்கும்.

அதற்கேற்ற வன்மையை தமிழர்களுக்கு அளிக்க வேண்டுமென, ஈசனை வணங்கித் துதிசெய்து தமிழ் மக் கட்களின் ஆதரவை நாடுகிறோம்.

சென்னை,
1—1—1931.

எம். ஆர். ஜம்புநாதன்.

மாஜினியின் சரித்திரம்

அத்தியாயம் 1.

வாலிபப் பருவம்—கலாசாலை மாணவன்—தேசியமே சாஹித்தியம்—சிறைச்சாலை—அஞ்ஞாதவாசம்.

வாலிபப் பருவம்

ஜோசப் மாஜினி 1805-ம் வருடம் ஜுன் மாதம் 2-வது தினத்தில் ஐரோப்பாவிலுள்ள ஜினீவா நகரத்தில் பிறந்தார்; அவர் தந்தை கலாசாலை யொன்றில் பண்டிதர் பதவியை வகித்து வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு ஏழை எளியவர்களுக்கு உபகாரஞ் செய்வதில் புகழ்பெற்றவரா வார். அவர் தாயோ வீட்டை விட்டு வெளிச் செல்வதில்லை யாயினும் இராஜீய உலகில் நடைபெறும் எல்லா சச்சரவு களையும் அறிந்து சதா காலமும் ஐரோப்பாவில் அக்காலத் தில் நடைபெற்ற கிளர்ச்சிகளைப் பற்றிக் கூறுவது வழக் கம். மாஜினியானவர் தாயினிடமிருந்தே தேச பக்தியை யும், அரசியல் விஷயங்களில் ஊக்கத்தையும் பெற்றார் எனலாம். மூன்று பெண் குழந்தைகளின் நடுவே பிறந்த மாஜினி தேகவன்மை குறைந்து திடமான காயமற்றவ ராய் திகழ்ந்து, தந்தைக்கு அவைகளால் கவலையை அளித்த போதிலும், நுண்ணிய அறிவாலும் நேர்மையான குணங்

களாலும் அவரை மகிழச் செய்வார். தந்தையானவர் அடிக்கடி அவருக்கு நெப்போலியன் வீழ்ச்சியைப் பற்றியும், குடியரசைப் பற்றியும் கூறுவது வழக்கம். எல்லா ஜனங்களிடமும் சமத்துவமாய் நடக்கும் தந்தையின் குணங்களும், வீட்டிலே அடிக்கடி பேசும் புரட்சியின் கிளர்ச்சியின் விஷயங்களும், தந்தைத் திருட்டுத்தனமாய் மறைத்து வைத்திருந்த பறிமுதல் செய்யப்பட்டத் துண்டுப் பிரசுரங்களும், பழைய புராதன நூல்களுமே என்னை கவர்ந்து என் வாழ்நாட்களை மாற்றிவிட்டது என தனது இளம் பருவத்தைப்பற்றி மாஜினி கூறுவது சகஜம். அத்துடன் இரகசிய சங்கமான கார்போ நாரோவின் 1820-ம் வருஷப் புரட்சி, அமைதியாய் தான், 16 வருடம் வாழ்ந்து வந்த சீவனை பிரமிக்கச் செய்துவிட்டது. இரகசிய சங்கத்தின் புரட்சி தோல்வியாகி, கிளர்ச்சிக்காரர்கள் எல்லாம் இங்குமங்கும் ஓடிவிட்டார்கள். கையில் காசன்னியில் முகங் கலங்கி காயம் சோர்ந்து, உண்ண உணவிற்கும் அவர்கள் தவித்து ஆன்மாவும், தேகமும் இணைந்து ஒன்றுடனுக அவர்கள் மகா ஜனங்களிடம் பொருளுக் கிரங்குவதை மாஜீனி பார்த்து விட்டார். அது மனத்திலே பசுமரத் தாணிபோல் பதிந்துவிட்டது.

இந்த ஞாபகமே அவருடைய நினைவில் சதாகாலமும் சிறந்தது. தான் தேடிய அமுதம் திரண்டது என உற்சாகமானுர். புஸ்தகம் படிப்பதினின்று பிரிந்தார். தியானமாகி கவலையிலாகி அனவரதமும் தேசம் நீக்கப்பட்டவர்களின் சிந்தனையாகி, ஏன் தோற்றுவிட்டார்கள் என்னும் நினைவிலானுர். கடமை! கடமை! கடமையைச் செய்திருந்தால் தேசம் விடுதலையா யிருக்கும், அவர்கள் இங்ஙனம்

தவிக்கார்கள், எனத் திடமாகி, கருப்பு உடைகளை அணிய ஆரம்பித்து விட்டார். இக்கருப்பு உடையை அவர்கடைசி நாள்வரை விடவில்லை. தாயும் இவர் ஒருவேளை தற்கொலை செய்து கொள்வார் எனவும் பயந்தாள்.

கலாசாலை மாணவன்

தானும் வைத்திய முறையைக் கற்கச் சென்றதும், நோயாளிகளிடம் மனம்போல் மொழிய வைத்தியர்களுக்கு உரிமை இல்லை என்பதை அறிந்து, அக்கல்வியினின்று நீங்கி சட்டக் கலாசாலையிலே சேர்ந்தார். விளையும் பயிர் முளையில் புலனுவதுபோல் இளம் பருவத்திலேயே 'பொய்' எண்ணங்களுடன் போராடினர். மதத்தைப் பற்றிப் படிக்கவேண்டுமென கலாசாலையில் வற்புறுத்தப்படவே அதற்குக் கீழ்படியாமல் புது சுதந்தர வழியை மாணவர்களுக்குக் காண்பித்தார். ஏழை எளியவர்கள் கடின பரீட்சைக் குள்ளாகும் கடும் வழக்கத்தை இளைஞன மாஜினி பகிரங்கஞ்செய்து கண்டித்தார். சர்க்காருக்குப் பயந்தே கலாசாலை உபாத்தியாயர்கள் கீழ்ப்படிந்து நடுக்கமுடன் அவர்கள் எண்ணங்களை நிறைவேற்றினர்கள். மீசையை வளர்த்தால் புரட்சிக்காரன் என ஒரு எண்ணமும் இருந்தது. மீசையை வளர்த்த ஒரு இளைஞனை துராக்கிருதமாய் தண்டனைக்கு அழைத்து செல்வது சகஜம்.

இவைகளை யெல்லாம் கீழ்ப் படியவேண்டாம், இவைகளை அழிப்பதே நமது கடமை என மாஜினி போராட்டஞ் செய்த தன்னியில் கலாசாலை இளைஞர்களுக் கெல்லாம் தலைவன் போல் திகழ்ந்தார். கருத்தகண், மின்னும் விழி, நிமிர்ந்த நெற்றி, இருண்ட ரோமம், சிந்தைமுகம்,

சாந்த நகைகளால், சிறுவர்களை யெல்லாம் வசியஞ் செய்து விடுவார். கல்வியிலே அவருக்குப் பிரியமதிகம். ஆனால் தன்னந் தனியாய் நடப்பதிலே ஆனந்தமாவார். தனிமையாய் உலாவச் செல்வதில் இரவு பத்துமணி வரையும் கழிப்பார். மரஞ் செடி, மலர்களின் நடுவே நிலவி இருள் சந்திரன் நட்சத்திரங்களில் நடந்து எல்லா மானிட சமூகங்களையும் நேரில் பார்ப்பதுபோல் எண்ணுவார். பொன், பொருள், புஸ்தகங்களை, ஏழை எளியவர்களுக்கு அளித்து உதவுவார்.

தேசீயமே சாஹித்யம்

இளைஞனாயிருக்குங் கால் அநேக நூல்களைப் படிப்பார். நாவல்களிலும் கற்பனைக் கதைகளிலும் அவர் நினைவு நாடாது. தர்ம நூல்களையும் தத்துவங்களையும் படிப்பதில் அவருக்குப் பிரியமதிகம். பிரஞ்சு நாட்டின் புரட்சி சம்பந்தமான நூல்களை மிக்க அவாவுடன் நோக்குவார். இலக்கியமும் பாஷையின் நடை எங்ஙன மிருந்தபோதிலும் அவைகளின் நோக்கத்தையும் நேர்மையுமே அவரைக் கவரும். பெருங்கவிச் சக்கிரவர்த்தியாகவேண்டுமென பெரும் அவாவை அவர் அடைந்திருந்தபோதிலும் நமது நாடு சுதந்தரம் பெற்ற பிறகே மொழி இலக்கிய சேவை புரிவேன் என விரதஞ் செய்து கொண்டார். சாஹித்திய சேவை புரிவதற்கும் நாடகம் எழுதுவதற்கும் இது தருணமில்லை எனத் திடமாய்த் தெளிவானார். எந்த நூல் தேச ஊழியஞ் செய்வதற்கும் தர்மம் புனிதமாக உதவுகின்றதோ அதுவே உண்மையான சாஹித்திய நூலென்பார்; அநியாயமும் அதிக்கிரமமும் தழைத்

திருக்குங்கால் ஆண்கள் பெண்கள் விடுதலையாக தவிக்கும் பொழுது, அநீதிகளை அழித்து மாந்தர்களுக்கு விடுதலை யடைய ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதைத் தவிர ஆசிரியர்களுக்கும் ஆசாரியர்களுக்கும் வேறு வழி இல்லை என்பார்.

இவர் இளைஞராயிருந்த காலத்தில் சாஹித்திய சேவை ரொமாண்டிகர் க்ளாசிகர் என்னும் இருகட்சிகளால் பிளவுபட்டிருந்தது. க்ளாசிகக் கட்சியார் பழைய புராண நடையிலேயே செல்லவேண்டு மென்பார்கள். ரோமாண்டிகர், மொழி என்பது செவிக்கினிமையாய் மலர்வதைவிட ஜனங்களுடைய வாழ்க்கைக்கு உதவ வேண்டுவதே அதன் நோக்கம் என்பார்கள். மாஜினிக்கு ரோமாண்டிகர் கட்சியிலேயே விருப்பமதிகம். அவர்கள் பத்திரிகையில் தேசத்தின் நிலையைப் பற்றி அடிக்கடி வியாசம் எழுதுவார். தேசப் பிரஷ்டஞ் செய்யயபட்டவர்களுக்கு அனுதாபங் காட்டுவார். அரசியல் மாற்றமடைய சமூகம் நிலைகளும் சிதறவேண்டுமென்பதே அவர் சித்தம். இளைஞனயிருக்கும் பொழுதே நவீன இடாலி என்னும் புதிய மந்திரத்தை உபதேசஞ் செய்தார்.

சகோதரர்களே! உஙகள் தேசத்தை நேசியுங்கள். தேசமே நமது வீடாகும். ஈசனால் நிலைக்கப்பட்ட இந்நிலயமே நமது குடும்பமும், கீர்த்தியை யளிக்கும் கிருகமுமாகும். நீங்கள் ஜனங்களை யறியவும், ஜனங்கள் உங்களை அறியட்டும். மொழியினால் உங்கள் வலிமையை யெல்லாம் வீணாக்கவேண்டாம். இளைஞரான சிறுவர்களே தேசத்தைச் சிறப்புடன் செய்வார்கள். 1813-ம் வருடத்தில் சுதந்தர யுத்தத்தின் பொருட்டு கலாசாலையினின்று நீங்கினார்கள்.

தேசீயம் எனச் சொன்னவுடன் தேசத்திலே திகழச் செய்து ஊடுருவிப் பாயும் தெள்ளமுதத்தை சற்றுச் சிந்தனை செய்யவும், சுதந்தரம் என்னும் நாதம் கிளம்பியவுடன் ஜர்மனிய இளைஞர்கள் ஒன்று சேர்ந்து புத்துயிர் யளித்த பெருமையை மறக்கவேண்டாம்.

இந்த நினைவுகளுடனேயே மாஜினியானவர் சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம், நாட்டின்கண் உள்ள எல்லா முதன்மையான பத்திரிகைகளில் இளைஞர்களின் வன்மையையும் கடமையையும் பற்றி எழுதலானார். இவர் எழுதும் பத்திரிகையெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

வைத்தியக் கல்வியை விலக்கிவிட்டு கலாசாலையில் படித்த பிறகு வக்கீல் தொழிலில் அமர்ந்தார். ஏழை எளியவர்களிடம் எவ்விதமானப் பொருளையும் பெறுமல் நீதிஸ்தலங்களில் வாதிப்பார். வக்கீல் தொழிலில் ஈடுபட்ட போதிலும் சதா காலமும் அவர் சிந்தனை தேசம் தலையோங்கும் முயற்சியிலேயே திகழும். தேசத்தில் நடைபெறும் அநீதிகளை யெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்ய அவர் அஞ்சுவதே இல்லை.

இரகசிய சங்கம்

அக்காலத்தில்கூட தேசம் முன்னேறுவதற்கு இரகசியமாய் உழைத்த கார்போனரி சங்கத்தில் சேர்ந்தார். இரகஸியமான சங்கத்தில் சேரும் முன் சங்கத் தலைவனையும் விதிகளையும் நான் ஒரு பொழுதும் மறக்கப் போவதில்லை என ஒவ்வொருவனும் சத்தியஞ்செய்து வாள்முன் மொழி யளிக்கவேண்டும். சங்கத்தின் விதிகளும் யதேச்சாதிகார நியமங்களும் மாஜினிக்குப் பிரியமளிக்கவில்லை.

யாயினும் தேசத்தின் விடுதலை அதன் நோக்கமென்பதைக் கருதி தானும் அச்சங்கத்தில் சேர்ந்தார். தேசத்தின் நான்கு மூலைகளிலும் மறைந்துள்ள பல சங்கங்களை ஒன்று சேர்த்து இரகசியமாய் யாவற்றையும் இணைத்து வேலை செய்யவேண்டுமென்பது அவர்கள் நோக்கம். அதுமாத்திர மன்னியில் குறிப்பிட்ட ஒரு தினத்தன்று இளைஞர்களெல்லாம் புரட்சி செய்யவேண்டுமெனவும் அவர்கள் திட்டஞ் செய்தார்கள். இதை நாடெங்கும் அறியச் செய்ய அங்கத்தினர்களெல்லாம் விதிகளுக்கு மாறுனல் என்னைக் கொலை செய்துவிடலாம் என்னும் திட்டத்திற் கேற்றவாறு அஞ்சா நெஞ்சுடன் புரட்சியைப் பரவச்செய்யப் பிரயத்தினஞ் செய்யுங்கால், சர்க்காருக்கு மர்மங்களெல்லாம் சென்று அதை ஆரம்பிக்குங் காலத்திலேயே சிதறடித்து விட்டார்கள். மாஜினி இந்த இரகசிய சங்கத்திற்கு ஆட்சேர்ப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பிடிக்கப்பட்டார். அறிவும் ஆண்மையும் நிறைந்த இச்சிறுவன் தன்னந்தனிமையாய் இரவில், ஆழ்ந்த சிந்தனையில் தோய்ந்து ஏன் நடக்கவேண்டும்? இச்சிறு வயதில் சிறுவர்கள் எதற்காக மனோமுயற்சியிலாகவேண்டும்? நாமறியாத விஷயங்களைப் பற்றிச் சிறுவர்கள் சிந்தனை செய்யவேண்டுமென நாங்கள் விரும்பவில்லை.

சிறைச்சாலை

மாஜினியை ஏன் பிடிக்கவேண்டுமென பெற்றோர்கள் வினவியதற்கு இம்மொழிகளையே ஜினிவா நகரத்து கவர்னர் கூறினர்.

மாஜினியைப் பற்றி சாவோனு என்னும் கோட்டையில் அடைத்து விட்டார்கள். சிறைச்சாலையின் சன்னல்

வழியாய் வானத்தையும் கடலையும் நோக்கி மனோ அமைதி யாகி எங்ஙனம் தப்பித்துக் கொள்வது என பல நினைவு களில் பாய்ந்தார். தன்னிடமிருந்த இதன் சம்பந்தமான எல்லாக் காகிதங்களையும் கிழித்தெறிந்து விட்டார். நீதி ஸ்தலத்தில் இவரைக் குற்றவாளி என நிரூபிக்க இரு சாட்சி களாவது வேண்டும். ஒரு சாட்சியே சர்க்காருக்குக் கிடைத்தபடியால் இவரை நீதிவழியாய் தண்டனை யளிக்க முடியவில்லை. குற்றம் புரியவில்லை என நீதிஸ்தலத்தி னின்று நீக்கப்பட்ட போதிலும் சர்க்கார் அவரை அழைத்து எங்கள் பாதுகாப்பில் நீர் தன்னந் தனியாய் ஒரு நகரத்தில் அஞ்ஞாதவாசம் புரியவேண்டும். இல்லை யேல் நாடு நீங்கவேண்டும் எனக் கூறினார்கள்.

அஞ்ஞாதவாசம்

மத்திய இட்டாலியிலேயே ஒரு புரட்சி கிளம்பவும் பிரஞ்சு சர்க்கார் இரகசிய சங்கங்களுக்கு உதவியளிப்ப தாக அறிந்து தான் பாரிஸ் நகரஞ் செல்வது நன்மை என அறிந்து 1831ம் வருடம் பிப்ரவரி மாதம் குடும்பத்தி னிடம் விடைபெற்று ஆல்ப்ஸ்மலையைக் கடந்து செல்லுங் கால் சில நண்பர்களின் மொழிகளுக் கிசைந்து, பல தேச பக்தர்கள் வாழும் லியான் நகரம் செல்ல எண்ணி பாரிஸ் போவதை நிறுத்தி விட்டார்.

அத்தியாயம் 2.

1831-ம் வருஷப் புரட்சி—நவீன இதாலி—அதன் நோக்கங்கள்—தேசத்திலே நம்பிக்கை—கடமையின் உணர்வு—தேச ஐக்கியம்—இரகசிய சங்கங்கள்.

1831-ம் வருஷப் புரட்சி

மாஜினி சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்கும் பொழுதே இப்புரட்சி, பிப்ரவரி மாதம்பெருங்கலகத்தை இதாலியில் புலனாக்கிற்று. இக்கலகம் நடந்த மூன்றுவாரத்திற்குள் போப்பின் நாடுகளில் பகிரங்கமாக இரகசிய சங்கத்தார்கள் ரோமபுரியை நோக்கிச் சென்றார்கள். ஆஸ்திரியாவை ஜயிப்பது கடினம். ஆனால் பிரஞ்சு உதவுவதாக வாக்களித்துள்ளார்கள். நாம் சாதகமடைவோம்' என எண்ணி வீரமுடன் சங்கத்தினர்கள் போர்புரிய முயல, பிரஞ்சுக்காரர்கள் இவர்கள் சுதந்திரம் பெற்றால் நமக்கும் ஆபத்து வருமென நினைத்து உதவியளிக்க மறுத்து விடவே, வன்மை பெற்றுள்ள ஆஸ்திரியாவினால் இப்புரட்சிப் போராட்டம் தோல்வியிலேயே முடிந்தது.

இவர்கள் தோல்வி யடைந்ததற்குப், பல காரணங்கள், என புகல்வார்கள். எக்காரணங்கள் கூறியபோதிலும், சங்கக்காரர்கள் வீரங்காட்டவில்லை என ஒருவராலும்சொல்ல இயலாது. ஆனால் மாஜினி இச்சங்கத்திலுள்ள பெரியோர் எனப்புகலப்படும் வயதுசென்றபுருஷர்கள் இளைஞர்களின் யோசனையைக் கேட்க வில்லை. அவர்கள் உதவியை அதிகம் நாடவில்லையாதலால், இச்சங்கம் ஜயிக்கவில்லை. தனித்தனி

யாய்க் குரங்கு சண்டை செய்வதற்கும் அவர்களிடம் வன்மையில்லை என்னும் எண்ணத்துடன் அதைச் சீர் திருத்தம் செய்யவேண்டுமென சிந்தனையிலானார்.

"அதோகதியான இழிந்த நிலையிலும் அரசியல் அடிமையில் ஆழ்ந்து, பசியுடன் கந்தையு மன்னியில், பணக்காரர்கள் வேண்டாமென வீசி தூஷித்து எறியும் எச்சிலை எல்லாம் கஷ்டமுடன் ஒன்று சேர்க்கும் நமது நாட்டினர்கள், கோபம், கடுமையுடன், இங்குமங்குமலைந்து ஆவேசமாவதே, எங்கும் புலனாகும். நாம்கோரும் நோக்கத்திற்கே இப்பரம தரித்திரர்களும் போராடுகிறார்கள் என அவர்கள் திவ்யவதனத்தில் நாராயண முகத்தினின்று தெளிவாகும். ஆனந்தமாய் ஜனங்களெல்லாம் சந்தோஷத்திலாகி ஒரே நோக்கம், தர்மம், அன்பு, முதலியவைகளால் கட்டுப்பட்டு அழகு வன்மையென்னும் தேசீயத்தில் பெருக்கமடைந்து, பொன் பொருள்களால் மனங் கலையாமல் இழிவிற்கு இடங்கொடாமல், உரிமை கடமை என்னும் எண்ணத்துடன் திகழ வேண்டுமென்பதே என் மனம். பிரஞ்சு உதவியளித்தாலும், அளிக்க மறுத்தாலும், அவர்களை நீங்கள் ஒற்றுமையுடனாகித் துரத்துவது உங்கள் கடமை. இந்த இரகசியசங்கத்தின் வன்மை குறைவால் நாம் தோல்வியானோம், என அதற்காக நீங்கள் நிராசையாக வேண்டாம். தன்னந்தானாகவே போராடி சுதந்திரம் பெறாதவர்கள் அதை அடைந்தாலும் பாதுகாப்பது பெருங்கஷ்டம். ஜனங்களுக்காக புரட்சிகளைச் செய்தாக வேண்டும். சந்தர்ப்பம் வரும் என காத்திருப்பது சித்தங்குறைந்த செயலாகும். சந்தர்ப்பத்தைச் சிருட்டிக்கவேண்டும். ஆஸ்திரியாவுடன் போராடுவது என்பது

ஒருபுறமிருக்க நமது அறியாமை ஒற்றுமையின்மை கெட்ட பழக்கங்கள் கொடுமையைச் சகிப்பது, இவைகளை உடைத்தெறிய வேண்டும். அடிமையான எண்ணங்களையும், பழக்கங்களையும் அடியோடே யொழிக்கவேண்டும். இனி இக்கார்பனோரிச் சங்கத்தால் ஒன்றுமே முடியாது, புதிய ஜனங்களும், புத்துயிரும் வேண்டும், இளைஞர்களே அதற்குரியவராவர் என இளம் இத்தாலியைப்பற்றி இங்ஙனம் மனதில் தியானித்தார்.

நவீன இதாலி

மாஜினியானவர் அஞ்ஞாதவாசத்திற்குச் சென்று லியானிவிருந்து மார்விலஸ் நகரமடைந்து சிலதேசபக்தர்களுடன் கூடி சிறிய அறையிலே ஒன்றுசேர்ந்து சுதந்திரமுடன் விடுதலையாகி குடியரசு ஸ்தாபிப்பதற்கான வழிகளையெல்லாம் நண்பர்களுக்கு விளக்கினர்.

"இளைஞர்களே நமது நாட்டைக்காப்பாற்றுவார்கள். அவர்களால் செய்ய இயலாத வேலை சகத்திலேயே இல்லை. போராடும் பாமரர்களின் தலைவர்களாக இளைஞர்களை நியமிக்கவும், அவர்களுள் அமிழ்ந்துள்ள வன்மையை ஒருவராலும் அறிய இயலாது; இளைஞர் மொழிகளில் என்ன அற்புதம் மர்மமாயுள்ளதென நாமும் அறியோம். புதுதர்மத்திற்கேற்ற எல்லா சக்திகளும் அவர்களிடம் பெருமையாகும். இடைவிடாமுயற்சியிலே இளைஞர்கள் வாசஞ் செய்வார்கள்; உற்சாகத்திலும் உன்னதமாவதே அவர்கள் வளர்ச்சி. பெரும் நோக்கத்தை அவர்களுக்கு அளிக்கவும். துதியினாலும், புகழ்ச்சியினாலும், அவர்களை தூயசுடருடன் எரியச் செய்யவும். நெருப்பு

என்னும் மொழிகளை அவர்களுக்கு அளிக்கவும், உணர்வையளிக்கவும், தேசம், ஜயம், வன்மை, பழைய புகழைப் பற்றி அவர்களுக்கு உரைக்கவும், இதுவரை அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தோம். இனி விடுதலையாக்கவும்'' என ஜயபேரி அறைந்து, இளம் நாடான நவீன இதாலிச் சங்கத்தை ஸ்தாபனஞ் செய்தார். 40 வயதிற்கு அதிகமான எவரையுமே இச்சங்கத்தில் சேர்க்கலாகாது என்றார். மூலைமுடிக்கிலிருக்கும் யாருமறியாத இளைஞர்களே பெரும் வேலை செய்வார் என்பது அவர் எண்ணம். பரஸ்பரம் அன்போடு பெரும் உற்சாகத்துடன் நாட்களெல்லாம் உழைப்பதில் அவாக்கொண்ட இத்தகைய இளைஞர்களைப்போல் நான் கண்டதே இல்லை என அவர் சொல்வதுவழக்கம். 'எங்களுக்குத் தனி வீடும் இல்லை. உதவி அளிப்பவரும் சூன்யம், பகலெல்லாம், இரவு மூன்றுமணிவரை, முயற்சியிலே யிருப்போம். வியாசம் எழுதுவோம், கடிதம் வரைவோம், விஷயங்கள் அறிவோம், காகிதம் மடிப்போம்; கவர் ஒட்டுவோம், எழுதுவோம், கூலிவேலை செய்வோம், சமமாய் சகோதரர்கள் போலிருப்போம். ஒரே எண்ணம் ஒரே நம்பிக்கை. ஒரே நோக்கமே நாங்கள் நாடியது.'

இவை தான், தான் ஸ்தாபித்த நவீன இதாலியைப் பற்றி மாஜினி அவர்களே மொழிவது.

அதன் நோக்கங்கள்

"மலையேறவும், குடிசையிலே செல்லவும், தச்சன் தட்டானிடம் பேசவும், நீங்கள் புறக்கணிக்கும் பாமரர்களிடம் சென்று பழகவும், அவர்களுக்குரிய சுதந்திரம்,

பழைய புகழ்ச்சி, ஆதியில் அவர்கள் திகழ்ந்த பெருந்நிலை முதலியவைகளைப்பற்றி அவர்களுடன் உரைக்கவும். அவர்கள் அறியாமல் அனுபவிக்கும் பெருங் கொடுமைகளைப் பற்றி எல்லாம் எடுத்து விளக்கமாக்கவும். அவர்கள் இதை அறிவதில்லை. கோபுரத்தினின்றி கீழே இறங்கி கீழே நடமாடவும். பொதுவாகப் பேசுவதினின்று பிரிந்து குறிப்பாகக் கூறவும் நான் பார்பபதையும், அறிவதையுமே புகலவும், உண்ண உணவன்னியிலும் உடுக்க உடையற்று ஏழைகள் தவிக்கும்பொழுது உங்கள் தத்துவங்களெல்லாம் அவர்களுக்கு யாது பயனையளிக்கும்? வாழ்க்கையின் அத்தியாவசிய குணமான உணவு உடைகளைப்பற்றியே ஜனங்களுக்கு உரைக்கவும். பாமரர்களுக்கு அவர்கள் உரிமையைப பகிரங்கஞ் செய்யவும். அரசாட்சியால் விளையும் குற்றம் குறைகளைக் கூறவும், பறிக்கப்பட்ட உரிமையையும் பங்கஞ் செய்யும் அதிகாரத்தையும் கண்டிக்கவும், போர்புரியவும், ஜனங்கள் செவியில் சுதந்தர நாதத்தைச் சத்தமிடவும். போர்புரிவதே யுகதர்மம், அதுவே நெறி என்று புகலவும். கலகம் நிறைந்துள்ள இக்காலத்தில், அதிகாரம் புசல்காற்று வீசும் இத்தருணத்தில், சாந்த சந்தேசமும் தர்மம் அன்பு என்னும் பிரசாரமும், பயன் அளிக்கும் எனக் கனவிலும் கருதாதேயுங்கள். வேதாந்தமும் வெட்டித் தர்க்கங்களும் நமக்கு அவசியமில்லை. உங்களுக்குப் புவியிலே பேராதரவுண்டு. ஆனால் அவைகளெல்லாம் பாதங்களில் புதைக்கப்பட்டுள. அதைப் பாழாக்காமல் மீட்பதே உங்கள் பெருமை. உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் உரிமைகளெல்லாம் சிதறடிக்கப் பட்டுள்ளன. அவ்வுரிமைகளை சுதந்-

திரமாய்ப் பெருவதற்கு நீங்கள் முயற்சி செய்யவேண்டும். இவைகளே உங்கள் நோக்கமாகும்' என நவீன இதாலிக்கு மாஜினி நிர்ணயஞ் செய்தார்.

தேசத்திலே நம்பிக்கை

இந்நோக்கங்களை யெல்லாம் துண்டுப் பிரசுரம், பத்திரிகை, சிறு புத்தகங்கள் மூலமாக பிரசாரஞ் செய்து தேசத்திலே திடமான நம்பிக்கை வருவதற்கு, வியாசங்களிலே உயிர், நெருப்பை, ஒன்று சேர்த்து நாடெங்கும் புத்துயிர் புலனாக்கி, உற்சாக மென்னும் தீயை மூட்டினார். சனங்களுக்குப் பூர்ணமான நம்பிக்கை இருக்குமேயானால், அடிமைச் சங்கிலியினின்று நீங்க எந்தத் தடைகள் தோன்றிய போதிலும் பின்வாங்குவதில்லை. ஆனால் நம்பிக்கை நிலையாக வாழ்க்கை யெல்லாம் தோய, குறிப்பிட்ட நோக்கம் வேண்டும். அப்பொழுதே, இங்குமங்கும் பிரியும் பலமெல்லாம் ஒன்றுசேரும். நம்முடைய செயல்கள் சத்தியம், நிச்சயமாய் ஜயத்தை அளிக்கும் என்னும் பரிபூர்ண நினைவு வேண்டும். எங்கும் நிழல், சுவர்க்கம் சூன்யம், என பயத்துடன் பாமரர்கள் தவித்தார்கள். தேசமென்பதே இல்லை. பிணம்போலவே சனங்கள் சீவித்தார்கள். துரும்பிற்கும் தரணியிலுள்ளோர் பயந்தார்கள். ஜனங்கள் ஆதியையும் அறியவில்லை. அந்தத்தையும் காணவில்லை. நம்பிக்கை சுடுகாட்டிலேயே நிலவிற்று. தேவர்கள் மேலும் சமூகத்திலும் நம்பிக்கையேயில்லை, சமூகமோ சூன்யம். வன்மை உதிரத்திலே தோய்ந்திருக்கிறது. வெட்கம் பாவத்திலே ஜனங்கள் சூழ்ந்தார்கள். கொடுமையுள்ளோர்கள் குணக்குன்று போல் விளங்கி சிலைகளால் பூஜிக்கப்பட்டார்கள். ஒற்

றார்கள் கபட வஞ்சகர்களே. எங்கும் சுயநலமே சகலத்திலும் சிறந்தது. தேசமோ இல்லை. சத்தியம் என்பது மொழியே என சாஸ்திரி சொல்வார். தங்கள் ஆன்மை தூய்மையுடனாக நல்லார்கள் ஜகத்தினின்று நீங்கினார்கள். ஆன்மா என்பதே இல்லை. புலன்களே அரசு புரிந்தது. சங்கீதம், சோற்றையே, சனங்கள் நாடினார்கள். தத்துவம் விதண்டாவாதமாயிற்று. விகடமே கவியாயிற்று. சனங்கள், பெரும் ஆபத்து நேரிடுங்காலத்து பழம் சிலைகளை கட்டியழுதார்கள். எங்கும் யமனே நிலவினான். யுகம் முடியும்போலிருந்தது. அவதார புருஷர் வேண்டுமென ஜனங்கள் கதறினார்கள். பெரியார் ஒருவர் புலனானார். கட்டை துளுத்தது. இலை கிளம்பி, பூ, பூத்தது. காய் கனியாயிற்று. ஜனங்கள் புத்துயிர் பெற்றார்கள். ஜயமடைவோம் என சங்கநாதஞ் செய்தார்கள். பூவுலகம் மறுபடியும் தழைத்தது. ஆதலால் சனங்கள் கலக்கமடைந்த போதிலும் சத்திய சந்தேசத்தில் நம்பிக்கையுடனிருங்கள். இன்று அவமரியாதையுடனிருக்கும் உலகம் நாளை உங்களுக்கு நமஸ்காரம் புரியும். நாளை ஜயம் நிச்சமாய் பெருவீர்கள். பயமன்னியில் நம்பிக்கையுடன் செல்லுங்கள். ஈசன் பெயரினால் ஆதிகாலத்தில் அவர்கள் ஜயம் பெற்றால் நீங்கள் ஜன சமூகத்தின் பெயரால் வெற்றிபெறலாம். நம்பிக்கையுடனாகவும், நலமடைவீர்கள். நம்பிக்கையுடன் செயலைச் செய்யுங்கள். செயலே ஈசனின் சொல்லாகும். சுகமாயிருக்கும் நினைவு நிழலேயாகும். நினைவினின்று செயலை நீக்குபவர்கள் எங்கும் நிறைந்த ஒருமையைக் குறைத்து ஈசனைத் துண்டிப்பவர்கள் போலாகும். தன்னுடைய உதிரத்தால் நம்பிக்கையை இலங்கச் செய்யாதவர்

கள் சிரத்தை சூன்யமானவர்களே என இளம் இத்தாலி யர்களுக்கு கடமையைச் செய்ய, பெரியார் மாஜினி நம்பிக் கையின் நெறியை இங்ஙனம் உரைத்தார்.

கடமையின் உணர்வு

ஸ்ரீ கிருஷ்ணன் அருச்சுனனுக்கு உபதேசஞ் செய்த நிஷ்காம கர்மத்தைப்பற்றியே அவர் அடிக்கடிக் கூறுவது வழக்கம். ஆனந்தம் அடைவோம் என எண்ணி செயல் களைச் செய்தால் ஆனந்தமடைந்தவுடன் அமைதியாகி சும் மாயிருப்பதே சுகமென எண்ணி, பிறகு சீரழிவார்கள். உரிமை என எண்ணி முயற்சி செய்தால் உரிமை பெற்ற வுடன் ஓங்கி வளர ஊக்கமன்னியிலாய் விடுவார்கள். இவை களால் சதாகால உணர்ச்சியும், உற்சாகமும், ஓங்குவது அரிது. சீவனுக்கு சதாகாலமும் சிறந்த நோக்கமளித்து நித் தியமான தியாகத்திற்கு நிலைநிறுவி, மாந்தர்களால் சிருஷ் டிக்கப்படும் அநித்திய நோக்கங்களினின்று நீக்கி, உயர்ந்த ஒப்பில்லாத வழியைக் காட்டுவது கடமை ஒன்றேயாகும். பூவுலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஈசனின் ஒரு எண்ணத்தையே நிறைவேற்ற வந்துளான். நாம் அன் னியர்களின் சுகத்திற்காகவே வாழவேண்டும். மற்றவர்களை மேன்மையாக்குவதே நமது நோக்க மன்னியில், நாம் அதிக ஆனந்த முடனுகிறோமா என்பதை மாத்திரம்பார்ப் பதற்கில்லை. அநியாயத்தை அழிப்பது, கொடுமையைக் கொலை செய்வது, இவை உரிமையை அளிப்பதென்பது ஒரு புறமிருக்க, இவை நமது கடமையேயாகும். நாம் இறக்கும் வரை செய்வதற்கு அருகதையான இக்கடமையைத் தவறி னால் பாவத்திற்குள்ளாவோம். சமூகத்திற்கு நன்மை

செய்ய வேண்டுமெனவே இச்சீவனை நமக்கு அளித்துளார். உனது முக்திக்கு என்ன பாடு பட்டாய் என்று ஈசன் உங்களைக் கேட்கப்போவதில்லை; மற்றவர்கள் முன்னேற நீ என்ன செய்தாய் என்பதையே அவர் வினவுவார். நீ என்ன சொன்னாய் என அவர் வினவப்போவதில்லை; நீ என்னசெய்தாய் என்பதை அவர் கேட்பார். உங்கள் நினைவுடன் செயல் வேண்டும். நீ ஜயம், தோல்வி, சுகம், துக்கம், முதலியவைகளை கவனிக்காமல் கடமை என்பதையே தீபகற்பமாகக் கருதி நித்தியமான செயல்களில் ஈடுபட வேண்டுமென இளைஞர்களுக்கு உபதேசஞ் செய்து நவீன இதாலி அறியும் வண்ணம் இவைகளை யெல்லாம் துண்டுப்பிரசுரம், பத்திரிகை மூலமாகப் பகிரங்கஞ் செய்தார். கடமைகளுடன் சீர்திருத்தம்

வேண்டுமெனக்கூறி மதம் என்னும் பெயரால் நடைபெறும் அநீதிகளை எல்லாம் விளக்கினார். ஈசன் ஈசன் என உரைத்து அநியாயஞ் செய்த போப்பின் பித்தலாட்டங்களை பாழாக்கவும். குரூரமான கொடுமையைத் தவிர அவர்களிடம் வேறு ஒன்றுமே இல்லை. காலிலியோ, வானினியை, அழித்தவர்களே போப்புக்களாகும். தர்மம் வேறு, சாஸ்திரம் வேறு, என்று சொல்வதை யொழிக்கவும். நான் ஒருவனே தர்மத்தை எல்லாம் திகழச் செய்வேன் என உரைக்கும் போலிக்காரணங்களை பறக்கடிக்கவும். நம்மிடமே சக்தியுமுண்டு. அன்னியர்க ளெல்லாம் அஞ்ஞானிகள் என்னும் எண்ணத்தை அழிக்கவும். வளர்ச்சிக்கு விரோதமான நம்பிக்கைகளை யெல்லாம் நாசஞ் செய்யவும். அற்புதம் அதிசயம் எனச் சொல்லும் அநீதிகளை ஜனங்களுக்கு எடுத்துரைக்கவும். தொழிலாளி

களுக்கு குறைவான வேலையும், நிறைவான கூலியும் கிட்டுவதற்கேற்ற சந்தர்ப்பங்களை யளிக்கவும் என மாஜினி இளம் இத்தாலிக்கு நன்கு அறிவித்தார்.

தேச ஐக்கியம்.

தேசபக்தியின் அவசியத்தை இளம் இதாலிக்கு விளங்கும் வண்ணம் செய்தார். நாட்டை நேசிக்கவும், நம்முடைய நாடே நமது வீடாகும். நாம் நேசித்து நலமுடனுவதற்கே வீடு, பெண் பிள்ளைகளை, அவர் அளித்துளார். தேசமே திரு அவதாரம். அது உங்கள் ஒவ்வொருவரிலும் திகழ்வதாக எண்ணவும். சகோதரர்கள் தாழ்மையான நிலையிலிருந்தால் அதற்குப் பொறுப்பு நீங்கள் என நினைக்கவும். தேசிய ஐக்கியம் வேண்டுமானல் உண்மை உரைப்பதை விரதமாகக் கொள்ளவேண்டும். புகழ் மொழியும் முகஸ்துதியும் ஒருபொழுதும் தேசத்திற்கு நன்மை யளிக்காது. தேசத்திலுள்ள தீமைகளைத் தொலைப்பதே, வாயாரப் புகழ்வதைவிட பெருத்த தொண்டாகும். பரஸ்பரம் பேராசை யுடனுவதினின்று பிரியவும், சாந்தம் சாந்தம் என சதா காலமும் இருப்பது தேசத்தின் ஐக்கியத்தை அளிக்காது. சிலகாலம் சண்டையே திறமான சாந்தத்தை யளிக்கச் சந்தர்ப்ப மளிக்கும். இவைகள்தான் தேச ஐக்கியத்திற்கு வழி என நவீன இதாலிக்கு உபதேசஞ் செய்தார். தேசத்திலே ஐக்கியம் வந்தாலொழிய செம்மையாகாதென புது வீரர்களுக்குப் புகன்றூர். வன்மையைப் பிரயோகஞ் செய்தாலொழிய அவர்களை இதாலியினின்று துரத்துவது கஷ்டமென்ருர். கொடுங்கோலாட்சி குணமானல் சுதந்திரம் ஒருபொழு

தும் குறைபடாது. நமது சீவன், நாடு, நாமம், நெறி, குணம், புகழ், பொன், பொருளை யெல்லாம் கொள்ளை யடிப்பவர்கள் ஆஸ்திரியர்களே. சாந்தத்தால் ஆஸ்திரியாவை வெல்லுவது அறிது என மாஜினி அறிந்தார். ஆஸ்திரியா நிலத்தில் ஆல்ப்ஸ் மலையைக் கடந்த பிறகே சாந்தத்தைப்பற்றி அவர்களுடன் மொழியவேண்டும். நற்காரியத்திற்குப் போர் புரிவது தோஷமில்லை. ஆஸ்திரியாவை ஜெயித்தாலொழிய இதாலிக்கு சுயமதிப்பும், சுயமரியாதையும், தோன்ருது. போர் என்பது அடிமைச் சங்கிலியை அறுக்கும். அடிமைக்கும் தலைவனுக்கும் நிகழும் நித்தியமான நிகழ்ச்சியே யாகும். அரை குறையாய்ப் போர்புரிய மாஜினி எப்பொழுதுமே விரும்புவதில்லை. ஆல்ப்ஸ் மலையை நோக்கவும், நித்தியமாய் நிலையாயிருப்பது போல் நீங்களும் நித்தியமான வெற்றியை யடைவீர்கள்.

சங்கங்கள்.

கார்போ நெறி சங்கத்தைப்போல் நவீன இதாலியையும் சர்க்கார் ஒற்றர், போலீஸ்காரர்களால் கவனித்து வந்தார்கள். பல ஒற்றர்கள் மாஜினியை ஏமாற்றி, நண்பர்கள்போல் நடித்து, அவரைப்பற்றி அவ்வப்பொழுது சர்க்காருக்கு அறிவித்து வந்தனர். இரகசிய சங்கங்களின் துண்டுப் பிரசுரங்கள் நாட்டின் மூலைமுடுக்குக்களில் எல்லாம் சென்றன. துண்டுப் பிரசுரங்களை சிறுவர்களெல்லாம் படித்து திடசித்தமுள்ளவர் களானூர்கள். திடீரென ஒரு தினம் சங்கத்தின் அங்கத்தினர்களெல்லாம் கிளம்பவேண்டுமென நிச்சயஞ் செய்திருந்தார். அன்று

புரட்சி நேரிடுமானல் நாம் நிச்சயமாய் ஜயிப்போம் என நினைத்தார். $2\frac{1}{2}$ கோடி ஜனங்கள் ஒன்று சேர்ந்தால் அதைத் தடுப்பவன் எவன் என மனதில் எண்ணினர். ஆஸ்திரியாவிடம் இரண்டு இலட்சம் வீரர்களே யுண்டு. ஆனல் 40 லட்சம் தொண்டர்கள் நமக்குண்டு என நிலையான நினைவில் நனைந்தார். கார்போநெறி சங்கமும் நம்முடன் சேர்ந்து உழைக்கும். நாம் வெற்றியைப் பெறுவோம் என்னும் திடமான நம்பிக்கையுடன், மரணம், சிறைச்சாலை இவைகளுக் கஞ்சாமல் இளம் இதாலியர்களின் நெஞ்சிலே அனலை எழுச்சியாக்கி நாடெங்கும் சுடர் விட்டெரிந்து, பொன்னை அனல் புனிதமாக்குவது போல் பெருமையாக்குமென மனப்பூர்வமாய் மனத்திலாக்கி பரிபூரண நம்பிக்கையுட னிருந்தார்.

அத்தியாயம் 3

மார்சேல்—இளம் இதாலி—அரசருக்குக் கடிதம்—மாறுவேஷம்.

மார்சேல்.

மார்சேலில் இங்ஙனம் வெகு நாள் தன்னந்தனியாய் மாஜினி சில இளைஞர்களுடன் நவீன எழுச்சிக்குத் திட்டஞ் செய்தார். இதாலிக்குப் புத்துயிர் புரட்சியை யளிக்க வீரமும் சத்தியத்தையும்விட அவர்களிடம் வேறு எப்பொருளுமில்லை. வேலைக்காரர்களுடைய உதவி யன்னியில், அவர்களே அச்சடிக்கும் வேலைமுதல் துண்டுப் பிரசுரங்களை ஜனங்களிடம் பரவச்செய்யும் எல்லாச் சிறிய

பணிகளையும் செய்தார்கள். சமத்துவமாய் சகோதரர்கள் போல் வாழ்ந்து, ஒரு எண்ணம், ஒரு நோக்கம், ஒரு திட்டத்துடன், எதிரிகளும் அவர்கள் ஊக்கம், உற்சாகம் முயற்சியைக் கண்டு மதிக்கும் வண்ணம் உழைத்தார்கள். எத்துணை கஷ்டப்பட்டபோதிலும் எதிர்காலத்தில் நிச்சயமாய் நமது நாடு சுதந்தரம் அடையும் என்னும் எண்ணத்துடன் ஓய்வன்னியில் ஈடுபட்டார்கள். 5 அடி, 8 அங்குல உயரம்; கருப்பு உடை, வளர்ந்த தொப்பி, நீண்ட சுருண்ட ரோமம், பால்போல் புனிதமாயுள்ள முகம், பொன்போலுள்ள சிலையின் நோக்கம், குழந்தைக் காட்சி, காளையின் கண், கன்னியின் வசியம், சிரிப்பு, கருங்கண், அழகு இவைகளுடன் விளங்கிய மாஜினி இரண்டு வருஷ காலம் பல சிறியவர்களுடன், செல்வாக்கு சூன்யமானத் துணையோடு போர்புரிவதில் பராக்கிரமம் நிறைந்த அரசர்களோடு சண்டை செய்ய திட்டஞ் செய்தார். இந்த "இளம் இதாலி"யர்களின் முயற்சிகளை பகற் கனவு என மற்றவர்கள் மதித்தபோதிலும், மாஜினியின் அனல் மொழிகளால் எழுப்பப்பட்டு திடமான நம்பிக்கையுடன் அல்லும் பகலும் உழைத்தார்கள். "தேசப்பணி செய்பவன் ஜனங்களின் சகல சம்பாஷணைகளிலும் சேரவேண்டும். வெட்டி விஷயங்களிலும் உற்சாகமுள்ளவன் போல் விளங்கி ஜனங்களின் சித்தத்தைக் கொள்ளைகொண்டு போகவேண்டும். ஆனால் பயனற்ற மொழிகளிலும், வீண் ஜம்பங்களிலும், காலங்கழிக்கலாகாது. தனக்கென வாழாமல் பிறர்கென வாழவேண்டும். வீட்டிலிருக்க விரும்பினால் வெளியே செல்லவும், வெளியில் செல்ல விரும்பினால் வீட்டிலே இருக்கவும். மௌனமாயிருக்க முயலும் காலத்தில் விழித்துக்கொண்டு

சிந்தனையாகவும்" என மாஜினி இளம் இதாலியர்கள் அடங்கிய தன் சங்கத்திற்குச் சொல்வது வழக்கம். ஐந்து பேர்களடங்கிய இவ் விளஞ்சங்கம் எங்ஙனமாவது பிற் காலத்தில் தேசத்திற்கு நன்மை யளிக்கும் எனவே திட்ட மாய் எண்ணினர். அவர் பிரசுரஞ் செய்த இளம் இதாலியின் துண்டுப்பிரசுரங்கள் செல்லும் இடங்களிலெல் லாம் சிந்தைகளைக் கொள்ளை கொண்டு போயிற்று. மாஜினி மொழிகள் நிறைந்த சங்கப் பிரசுரங்கள் புதிய சீவனை ஜனங்களிடம் அளித்தது. "தின்பண்டம் துணி மணிக ளுடன் துண்டுப் பிரசுரங்களை திணித்து அனுப்பவும். தேசீய விஷயத்தில் தலையிடுவது இல்லை எனச் சொன்னல் அது தர்மத்திலிருந்து தளர்வது என திட்டமா யறியவும். அது நாஸ்திகமாகும். மனித சமூகத்தின் ஒரு பாகம் முன் னேறுவதற்கு முட்டுக்கட்டை போடுவது போலாகும். தர்ம யுத்தத்தில் தனிமையாவது அதர்மத்திலே தோய்வ தாகும். அதர்மம் தர்மம் இவ்விரண்டிற்கும் நடுவில் சும்மா யிருப்பதென்பது சிதைத்து கொள்வதேயாகும்" என குறிப்பான சில உபதேசங்களை துண்டுப் பிரசுரங்களால் உபதேசித்தார். இத் துண்டுப் பிரசுரங்கள் போகாத கிரா மமே இல்லை என சொல்லிவிடலாம். மார்சேலிலிருந்து பிர சுரமாகும் பத்திரிகைகளை பல இரகசிய அச்சாலயங்கள் நாடெங்கும் மறுபடியும் பதிப்பித்தன. மாஜினி மதித்ததற் கதிகமாகவே அவை பெரும் பயனை அளித்துவிட்டது.

1833-ம் வருடத்தில் இச்சங்கங்களின் அங்கத்தினர்க ளின் எண்ணிக்கை, ஐம்பதினயிரத்திற் கதிகமாய்விட்டது. பிற்காலத்தில் இதாலியில் பெருமைப் புகழைப் பெற்றவர் கள் இச்சங்கங்களிலிருந்து ஜனித்தவர்களேயாகும். கப்பல்

மானுமியாய் குணக்குன்றும் கீர்த்தியும் கனிந்த காரிபால்டி மாஜினியை நாடி இரகசிய சங்கங்களின் அங்கத்தினரானுர். இலக்கியத்தில் இஷ்டம் நிறைந்த காரிபால்டி ஜனங்களுக்கும் சர்வேசுவரனுக்கும் உழைப்பதே சிறந்த நெறி சாஹித்தியம் என்ருர். இடாலிய நாட்டின் சிறிய நாடான பிடமண்டின் மன்னன் பட்டத்திற்கு வந்ததும், அவனிடம் உதாரகுணம் நிறைந்திருப்பதைக் கண்டு, இதாலி முழுவதும் சுயராஜ்யமடையும் போரை மன்னனே தலைமை வகித்து நடத்தவேண்டுமென மாஜினி வற்புறுத்திஞர்.

அரசருக்கு கடிதம்.

“ நித்தியமான வழியை நாட வேறு வழியுமுண்டு. ஆஸ்திரியா, பிரான்ஸு நாட்டைவிட வேறு பெரிய உதவியையும் நீர் அடையலாம். பிடமண்டு கிரீடத்தைவிட தீரமாய் சிந்தனை செய்பவனுக்கும், வாழ் நாட்களை அர்ப்பணஞ் செய்பவனுக்கும், சிறிய ஆசைகளை சிதைத்தவனுக்கும், பெரும் பதவி புலனுகும். இதாலி நாட்டை எல்லாம் நம்முடைய ஒரே நாடாக செய்வதற்கு நீர் நினைப்பதில்லையோ ? ஐக்கியம், சுதந்தரம், என்னும்கொடியுடன் நீர் எங்களுக்கு ஏன் தலைமை வகிக்கலாகாது. நீர் இதைச் செய்தால் நாங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து உங்களுக்காக உயிரை அளிப்போம். இதாலியிலுள்ள சிறிய நாடுகளெல்லாம் ஒன்ருகும். கருவியே உன்னைக் காப்பாற்றும். கருவியின் உரையைச் சின்னுபின்னஞ் செய்யவும். நீ இதைச் செய்யவில்லையானுல் உமது உதவியன்னியில் இது செய்யப்படும். உமக்கு விரோதமாகவும் உழைப்போம்” என பீடமண்டு அரசனுன சார்லஸ் ஆல்பர்டிற்

குக் கடிதம் எழுதினர். மாஜினியை உடனே பிடிப்பதற்கு மன்னன் ஆக்ஞாபித்தான். மாஜினி இதை அறிந்ததும் இனி அமைதியா யிருப்பது ஆபத்து என எண்ணி "பிட மண்டில் எழுச்சி" யைப் புலனுக்க பெருஞ் செயல்களைச் செய்யவாரம்பித்துவிட்டார். பிடமண்டிலுள்ள அரசரின் சைன்னியங்களில் பலர் இரகசிய சங்கத்தினரா யிருந்த படியால் கிளர்ச்சி கைகூடுமென, மாஜினி திட்டமாய் எண்ணினர். பிடமண்டு அரசனே இதற்குதவியாயிருந் தால் அவன் துணையால் மற்ற சிற்றரசர்களை முறியடிக்க லாமென மதித்தார். மன்னன் துணை புரியவில்லையானல் சில அங்கத்தினர்களே ஜினிவா சர்க்காரை சுவாதீனஞ் செய்துவிடலாமென சிந்தனையிலானர். சர்க்காரில் அதி ருப்தி யடைந்தவர்களெல்லாம் இச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தார்கள். ஒரு வேளை இதுவெற்றிபெற்றல் நாமும் சங்கத்தில் சேரவேண்டுமென பலர் காத்திருந்தார் கள். போர்வீரர்கள் நிறைந்த ஜினிவா சங்கத்திற்குச் சக்தி யதிகம். போர்வீரர்களிடம் சங்கம் சிறந்து விளங்கு கின்ற தென்பதை சர்க்கார் கனவிலும் கருதவில்லை. சங் கத்தினர்கள் வெகு தினங்கள் எழுச்சி செய்யாமல் காத் திருந்ததானது, இரகசியங்க ளெல்லாம் திடீரென எங்ஙன மோ புலனாய்விட்டது. சர்க்கார் பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்னும் பெரும் நோக்கத்துடன் அங்கத்தினர் களை எல்லாம் பெரும் வதைக் குள்ளாக்கிவிட்டார்கள். சர்க்காரால் இக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடுந் தண் டனைகளை இதுவரை நாம் எந்த சரிதையிலும் கண்டிலோம். சார்லஸ் ஆல்பர்டு மன்னன், இரகசிய சங்கத்தின் அங்கத் தினர்களின் உதிரத்தைப் பருகினன் என நாம் புகன்று

விடலாம். உண்மையைக் குற்றவாளிகளிட மிருந்து அறிய சர்க்கார் செய்யாத சித்திரவதையே சகத்திலில்லை. சித்திரவதையைச் சகிக்க நடுங்கி, சிநேகிதனை புறங்காட்டப் பயந்து ஜாகோபோருபினி சிறைச்சாலையிலே தற்கொலை செய்து கொண்டான். பத்துப் போர்வீர அங்கத்தினர்களும், மற்றுஞ் சிலரும் கொலை செய்யப்பட்டனர். பல அங்கத்தினர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். அநேக நியாய வாதிகளும் சுடப் பட்டனர். உதிரம் தோய்ந்த எண்ணமானது வெகு துரிதமாய் தழைக்குமென்பது மாஜினியின் கருத்து. இவ்வெழுச்சியில் இறந்தவர்களே பிற்காலத்தில் சுதந்தரம் பெற்றவர்களுக்கு உற்சாக உணர்வு அளித்தவர்கள். மாஜினி மார்சேலில் ஒரு மறைவான இடத்தில் ஒளிந்து விட்டார். அவர் அஞ்ஞாத வாசத்திற்குச் செல்லவேண்டுமென பிரஞ்சு சர்க்காரும் பகிரங்கஞ் செய்து விட்டார்கள். அவருடைய அச்சாலையமும் பற்றப்பட்டது.

மாஜினி மாறுவேஷம்.

ஆனால் பிரஞ்சு நாட்டிலேயே ஆலிவர் என்பவரின் வீட்டில், ஒரு வருடம் வரை வெளி வராமல், அங்ஙனம் இரவில் வந்தபோதிலும் பெண் வேடம் தரித்து மறைந்திருந்தார். வேறு திருட்டு அச்சாலைய மொன்றும் ஏற்படுத்தினர். இக்காலத்தில் பிரஞ்சு சர்க்கார் அவரைப் பற்றவேண்டுமென கொலைக் குற்றமொன்றும் மாஜினியின் பெயரில் சாட்டப்பட்டது. ஆனால் இதைப்பற்றி அவர் கவலை கொள்ளவில்லை யாயினும், ருபினி தற்கொலை புரிந்து இறந்ததும், மற்றவர்கள் சுடப்பட்டதும், அவரை மனம்

பதறும்படி செய்து விட்டது. 1833-ம் வருடம் பிப்ரவரி மாதம் ஜினிவா நகரம் சென்றார். மறுபடியும் ஒரு கலகத்தைச் செய்யவேண்டு மென்பது அவர் கருத்து. பிடமண்டியிலேயே பெருங் கிளர்ச்சி யொன்றை கிளப்பவேண்டுமென கலங்கினர். மன்னனை மருட்டவேண்டுமெனவும் மதித்தார். இக்கொலை கடுந்தண்டனைக ளெல்லாம் எங்கள் கருத்தை கலைக்காது என்பதைக் காட்சியாக்கவேண்டுமென உறுதியானர். ஜெயம் வேண்டுமானல் இப்பொழுதே செய்கையில் நடத்தவேண்டு மென்பது அவர் சிந்தனை. ஒரு வேளை குளிர்ச்சியானல் மறுபடியும் குண முறச்செய்வது கடினமென அறிந்தார். ஐரோப்பாவே புரட்சியை எதிர் பார்க்கின்றது. இதாலி அதற்குத் துவஜாரோகணஞ் செய்தால், ஸ்பெயினும், ஜெர்மனியும் பின்தொடருமன்பது அவர் நினைவு. நாடெல்லாம் புதிய உணர்வு பதிந்திருந்தது. எங்கும் கிளம்ப வேண்டுமெனக் கருதினர். கார்ப்போ நெறி சங்கங்கள் நிறைந்திருந்தன. ஒரு குறிப்பிட்ட நாளில் குரங்குச் சண்டையாக கார்போநெறியின் திட்டத்தைக் கைக்கொண்டு சாவாய்க் கலகத்திற்கு அடிகோலினர். ஜினிவாவையும் பற்றலாம், ஆல்பையும் தாண்டலாம் என கருதினர். ஸ்விட்ஜர்லாந்தில் 1833-ம் வருடம் நூற்றுக்கணக்கான அஞ்ஞாத வாசஞ்செய்யும் தேசபக்தர்கள் திரண்டார்கள். இளம் இத்தாலியைப்போல் இளம் ஐரோப்பாவைப் புலனக்கவேண்டு மென்பது அவர் எண்ணமாகையால், பிரஞ்சு, ஜர்மன், போலண்டு இளைஞர்களையும் அவர் நல்வரவு கூறினர். குரங்குச் சண்டையின் குணங்களைப் பற்றி கீர்த்திவாய்ந்த நூல் எழுதிய ஜோரிவீன் துணையை

யும், பெரும் சேனாதிபதிகளின் உபதேசத்தையு மடைந்தார். சாவாயில் கிளம்புவதற்கு ரோமோரினோ என்பவனுக்குத் தலைமைப் பதவியும் அளிக்கப்பட்டது. அக்டோபர் மாதம் எல்லாம் தயாராகி 800 தொண்டர்களும் திகழ்ந்தார்கள். முதன்மையான நகரங்களில் ஒரே காலத்தில் கிளம்பவேண்டுமென ஏற்பாடாகி விட்டது. காரிபால்டியும் கருத்துக் கிசைந்து விட்டார்.

ஆனால் ரோமாரினியை சர்க்காரின் ஒற்றன் என ஒருவரும் சந்தேகிக்கவில்லை. பிரஞ்சு சர்க்காரால் இச்சங்கத்தை உடைப்பதற்கு நிறுவப்பட்ட யமன் என ஒருவரும் அறியவில்லை. இப்பொழுது கிளம்பவேண்டுமென அவனுக்கு அக்டோபர் மாதம் ஆக்ஞாபிக்கப்பட்ட போதிலும், பிப்பரவரி வரை அவன் கிளம்பவே இல்லை. சர்க்கார்களும் தொண்டர்களை எல்லாம் பற்றலானார்கள். வற்புறுத்தப்பட்டு அவன் மறுபடியும் தலைமை வகித்துக் கிளம்பிய போதிலும் தொண்டர்களை இங்குமங்கும் நோக்கமன்னியில் பிரித்து குரங்கு சண்டை செய்வதற்கு முன் தொண்டர்களை யெல்லாம் பிரித்துக் கலைத்து விட்டான்.

அத்தியாயம். 4.

மாறுவேஷம்—மனோகஷ்டங்கள்—வைதீகமும் தேசபக்தியும்—புரோகிதர்களே—தேசபக்தர்களே—துக்கநிலை— அமுதமொழிகள்.

சவாய்க் கலகத்தில் சின்னாபின்ன மடைந்த எழுச்சி மாஜினியின் தேகா ரோக்கியத்தைத் தொலைத்து விட்டது. சுமார் ஏழுநாள் இரவு பகலாக உறக்கமன்னியில் குளிரும்

கஷ்டமும் சிந்தனை செயல்களும் சேர்ந்ததால் சரீரத்தின் சக்தி சூன்யமாய் இருந்தது. குண்டுசத்தம் கேள்வியுற்று, துப்பாக்கி தொண்டர்களுடன் எல்லைப் புறத்தில் முன் சென்ற மாஜினி, மனோ மயக்கமாகி மாநிலத்தில் மெய் மறந்து விழுந்துவிட்டார். உணர்வு விளங்கி இங்குமங்கும் பார்க்கும் பொழுது தனது நிலையான சுவிட்ஜர்லண்டு நாட்டிலுள்ள வீடும் ஆபத்திலிருப்பதாகக் கண்டார். என்ன செய்வதென்றுக் கதறிக் கீழே விழுந்து தன் காயத்தையே தன் பற்களால் கடித்து தன் ஆவேசவன்மையைக் கழிக்க முயன்றார். வேறு சர்க்கார்களால் சுவிட்ஜர்லண்டு அதிகாரிகள் அச்சமுறுத்தப்பட்டபடியால், அந்நிய நாட்டு ஜனங்களை யெல்லாம் வெளியில் அனுப்பிவிட தீவிர முயற்சி செய்தார்கள். பல இதாலி இளைஞர்கள் நாட்டிலேயே மறைந்து கொண்டார்கள். சுவிட்ஜர்லண்டு நாட்டினின்று நீங்கப் போவதில்லை என மாஜினி உறுதிசெய்து கொண்டார். தனது இதாலியின் அருகே இருக்கவேண்டு மென்பதே அவர் நோக்கம். அதுவுமன்னியில் தனது தேசத்தின் எல்லையிலுள்ள ஆல்ப்ஸ் மலையை தினந்தோறும் காணவேண்டு மென்பது அவர் கருத்து. இங்கிலாந்து செல்லவும் அவருக்கு நம்பிக்கை இல்லை. உதவி உற்சாகம் உணர் வன்னியில் மறைவாக மூன்று வருட காலம் போலீசாரால், பார்க்க முடியாமல் நண்பனின் நிலயத்திலே சிறைச்சாலைக் கைதியைப் போல் கலக்கமுடன் காலந் தள்ளினார். அம்மூன்று வருடத்தில் ஏழுமாத காலம் தினந்தோறும் வீடு வீடாக ஓடி மறைந்து பாழடைந்த வீடுகளிலே பதுங்கி, ஜன்னலண்டை பாயன்னியிலும் படுத்து, இராக் காலங்களில்

வெளியில் இங்குமங்கும் சென்று தேகமெல்லாம் தளர் வடைந்து ஆன்மா சோர்வாகி அக்ஞாத வாசத்தின் அறியாத நஞ்சை பானஞ் செய்தார். புயல் காற்று, சுடு காட்டு சாம்பல், மொழிகளாலும் கண்ணீர்களாலும் விளக்க இயலாத கஷ்ட நிஷ்டூரங்களால், கன்னங்களெல்லாம் குழிவிழுந்து போகும்.

மனோ கஷ்டங்கள்.

அக்ஞாத வாசத்திலே அவர் அனுபவித்த மனோகஷ்டங்களெல்லாம் அவர் ஆன்மாவைத் தூய்மையாக்கி விட்டது. காலத்தை கைவல்லியமாய்க் கழிப்பதற்கு பல நூல்கள் அவரிடமில்லை. என்னிடம் நூல்களிருந்தால் கதவை அடைத்து நாள் முழுவதும் நலமுடன் கழித்திருப்பேன் என்று பிற்காலத்தில் வருத்த முற்றார். பொருளன்னியில் அவர் தவித்துத் திணறியது ஒருபுற மிருக்க, பல் வலியால் அவர் பரிதவித்தது மனோகஷ்டங்களினின்று மனதைப் பறிப்பதற்காகவே ஈசன் அருளினானோ எனவும் நமது மனத்தில் மலருகின்றது. அவர் தாயும் அடிக்கடி பணம் அனுப்புவதுமுண்டு. நண்பர்களும் துணைபுரிவார்கள். ஆனால் மனோ கஷ்டங்களும், நூலில்லாத குறையும், அவரைச் சிந்தனை சக்தியில் பெருக்கி நாட்டிலுள்ள வைதீகர்களை எங்ஙனம் திருத்துவது என்னும் முயற்சியில் அமுதமான சில இரகசியங்களை இலங்கும்படிச் செய்தது. தேசபக்தர் அவர்களுடன் எங்ஙனம் திகழவேண்டுமென்பதையும் கண்டார்.

வைதீகமும் தேசபக்தியும்.

“ஈசன் பெயரால் ஜனங்களை எங்கு செல்கிறீர்கள் எனக் கேட்கவும், புவியிலுள்ளோர்களெல்லாம் வாசு-

தேவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறவும். மாந்தர்கள் மேன்மையாக மேண்டுமொனால் அடியார்க்கு அடியாராகவேண்டும். சிரத்தை, ஐக்கியம், நற்பணி, தியாகம், சமத்துவம் இவைதான் வாசுதேவ குடும்பம் அல்லது அடியார்க்கு அடியார் என்பது. சர்வேசுரனும், சர்வேசஞுஹ சுகினோ பவந்து. சுவர்க்கத்திலே சர்வேசன், சகத்திலே மகாஜனங்கள். இவை தான் வைதீக நோக்கத்தின் விளக்கங்கள். அவதார புருஷர்களெல்லாம் மனிதகோடிகளின் நன்மைக்காகவே வந்தார்கள். சில மனிதர்களுக்குச் சில உபதேசமும், வேறு சிலருக்கு வேறு உபதேசத்தையும் அவர்கள் விரும்பவில்லை, கபட வஞ்சகர்கள் எந்த சாதியில் இருந்தபோதிலும் அவர்களை அவதார புருஷர்கள் விரும்பவில்லை. மனிதகோடிகளிலே அடியார்க்கு அடியார் எனச் சொல்வது அடிமைத் தனத்தை யொழிப்பதற்கே யாகும். யாவரும் ஐக்கியமாக வேண்டு மென்பதற்கே எல்லாம் பிரம்மத்தினின்று உற்பத்தி எனக் கூறுவது. அவதார புருஷர்கள் ஜனங்களின் நன்மைக்காகவே நிலவி மறைந்தார்கள். வைதீகர்களே! இவ்வுலக வாழ்க்கை, பின் வாழ்க்கைக்கு அவசியமாதலால் இதை வெறுக்க வேண்டாம்.

கபட வஞ்சகங்களை யெல்லாம் கழிக்கவும். வைதீகம் இவ்வுலகத்தில் வாழவேண்டு மானால் இலெளகீக மன்னியில் இயலாது. இலெளகீகத்தை அழித்தால் நீங்களும் நிர்மூலமாய் விடுவீர்கள். அப்பொழுது தர்மமும் அழிந்துவிடும். இலெளகீகத்திற்கு விரோதமானால், அவதார புருடர்களுக்கு பகைவர்களாவீர்கள். அது ஈசனுக்கும் விரோதமாகும். இலெளகீகத்தை பிரிப்பது அறி

வீனமாகும். அது கோவிலை இடிப்பது போலாகும். அது ஜனங்களை அழிக்கும். கபட வஞ்சகங்களைக் கழித்தால் வைதீகமும், லௌகீகமும், ஒன்றே என உங்களுக்குப் புலனாகும்.

புரோகிதர்களே!

வைதீகம் லௌகீகம் முதலியவைகளைப்பற்றி நான் மொழிந்துவிட்டேன். உங்கள் தொகையோ குறைவு. உங்கள் குற்றங்களினாலேயே நீங்கள் குறைந்தீர்கள். பொருளை நாடி நீங்கள் பணக்காரர்களைப் பற்றினீர்கள். செல்வத்திற்கு பேராசைகொண்டு ஏழை எளியவர்களை நீங்கள் கவனிப்பதில்லை. பொன் பொருளைப்பற்றியபடியால் நீங்கள் வீழ்ச்சியடைந்தீர்கள். அவதார புருடர்கள் சாதி வேற்றுமை யன்னியில் சகத்திலுள்ளோர்களுக் கெல்லாம் உழைத்திருக்க, நீங்கள் பொருள் அளிப்பவர்களுக்குப் பூஜை செய்து பொருளற்றவனைச் சபிக்கிறீர்கள். உங்கள் உத்தேச மென்ன? பூச்சக்கிரம் சுழலும். சுழலுவதே அதன் சட்டம். அச்சட்டத்தைக் காப்பாற்றுபவர்களே தேச பக்தர்கள்; அவர்களே சட்டத்தின் அவதார புருஷர்கள். நீங்கள் பூச்சக்கிரத்தை நிறுத்த முயலுகின்றீர்களா? ஈசனின் நியமத்திற்கு விரோதமாய்ச் செல்வதா உங்கள் நோக்கம், அல்லது அவதார புருஷர்களை அவமதிப்பதோ உங்கள் அறம்? அவை உங்களால் இயலாது. நீங்கள் இயல்பிற்கு மாறாகச் செல்வது உங்களைத் துரிதமாய் தற்கொலை செய்துகொள்வதாகும். இதுதான் உங்கள் இஷ்டமோ? புதிய சட்டங்களால் உங்கள் அதிகாரங்களை அழிப்பது, நீங்கள் பல வருடங்களுக்குமுன் செய்த கொடுந்தண்டனை

களின் கர்மபயனே.'' இக்கருத்துடன் அவர் தன் மனக் கஷ்டங்களையெல்லாம் கழிக்க பல வியாசங்கள் எழுதினர். புரோகிதர்களைக்குறித்து மறுபடியும் அவர் கூறுவதாவது:

இவ்வுலகத்தில் இதுவரை தோன்றிய புரட்சியெல்லாம் பரமனின் பரமகருணையினாலேயே தோன்றிற்று. இப்பொழுது தோன்றும் கட்சியும் ஒரு புரட்சியின் அறி குறியே. இதன் அபிவிருத்தியின் பீஜம் எல்லா ஜனங் களின் சிந்தனையிலே சாய்ந் திருக்கின்றது. கடந்த ஐம் பது வருடங்களாக ஒவ்வொரு இடையூறையும் அழித்துக் கொண்டு அது முன்னேறியிருக்கின்றது. அது அடை யாத ஆனந்தமும், உடுக்காத உற்சாகமும், அரசனின் கிரீ டமே இல்லை. இதற்குத் தனிமையா யிருப்பதோ அல்லது போர் புரிவதோ பரமனின் இஷ்டத்திற்கு விரோதமாகும். சர்வஜன சமூகத்தை அழிப்பதாகும். சர்வஜன சமூகத் திற்கு மாருகச் செல்வது தன்னைத் தற்கொலை செய்து கொள்வதாகும். பூவுலகில் தோன்றும் ஒவ்வொரு புரட்சி யும் உங்களுடனிருக்கவேண்டும். இல்லையேல் அவை உங் களை அழிக்கும். தர்மத்தைத் துணையாகக் கொண்டு அதை எதிர்த்தால் தர்மமும் தொலைந்து விடுமென மனத் திலே திட்டமாகக்கொள்ளவும். வைதீகக் கூட்டம் அபி விருத்திக்கு சாதகமில்லையேல் அவை நடக்கும் பிணமென நீங்களே அறிந்து கொள்வீர்கள்? வைதீகக் கூட்டம் புனித மளித்து, ஐக்கியமாக்கி ஈசனால் அருளிய ஜீவர்களை ஒற்று மையாக்கவே விளங்க வேண்டும். புரட்சிக்கு ஆதரவளிப் பதே உங்கள் நோக்கமாகவேண்டும். மனித கூட்டங்களை தனித்தனியாய் பிரிப்பது உங்கள் காரியமில்லை. உலக சங்கிரஹத்திற்காகவே சனகர் வாழ்ந்தார் என்பதை நீங்

கள் அறியவில்லையா? இவ்வுலக மில்லையேல் அவ்வுலகமும் இல்லை என்பதை நீங்கள் மறக்கவேண்டாம்.

பெரும் நோக்கத்திற்காக உங்கள் உயிரையும் அளிக்கத் தயாராயிருங்கள். மனித சமூகம் மதிக்க வில்லை யென சத்தியத்தை அவமதிக்க வேண்டாம். அறியாமையையும் அசத்தியத்தையும் அடியோடு ஒழிக்க முயலுங்கள். பெரும் சூட்சமங்களை அறியாமல் அறிவிலி அதோகதி அடைந்தான். நீங்கள் உயரிய நோக்கத்தினின்று நீங்க வேண்டாம். மகா ஜனங்களின் யுகம் மலர்ந்து விட்டது. இம் மொழிகளின் மர்மங்களை யெல்லாம் அறிந்துகொள்ளவும், உங்கள் நோக்கத்தின் உயரத்திற்கு எழுச்சியாகவும். எல்லா சனங்களின் செயல் சர்வஜன சேர்க்கையிலேயே யாகும். மனப்பூர்வமாய் மகாஜனக்களின் ஒற்றுமையை நாடவும், பழிக்குப்பழி என்னும் எண்ணத்தினின்று பிரிந்து பழைய விரோதங்களைக் கழித்து மகாஜனங்களை மறைவாய் நிந்திப்பதினின்று நீங்கி அநீதி யான வழிகளை யெல்லாம் அழிக்கவும். உங்களிடமிருந்து பிரிந்தவர்களுக்குப் பரிதவிக்கவும். ஆனல் அவர்களை கடுஞ்சொல் கூறுதேயுங்கள். விரோதத்தை விருத்தி செய்யும் அனுவசியமான கடும் மொழிகள் வேண்டாம். பழைய புராணங்களை யெல்லாம் மறந்து விடவும். என் மொழிகளுக்கு மனதைத் திறக்கவும். புதிய சகாப்தம் புலனுகும். உங்கள் மொழிகளைப் பார்க்கிலும் மனத்தினின்று அன்பு பெருகட்டும். ஈசனிடம் நம்பிக்கைவைத்து நோக்கத்தின் நெறியிலே திடமாகி சத்தியத்தின் வன்மையிலே சரணமடையுங்கள். சிரத்தையுடனிருந்தால் ஜயம் பெறுவீர்கள்.

தேசபக்தர்களே !

சுதந்தரமும் ஐக்கியமுமே நமது சித்தாந்தம். சர்வ ஜனங்களுக்காகவே நாம் போர்புரிகிருேம். பிரிப்பதில்லை. ஒற்றுமை யாக்குவதே நமது நோக்கம். சகிப்புத் தன்மை எங்கு சூன்யமாயிருக்கின்றதோ, அதைச் சிறப்பிப்பதே நமது செயல்; பொறுமையை சற்றும் குறைக்க வேண்டாம். நோக்கம் பொதுப்படையான நலம், நித்தியமாய் நிலவும் சட்டமே உங்கள் அதிகாரிகள்; மதம் என்பது ஜனங்களின் மனதாகும். அதை அழிக்க முயல வேண்டாம். மதத்தை நீங்கள் பழித்தால் உங்கள் பணியைப் பெருமையுடன் செய்வது பெருங் கஷ்டமாகும். உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு புரட்சியும் மத உணர்ச்சியிஞலேயே மலர்ந்தது. மத உணர்ச்சியைப் பற்றிக் கொண்டு மகா சனங்களை ஒன்று திரட்ட முயலவும்.

திறமையான தேச பக்தர்களே! மறுபடியும் ஒரு மொழி. ஜனங்களிடம் பற்பல வேதாந்தங்கள் நிலவும்; யாவற்றிலும் நீங்கள் தலையிடவேண்டாம். மனே கனவுகளை அவர்கள் மனேபீஷ்டமாய்க் காணட்டும். நோக்கமில்லாமல் சிலர் செய்வார்கள். அதைப்பற்றியும் நீங்கள் அஞ்சவேண்டாம். அவர்கள் இருக்கும் இடமறியாமல் மறைந்து விடுவார்கள். மனித சமூகம் மாநிலத்தில் ஒன்றுபட சுதந்தரத்தைவிட செல்வாக்குள்ள வேறு சிறந்த நோக்கமில்லை. அதுவே உங்கள் பரிபூர்ண நோக்கமாகவேண்டும். எப்பொழுதும் முரண்படப் பேசவேண்டாம். சுதந்தரத்திற்கு மனேபீஷ்டம் போல் நடக்கும் வண்ணம் மத சுதந்தரத்திற்கும் இடமளிக்கவும். மனித சமூகத்திற்குத் தீமையாயுள்ள எந்தச் செயல்களையும் நீங்

கள் அழிக்கவும், எல்லா விஷயங்களிலும் அதிகாரியா யிருக்கக் கனவு காணவேண்டாம். தன்னந் தனியாய் எவரையும் தொலைக்க நீங்கள்செய்யும் திட்டமாவது தெள்ளிய அறிவாகாது. மனித சமூகமே நோக்கமென மனப் பூர்வமாக, படிப்படியாய் மகா ஜனங்கள் அபிவிருத்தி யாவார்கள். எல்லா மானிட கோடிகளும் இணைவார்கள். எல்லா சங்கங்களும் ஒன்றுசேரும், என திட்டமான நினைவு திகழ்ந்து சில்லரை சிந்தனைகளை யெல்லாம் சிதைத்து, நம்மைப்போல் நிலையான ஆயிரக் கணக்கான தேச பக்தர்கள் தோன்றுவார்கள் என நிலையான நினைவுடனாகி, சுதந்திரம் என்னும் சங்கநாதம் சகமெல்லாம் சிறந்து சர்வ சனங்கள் சிறந்த நிலையை யடைவார்கள் என்பதில் சந்தேகமன்னியில் பெரும் மகிழ்ச்சியுடனாக வேண்டும்.

துக்க நிலை

இங்ஙனம் பல அமுத மொழிகளை நாட்டின் வைதீகர்களுக்கும் தேச பக்தர்களுக்கும் எழுதினர். இளம் இதாலிக்கு இப்பொழுது பொருளுமில்லை; சந்தாக்காரர்களுமில்லை. உண்பதற்கும், காகிதம் வாங்குவதற்கும் செலவழிப்பதைவிட வேறு செலவு அவர் செய்ததே இல்லை. பல புத்தகங்கள் கடன் வாங்குவார். உடுக்க உடையன்னியிலும் தவிப்பார்.

இதாலியை எப்பொழுது பார்ப்பேன் என அவரை அறியாமல் துக்க மேலிட்டுத் தவிப்பார். கீழே விழுந்து புரண்டு துக்கந்தணிய நிலத்தில் சாய்வார். என் தந்தை, என் தாய், என் சகோதரி, என் நண்பர்கள் வாழும் நாடு இந்த நாடு. இந்த ஆல்ப் மலை என் மலை, நான் அதைக்

கடந்து எனது நாட்டு தேவியை எப்பொழுது காண்பேன் என அடிக்கடி நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவார். இதாலிக்கு நான் இத்துணை உபகாரஞ் செய்தும் அவர்கள் என்னை கவனிப்பதில்லையே எனக் கதறுவார். நான் ஒவ்வொருவருக்கும் நன்மை செய்ய விரும்புகிறேன். ஆனால் தீமை செய்தது போலவே புலனாகின்றதே. அம்மா! என தமது தாய்க்கு ஒருதடவைக் கடிதம் எழுதினார். உலகிலே எனக்கு ஒருவருமே இல்லையே. நான் நாடும் அன்னையும் எனது அருகிலில்லை. இருள் நிறைந்த அறை, மனம் செறிந்த சஞ்சலம், இவை தான் நான் காண்பது. எனது நண்பர்களெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டு கொலையுண்டார்களே! என்னபாடு பட்டிருப்பார்கள் என விம்மி விம்மி அழுவார். தன்னந் தனிமையான தன் அறையில் நடுநிசியில் குளிர்ந்த காற்று வீசினால் இது ரூபிணியின் ஈன சுவரமோ என அஞ்சுவார். இருப்பதைவிட இறப்பதே நன்மை என நினைத்ததுமுண்டு. ஆனால் அறிவும் அனுபவமும் அதிகமாகி கடமை ஒன்றையே கைப்பிடிக்க வேண்டும். சுகம், துக்கம், ஏசல், மரணம், முதலியவைகளை கவனிக்கலாதாதென்னும் கைவல்லியமே தேவாமுதமாகும் என்னும் மின்னலைப்பெற்றவுடன் சாந்தமுடன் மறுபடியும் செயல்களை செய்யத் தொடங்குவார்.

அமுத மொழிகள்

இச் சாந்த நிலையை யடைந்த பிறகு இம் மூன்று வருஷமான அஞ்ஞாத வாசத்தில் சில அற்புதமான அமுத மொழிகளை எழுதினார். எழுச்சி என் தோல்வியாயிற்று என் சிந்தனை செய்வார். கிறிஸ்துவ தர்மம் எங்ஙனம்

விருத்தியாயிற்று என எண்ணுவார். புரட்சி ஏன் பயன டைய வில்லை எனக் கலங்குவார். இனி செய்யப்போகும் வேலைகளுக்கு திட்டஞ் செய்வார். பிரஞ்சு நாட்டிலே 1789-ம் வருடம் ஒரு பெரும்புரட்சியொன்று புலனாயிற்று. அப் புரட்சியைப் பற்றிய நூல்களை யெல்லாம் படித்தார். அதன் தலைவர்களை யெல்லாம் நன்கு கவனித்தார். பிறகு அது ஏன் தோல்வியாயிற்று என்பதையும் ஆராய்ச்சி செய் தார். அந்த ஆராய்ச்சி ஒரு அமுத நிறைந்த களஞ்சியம் எனலாம்.

அத்தியாயம் 5

பிரான்ஸ்—வால்டையர்—மான்டிஸ்கியோ—மனோ ஆராய்ச்சி—உபதேசம்—ஸ்விட்ஜர்லாண்டு.

பிரான்ஸ்

பிரஞ்சு நாட்டுப் புரட்சியைப் பற்றி அவர் புகன்ற அபிப்பிராயத்தைக் கூறுவதற்குமுன், புரட்சியைப்பற்றி அவர் கருதியதைக் கூறுவது மிகையாகாது. சத்தி யுத்தின் ஆதாரமான ஒரு நோக்கத்தின் செயலே புரட்சி எனப்படும். தேசியம், சுதந்திரம், சமத்துவம், தர்மம் என எந்தப் பெயராயிருந்தபோதிலும், கடைசியில் அது ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவது என்று கூறிவிடலாம். அதிகாரிகளால் வெறுக்கப்பட்டு எல்லா ஜனங்களாலும் ஆமோதிக்கப்படும் செயலே புரட்சியின் சின்னமாகும். புரட்சிக்கு இரு கால்களுண்டு. ஒன்று அழிப்பது இரண்டாவது ஆக்குவது. இருக்கும் நிலையை

அழித்து புதியதாக ஒரு அமைப்பை ஏற்படுத்துவதே புரட்சியின் குணமாகும். நிகழ்ச்சியிலுள்ள சர்க்கார் சீர் கேடு அடைந்திருப்பதென்பதைப் புலனுக்கி, மகா ஜனங் களுக்கு இவ்வமைப்பினுல் ஆபத்து என்பதை விளக்கி, இனி சர்க்காரோடு சேர்ந்து புது அமைப்பை ஸ்தாபிக்க சந்தர்ப்பமில்லை என்பதைக் கண்டு தன்னந் தானுகவே எழுச்சியாகும் முயற்சியே புரட்சி எனப்படும். தேசத்தை அழிப்பதைவிட அபிவிருத்தி செய்வதே அதன் நோக்க மாகையால், மகா ஜனங்களிடமுள்ள சத்தியத்தையும், அறத்தையும் புலனுக்குவது எனவேப் புகலவேண்டும். பூவுலகிலுள்ள யாவற்றையும் புது நிலையினின்று பார்க்க வேண்டுமென்னும் உத்தேசத்தோடு நாட்டிலுள்ள எல்லா வன்மைகளையும் ஒன்று இணைத்து புது பொதுப்படை யான நோக்கத்திற்காகப் போர்புரிவதே அதன் பெருங் குணமாகும். சமூக அமைப்பில் புதிய நோக்கத்தை நாட் டாமல் தேசத்திலுள்ள ஒற்றுமையின்மையை ஒழிக்காமல் சமூக சமரச நோக்கத்தையும், ஏகாக்கிர சித்தத்தையும் செய்யவில்லை யானுல் அதைப் புரட்சி என எண்ணவேண் டாம். கலகங்களெல்லாம் புரட்சியாய்விடாது. மனிதர் மாறுவதும், ஜாதிகள் புலனுவதும், வம்சங்கள் புதியதாவ தும் பழைய உடையுடன் புதிய தோற்றத்தில் புலனுன் என்பதைவிட புரட்சி என்று மயங்கவேண்டாம். இத் தகைய மாறுதல்களில் நிரந்தரமான சாந்தம் ஒரு நாளும் நிலைக்காது.

பிரஞ்சு புரட்சி பெரும் வெற்றியை யளிக்காததற்கு இதுவே காரணம். இப்புரட்சியைக் கிறிஸ்தவ தர்மம் என புக்ஸ் என்னும் பிரஞ்சு நாட்டுத் தத்துவதரிசி எண்ணினுர்

ஈசனின் ராஜாங்கங்கள் இவ்வுலகில் புரட்சியால் தோன்று மெனு எண்ணி புதிய சகாப்தம் என மகிழ்ச்சி அடைந் தார். தர்மம் என்பதற்கு மாறுதலில்லை. அது சனுதன மாகும். அதன் நோக்கங்களுக்கு எல்லையே இல்லை. மனித னுக்கு மோட்சமளிப்பதே அதன் நோக்கம். மோட்ச மளிக்க, ஈசனுக்கும் மனிதனுக்கும் நடுவில் அவதார புரு ஷன் ஒருவன் அவசியமென அது கூறும். அருள் சுரக்கு மென்பதே அதன் ஆசையாகும். இத்தகைய சித்தாந் தங்கள் ஒரு சமூகத்தை நிலை நாட்டாது. ஜன சமூகத்திற் கான நோக்கம் ஒன்றுமே இல்லை. இதனுல்தான் இப்புரட்சி ஜயத்தை அளிக்கவில்லை. ஆனுல் 18-வது நூற்ருண்டிலே புரட்சியைத் தோற்றுவித்த திரிமூர்த்திகள் தோன்றினுர் கள். அவர்கள் வால்டையர், ரூசோ, மான்டிஸ் கியோ வாகும். அவர்கள் புரட்சிக்கு ஒருவாறு அஸ்திரவாரம் நாட்டியவர்களாகும். அதன் தத்துவத்தையும் விளக்கி யவர்கள் இப்பிரபுக்களேயாகும். எண்ணங்களே இவ்வுல கத்தை அரசு புரியும். நினைவு செயலாக நிலவுவதே புரட்சியாகும். வாய் வேதாந்தம், ஒருநாளும் புரட்சியைப் புலனுக்காது. எளிமை, தரித்திரம், பசிக்கொடுமை, அநீதி யும் அநியாயமுமான வரிகள் சில எழுச்சியை எழுப்பிய போதிலும் புரட்சியைப் புலனுக்காது. புரட்சியின் உற் பத்தி நிலைச் சித்தமேயாகும். அநித்தியமான காயத்திலே அது குணமாகாது. ஒவ்வொரு புரட்சியின் பின், ஒரு தர்மமோ தத்துவமோ திகழும். எல்லா தேச சரித்திரங் களினின்று இதன் உண்மையைக் காணலாம். பிரஞ்சு திரிமூர்த்திகளின் சரிதையினின்று இதை ஆராய்வோம்.

வால்டையர்

வால்டையர் பிரஞ்சு நாட்டின் புரட்சிக்கு 50 வருட காலம் உழைத்தவர். கொடுமையையும் வைதீகத்தையும் இப்பல வருடங்கள் எதிர்த்துக் வேலை செய்தார். அவர் சூட்சமமான சிந்தனையுள்ளவர். ஆனால் ஜகமெல்லாமறி யாதவர். நன்மை, தயை, என்பதால் அவர் அசைந்தாரே யொழிய ஒழுக்கத்தில் நன்கு ஆராய்ச்சியை உணரவில்லை. தீர்க்கதரிசையைவிட அவரைப் போர்வீரன் எனவேப் புகலவேண்டும். நன்மையை நாடுவதைவிட புன்மையையே போராடியவர். அதிகம் போற்றப்பட்டு தூஷிக்கப்படு பவராகும். புதிய சித்தாந்தத்தை அவர் சிறப்பிக்கவில்லை யாயினும், புரட்சிப் போக்கை ஸ்தாபித்தவராகும். புரட் சிப்போக்குமிருந்தது என நாம் புகன்றுவிடலாம். ஆனால் அதற்குப் புது உடை அளித்து பெரும் வன்மையைப் புல னுக்கியவராகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு அதிகாரத் திற்கும் விரோதமாகப் பிரசாரஞ் செய்தவர். பொய் வழக் கம் ஆசாரங்களை எல்லாம் படுகொலை செய்தவர். இவை களை யெல்லாம் அவர் நினைத்துச் செய்யவில்லையாயினும் அவரிடம் மிகுதியாயிருந்த போர்க் குணம் புலனுயிற்று எனப் புகலவேண்டும். வால்டையருக்கு ஆத்திரமும் ஆவேசமும் அதிகம். ஜன சமூகத்தில் சாய்ந்தவராயிருந்த போதிலும் பிரஷியமன்னனின் குற்றத்தை குணமாகக் கூறி புகழ்மொழி உரைத்த மதி குறைந்தவர். மதத்திலே சகிக்குந் தன்மை யிருந்த போதிலும், பகைஞர்களிடம் பொருமை என்பதே அவரிடமில்லை. சாகும் வரை போப் பின் சித்தாந்தத்தைப் போராடியவர். ஆனல் கத்தி முனை யைக் கண்டவுடன் போப்பின் பாதங்களில் விழுந்தவர்.

அவர் அழிக்கும் வேலையிலே மன்னனாயிருந்தபோதிலும ஆக்கும் பணி ஒன்றுமே செய்யவில்லை. மனித சமூகத்தில் வாழையடி வாழையாக மலரும் சட்டத்தையும், அபிவிருத்தியையும், நிஷ்காம கர்மத்தின் நிலையான நெறியையும். அவர் அறியவில்லை. சங்கங்களின் சிறப்பும் அவர் சித்தத்திலில்லை. உரிமையும் தனிப் புருடனின் நிலையும் இவைகளைத் தவிர வேறு எதையும் அவர் அறியார். உரிமையையே அவர் நாடியவராதலால் நிகழ்ச்சியிலுள்ள எல்லா உரிமைகளையும் நிலையாக்க வேண்டுமென்றார். வீடு வாசலில்லாதவனுக்கு சர்க்காரில் ஒட்டுரிமை கூடாதென்றார். ஈசனும் சுதந்திரமுமே நமது நோக்கமென்றார். இது உற்சாக அமுதத்தை அளிக்க காரணமா யிருந்தபோதிலும் இதுவே உற்சாகத்தை அளிக்காது. சுதந்திரம் நன்மையையும் புன்மையையும் அளிக்கும் இரு பக்கமும் கூருக உள்ள வாள் என அவர் அறியவில்லை. மாஜினி பிற்காலத்தில் இளைஞர்கள் அறியவேண்டுமென வால்டையரின் குறிப்புக்களை அக்ஞாதவாசத்தில் எழுதியதுடன் ரூசோவைப் பற்றி எழுதியதாவது:—மூடு மந்திரமான நன்மையான ஒரு வழக்கத்தை ஏற்படுத்திவிட்டால் எல்லாம் நன்மையாகி விடுமென நம்பினார். இந்த ஒரு சித்தாந்தமே மானிட கோடிகளுக்குப் பெருமை யளிக்குமென கனவு கண்டார். சர்வ ஜன சமூகம் சங்கங்கள் இவைகளின் தன்மையை இவர் அறியவில்லை. நிஷ்காமகர்மமில்லை. ஈசனின் இணையில்லாக் கருணையாகாது. புதிய வழக்கத்தை ஏற்படுத்தி விட்டால் எல்லாம் பெருமையாகி விடுமென்றார். புதிய வழக்கங்கள் பொருமையை அளிக்குமென எண்ணுவது, வேறு வழக்கங்கள் விளங்கி இதை என்

அழிக்காது என்பதைச் சிந்தனை செய்யாததாகும். மனித சமூகம் காலங்களுக்கேற்றவாறு வளரும் அமையும் பழைய சரிதைகளெல்லாம் அதைச் சிறப்பிக்கும். ரூசோவிற்குக் கடவுளிலே நம்பிக்கையுண்டு. ஆனால் கடவுளை சுவர்க்கத்திலே இருப்பதாகக் கருதினார். சர்க்காருக்கும் ஒரு மதம்வேண்டுமென்றார். கடவுளின் அற்புத சக்தியை இவர் அறியவில்லை. சிருட்டியிலும், ஜனங்களின் செயலிலும் அவர் செம்மையாயுள்ளார் என்பது அவர் சித்தத்திற்கெட்ட வில்லை. சர்க்காருக்கு மதமிருப்பது ஜனங்களுக்கு ஆபத்தைவிளைவிக்கும். வேறு மதத்தினர்களிடம் பட்சபாதம் ஏற்படும். உண்மையாய் ஒழுக்கமுள்ள நாஸ்திகர்களுக்கு கஷ்டத்தை விளைவிக்கும். ரூசோ பெரிய அறிஞன் என்பதற்கில்லை; கிறிஸ்தவ சித்தாந்தத்திற்கு அதிகமாக அவர் எதையு மறியவில்லை. தன்னந்தனி தத்துவத்திலேயே அவர் திகழ்ந்தார். சமூகசம்பந்தமான சாஸ்திரத்தை அவர் அறியவில்லை. ஆனால் சிற்சில சமயங்களில் அவர்அற்புதமாய் எழுதிய மொழிகளை நாம் மறக்கலாகாது. ஒருவனை விலைக்கு வாங்கும் அதிகப் பணக்காரனும், தன்னையே விற்கத் துணியும் ஏழையும், நாட்டில் கூடாது என்றார். அக்காலத்திலிருந்த எல்லாப் புருடர்களையும்விட சிந்தனையில் சிறந்தவர் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அவருடைய சித்தாந்தத்தில் சில காலம் சாந்தமளிக்கச் சந்தர்ப்ப மிருந்த போதிலும் சாசுவதமான நோக்கத்தை அவர் அளிக்கவில்லை.

மாண்டிஸ் கியோ

வால்டையரை விட பெரும் ஞானக்களஞ்சியமாகும். பழம் புராணங்களைப் படித்து புதிய உண்மைகளைப் புல

ணுக்கியப் புண்ணியவானுகும் பொருள்களை அறிவதில் நுண்ணிய அறிவை உடையவர். ஜன சமூகத்தின் சூட்சம கர்மத்தை அறியாதவர். புதுநிலைகளைக் காட்டினும் பழைய வழிகளிலே அவருக்கு பொது நோக்கம் ஒன்று உண்டென்பதை அவர் அறிய வில்லை. பெருஞ் செயல்களை பெருமையுடன் செய்ய அவரிடம் வன்மையில்லை. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு நோக்கம் உண்டெனக் கனவுகண்டார். ரோமாபுரி அதிகாரஞ் செய்யவும் லாசிடிமோனியா போர் புரியவும் ஜூடா தர்மப்பிரசாரத்திற்கும், பிரஞ்சு நாடு வியாபாரத்திற்கும், கானகவாசிகள் சுதந்திரத்திற்குமே ஜீவிக்கிறுர்கள் என்பது அவர் சித்தம். ஆனுல் இவைகளெல்லாம் காலம் சந்தர்ப்பத்தினுல் குணமாயிற்றென்பதை அவர் காணவில்லை. குடியாட்சியின் குணங்களை அவர் அறிந்த போதிலும் மன்னனுட்சியே மேன்மை யென அவர் முடிவு கூறுவது அவர் மதியற்ற நினைவை மெய்ப்பிக்கும். உரிமையை அவர் அதிகம் அறிந்தாரேயொழிய, அதற்கதிகமாய் உய்விக்கும் மந்திரம் அவருக்கு மலரவில்லை. பல வருடங்களால் புலனுகும் வகுப்புவாத சர்க்கார் அமைப்பில் அவருக்கும் பிரியமதிகம். பிரபுசபை, ஜனசபை அரசன் ஆக்ஞையான் இவைகளானுண்டாகும், பிற்போக்கு, அநித்தியப் புரட்சி, தேக்கம், இவைகளை அவர் அறியவில்லை. தேச ஐக்கியத்தைப் பற்றியத் திட்டமான அபிப்பிராயம் அவருக்குப் பூஜ்யம். உரிமைகளைப் பற்றியே அவர் அதிகம் உரைப்பதால் பல உரிமைகள் சேர்ந்து பரஸ்பரம் பங்கம் விளையு மென்பது அவர் புத்திக்கெட்டவில்லை. ஜனம், சனசமூகம், சட்டத்தின் உயர்வு முதலியவைகளைப் 'பற்றி அவர் ஒன்றுமே

உரைக்கவில்லை. அவர் உணர்ச்சியையும், ஊக்கத்தையும், அளித்த போதிலும் உய்யும் வழியை, நன்ருய்க் காணவில்லை எனலாம்.

மேனு ஆராய்ச்சி

இந்தப் புரட்சியில் பிரஞ்சு வீரர்களைப் போல் நாமும் பிழை செய்யலாகாது. உரிமை உரிமை என ஒருவருக் கொருவர் அடிதடி உண்டுபண்ணலாகாது. நீங்கள் சுக மடைவீர்கள் என ஆசையைக் காட்டலாகாது. தீமையை யொழிப்பதென்பது ஒருபுறமிருக்க, நன்மையை நமது முன்நிலையாக்கவேண்டும், ராஜீயக் கட்சியாய் நாம் கீழே விழுந்தோம். இனி தர்மக் கூட்டமாய் எழுந்திருக்கவேண் டும். உற்சாகமே உயிரை அளிக்கும். நிஷ்காம கர்மத்தை எங்கும் நிலவச் செய்யவேண்டும். உங்களுக்காக இல்லை, மனித சமூகத்திற்காக நீங்கள் உழைக்கவேண்டும், மறுபடி யும் இதாலி எழுச்சியாகிப் புரட்சியைப் புலனுக்கி தயாராக உள்ள ஐரோப்பாவிற்கு வழியைக்காட்டும் இதாலி, முன் னேறினுல் ஐரோப்பா முன் அணி செல்லும், இதாலிக்குக் குடியரசு வேண்டு மென்பதே அவர் கருத்து. சாந்தமாய் செய்வதற்கு சந்தர்ப்பமில்லையானுல், குரங்குச் சண்டை யே கைவல்லிய மளிக்கு வென்பது அவர் கருத்து. குரங் குச் சண்டை கூடாது என அவர் நண்பர்கள் கூறிய போதிலும் அதுதான் மகாஜனங்களை எழுப்பும் சங்க நாதம் எனக்கூறுவார். எத்துணைமுறைதோல்வி அடைந்த போதிலும் ஒருநாள் ஜயமடைவோம் என மனப்பூர்வமாய் நம்பினுர். சண்டையும், தியாகமும், வீணுகாது என ஆரா ய்ச்சியால் அதற்கேற்ற செயல்களை செய்ய ஆரம்பித்து,

இளம் இதாலியையும் பிரசுரித்து பல வியாசங்களும் எழுத முற்பட்டு விட்டார்.

உபதேசம்

இளைஞர்களே! வாழ்க்கையென்பது பெரும் நோக்கமாகும். கடமையே அதன் பெரியசட்டமாகும். உங்கள் ஆன்மாவை புனிதமான ஆலயமெனக் கருதி அகங்காரத்தைக் அழிக்கவும் உங்கள் வாழ்க்கையைப்பற்றி அறிந்து கொள்வது பெரும் தர்மமென எண்ணவும். உங்களைச் சுற்றியுள்ள மகாஜனங்களுக்கு அத்தியாவசியமானது எது என்பதை அறிந்து கொள்ளவும். அவ்வவசியமானவற்றை அடைவதற்கான செயல்களில் தீர்மானமாகவும், நீங்கள் நினைத்து நிலையான தீர்மானத்தை அடைந்து விட்டால் ஈசனே எதிரிடையாய் வந்தாலும் அச்செயல்களை நிறுத்த வேண்டாம். உங்களின் எல்லா வன்மையைக் கொண்டு அதை நிறைவேற்றவும். சுகதுக்கங்களிலும் அச்செயல்களை செய்யவும். சர்வஜனங்கள் உங்களுக்குத் துணையாயிருந்த போதிலும் சரி அல்லது தன்னந்தனியானாலுஞ் சரி அச்செயல்களைப் பரிபூரணமாய்ச் செய்வதே உங்கள் கடமை. இப்பாதையோ தெளிவாய் உள, எதிர்கால வாழ்க்கைக்குச் சிரத்தையன்னியில் சுக துக்கங்களுக்குப் பயந்து நீங்கள் பின்வாங்குவீர்களேயானால் நீங்கள் பேடிகளே; இங்ஙனம் தன் நாட்டு இளைஞர்களுக்குக் கூறினார்.

ஸ்விட்ஜர்லாந்து

இங்ஙனம்கூறி மகா ஜனங்களுக்கும் உழைக்காரம்பித்தார். இவர் உழைப்பை நாட்டு ஜனங்கள் விரும்பவில்லையாயினும் இளைஞர்கள் உற்சாகமுடன் சேர்ந்தார்

கள். அதற்காக ஒருபத்திரிகையையும் நடத்தினர். இவர் உழைத்ததின் பயனாக புதிய சர்க்காரும் ஸ்விட்ஜர் லாந்தில் ஸ்தாபனமாயிற்று. இளம் ஐரோப்பா எனவும் ஒரு சங்கத்தை ஸதாபித்தார். இலக்கியத்திலே அவர் மனஞ் சென்றபோதிலும் அடிமைகளுக்கு சாஹித்தியம் எதற்கு? சுதந்திரம் தோன்றும் வரை சாஹித்தியத்திற்கு உழைக்கப்போவதில்லை,என நண்பர்களிடம் கூறிவிட்டார்: தேசத்திற்குப் பிறகு தாயை அடிக்கடி எண்ணுவார். மனம் சகிக்காவொண்ணாதுக்கத்தினல் திணறும் பொழுது தாயின் நினைவே என் மனத்தைச் சாந்தமாக்கி விடும் என்பார். இங்ஙனம் 1836ம் வருடம்வரை ஸ்விட்ஜர்லாந்தில் கழித்து 1837 ம் வருடம் லண்டன் நகரம் சென்ருர்.

அத்தியாயம் 6

லண்டன்—மனக்கலக்கம்—கடிதங்கள்—சாஹித்யம்

மாஜினி 1837-ம் வருடம், ஜனவரி மாதம் வேறு பல அக்ஞாதவாசிகளோடு லண்டன் மாநகரஞ் சென்ருர். மறைவாய்க் காலந்தள்ளும் கொடுமையினின்றும் கழிய, சுவிட்ஜர்லண்டு தேசம் நீங்கி பிரஞ்சு சர்க்காரின் உதவியுடன், போலீஸ்காரர்களின் கஷ்டங்களினின்று பிரிந்து, சுதந்திர ஆங்கில நாட்டைச் சேர்ந்தார். சூரியனும் சங்கீதமுமில்லாத பேரிருள் நிறைந்தநாடு எனப் பரிதவித்தார். லண்டனிலுள்ள மூடுபனியைக் கண்டால் கருடபுராணத்து நரகத்தைப்போல் காண்கின்றதே எனக்

கலங்கி, வீட்டின் ஜன்னல் பக்கம் செல்லவும் அஞ்சினர். இவருடன் வசித்த தேச பிரஷ்டர்கள் அதிக ஆத்திரமுள்ளவர்களாகி, அடிக்கடி அருகிலுள்ளவர்களிடம் சச்சரவு செய்தபடியால் மனஞ் சஞ்சலமடைவது வழக்கம். மனதார மொழிவதற்கும் அருகில் ஒரு நண்பரும் இல்லையே என ஏங்குவார். புஸ்தகாலயத்திற்குச் செல்வதைத் தவிர வேறு எங்குமே செல்வதில்லை. புதிய நூல்கள் வாங்கவும் அவரிடம் பொருளில்லை. புஸ்தகங்கள் கடன் கொடுப்பவருமில்லையே எனக் கலங்குவார். தன்னிலும் அதிக க்ஷீண திசையை யடைந்த தேச பிரஷ்டர்களைக் கண்டு இரங்குவார். இலட்சக்கணக்கான ஜனங்கள் நிறைந்த குரூரமான லண்டனிலே ஏதோ ஒரு மூலையில் பதுங்கியிருந்தார். தந்தை ஏதாவது வியாபாரஞ் செய்ய என கொஞ்சம் பொருள் அளித்தார். அதெல்லாம் நஷ்டமாகவே, தந்தை கோபித்தார். பிறகு அவருக்கு எழுதுவதையும் விட்டுவிட்டார். புரூப் ரீடர் வேலையும் அவருக்கு அகப்படவில்லை; இவர் எழுதும் வியாசங்களை கேட்பவருமில்லை. கையிலிருக்கும் காலணவை தன்னை அணுகியவர்களுக்கு அளித்து விடுவார். வீட்டுப்பொருள்களையும் அடகு வைத்து பணம் வாங்கி விட்டார். தாய் அளித்த மோதிரம், கடியாரம், படங்களெல்லாம் மார்வாடியிடம் சென்று விட்டன. குளிருக்கான கம்பளியும் 'நான் விட முடியாத சுருட்டு' க்காக விற்று விட்டார். மாரி காலத்தில் போர்வையும் விற்று விட்டார் என்றால் அவர் நிலையைக் கூறுவானேன். நல்ல உடைகளை அளித்தால் விற்று விடுவான் என என் தாய், சரசமான உடைகளை திண்டாடும் தன் மகனுக்கு அனுப்புவாள். ஒரு நாள் ஞாயிற்

றுக்கிழமை உணவிற்கு தனது கோட்டையும், பூட்ஸை யும் கோமுட்டியினிடம் குதுவை வைத்தார். சரியான உடையன்னியில் புஸ்தகசாலை போகாமலும், சிலகாலம் இருந்து விடுவார். நண்பர்களும் அவருக்குப் பணம் அடிக் கடி அளித்து அலுத்து விட்டார்கள். எவராவது வெகு மதி யளித்தால் தன் தாய் வெட்கத்தினல் இறப்பாள் என எண்ணி அதையும் மறுத்துவிடுவார். ஒன்று கடன் கொடுத்தவனிடம் கலங்கவேண்டும்; இல்லையேல் தற் கொலை புரிந்து கொள்ள வேண்டும். இவை இரண்டு தான் அவர் சிந்தனையிலேயாகும். "பேடி எனப் புகல் வார்களே! எனது தாய் என்னை என்ன நினைப்பாள்" என அஞ்சி தற்கொலை செய்து கொள்ளத் துணியவில்லை. ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபாய் வட்டியாகவும் கடன் வாஙகிய துண்டு.

மனக் கலக்கம்

தன்னை நாடும் எளிய தேசபக்தர்களுக்குத் தன் கையிலிருப்பதை அளித்துவிட்டு, அடிக்கடி திண்டாடு வார். அடிக்கடி தன்னுடன் துணையாயிருந்த தேசபக்தர் கள் பிரிந்ததற்குப் புலம்புவார். பைத்தியம் பிடித்தவன் போல் சில காலம் பதறுவார். ஆனல் சிலவருஷப் பயிற் சியால் ஆன்மசக்தியைப் பெருக்கிவிட்டார். தரித்திரமும் "தன்னந்தனி வாழ்க்கையைத் தவிர, நான் என்ன நினைக் கிறேன், எங்கு செல்லுகிறேன்' என கேட்பதற்கும் தன் னிடம் ஒருவருமில்லையே என சில காலம் சிந்திப்பதுண்டு. "புஸ்தக சாலையினின்று திரும்பிவந்தால் இருள் நிறைந்த அறையும் நிசப்தத்தைத் தவிர வேறு எதையும் நான்

அறிவதில்லை'' என்பார். இந்த கஷ்ட காலங்களை யெல்லாம் கவனித்துப் பார்க்கும்பொழுது இவ்வுலகம் அழியும் நிலையிலிருக்கின்றதென இரங்குவார். “குற்றமில்லாமல் கடுந் தண்டனையை யடைந்தேனே, நான் இறப்பதற்கு முன் எவர்க்காவது ஒரு நன்மையைச் செய்ய விரும்புகிறேன்'' என ஒருசமயத்தில் தன் நண்பனொருவனுக்கு எழுதினார். தனக்கென இனிவாழ்வதில்லை எனத் தீர்மானித்துக்கொண்டார். தான் சுகமாயிருக்க வேண்டுமென முயலுவது பேராசைக் கொப்பாகும். ஈசனுக்கும், ஜன சமூகத்திற்கும், தேசம் மகாஜனங்களுக்கும் நமது நித்திய கடமைகளைச் செய்யவேண்டும் என்ற இவைகளே சதா காலமும் அவர் மனத்திலாகும். வாழ்க்கை என்பது பிராயச்சித்தம் செய்து கொள்ளும் ஒரு ஸ்தலமாகும், தன்னைத்தான் புனிதஞ் செய்து கொள்ள ஒரு சந்தர்ப்பமாகும். மனித சமூகம் முன்னேறுவதற்கு ஒருவன் துக்கத்தைஅனுபவித்த போதிலும் குற்றமில்லை என தன்னைத் தானே தான் தேற்றிக்கொள்வார். இக்கஷ்டங்களுடன் குடும்பக் கஷ்டம் வேறு. கன்னிகையாயுள்ள தனது ஒரு சகோதரியும் சென்றுவிட்டாள். மாஜினிக்கு ஆதரவளித்து, பெற்றோர்களுடன் அவருக்காகப் போராடிய சகோதரி சென்றது சிந்தைக்குச் சற்று கஷ்டத்தையே அளித்தது. தன் தந்தையும் தேகம் அசௌக்கியமாய்ப் பல தினங்கள் கஷ்டப்பட்டார். தூக்கு மேடை கிடைத்த போதிலும் பெற்றோரைப் போய் பார்க்கவேண்டும் எனப் புலம்புவார். ஆனால் ஒரு வேளை அகப்பட்டு விட்டால் தேசத்திற் குழைப்பவரில்லையே எனத் தெளிவார். 1844-ம் வருஷம் மாறு வேஷமுடன் பெற்றோரைப் போய்ப் பார்த்து துரிதமாய்த் திரும்பி விட்டார்.

இங்கிலீஷ்காரர்கள் எல்லாம் கேவலம் இவ்வாழ்க்கையையே பெரிதாக எண்ணுபவர்கள். அவர்களுக்குக் குறுகிய புத்தியே யுண்டு. அவர்களிடம் தயவு தாட்சண்யமில்லையே என அவர் நெருங்கிப் பழகாதவரை நினைத்த போதிலும், ஆங்கில நாட்டை எனது தேசத்திற்கு அபரிமிதமாய் நேசிக்கிறேன் என பிற்காலத்தில் பகிரங்கஞ் செய்தார். எடின்பரோவிலுள்ள பிலெட்சர் அவரைக் கண்டு, அவர் வசீகரவதனம், மெல்லிய உடல், உற்சாகமற்ற வாழ்க்கையை நோக்கி 'நீ தற்கொலை செய்து கொள்ளலாகாது' என எச்சரிக்கை செய்தார். தன் சுகம் நாடி அது திகழாதவனே தற்கொலை செய்து கொள்ள முயலுவான், என மாஜினி பதிலளித்தார். ஆங்கில சாஹித்தியத்தில் அமுதமணி என விளங்கிய கார்லைல் இவருக்கு நண்பராளுர். குணக்குன்று என அவரைக் கூறுவார். தனக்கு மாறாக எண்ணுபவர்களை மொழிவதற்கும் விடாதவன் எனச் சொல்வதுண்டு. கவிச்சக்கிர வர்த்தியான, டாண்டியின் மேலுள்ள அன்பினுல் இருவரும் இணைபிரியா நண்பர்களானுர்கள் எனலாம். ஆனுல் ராஜீய விஷயத்தைப்பற்றி விவாதிக்குங்கால், அவன், அகங்காரம், வீரோபாசனை, ஜனசமூக நோக்கம், நடுக்கமும், பயனில்லப் பணியும், மாஜினிக்கு விருப்பமில்லை. கார்லையலைப் படிக்காதே! நீ சிற்றின்பத்தில் சாய்ந்து விடுவாய். கார்லையில் வன்மையை உபாசிப்பவன்.

நான் அதை உடைத்தெரியத் தோன்றியவன். மனமறியாதப் பேர் வழிகளில் கார்லைல் ஒருவன். அவன் அழிப்பதில் அற்புத சக்தி வாய்ந்தவன். நிலையாக்குவதற்கான நேர்மை அவனிடமில்லை. ஜனம், சமூகம், முதலி

யவைகளை விட்டு விட்டு, வீரனையும் வன்மை யுள்ளவனையும் உபாசனை செய்தால் கொடுங்கோல் மன்னனையே நீ அடைவாய் என கார்லைலை களிப்புடன் படித்த பெண்ணொருவளுக்கு மாஜினி மொழிந்தார். கார்லைல், மாஜினியை அவசர புத்தியுள்ளவன் எனவும், தேசவெறி திகழ்பவன் எனவும் கூறுவது வழக்கம். இவர் இங்கிலாந்தில் வசிக்குங் காலத்தில், மாஜினியின் கடிதங்களை சர்க்கார் கைப்பற்றியதைப்பற்றி பார்லிமெண்டில் விவாதம் நடந்தபொழுது சர்க்கார் தரப்பில் அவதூறாகப் பேசிய காலத்தில் கார்லையில் லண்டன் டைம்சில் அடியிற்கண்டவாறு எழுதிய மொழிகள் பொன்னே போல் போற்றப்படவேண்டும்.

மாஜினி இவ்வுலக வாழ்க்கையைப்பற்றி அறியாதிருந்த போதிலும், சத்தியம் தர்மம் மனிதவாழ்க்கைக்காக கஷ்டப்பட்ட பெரும் தியாகஞ் செய்த ஒரு புருஷரைக் காணவேண்டுமானால், அவரே மாஜினியாகும், நாட்டிலுள்ள எல்லா நண்பர்களுக்கும் இவர் ஒரு புனித ஆன்மா எனச் சிபார்சு செய்வேன். சொல்வது போல் நடக்கும் தீரன் என புகழுரை வரைந்தார். கார்லைல் இங்ஙனம் எழுதுவாரென்று மாஜினி மதிக்கவில்லை. இச் சந்தர்ப்பத்திற்குப் பிறகு மாஜினிக்கு பல நண்பர்களின் நட்புக் கிடைத்தது. கார்லையில் மனைவியும் மாஜினிக்கு அடிக்கடித் தேர்தல் அளிப்பதுண்டு. தனக்குத்தோன்றும் சுக துக்கங்களை அவரிடம் புகன்று ஆறுதலாவாள். மாஜினி, கார்லைல், கார்லையின் மனைவி இம்மூவர்களும் அடிக்கடி சேர்ந்து சம்பாஷணை செய்வார்கள். மாஜினி மொழிவதை கார்லையில் பலமுறைகள் கண்டிப்பது வழக்கம். ஆனால் ஒரு முறை கார்லையலை நோக்கி அவன்

மனைவி உன் மொழிகளெல்லாம் உனது அபிப்பிராயம். ஆனால் மாஜினிக்கோ அதுவே உயிரும் மரணமுமாகும். அவன் அதற்காகத் தூக்கு மேடையுஞ் செல்லுவான் 'என மாஜினியைப் புகழ்ந்து பேசியது கவனிக்கத் தக்கது.' பிற்காலத்தில் மாஜினி, கார்லயின் மனைவிக்கு எழுதிய கடிதங்கள் ரோஜாப் பூவைப்போல் இன்னும் வாசனை வீசுகின்றன.

கடிதங்கள்.

உன்னுடைய கடிதம் மாலையில் கிடைத்ததால் துரிதமாய் பதிலளிக்க முடியவில்லை. உன் மொழிகள் துக்கம் ததும்பியவை. ஆனால் உன்னைத் தவிரவேறு எவர்களால் அவைகளினின்று தளரமுடியும். நீ சாந்தமாய் ஓரிடத்தில் உட்கார்ந்து மனத்தைத் தண்மையாக்கினொலொழிய நீ தீர்மானஞ் செய்து கொண்ட பூதம் பிசாசுகளை எங்ஙனம் புதைப்பது? எத்துணை கஷ்டங்கள் நிகழ்ந்த போதிலும் அதைக் கழிக்கும் வன்மை உன்னிடத்திலேயே உள என்பதை நீயே கற்க முடியும். புனித ஆன்மாவிலே நம்பிக்கையாகி கடமைகளையெல்லாம் நன்குணர்ந்து நீயே நிஷ்காம கர்மமாய் செய்யவேண்டு மென்பதை நீயே அறியவேண்டும். கடமையை நிறைவேற்றுவது களிப்பளிக்கவில்லையானால் வேறு எது அளிக்கும்? பாச மற்று பணி செய்வது பெருமை எனநான் சொல்வது உனக்கு துக்கத்தையும் துன்பத்தையும் உண்டுபண்ணலாம். என்ன செய்வது? நாம் இருவரும் வேறு வழிகளில் செல்லுகின்றோம். ஆயாசமென்னும் அகாதத்தில் என்னைச் செலுத்தாமல், கஷ்டதுன்பங்களைக் கலக்கமன்னியில் போராடிச் செலுத்

துவது எனது நித்திய ஆன்மாவினின்று நிகழும் உணர்வான கடமையேயாகும். சாந்தமாயும் வெகு சிந்தனையுடன் நான் உனக்குச் சொல்வது யாதெனில், உனக்குத் தெரிந்தும் தெரியப் போகாமலுள்ள எத்துணையோ கஷ்டங்களை உன்னைவிட கடுமையாய் அனுபவிக்கிறேன். பெரும் நோக்கத்திற்குத் தியாகஞ் செய்வதைவிட இப்பூவுலகில் வேறு வழியில்லை என நான் பலமுறை சொல்லிக் கொண்டு, எனது அன்னை சுவர்க்கத்திலிருந்து என்னை கவனித்து ஆனந்த மடைகிருள் என்னும் ஆறுதலை காட்டிலும் வேறு அமுதத்தை நான் காணவில்லை. இந்த திடச்சித்தமே என்னைப் பாதாளத்தில் விழாமல் பாதுகாக்கின்றது. நான் சுடுகாடு செல்லும் வரை இது ஒன்றே எனக்கு வன்மையை யளித்து புது உணர்வையும், உற்சாகத்தையும் நாள்தோறும் அதிகப்படுத்துகின்றது.

எழுச்சியாகவும், விழிக்கவும், சுக துக்கம் நீங்கி துக்கப் புன்னகையுடன் பரஸ்பரம் பேராதரவுடனுகி நாம் முன் செல்லவேண்டும். தெய்வீகமான ஆன்மா நம்மிடம் நிகழ்கின்றதே! எவர்களா யிருந்த போதிலும் மற்ற சீவராசிகளுக்கு நமது நினைவுகளை நீக்கிவிடலாகாது. உனது வாழ்க்கை வீணுயிற்று என எழுதுகிருய். வீணுகுமோ? வையகத்தில் நீ இதுவரை ஒருவருக்கேனும் ஒரு நன்மையையும் செய்யவில்லையா? உன் புனிதமான பொறிகளை பங்கஞ்செய்து கொள்ளாதே. தந்தை தாயை எண்ணி நன்மைசெய்யவும். ஈசனே நோக்கமென எண்ணவும். ஈசன், நாம் இங்ஙனம் துக்கப்படவேண்டும் என்னும் எண்ணத்துடன் நம்மை வீணுகப் படைக்கவில்லை, நமது

கோரிக்கைகளை அவன் நினைவன்னியில் அளிக்கவில்லை. அவனை இனியாவது நம்பமாட்டாயா?

இங்ஙனம்,

மாஜினி.

வேறு சந்தர்ப்பத்தில் அவர் எழுதிய கடிதமும் கருத்திலாக்கவேண்டும்.

பிடுருகியின் மனைவி இறந்த துக்கத்தால் நான் உனக்கு நேற்று எழுதமுடியவில்லை. துக்கம். ஆனால் துக்கமான துக்கம் வேண்டாம். மனப்பூர்வமாய் ஒரு நிமிஷமாவது நீ நன்கு நினைத்தால், இத்துக்கம் தொலைந்து நம்பிக்கையுடனுவாய். சுக துக்கம், இலாபம், நஷ்டம், முதலியவைகள் பிரயாணிகளின் வெயிலும் மழையுமாகும். சுகம் தோன்றினல் அவனை நினைத்து ஆவேசமுடன் ஆகவேண்டாம். கஷ்டங்கள் தோன்றும் படி யாகவுள்ள, நீ செலுத்துமிடத்திற்கு, அதனுல் ஒன்றுமாகாது என எண்ணி குடையைப் பிடித்து முன் செல்லவும். நீ இதை அறிவாய். ஆனால் இதற்கேற்ற நம்பிக்கை உன்னிடமில்லை. அந்த நம்பிக்கை உனக்கு நிகரில்லாத வன்மையை அளிக்கும். இந்த வன்மை யெல்லாம் உனக்கு, அன்பு, அறம், முதலியவைகளை அளிக்கும். உனக்கு என்னிடம் அன்பு உண்டு, எனக்கும் உண்டு. ஆனால் உன்னுடைய மனத்தளர்வால் என்னையும் தளரும் வண்ணம் செய்யாதே. உன் வாழ்க்கையால் என்னையும் புனிதமாக்கச் செய்யவும். உனக்கு ஈசனிடம் நம்பிக்கையுண்டு; ஆதலால் இக் கஷ்டங்களெல்லாம் அநித்தியமென எண்ணி, கடைசியில் அவன் ஆதரவையளிப்பான் என்னும் திடச்

சித்தத்தை அடையவும். கண்ணன்னியில் காயமன்னியில் நீ உன் பெற்ருேர்களே பார்க்க முடியவில்லேயா? பேடி என அவர்கள் சொல்லாமலிருக்க நீ வையகத்தையும் விற்காயோ? நான் ஆயிரம் எழுதுவதைவிட ஒரு நிமிஷ சாந்தம் உனக்கு எத்துணேயோ திறமையை யளிக்கும். அவர்கள் இறந்த போதிலும் இருப்பதாக எண்ணி அவர்கள் ஏவிய செயல்கள் என நீ ஏன் எண்ணலாகாது? இறந்த நண்பர்களின் நினேவால் எத்துணேயோ நன்மையை நான் பெறுகின்றேன். நீ வன்மையுடனுகவும், உன் ஜனங்களின் நடுவில் பெருமையுடன் வாழ விரும்பவும். நம்மைக் காட்டிலும் அதிகத் துன்பங்களே அனுபவிப்பவர்கள் உளர். அவர்கள் ஒரு வேளே உன் உதவியை நாடலாம். நீ எழுச்சியாகி வேலேயிலமரவும், பொட்டை காட்டில் முள்ளு முளேப்பது போல், சும்மாயிருந்தால் சங்கடத்திற் குள்ளாவாய். ஆதலால் சும்மாயிராமல் ஏதாவது செயலேச் செய்யவும்.

இங்ஙனம்

மாஜினி.

கார்லேயில் மனேவி, மாஜினியின் கடிதங்களேப்படித்து பெரிதும் மனேசாந்தமானுள். கார்லேனும் மாஜினியின் மர்மத்தை அறியும் வண்ணம் செய்தாள். கார்லேயினின் நட்பாலும், இன்னம் மற்றவர்களின் உதவியாலும், பலநண்பர்களே மாஜினி பெற்ருர். ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசப் பிரஷ்டர்களின் சிநேகிதம் இவருக்கு ஒருவாறு ஆற்றலே அளித்தது. லண்டனிலே லெமென்னியஸ் என்னும் ஒரு அறிஞனின் நட்பைப்பெற்ருர். அவர் "பக்த

னின் மொழிகள்'' என அற்புதமான ஒரு நூல் எழுதி யிருந்தார். அந்நூல் மாஜினிக்கு ஒரு பொக்கிஷம் போ லிருந்தது. அந்நூல் தான் அவர் பெருமையுடன் எழுதிய மனிதர்களின் கடமைகளுக்கு உற்சாகத்தை அளித்தது. தனது குருநாதரைப் போலவும் அவரைக் கருதினார். லொமன்னியும் மாஜினியை ஒரு மெய்ப்புருடன் எனப் புகழ்ந்துளார். தன்னைத்தான் தரணிக்குத் தியாகஞ்செய் பவனே தூய்மையானவன் என அவர் கூறுவது வழக்கம்.

சாஹித்தியம்

இவ்வஞ்ஞாதவாசத்தில் நண்பர்களின் வேண்டுகோ ளுக் கிணங்கி கவிச்சக்கிரவர்த்தியான டாண்டியைப் பற்றி யும், இன்னம் பல விஷயங்களைக் குறித்து வியாசங்கள் எழுதுவார். ஆனல் அவைகளால் அவருக்கு வருமான மே இல்லை. கவிச் சக்கிரவர்த்தியாக வேண்டுமென அவ ருக்கு எண்ணமுண்டு. ஆனல் அடிமைகள் அடிமைச் சங் கிலியை அறுக்கும் வரை சாஹித்தியத்தில் உழைப்பது பேடித்தனமென இலக்கியத்தில் புத்தியை விடவில்லை. ஆனல் பழம் நூல்களைப் படிப்பதற்குப் பிரியமதிகமாகி பழம் புத்தக வியாபாரிகளிட மெல்லாம் திரிவார். ஆங்கி லக் கவியான பைரனிடம் அவருக்கு அன்பு அளவில்லாம லுண்டு. ஆனல் நாடு சுதந்திரமாகி சாந்த நிலையிலிருக்கும் பொழுதே சாஹித்தியத்திற்கு உழைக்கவேண்டு மென்பது அவர் எண்ணம். சாஹித்தியத்தில் சிந்தனையைச் செலு த்துவது சீரழிவது என சித்தத்திலாகி, மறுபடியும் இளம் இடாலிக்கு உழைக்க ஆரம்பித்துவிட்டார். இறந்துபோன இளம் இடாலியை எங்ஙனம் எழுப்புவதென்று திகிலானர்.

ஆனால் ஒவ்வொரு திகிலும் அவருக்குப் புது திடத்தை அளித்தது. அங்கத்தினர்களெல்லாம் பிரிந்து மறைந்து விட்டார்கள். சிலர் சர்க்காருடனாகி, பலர் சாந்தத்தில் சாய்ந்து, பழம் உணர்விலேயே பலர் நிறைந்து இளம் இடாலி இருக்கும் நிலை இலங்காமல் மறைந்திருந்தது. சதியோ சாகவில்லை. ஆனால் மாஜினி இவைகளை யெல்லாம் விரும்பவில்லை. தேசப் பிரஷ்டர்களான இரு பக்தர்கள் கூட ஒன்றாக நினைப்பதில்லையே எனக்கலங்கிடுவார். போர் புரிவதில் பயந்து நடுவிலே நீங்கி மறையும் தேசபக்தர்களைக் கண்டால் அவருக்கு வெறுப்பு அதிகம். நோக்கத்தை பரிபூரணமாய் அடையும் வரை போர்புரிய வேண்டுமென்பது அவர் கொள்கை.

நான் ஒரு வேளை தேசம் தலையோங்கும் முன்னர் இறந்துவிடுவேனோ எனக் கலங்குவார். சித்திரவதையால் சுவர்க்கஞ் சென்ற தேசபக்தர்கள் சாந்தமாய் அறை கூவி அழைத்து நீ ஏன் இன்னம் ஒன்றுஞ் செய்யவில்லை என என்னிடம் கூறுவதுபோ லிருக்கின்றதே எனக் கலங்குவார். இங்ஙனம் பல சிந்தனைக்குள்ளாகி தொழிலாளிக்காக லண்டனிலே ஒரு இராப் பாடசாலையை ஏற்படுத்தினார். அவர்களுக்கு இலவசமாய், இடாலி நாட்டுச் சரிதைகளையும், பெரும் நோக்கங்களையும் கற்பிப்பார். போப்பின் பிரதிநிதி தொழிலாளிகளுக்கு இப்பாடசாலை அவசியமில்லை என்றார். அதை கவனிக்காமல் அன்புடன் அப்பாடசாலையைப் போஷித்து வந்து இடாலி தொழிலாளிகளுக்காக ஒரு பத்திரிகையையும் நடத்தினார். புரட்சி பெருமையாக வேண்டுமானால் தொழிலாளிகளின் உதவி வேண்டுமென்றார். இடாலி, மகாசனங்களின் நாடு என்றார்.

எல்லா வகுப்பினர்களுக்கும் ஒரு சந்தோஷமுண்டு. நம் தொழிலுக்கு எந்தவிதத்திலும் இன்பமில்லை என கதறி தேசீய விஷயத்தில் ஊக்கமாகும் வண்ணஞ் செய்தார். நீங்கள் என்ன கூலி பெற்றீர்கள் எனக் கடவுள் உங்களைக் கேட்கப் போவதில்லை. நீங்கள் மகா ஜனங்களுக்கு உழைத்தீர்களா எனவே வினவப் போகிறார். இடாலி பெரிய தேசம். புனித நாடு. அது பெருமையாக வேண்டும் எனப் பலவாறு அவர்களுக்கு போதித்து புது உற்சாகத்தை அளிப்பார்.

அத்தியாயம் 7.

புரட்சீ—இளம் இதாலி.

புரட்சி

மாஜினி ஆங்கில நாட்டில் காலந்தள்ளி வருங்காலத்தில் சிறு துளிகள் பல வெள்ளமாகி உடைப்பெடுத்து கரை புரண்டோடுவது போல் தேசீய உணர்ச்சி மாஜினியால் பலவருடங்கள் மெதுவாக மூடப்பட்டு இடாலியிலே பெரு முழக்கத்தை யுண்டுபண்ணி விட்டது. மாஜினியின் துண்டுப் பிரசுரங்கள் திறமைத்தனமாய் தேசமெல்லாம் பிரசாரஞ் செய்யப்பட்டபடியால் ஜனங்களெல்லாம் ஆரவார முடனுனார்கள். கலாசாலை மாணவர்களெல்லாம் கைவல்லியம் குணமாயிற்று எனக்கொண்டாடினார்கள். பழைய கார்ப்பொநேறி இரகசிய சங்கங்கள் இவர் மொழிகளை சுருதியைப் போல் செவிக்குச் செவியாய் அறிந்து வந்தார்

கள். ஆஸ்திரியாவின் கொடுங்கோன்மையும் நெருப்பில் நெய்யைவிட்டது போல் வளர்ச்சிசெய்தது. ஆஸ்திரியா வீழ்ச்சியாகுக என்னும் கூக்குரலையே எங்கும் காணலாம்.

தேசீய சாஹித்தியங்கள் தழைத்தன. கவிச்சக்கிர வர்த்தியான டாண்டியின் கவியிலே புது உற்சாகத்தைக் கண்டார்கள். ஐக்கியத்திற்கு அல்லும் பகலும் உழைத்த டாண்டியின் பாக்களை கூட்டம் கூட்டமாய் தெருவில் கூடி படித்தார்கள். பழம் பெருமைகளைப் பற்றி குட்டிக் கதைகள் எழுதுவோரும் கானஞ்செய்தார்கள். சமூகச்சீர்திருத்தக் காரர்களும் சேர்ந்து மிதவாதிகளைப் பெருக்கி கலாசாலைகளும் சிறிய உண்டியல் கடைகளும் அதிகரித்தன. மன்னன் ஆல்பர்டும் புதிய போப்பும் ஜனங்களுடன் சேர்ந்து அந்நியர்களை ஒழிக்கச் சாதகமாயிருப்பதாக மகாஜன வாக்கு. எது எங்ஙனமிருந்தபோதிலும் ஜனங்களுக்குள் புது நோக்கமும் புத்துணர்வும் புலனாய்விட்டது. எல்லாம் இணைந்தது. எழுச்சி.

குரங்குச் சண்டையால் ஜனங்கள் சேதமாவதைகண்டு மிதிவாதிகள் கண்ணீர் சொரிந்தார்கள். உள்நாட்டு மன்னன் மறுமடியும் ஜனங்களுடன் சேர்ந்து முதன் முதலில் ஆஸ்திரியாவை வெளியில் துரத்துவார் என நம்பியிருந்தார்கள். உள்நாட்டு அரசர்களிடம் சண்டையிடலாகாது என எங்கும் கூச்சல். நடு இடாலி முழுவதும் சதியாலோசனை. மாஜினியும் குருவிக்கேற்ற இராமேசுவரம் போல் சிலதிட்டங்களைத் தயாரித்து வந்தார். போப்பின் நாட்டில் பெருங்கிளர்ச்சியைப் புலனாக்க வேண்டுமென்பது அவர் உத்தேசம். குரங்குச் சண்டையும் திட்டமான நோக்கமும் வெற்றியை யளிக்குமென நிலையான நினைவை அடைந்தார்.

ஆனால் இத்திட்டங்களுக்கேற்ற பொருளும் மனிதர்களும் அவரிடமில்லை. இரு வெனிஸ் நாட்டுமாலுமி உத்தியோகஸ்தர்களும் இவருடன் சேர்ந்தார்கள். இடாலிக்காக உயிரை அளிக்கவும் தாங்கள் தயாரா யிருப்பதாகவும் உரைத்தார்கள். இவ்விளைஞர்களின் துணையால் நடுஇடாலியில் பெருங்கிளர்ச்சியைச் செய்யவேண்டு மென்பது அவர் துணிவு. இவரின் சதியாலோசனையை யெல்லாமறிந்து சில போலீஸ்காரர்கள் நண்பர்கள் போல் இவரை கவனித்து வந்தார். இங்கிலீஷ் சர்க்கார் இவர் கடிதங்களை யெல்லாம் கண்டு நேப்பில் சர்க்காருக்கு உண்மையை எல்லாம் அறிவித்து வந்தார்கள். இவைகளை யெல்லாம் அறியாமல் மாஜினியின் ஆட்கள் கோசன்சா என்னும் இடாலியின் எல்லையிலே இறங்கியவுடன் சர்க்காரால் யாதொரு கஷ்டமன்னியிலும் சுடப்பட்டார்கள். சர்க்கார் மாஜினியின் கடிதங்களையெல்லாம் உடைத்து, பார்த்து, மறுபடியும் ஒட்டியனுப்புகிறார்கள் என்பதை அறிந்து பார்லிமெண்டில் ஒரு நண்பரின் உதவியால் இதன் சம்பந்தமாக கேள்விகள் வினவிய பொழுது, சர்க்காரின் சிந்தனையற்ற செயல் பல விசால அறிஞர்களுக்கு வெறுப்பை அளித்து விட்டது. ஆனால் சில பெரிய அமெரிக்க, இங்கிலீஷ் நண்பர்கள் மாஜினிக்கு, அதிகமானார்கள். சில யாத்திரிகர்கள் இவர் கடிதங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் இடாலிக்கு அடிக்கடி எடுத்துச் செல்லுவார்கள். பிராட்டாஸ்ண்டு கிறிஸ்தவ மதம் நாடெல்லாம் குணமாக வேண்டு மென்பது அவர் கருத்து. இடாலிப் பாடசாலைக்குதவி வேண்டுமென ஒரு இங்கிலீஷ் ஸ்திரீயின் உதவியால் கண்காட்சி யொன்றைத் திறந்து, அதனாலாவது இடாலி

யின் எழுச்சிக்கு ஏதாவது பொருள் கிடைக்குமா என முயன்றார்.

மறுபடியும் 1847-ம் வருஷத்தில் இனம் ஐரோப்பா இயக்கத்தை விருத்திசெய்ய சர்வ மகாஜன சங்கமொன்றையும் ஸ்தாபிதம் செய்தார். வாரந்தோறும் அவர்கள் ஒன்று சேர்வார்கள். மாஜினியின் வசீகர வதனம் அவர்கள் மனத்தைக் கொள்ளைக்கொண்டு போய்விடும். துராக்கிரகம் முரட்டு வன்மைகூடாது என ஒரு இங்கிலீஷ்காரன் சொன்னதற்கு அவர் கூறியதாவது "உங்கள் தேசத்திற்கு அது உண்மையான வழியே. கொடுங்கோன்மையைக் அழிக்கும் போரை பெருமையுடன் நீங்கள் செய்தாய்விட்டது. உங்கள் நாடு பொறுத்தமட்டும் முரட்டு வன்மை அவசியமில்லை. அன்னியரின் கொடுங்கோலாட்சியின் கால்களில் மிதிப்படும் எங்கள் ஜனங்களின் நிலையென்ன? அவர்களுக்குப் பிரதிநிதியுமில்லை, ஒப்பந்தமுமில்லை, உரிமையு மில்லை. அவர்களுக்குப் போர்புரிவதைவிட வேறு வழியில்லை."

வாரந்தோறும் நடைபெறும் சங்கத்தின் சபையில் ஐர்லாண்டு நாட்டைப் பற்றிய விவாதம் ஒரு முறை எழுந்தது. ஆட்சி செய்வோரும் கல்வி அளிப்போரையும் ஐர்லாண்டு நாடு விரும்பியதே யன்றி, தலைவரையும், எஜமானரையும் விரும்பவில்லை. ஆதலால் அதற்காகப் போராட வேண்டுமெனவும் அவர் கருத்து. ஆனால் இது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு நோக்கம் வேண்டும். ஆதலால் அந்தந்த நாடுகளுக்கேற்ற சர்க்காரே வேண்டு மன்னியில் ஆங்கில நாட்டு திட்டத்தைப் போல் அங்கு ஸ்தாபிப்பது பயனில்லை என்றார்.

இம் முயற்சிகளெல்லாம் தோன்றியவுடன் அவருக்கு நாள் முழுவதும் வேலை அதிகரித்து விட்டது. இத்துடன் சதுரங்கம் விளையாட ஒரு சபையில் சேர்ந்தார். ஆனால் கடனும் தரித்திரமும் அவரை விடவில்லை. 'வியாசம் எழுதி ஏதோ சிறிய பொருள் சம்பாதிப்பதற்காக நாளெல்லாம் வீணாகக் கழிக்கின்றேனே' எனப் புலம்புவார். இந்தச் சந்தடியில் போப்பிற்கும் ஒரு கடிதம் எழுதி ஜனங்களுடன் சேர்ந்து அன்னிய ஆட்சியை அழிக்க முயலவேண்டுமென்றார்.

இளம் இத்தாலி

இளம் இத்தாலியர்களுக்கு அவர் மறுபடியும் மொழிந்தது யாதெனில் புரட்சியைத் தவிர வேறு எந்த வழியிலும் நமது நாடு அபிவிருத்தியாகாது கொடுங்கோன்மையின் மதில் சுவரே எங்கும் காண்கின்றது ஒற்றர்கள் எங்கும் நிறைந்து, நினைவையும் பரவச் செய்யாமல் காக்கின்றனர். புதுக் கற்பனைகள் வேண்டாமென்பது சட்டம். பறிமுதல் செய்யப்பட்ட நூல்களை படிப்பவர்க்கும், இரகசிய அச்சாலையங்கள் வைப்பவர்களுக்கும் மரண தண்டனை; வெளி நாட்டுப் பத்திரிகைகளையும் படிக்கலாகாதாம். குழந்தை நிலையில் காப்பாற்றுவார் அன்னியில் அறிவு அழிந்து விடுகின்றது. அனுவசிய தர்க்கத்திலும் சிற்றின்ப வாழ்க்கையிலும் சிறுவர்கள் முயற்சி சிதறுகின்றன. ஜலமன்னியில் செடி வாடுவதுபோல் இளைஞர்கள் சுதந்திரத்தின் ஒரு மின்னலைக் காணமல் உரிமைகளைக் கனவு கண்டு அழிக்கின்றனர். நமது ஜனங்களை முன்னேறச் செய்பவர் எவர்? நமது

லாபத்தையே நாம் கருதினால், விபத்திற்குப் பின் வாங்கினால், கையில் கருவி அல்லாமல் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்களன்னியில், நாம் முன்னேறுவது எங்ஙனம்? குரங்கு சண்டையைத்தவிர வேறு வழியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எத்துணை வேகமாய்க் குரங்குச் சண்டை வேண்டுமோ அத்துணை துரிதமாய் அதைச் செய்ய வேண்டும். உறங்கியுள்ள மகா ஜனங்களைப் பிடிவாதமாய் அதற்காக எழுப்பி விட வேண்டும். இது புனிதமான போராகும். மகாஜனங்களை அபிவிருத்தி செய்யும் ஈசனின் சட்டத்தை குரங்குச் சண்டையிலே கர்ச்சனை செய்யவும். பூமியை சரிமட்டமாய் செய்து அங்கிலத்தில் நாயகனின் கொடி பறக்கட்டும். ஆற்று வெள்ளத்தைப் போல் சுதந்திரம், நீர்வளம், நிலம், பெறட்டும். நான் பொதுவாக ஐரோப்பாவிலுள்ள எல்லா மடிந்த தேசங்களுக்காகவும் மொழிகிறேன்.

ஜனங்கள் அமிழ்ந்தால் அதோகதியாய் விடுவார்கள். எழுந்தால் கிருத யுகமாய் விடும். அடிமைத்தனத்திலுள்ள கஷ்டமே சுதந்திர தேவியை தீவிரமாய் உபாசிக்கச் செய்கின்றது. மொழிகளால் மொழிய முடியாது. அக்கஷ்டங்களை எல்லாம் அனுபவித்தாய்விட்டது. அவர்கள் எழுந்தால் தேவேந்திரனைப்போல் வளர்வார்கள். அவர்கள் கஷ்டமும் கைவல்லிய மடைவதற்கே ஒவ்வொரு கண்ணீரும் ஒவ்வொரு உண்மையைக் காண்பிக்கும். ஒவ்வொரு தியாகம் அடிமையினின்று ஒரு தளர்வை யளிக்கும். கிண்ணற்றில் உள்ளவைகளையெல்லாம் குடித்தாய் விட்டது; இனிக் கிண்ணற்றை உடைக்க வேண்டியதே. போர் புரிவதைவிட வேறு வழியில்லை.

குடியரசுக் கட்சி, ஒரு பொழுதும், தன் நோக்கத்தையும் சொற்களையும் மாற்றலாகாது. போராட்டத்தின் நடுவிலே தயங்க வேண்டாம். பலத்தைக் கண்டு அஞ்சாதே. விபத்தெல்லாம் ஒற்றுமையில்லாமலிருக்கின்ற நம்மிடம இருப்பதாக நினைக்கவும்.

மகாஜனங்கள் அன்னியில் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. உங்களால் ஜயம் தோன்றுதபோதிலும் ஜயிப்பவர்களுக்கு உணர்வையளிக்க நீங்கள் உங்களையே பலியளிக்கத் தயங்குவது அறிவீனமாகும். ஜனங்களுக்கு சக்தியில்லா திருக்குங்கால் அத்துடன் சிரத்தையும் இல்லையேயானல், அவர்களுக்கு உழைப்பது சூன்யத்தையே விளைவிக்கும் என சிலர் சொல்வார்கள்.

ஜனங்களுக்குச் சிரத்தை இல்லை என்பது உண்மைதான். இதற்குக்காரணம் என்னவென்பதை அறிய வேண்டும், சிரத்தை யில்லாம லிருப்பதனலேயே நாம் இதைச் செய்வதற்கு அருகதை இல்லை எனச் சொல்வது அறிவாகாது. தலைவிதி என்று சொல்லுவதைப் போலுள்ள இவ்வபிப்பிராயங்க ளெல்லாம் ஆதாரமற்றவை எனச் சிந்தனையானல், செம்மையாகும். கண்மூடித்தனமாய் இருக்கும் ஒரு நிலைக்கே கைகட்டி நிற்பது மனிதசமூகத்தின் மேன்மையைக் குறைப்பதாகும். முட்டாள்தனம் ஒருவனிடம் மலர்ந்தால் அது அவசிய மென்பதற்கில்லை. முட்டாளை ஏமாற்றுவதற்காக அது அவசியமெனச் சொல்ல வேண்டுமே யொழிய வேறு காரணத்தைக் கூறுவது கடினம். அசைவற்று ஒருவன் உன் முன் நின்றால் அவனுக்கு நடக்கும் வன்மையை அளிக்க மறுப்பாயோ? வெளியில்

விளங்குவ தெல்லாம் மறைந்துள்ள சகல வன்மைகளையும் சிறப்பிக்காது?

ஜனங்களிடம் உண்மையாகச் சக்தியில்லையா? அல்லது சுழற்றி விட்டால் சிறப்பாகும் நம்பிக்கையில் குறைந்துள்ளார்களா? சிரத்தையில்லை என்பது சத்தியமே. தன்னந்தனியாய் ஒவ்வொருவனிடமும் சிரத்தை யுண்டு; ஆனால் சமூக சிரத்தை இல்லை. ஆனால் இந்த சமூக சிரத்தையை அவதார புருஷர்க ளெல்லாம் அளித்துள்ளபடியால், நாங்கள் செய்யும் வேலை அதை அவர்கள் ஞாபகத்தில் மலரும்படி செய்யவும், அவர்களுக்கு மொழியவும். இளம் இத்தாலியர்களே! உங்கள் நோக்கத்தில் திட சித்தமுடனாகவும். உங்களை அலட்சியஞ் செய்யும் உலகம் உங்கள் கால்களிலேயே விழும். சத்தியத்திற்குப் போராடும் வீரர்களே! உங்களை பொய் பிரசாரகர்கள் எனக் கூறுவார்கள்; உண்மை வாதிகள் உங்களைப் புகழ்வார்கள். சண்டையானது உங்களுக்குப் புதுக் கிரீடத்தை அளிக்கும். ஒரு அவதார புருஷன் செய்யும் வேலையை ஜன சமூகம் செய்யும். நம்பிக்கையுடனிருந்தால் ஜனங்களெல்லாம் உங்களைத் தொடர்வார்கள். நினைவையும் செயலையும் பிரிப்பவர்கள் ஈசனைத் துண்டிப்பவர்க் கொப்பாவர். நம்பிக்கை இல்லாதவனை உங்கள் கூட்டத்தினின்று துரத்தவும். நீங்கள் திண்டாடும் நினைவினின்று சத்திய யுகம் வரப்போகிறதென கர்ச்சனை செய்யவும். சில நாட்கள் சென்றவுடன் ஜனங்கள் உங்களை மதிப்பார்கள். எவரையும் நிந்திக்க வேண்டாம். சாந்த யுகம் வரப்போகிறதென அவர்களுக்கும் சொல்லவும். மறைந்து திண்டாடி ஒரு வேளை உணவிற்கு கஷ்டப்படும் இலட்சக் கணக்கான

ஜனங்களுக்கும் நாம் எல்லாம் ஒன்ருய் விட்டோம் என பகிரங்கஞ் செய்யவும். உங்களை தண்டிப்பவர்களிடம் 'ஈசன், ஜனங்களுக்காக நான் உழைத்தேன்' எனக் கூற வும். சிலர் உங்களை நிந்திக்கலாம்; ஆனல் பாமரங்கள் உங்களைப் பூஜிப்பார்கள். 16-வது நூற்ருண்டிலே ஈச னிடத்திலிருந்து நாங்கள் ஞானத்தைப் பெற்ரும் என வெறிகொண்ட போப்பின் தூதர்கள், உலகம் உருண்டை என்று மொழிந்தவரை தண்டித்தார்கள்.

உலக இரகசியமறிந்தவரை கொலை புரிந்தார்கள். அந்த காலிலியோ புருஷன் கண்ட உண்மையை உலக மெல்லாம் இன்று கொண்டாடுகின்றது. ஆனல் அவ்வநீ தம் புரிந்த போப்பின் தூதர்கள் மறைந்த இடமோ தெரியவில்லை. எல்லாம் ஈசனின் பெயரில் நம்பிக்கை வைத்து செய்தால் நீங்கள் வெற்றி, பெறுவீர்கள்.

செயல்கள் செய்வதே உங்களின் பெரிய நோக்கமாக வேண்டும். யோசனை, சங்கற்பம், தியான, மன்னியில் எந் தச் செயலையும் செய்ய வேண்டாம். செயல்கள் உங்கள் நோக்கமாக வேண்டு மென்பதற்காக கூறுகின்றேன். செயல்களை நோக்கமாக வைத்துக்கொண்டு திட்டங்களை தயாரித்துக் கொள்வதே உங்களின் பெரிய நினைவாக்கிக் கொள்ளவும். சும்மாயிருக்கும் வேதாந்தத்தை அடியோடு ஒழிக்கவும். சூரிய ஒளி வீசும் பட்டப்பகலில் நாம் போர் புரிய விரும்புகிறோம். செயல் என்னும் நோக்கமன்னி யில் சாசுவதமாய் எந்த சத்தியத்தையும் நாம் நிலைநாட்ட முடியாது என இன்னம் பல மொழிகளான அனலால் இளஞ் சிங்கங்களின் சித்தத்திலே சுடரை எரியச் செய்து விட்டார்.

அத்தியாயம் 8.

சுயசரிதை—பிரார்த்தனை—புரட்சி—எழுச்சி—புகையிலைப் போர்—மன்னனின் துரோகம்—அநித்தியக் குடியாசு—தேசியப் பேர்.

இச் சந்தர்ப்பத்தில் மாஜினி தன் வாழ்க்கையைப் பற்றியும், நோக்கத்தையும் குறித்து எழுதிய ஒரு கடிதம் முதன்மையாய் கவனிக்கத்தக்கது. இக்காலத்தில், அவர் இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் பத்திரிகையின் பத்திராதிபருக்கு எழுதியயாவது :—

47, (டேவான் ஷையர்)
தெ-லண்டன்.

அன்பு மிக்க ஐயா !

எனது வியாசங்களால் சர்க்கார் என்னை கவனித்தார்கள். இலக்கியத்தின் நோக்கம், செயலில் அமையவேண்டுமென்பதை நான் வற்புறுத்தி, அதற்கும் சுதந்திரம் வேண்டுமென்பதை நான் விளக்கியதால், நான் ஒருவேளை ஆபத்திலே ஜனங்களை முழுகச்செய்து விடுவேன் என எண்ணினார்கள். 1828-ம் வருடம் ஒருவாரப் பத்திரிகை ஆரம்பித்தேன். ஆனால் ஒருவருட காலத்தில் அது பறிமுதல் செய்யப்பட்டது. ஆனால் புதிய பெயருடன் வேறு பத்திரிகையை லெக்ஹாரன் என்னும் நகரத்தில் பிரசுரித்தேன். அதுவும் ஒரு வருடத்திற் கெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டது. பிளாரன்ஸ்நகரிலுள்ள ‘ஆன்டோலோஜிய’ என்னும் செல்வாக்குள்ள பத்திரிகைக்கு ஐரோப்பிய

சாஹித்தியத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அதனால் அப் பத்திரிகையும் தண்டனைக்குள்ளாகி நசுக்கப் பட்டது. 1830-ம் ஆண்டுபுரட்சிக்குப் பிறகு என்னைக் கைது செய்தார்கள். இதாலிய சர்க்காரை இரகசிய சங்கங்களால் கவிழ்க்க முயற்சித்தேன் என்பதே என் பேரில் சுமத்தப்பட்ட குற்றம். ஜினிவா கலாசாலையில் எனது தந்தை ஒரு பண்டிதராயிருந்தார். அந் நகரத்து சர்க்கார் தலைவரை எனது தந்தை அணுகி வினவியதற்கு அவர் கூறியதாவது:—

"நடு நிசியில் தன்னந் தனியாய் நடக்க உன் மகன் விரும்புகிறான். துக்க முகமுடன் இந்த வயதில் தரணியைப் பற்றி அவன் ஏன் சிந்தனை செய்யவேண்டும்."

அவர்கள் நினைப்பது என்னவென்பதை நமக்கு அறிவிக்காமல் அவர்கள் சிந்தனை செய்ய அருகரில்லை. என்னை விசாரணை செய்து குற்றமற்றவன் என நீதிபதிகள் விடுதலை செய்து விட்டார்கள். ஆனபோதிலும் என்னை ஐந்து மாத காலம் சாவோனா கோட்டையில் அடைத்து வைத்தார்கள். அப்பால் பெற்றோர்களைத் தவிர மற்றவர்களிடம் விடைபெற்றுக் கொள்ளலாகாதெனக் கூறி நாடு கடத்தி விட்டார்கள். அதற்கு ஒரு காலமும் குறிக்கவில்லை. நான் சாவாய் ஸ்விட்ஜர்லாந்து மூலமாய் பிரஞ்சு நாட்டை அடைந்தேன். குராங்குச் சண்டைகளில் கருத்தைச் செலுத்தி வந்த சில பிரஞ்சு புரட்சிக்காரர்களுடன் கலந்தேன்.

1831-ம் வருஷக் கலகம் பூஜ்யமானவுடன் மார்செயிலில் தங்கி புதிய சங்கமொன்று ஸ்தாபித்து மாதந்தோ

றும் துண்டுப் பிரசுரங்கள் பகிரங்கஞ்செய்தேன். பழைய கார்ப்போனேரி சங்கத்திற்கும், இதற்குமுள்ள வேற்று மையை விளக்கினேன். சங்கம் காட்டுத் தீ போல் பரவி யதினின்றும் அதன் நோக்கத்தை ஜனங்கள் எத்துணை ஆதரவுடன் வரவேற்றூர்கள் என்பதைப் புலனுக்கிற்று. 1832-ம் வருஷத்தில் சங்கம் இதாலியில் பெரும் செல்வாக் கைப் பெற்று விட்டது. கார்ப்போனேரி சங்கத்தைப் போல் மறைவான போரிலும், எங்களுக் கிஷ்டமிருந்த போதிலும் பகிரங்கமாய் கொள்கைகளைப் பரவச் செய்ய, பத்திரிகைகளில் மூன்றில் இரண்டு நான் எழுதியதாகும். இளைஞர்களிடம் அது மின்சாரத்தைப் போல் ஒரு சக்தியை யளித்து வியாபாரக் கப்பல்கள் மூலமாக வும், மாலுமித் தொண்டர்களின் வழியாகவும், துண் டுப் பிரசுரங்கள் சென்று எங்கும் கலக உணர்ச்சியை யுண்டாக்கி விட்டது. அப்பால் சர்க்கார் நடவடிக்கைகள், இதாலி சர்க்காரால் தூண்டப்பட்டு எங்கள் சங்கம் சித றடிக்கப்பட்டது. நான் பிரஞ்சு நாட்டினின்று துரத் தப்பட்டேன். நீதியால் ஜூரர்களின் உதவியைக் கொண்டு என்னை தண்டிக்கவேண்டுமென வினவியும், ஒருவரும் செவி கொடுக்கவில்லை. மார்செயில் நகரத்தி லிருந்தால், எழுதி பிரசுரஞ் செய்து எனது இதாலி நாட்டிற்கு அனுப்பி பலதேச பக்தர்களுடன் கூட்டமாய்ப் பேசுவதற்கு சௌகரியம் என எண்ணி பிரஞ்சுபோலீஸ் காரர், ஒற்றர்கள் கண்களில் காணுமல் ஒருவருடகாலம் மார்செயிலேயே வாசஞ் செய்தேன். எத்துணைக் கஷ்ட வாழ்க்கை. ஒரு வருஷகாலத்தில் இரண்டு இரவே சுகந்த மான காற்றை நான் பெண் வேட மணிந்தும், காவற்கார

ளுகவும், சுவாசித்தேன். பிறகு கலகச் சின்னங்களெல் லாம் தோன்றி விட்டபடியால் ஜினிவாவை யடைந்தேன்.

பிறகு சுவிர்ஜர்லாந்து சென்றேன். அவர்கள் சில காலம் என்னை விரும்பவில்லையாயினும், பிறகு பல பக்தர் களின் உதவியால் ஒரு சங்கம் நிறுவப்பட்டு, சுவிட்ஜர் லாந்து தேசியம், இளம் ஐரோப்பா, முதலியவைகளைப் பற்றி உற்சாகமுடன் பல துண்டுப் பிரசுரங்கள் மூலமாய் பிரசாரஞ் செய்தேன். இப் பிரசாரத்தால் மற்ற நாட்டு சர்க்கார்களுக்குக் கோப மதிகரித்து விட்டது. ஸ்விட்ஜர் லாந்து, ஜர்மனிக்கு அஞ்சி, எங்கள் பத்திரிகைகளை யெல் லாம் பறி முதல் செய்து சங்கத்தையும் கலைத்து விட்டார் கள். என் தோழர்களெல்லாம் மறைந்து ஓடிவிட்டார் கள். சுவிட்ஜர்லாந்து மகா ஜனங்களுக்கு அவர்கள் அந் நியர்களின் அடிமை என்பதை நிரூபிக்க, நான் அங்கு சில காலமிருக்கத் தீர்மானித்து விட்டேன். அந்த ஏழு மாத காலம் நான் அங்கு பட்டபாட்டை, நான் புகல்வதற்கிய லாது. தினம் ஒரு வீடு. இரவு வேறு இடம். நாள் தோறும் இங்குமங்கும் போவது. அங்ஙனம் சென்று ஒரு அறையை விட்டு புறத்தில் வருவதில்லை. இருள் தோன் றிய பிறகே நான் இடம் மாறுவது. சர்க்கார் எனக்கு விரோதமாயிருந்த போதிலும் மகா ஜனங்களெல்லாம் என்னை அன்புடன் மறைவாய் வரவேற்பார்கள். அத ளுல் சுவிட்ஜர்லாந்தை எனது தந்தைபோல் இன்னும் கருதுகிறேன். பாதிரிகளும் என்னை அவர்கள் குடும்பத் தினர்களுடன் பழக அழைப்பார்கள். சுவிட்ஜர்லாந்து ஜனங்கள் என்னை எத்துணை அன்புடன் நடத்திய போதி லும் மாண்டிபில்லோ பிரபுவின் உதவியால் அனுமதி

சீட்டு பெற்று 1837-ம் வருடம் நான் இங்கிலாந்து சென்றேன்.

அப்பால் சார்லஸ் ஆல்பர்டு மன்னனுக்கு தேசத்தாருடன் ஒத்துழைத்தால், என்றும் புகழுடன் தலைநெறித் தலைவனாய்த் திகழ்வாய் என ஒரு கடிதம் எழுதினேன். கடிதம் கண்டவுடன் அவனுடைய அதிகாரிகளுக்கெல்லாம் நாட்டில் பிரவேசிக்க முயற்சித்தால், என்னை கைதுசெய்ய வேண்டுமென ஆக்ஞாபித்துவிட்டான். இச்சமயத்தில் 1833-ம் வருடம், அலெச்சாண்டிரியாவில் என்னை முதுகில் குண்டு வைத்துசுடப்பட வேண்டுமென மிலிடெரி கமிஷன் ஆக்ஞாபித்த தீர்ப்பும் என் ஞாபகத்திற்கு வருகின்றது. இங்கிலாந்திலிருந்துகொண்டு சூன்யமாயிருக்கும் எங்கள் ஜனங்களை சீர்திருத்த நான் முயன்றேன். அதற்கு என் ஆயுள் முழுவதும் முயனுவேன். ஆனால் ஆங்கில இராஜீய விஷயத்தில் தலையிடப்போவதில்லை. ஆங்கிலேயர்களுடைய உதவியையும் நாடவில்லை. ஆனால் இங்கிலீஷ்காரர்கள் இதாலி தேசத்திற்காக உழைப்பவர்களுக்கு மொழிகளினாலாவது உதவி புரிய வேண்டுவது கடமையாகும்.

இது தான் நான் இப்பொழுது எழுதுவதாகும்.

இங்ஙனம்

ஜோசப் மாஜினி

பிரார்த்தனை

இதாலி நாடு சுதந்திரம் அடைய வேண்டுமென, ஏதோ வியாசம் ஒன்று எழுத நினைத்தார். என்ன எழுதலாமென சிந்தனை செய்து மனம் ஆறுகப் பாயுங்கால் நெஞ்சு துடித்து, மனமுறுகி மெய்மறந்து அடியிற்கண்டவாறு ஈசனுடன் கரைந்தார் !!

ஈசனே! சர்வேசனே! மனிதர்களின் பாவத்தைப் பற்றி நான் என்ன புகல்வேன், ஆனால் உன் கருணையோ அபரிமிதம். சத்தியத்திற்காக உடல், பொருள், ஆவியை யளிப்பவர்களுக்கெல்லாம் நான் ஜபஞ் செய்கிறேன்.

மனிதசமூகத்திற்கு எத்துணை இன்னல்கள் சிலர் தோற்றுவிக்கின்றார்கள். விசுவாமித்திரர் மேனகையால் அறிவிழந்து மயங்கி மருண்டதுபோல், சுயலாபத்தை உத்தேசித்து எத்துணை பாவிகள் பங்கம் விளைவிக்கிறார் கள். அவர்களெல்லாம் இந்திரியங்களின் இன்பத்தில் ஈடு பட்டவர்கள். அவர்களை யெல்லாம் மன்னிக்கவும். குற் றத்தை அவர்களறிவதில்லை.

ஈசா! உனது கண்ணைப் போலுள்ள கதிரவனை வானத் திற்கும் வையகத்திற்கும் ஒன்றாக விளக்கியுளாய். எங்கும் இயல்பாயுள்ள இசையை சங்கீதம் ஸ்தூலமாகவே சிறப்பிக் கும். எங்கும் ஐக்கியத்தையே நீ நிலைநாட்டி யிருக்குங் கால் பாவிகள் விரோத பான்மையான வித்தியாசங்களை ஏற்படுத்தி யுளார்கள். ஈசா! நீ இவர்களைக் காப்பாற்றவும்.

மாந்தர்களெல்லாம் ஒன்று, நீயே தலைவன் என்பதே சட்டம். ஆனால் மனிதர்கள் இதை மறந்து, நாங்கள் சகோ தரர்களில்லை. என்னும் சித்தாந்தம் ஏற்படுத்திவிட்டார் கள். பிறப்பிலேயே நாங்கள் உயர்வு, நீங்கள் தாழ்வு, என் னும் பிசாசு எங்கும் தாண்டவமாடுகின்றது.

ஈசா! நீ கருணை புரியாயோ? சத்தியம் தழைத்தோங்க சிந்தையிலே சத்தத்தை அளித்தாய். நானே சுதந்தி ரன். ஏனெனில் நானே என் அதிகாரி. ஏனெனில் நானும் ஈசனம்சம் உள்ளவனே. மனித சமூகத்திற்குள்ள ஒவ்வொரு வன்மையும் தன்மையும், எனக்குண்டு. என்

மனத்திலுள்ள சத்தமே மனித கோடிகளின் உணர்வாகும். அகங்கார முள்ளவர்கள், எனக்கே இச்சத்தம் உரியதாகும் என கனவு காண்பார்கள். ஈசா! இங்ஙனம் யதேச்சாதிகார சித்தமுள்ளவன், சீக்கிரமாக அழிவான் என்பதை அவர்கள் அறிவதில்லை. உன் கருணையை அவர்கள் விரும்பவில்லை. கொலை செய்வதால் ருத்திராகார மூர்த்தியை அவர்கள் நாடுகிறார்கள். ஈசா! இவர்களையும் மன்னிக்கவும்.

கல் நெஞ்சம் படைத்த கொடுங் கோலர்களின் கருத்தைக் கனிய வைக்காயோ! அவர்கள் கனவிலாவது கைவல்லியத்தை அளித்து நற்குணங்களை நிலவச்செய்யாயோ? நன்மைக்காக பாடு படுபவர்கள் படுந்துயரத்தை அவர்கள் செவியில் விழும் வண்ணம் செய்யாயோ? கருத்த மனிதர்களும் வெள்ளையர்களின் சகோதரர்களே என்னும் நினைவாமுதத்தை ஐரோப்பியர்களுக்கு அளிக்காயோ?

மாஜினியால் விதைக்கப்பட்ட புரட்சி பீஜங்கள் புலனுவதைப் பற்றிப் புகல்வதற்கு முன், அவருடன் பழகிய சில மிதவாதிக் கட்சிகளைப்பற்றிக் கூறுவது மிகையாகாது. அம்மிதவாதக் கட்சியில் முதன்மையானவர் வின்சென்ஸோ ஜியோபர்டியாவர். இளம் வயதில் இடாலி இளங் கூட்டமுடன் இணைந்திருந்தார். மாஜினியின் திடமான வழியில் மனஞ் செல்லாமல் குறுக்கு வழி என எண்ணி, மிதவாதத்தை ஸ்தாபனஞ் செய்து மாஜினியையும் நிந்திப்பதி லிறங்கிவிட்டார். ஆஸ்திரியாவின் ஆட்சியிலேயே சுதந்திரம் பெறலாமென்பது அவர் சித்தம். நாட்டிலுள்ள எல்லாச் சிற்றரசர்களையும் சேர்த்து போப்பைத் தலைவராய்க் கொண்ட ஒரு ஸ்தாபனம் வேண்டுமென்றார். போப்பினிடம் பக்தியுடன் இருந்தாலொழிய

சமூக சீர்திருத்தம் அடைய முடியாது என நினைத்தார். ஈசனால் அருளப்பட்ட அதிபன் போப்பாகையால் அவ ரன்னியில் அபிவிருத்தியாவது அரிது எனப் போராடி னார். பால்போ என்ற வேறு ஒரு மிதவாதியு மிருந்தார். நமது நாடு ஒற்றுமையாவது கடினம். ஆதிகாலத்தில் இதாலி ஒற்றுமையா யில்லாததால் இனி ஒற்றுமையுட னுவதும் கடினம் என்றார். தேசம் தலையோங்காது என் னும் நிராசையானக் கட்சியைச் சேர்ந்தவர். நிர்மாண வேலையைப் பற்றி அவருக்குச் சிந்தனையே இல்லை. அஸிக் கிலியோ என வேறொருவர் இருந்தார். இவரும் மித வாதத்தில் பழுத்தவர். போப் அதிகாரிகளால் புலனுகும் புன்மைகளைப் பாழாக்க அவர் பாடுபட்ட போதிலும் போப்பைத் தலைமையாகக் கொண்டே பெரும் பணிகளைச் செய்து விடலாம் எனக் கனவு கண்டார். போப் அன்னி யில் சுதந்திரம் கிடைப்பது சுலபமில்லை என பகிரங்கஞ் செய்தார். ஆஸ்திரியா ஆயுதபாணிகளுடன் சதா காலமு மிருப்பதால் அவர்களுடன் போராடி ஜெயிப்பது முடி யாத காரியமென்றார். பொறுமை வேண்டுமென கதறு வார். சாந்தமாய் நிலவும் சட்டரீதியை விடவேறு வழி இல்லை என்பார்.

எழுச்சி

ஆனால் இந்த மிதவாதிகளிருந்தும், நாட்டிலே மாஜி னியால் எழுச்சி செய்யப்பட்ட செந்தீயானது கொழுந்து விட்டெரிய ஆரம்பித்துவிட்டது. ஆஸ்திரியர்கள் சிறிய குற்றங்களுக்குச் சித்திரவதை செய்வது, தேச பக்தர்கள் உறக்க மன்னியில் கலங்க பச்சிலைகள் அளிப்பது, சிறிய

அறையில் அறிஞர்களை அடைத்து கை கால்களில் இடைவிடா விலங்குகளைப் பூட்டுவது, அவர்களுக்கு வரும் தபால்களைத் திருடி வெரும் விலாசம் எழுதிய உறைகளை மாத்திரம் அளிப்பது, இரகசிய சங்கத்தில் சேர்ந்த ஒரு குற்றத்திற்காக கொலை புரிவது, பறிமுதல் செய்யப்பட்ட நூல்களையும், மொழி பெயர்த்த பைபில்களை, படித்த குற்றத்திற்கும் நிரந்தரமாய் சிறைச்சாலையில் அடைப்பது, இளம் இதாலி பத்திரிகையைப் படிப்பதற்கு சில இளைஞர்களை சிறைச்சேதம் செய்வது, தேசபக்தர்களைப் பசியால் படுகொலை செய்வது, வேட்டைநாய்களை விட்டுக் கடிக்கச் செய்வது, அயலான பெண் மனைவிகளை அபகரிப்பது, இன்னும் முதலிய அளவில்லாத கொடுமைகள் எரியும் நெருப்பிலே நெய்யை விட்டதுபோல், நாட்டிலே பெருங் கிளர்ச்சியை யுண்டுபண்ணி விட்டது. போதாக் குறைக்கு 1848-ம் வருடம். குடியரசு வருஷம். பிரஞ்சு நாட்டில் குடியாட்சி சிலைக்கல் போல நிலையான நாளாகும். புரட்சியின் பெருமையை அனுபவிக்கும் பெருந் தினங்களாகும். பாரிஸில் லூயி பிலிப்பன் சிம்மாசனத்தினின்று துரத்தப்பட்ட காலமாகும். புதிய குடியாசியை ஆசிகூற மாஜினி நேர்முகமாய் பாரிஸ்மா நகரஞ் சென்று, பெருங் குதூகலமாகி தலைவரிடம் மகிழ்ச்சியை அறிவித்தார். அதற்கு பிரஞ்சு குடியரசு தலைவர் கூறியதாவது:—

பொது நோக்கத்திலே பிரஞ்சும், இதாலியும், ஒன்றேயாகும். விடுதலையை நாடும் இதாலியினிடஞ் சென்று நிலைத்து இப்பக்கத்திலும் அவள் குழந்தைகள் எனக்கூறவும். அவள் நிலத்தில், ஆன்மாவில், அவள் எல்லையில், சுதந்

திரத்தில் தகர்க்கப்பட்டால், அவள் சமாளிக்க சக்தியற்ற வளானல், இனி மொழிகளில்லை. கருவியுடன வந்து அவளைக் காப்பாற்றுவோம் எனக்கூறவும். எதிர் பயனைநோக்கி இதாலிக்கு ஒத்தாசை செய்ய நாங்கள் எண்ணவில்லை. பூர்வீகப் பெருமையை அடைந்துள்ள அவள் நித்தியமாய் வாழவேண்டுமென்பதே எங்கள் எண்ணமென பகிரங்கஞ் செய்தார்.

புகையிலைப் போர்

இம்மொழிகள் நாடெல்லாம் சங்கநாதஞ் செய்து புதுச்சுடரைக் கிளப்பி எங்கும் சோதியாய் விட்டது. இதற்குப் பிறகு மாஜினி பாரிஸ் பிரிந்து மறுபடியும் இங்கிலாந்து சென்றார். உடனே மிலானில் எழுச்சி என் செவியில் விழுந்தது. இதாலி அணுகினல் மாஜினியைச் சுட்டுவிடவும் என அரசாக்ஞையிருந்தும், கடுகளவும் தயங்காமல், இதாலிக்குப் புறப்பட்டுவிட்டார். அந்த விபத்திற்கும் அஞ்சாமல் சென்றதே இவருக்கு அனுகூலமாகவு மாயிற்று. இவரை அரெஸ்டு செய்வதற்காகக் காத்திருக்கும் ஆபீஸர்களுடன் பேசி சென்று விடுவார். அவர் நிதானமாய் சகஜமாய் செல்வதும் நிலையாய் நிலவுவதும், ஒருவருக்கும் சந்தேகத்தை அளிக்கவில்லை. மகாஜனங்களால் பயிற்சியன்னியில் துவக்கப்பட்ட இவ்வெழுச்சிக்கு நிகரான நிகழ்ச்சியே இல்லை யென்பார்கள். இந் நிகழ்ச்சிக்கு ஒரு காரணமுண்டு. மிலானிலுள்ள சனங்கள்புகையிலையை அதிகம் உபயோகஞ் செய்வார்கள். அதனல் ஏற்படும் வரி சர்க்காருக்கு ஏராளமான பொருளை அளிக்கும். ஜனங்கள் புகையிலை உபயோகிப்பதில்லை என்னும் விருதத்துடன் மற்றவர்களும் பயன் செய்யக்கூடாது என பகிஷ்காரஞ் செய்தார்கள். சர்க்கா

ருக்கும் சனங்களுக்குச் சச்சரவு கொடுமையுடன் போர்வீரர்கள் சனங்களைத் தகர்த்தார்கள். சனங்களும் பின் வாங்கவில்லை. பரஸ்பரம் கைகலந்து சண்டையாய் விட்டது. வெளியிலும் ஜனங்கள் எழுச்சியானார்கள். உணவு உடை உற்சாகம் முதலியவைகளைத் துறந்து, சண்டையில் விழுந்தவர்களுக்கு உதவி செய்தார்கள். சனங்கள் கூட்டம் கூட்டமாய் சேர்ந்து கவர்னர் வீட்டிற்குச் சென்று பூரண சுதந்திரம் வினவினார்கள். சனங்களை எதிர்க்க ஆஸ்திரிய சர்க்கார் துணிந்து விட்டார்கள். சார்லஸ் ஆல்பர்டு மன்னனும் சேர்ந்தான். ஒருதினத்தில் ஊரிலுள்ள எல்லா சனங்களும் ஒன்று சேர்ந்து மூட்டை முடிச்சுகளை யெல்லாம் திரட்டி மதில் சுவர் எழுப்பி, கல், கட்டை, கரண்டி இரும்பு, மருந்துகளால் பல வெடிகுண்டுகள் செய்து, நாற்காலி, மேஜை தூண், விட்டம், பலகை, முதலியவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து முன்னணியில் நிலையாக்கி, துப்பாக்கிகள் சகிதமாய் பெண், பிள்ளை, கிழம், குழந்தைகளெல்லாம் போர்புரியலானார்கள். ஆஸ்திரிய துருப்புகளின் கொடுமையைக்கண்டு ஜனங்கள் சித்தம் திகைப்படைந்து இனி ஜயம் அல்லது சாவு எனத்திட்டமாகி துணிவுடன் போராடினார்கள். ஆஸ்திரியர்கள், குழந்தை, கர்ப்பஸ்திரி எனவும் கவனியாமல், ஈட்டியால் குத்தி சித்தரவதை செய்தது. ஆத்திரத்தை கிளப்பியதால், அவர்களும் வீட்டிலிருந்து ஜலம், எண்ணை, முதலியவைகளை நன்றாய்க் காய்ச்சி சோல்சர்களின் சரீரத்தில் கொட்டித் திணறச் செய்தார்கள். எங்கும் குதூகலத்துடன் சண்டை.

இச்சந்தர்ப்பத்தில் மாஜினி மிலானை அணுகினார். அரச வரவேற்பு. ஜனங்களெல்லாம் ஒருமையாகி புது

அதிகாரிகள், மாஜினியே உனக்கு நல்வரவு என ஆசி கூறினார்கள். நமது மாஜினி, நமது நாட்டான், இதாலி புதல்வன். சுதந்திரகர்த்தா, தேசபக்தன், வீரசிகாமணி எனப்புகழ்ப் பெயர்களுடன் ஜே சங்க நாதஞ் செய்தார்கள். ஆஸ்திரியாவின் கீழ் உள்ள இதாலியத் துருப்புக்களும் போர்புரிய மறுத்து, மாஜினி மொழிவதையே வினவுவோம், எனச் சொல்லிவிட்டார்கள். கனவு கனவு எனக் கருதிய அவர் எண்ணங்கள் சத்தியமாய் எங்கும் ஜொலித்தது. அவர் சொற்கள் சட்டமாய் விட்டன. ஜனங்களெல்லாம் திடச்சித்தத்தைப் பெற்று பெரும் உற்சாகத்துடன் போர்புரிய நிலயங்களை யெல்லாம் திட்டஞ் செய்தார்கள். சுமார் நாலாயிரம் கலாசாலை மாணவர்கள் ஒன்றுகூடி போர்புரிவதில் முன் நின்றார்கள்.

மன்னனின் துரோகம்

இங்ஙனம் பெரும் போர்புரிய ஒரு பக்கத்தில் ஏற்பாடு செய்யுங்கால், ஆல்பர்டு மன்னனின் ஆட்கள் தோன்றி, அரசன் 40,000 வீரர்களுடன் வருவதாகவும், ஜனங்கள் கஷ்டப்படுவதற்கு அவசியமில்லை எனவும், மன்னனின் போர்வீரர்களே, ஆஸ்திரியாவை அழிக்கப்போதுமானவை என பகிரங்கஞ்செய்து, அரசன் அத்தாட்சியையுங் காண்பித்தனர். ஜனங்களும் நம்பி சற்று சாவதானமாயிருக்கவும், ஆஸ்திரியர்கள் தோன்றவே, மன்னனும் மன்னராட்களும் மறைந்து, ஜனங்களை ஆஸ்திரியரின் அட்டூழியத்திற்கு விட்டுவிட்டனர். ஜனங்களைக் காட்டிக் கொடுத்து, சுயநலத்திற்காக தேசத்தையே விற்ற ஆல்பர்டைப் போல் கல் நெஞ்சு படைத்த துரோகியை எந்தச்

சரிதையிலும் காண்பதரிது. ஜனங்கள் ஆஸ்திரியர்களிடம் சகிக்க இயலாத கஷ்டங்களை யனுபவித்தும், பின் வாங்காமல், வீரர்களெல்லாம் அழியும்வரைப் போராடினார்கள். மாஜினி இனி இங்கிலையில் இங்கு போர்புரிவது பயனை அளிக்காது என எண்ணி காரிபால்டி என்னும் தேசியச்சிங்கம் போராடும் நிலயமான பர்கோமை அடைந்து சண்டையில் சேர்ந்தார். அதற்குள்ளே அரசர் ஆஸ்டிரியாவுடன் பகிரங்க ஒப்பந்தஞ் செய்துகொண்டு ஜனங்களையும் தொந்திரவு செய்ய ஆரம்பித்துவிட்டார். அரசன் சமாதானமடைந்தபோதிலும், ஜனங்கள் சாந்தமாகப் போவதில்லை என மாஜினி கர்ச்சனை செய்தார். லொம்பார்டியிலே எழுச்சியாக வேண்டுமென மறுபடியும் திட்டமானார். குடியரசைத் தவிர வேறு வழியில்லை எனச் சங்கநாதஞ் செய்து, மத்திய இதாலியே இதற்கெல்லாம் தகுந்த நிலயமென அங்கு சென்றார்.

அநித்தியக் குடியரசு

போப்பும் ஜனங்களின் எழுச்சிக்குப் பயந்து ஓடிவிட்டார். போப்பு பறந்து சென்றவுடன் ரோமாபுரியிலே யாதொரு விதமான சர்க்காரில்லை. மாஜினிக் குடியரசை ஸ்தாபிக்கவும் எனப் போராடினார். வழியோ சுலபம், போப்பு ஓடிவிட்டார். குடியரசு உங்கள் கையில் நிலவுகின்றது. ரோமாபுரியில் குடியரசானால் இதாலியெல்லாம் குடியரசாய்விடும். இதாலி குடியரசானால், உலகத்திற்கே க்ஷேமம் என ஜனங்களுக்குச் சங்கநாதஞ் செய்தார். மாஜினி மொழிந்ததைச் செவியுற்று, ரோமாபுரியிலே குடியரசுச் சர்க்காரை ஸ்தாபனஞ் செய்தார்கள். ஜனங்கள் சர்வேசன் என்னும் கொடி மறுபடியும் சிறந்தது. ரோக்

கத்திலே தயவு தாட்சிண்ய மன்னியில், மாந்தர்களுடன் பொறுப்புள்ள ஸ்தாபனம், நிலவிற்று. மாருன அபிப்பி ராயமுள்ளவர்களை மாஜினி துன்பமாய் நடத்தவில்லை. புரோகிதர்களையும், மதா வேசிகளையும் ஒன்று திரட்டி தன் கட்சியில் சேர்க்க முயன்ருர். தர்ம சம்பந்தமான விஷயத்தில் அவர் தலையிடவில்லை. அவர் சொல்வதே சட்டமாயினும், சனங்களின் சம்மதமன்னியில் அவர் ஒன்றுமே செய்வதில்லை. சின்னஞ் சிறு அறையிலேயே தான் வாசஞ் செய்துகொண்டு, நடுத்தெருவில் செல்லும் நாராயணனும், காண்பதற்கு கஷ்ட மன்னியில் குணமாகி, வருபவர்க்கெல்லாம் கைலாகுக் கொடுத்து இரண்டணு சோற்றுக் கடையிலே புசித்து, காய்ந்த ரொட்டியிலேயே களிப்புடன் காலந் தள்ளினுர். தூக்கு மேடையில் ஏற்றும் கொடுஞ் செயலை துரோகிகளுக்கும் செய்யேன் எனச் சிங்கநாதஞ் செய்தார். இங்ஙனம் சில நாட்கள் ரோமாபுரியிலே வெற்றி பெற்று நிலையாயிருக்குங்கால், உள்நாட்டு சிற்றரசர்கள் போப், முதலியவர்கள் பிரஞ்சு சர்க்காரின் உதவியைக்கொண்டு பல போர்வீரர்களுடன் ரோமாபுரியைச் சூழ்ந்து சண்டை புரியலானுர்கள். பிரஞ்சு தேசம் குடியரசுத் துரோகம் செய்யுமென அவர் கனவிலும் கருதவில்லை. இரண்டு மாதம் காலம் வரை சமாளித்தார். அந்த இரண்டு மாதத்திலேயே கிழட்டுமுகம் தோன்றிவிட்டது. ரோமாபுரியும் மீறியடிக்கப்பட்டது. மாஜினி இனி என்ன செய்வதென அறியாமல் ஜினிவாவை மறுபடியும் அடைந்து புனராலோசனையிலானுர்.

இக்காலங்களில் போப்பையும், அவர் சித்தாந்தங்களைப்பற்றி அவர் எழுதிய சிலகுறிப்புகளைப்பற்றி கவனிக்க

வேண்டுவ தவசியம். பழம் புராணங்கள் பாழாகவேண்டும். பரமனுக்கும் பாமரனுக்கும் நடுவில் ஒருவனும் வேண்டாம். போப்பே! உன்னுடைய மதம் ஒரு நாள் நிச்சயமாய் அழியும். தன்னந் தனியாய் நீ சொல்வது ஒன்றே தர்மம் என்றால், உன் எண்ணம் தரணியினின்று தளர்ந்துவிடும். ஈசன் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானவர். உன் ஜாதிக்காகப் பிரத்தியேகமாய் சிவனில்லை. வன்மையைப் பெறுவதற்காக வீழ்ச்சியை யடையும் பணக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவனே! உன் கூட்டத்தைத் தவிர எவரும் உன்னை இலட்சியஞ் செய்பவரில்லை. பணமும், படாடோபமே, உன்னிடமுண்டு. பாமரர்கள் படுந் துயரத்தை நீ அறியாய். ஏழைகளைக் காப்பாற்றி, சத்தியத்தைத் தலையோங்கச் செய்யாமல், வன்மையை நாடி சாஸ்திரிகளைக் கொலை செய்கிறாய்? குருட்டு நம்பிக்கைக்கு பக்தி வேண்டுமெனப் புகன்று, உன் வன்மையால் தீமைகளைச் செய்கின்றாய். அகங்காரமும் இகவாழ்க்கையையே நீ நாடுகிறாய். சாஸ்திரத்தையும், தர்மத்தையும், பிரித்ததினால் நீ குற்றஞ் செய்பவன் என நான் கூறுகிறேன். உலகத்தில் ஒருவன் சொல்வதே சாசுவதமான வழி என காட்டி நீ பிதற்றுகிறாய். மனித கோடிகளை ஞானி அஞ்ஞானி என நீ வேற்றுமை செய்கிறாய். புனிதமான அவதார புருஷர்களை கொடுங்கோல் மன்னனாகச் செய்பவனும் நீயே. மகா ஜனங்களை பயமுறுத்தி சீவர்களுடன் சேர்க்கையை யொழித்து செத்தவர்களை உபாசனை செய்யச் செய்து அடிமையாக்குகின்றாய். அன்பே சிவன் என்றிருக்க, அகங்காரத்தின் அதிபதியாய் விளங்கி, ஜீவன் என்பது சதாகால செயல் என்றிருக்க, விதியையும் அருளையும் பெருக்கி சித்தசோம்பலை

சிறப்பித்து, சுவர்க்கமென ஒன்றை சிருட்டித்து, சகத்தின் மதிப்பைக் குறைத்து, முன் செல்வதே நோக்கமென்றிருக்க, பழங் குப்பைகளே பொக்கிஷமென பாதுகாத்து, மகா சனங்களிடம் மறைந்துள்ள பெருமைகளை பாழாக்க முயலுகின்றாய். ஆனால் இது உன்னால் இயலாது. அறிவை வளர்ச்சி செய்வதற்குப் பதிலாக அற்புதத்தின் விபரீதங்களை மெச்சுகிறாய். ஆண்டவன் அறிய இயலாதவன் எனக் கூறுகிறாய். சிருட்டித்து சாவதானமாய் உறங்கும் ஈசனே என நித்தியமாய் விழித்திருக்கும் நாதனின் நிலையத்தில் நுவல்கிறாய்.

இந்நிலத்திலும் அவன் உண்டு. இந்நிலத்தில் நேர்மையுடனிருந்தாலொழிய சுவர்க்கமடைவது அரிது. இங்கு இருப்பது நாம் புனிதமாகக் கற்பதற்கே யாகும். சந்நியாசத்திற்கும் அல்லது சிற்றின்பத்திலேயே சாய்வதற்கே இச்சகமில்லை. உலகத்தில் உய்வதற்கான வன்மை நம்மிடமே யுண்டு. அயலான் அருளினாலேயே நாம் அமுதமடையோம். குறிப்பிட்ட நோக்கத்தை கைகூடச் செய்யும் கைவல்லிய நிலைக்காகவே, இகவாழ்க்கையில் உள்ளோம். ஈசனுடன் இணைவதற்கு இவ்விடமே துணை என்பதை நீ அறிவதில்லை.

சீவன் என்பது ஒரு நோக்கம். பூவுலகத்திலே, அகண்டமாயுள்ள அமுதத்தின் உணவை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையினின்று காண விரும்புகிறோம். நீ தன்னந் தனியாயிருக்க விரும்பாதே. மலட்டான தியானத்திலே உனது ஆன்மாவை சிறைசெய்யாதே. நீ செயலால் சிறப்படையாத அருள், மந்திரங்களால் மலர்ந்துவிட்டது, என் ஆவேசமாகாதே. சகமன்னியில் அல்லது சகத்திற்கு

விரோதமாக நடந்தால், மோட்சம் அடையலாமென மனத்திலாகாதே. நிலத்தில் உதவியினாலேயே நீ முக்தியடையலாம். மற்றவர்கள் முக்தியானாலொழிய நீ முக்தியாவதும் மனப்பாலே யாகும். உன்னான்மாவிற்கு நீ என்ன செய்தாய் என உன்னை ஒருவரும் கேட்கப் போவதில்லை. மற்றவர்கள் மேன்மையாக நீ செய்தது என்ன? எனவே சர்வேசன் கேட்பார். அயலான் நன்மையையே நீ எப்பொழுதும் நினைக்கவேண்டும். இதுதான் தோத்திரமாகும். ஈசனில் செயலும் சித்தமும் ஒன்று. அவர் குணங்களைப் பற்ற முயலவும். ஈசன் எங்ஙனமுளான் எனச் சிந்தனை செய்யாதே. அது உன்னால் முடியாது. அவன் செயலிலே அவனைக் காண முயலவும். ஈசன் செயல் எல்லாவற்றிலும் பெரிது. நான் ஒன்றுமே இல்லையென கலங்காதே. நீயும் உலகத்தில் ஒருவன் என உன்னைச் சிருட்டி செய்துள்ளார். அவர் செயல்களெல்லாம் உன் ஆசார புருஷர்களாகும். அங்ஙனமில்லையேல் உன்னைச் சுற்றி ஏன் அவைகளைச் சிருட்டி செய்துளார்? அப்பொருள்களின் நோக்கத்தை அறிவது ஆன்மஞானமாகும். கர்வமும் அனுவசியத் தாழ்மையில்லாமல், அவர் சோதியின் சிறப்பை மனித கோடிகளில் அறியவும், மனித சமூகத்தின் வழியாகவே அவர் நமக்குக் கற்பிக்கிறார். தன்னந்தனி தியானத்தில் மனத்தண்மையைப் பெற்று, அவர் சட்டங்களை யெல்லாமறிந்து உன் கடமைகளைச் செய்ய சங்கற்ப முடனாகவும். ஒவ்வொரு மொழியிலும் ஆன்மா பிரகாசமாக வேண்டும். சமத்துவமாய் வாழவிரும்பவும், உன் உடல், உள்ளம், சுற்றியுள்ளவைகளெல்லாம் சிறப்பான பொருள் எனச் சிந்தனையாகவும், உன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்

காக ஈசனால் நிர்மாணஞ் செய்யப்பட்ட கருவிகள் என எண்ணாதே. புவியிலுள்ளோர்கள் பெருமையுடனாவதற்கே அவை அளிக்கப்பட்டுள. புவியைப் பரமபதமாய் மாற்ற வேண்டுமென்பதே அவர் சித்தம். மனிதர்களை நேசிப்பதே ஈசனை உபாசிப்பதாகும். அவர்களுக்காக அவர்களுடன் உழைக்கவேண்டும். மனிதர்கள் விரும்பாததை ஈசனும் விரும்புவதில்லை. மனதிற்கு மாறானவை மெய்ப் புருடனுக்கு விரோதமாகும். சுதந்திரத்தைக் கொலை செய்தால் சுவர்க்கம் கிடைப்பதும் அரிது. இம் மொழிகளை யெல்லாம் போப்பிற்குப் புகன்று, இளைஞர்களுக்கு மறுபடியும் அவர் கர்ச்சனை செய்ததாவது.

தேசீயப் போர்

நாடெங்கும் தலையோங்க பிரசாரஞ் செய்யவும், சுதந்திரம் என்னும் நோக்கத்தை சங்கநாதஞ் செய்யவும், தேசத்திற்காகவே என வற்புறுத்தவும், ஜனங்களைப் புது தீர்மானஞ் செய்வதே உங்கள் நோக்கமாகும் எனக் கூறவும். இதைவிடப் புனிதமான பணி புவியிலே பூஜ்யம். குறுக்கு வழி குருட்டுப்பாதை, இராஜ தந்திரம், வஞ்சக சித்தாந்தம், பொய் கட்டுப்பாடுகள், முதலியவைகளால் அதைப் பெறமுடியாது. நிரந்தரமான நிர்மாணமான வேலையினாலேயே, சாந்தமான ஒழுக்கப் பயிற்சியாலேயே அது ஓங்கும். ஜனங்களுக்கு உதாரணத்தால் விளக்கி உதிர த்தியாகஞ் செய்து, சத்தியத்தை இடைவிடாமல் பகிரங்கமாக்கி, அச்சமில்லா விடா முயற்சியுடன், சதாகால உற்சாகமுடன் ஈசன் சத்தியத்தைவிட தலைவன் வேறு இல்லை என உழைத்தால், சுதந்திர அமுதத்தை பருக

லாம். ஜனங்களைவிட வேறு கருவி இல்லை. நேர்வழியை விட நிலையான வேறு நெறி இல்லை. நமது நாட்டைவிட வேறு நினைவு நாடாதே. நமனையும் அஞ்சாதே! பட்ட தாரிகளையும், முகஸ்துதிப் பேடிகளைத், துரத்திவிடவும், தங்கள் சுயநலத்தை உத்தேசித்து தன் தாயான தரணியை தந்திரி என்னும் பெயர் வாங்க விற்கத்துணியும் விலைமக்கட்களை விலக்கவும்.

தேசத்தை நேசிக்கவும். உங்கள் தாய் தந்தை தூங்கும் நாடு இது. உங்கள் பெற்றோர்கள் குழந்தையில் குலாவிய நாடு. நீங்கள் முன்னேறுவதற்கு ஈசனால் நிர்மாணஞ் செய்த நாடு. மகா சனங்களை மேன்மை செய்யும் நாடு. உங்கள் நினைவு, நெறி, உதிரம் யாவற்றையும் தேசத்திற் களிக்கவும். பழய இருஷிகளால் புகன்றதுபோல் நீங்கள் இதைப் பெருமையுடனுக்கவேண்டும். அடிமைத்தனம் பொய் நிலைகளை படுகொலை செய்யவும். பல கோடி மகா சனங்கள் நிறைந்த நாடு புவிக்கே பெருமையை யளிக்கும். பூலோகத்திலுள்ள மற்ற ஜனங்களிடஞ் சேரவும் என இளைஞர்களுக்கு உபதேசஞ் செய்தவராய் சில வாரங்கள் ஜினிவாவில் காலங் கழித்தார்.

அத்தியாயம் 9.

லண்டன்—தாய் மறைவது—வேதாந்தம்—மிதவாத தந்திரம்—கடுங் கோள்கை—என்நோக்கம்.

ஜினிவாவில் நண்பர்களின் உதவியைக் கொண்டு மறுபடியும் சிறிய பத்திரிகை யொன்று ஆரம்பித்தார். எழுது

வது, பேசுவது, உற்சாக மளிப்பதே அவர் தினசரி வேலை யாய் விட்டது. இறந்த நண்பர்களைப் பற்றிக் கவலையுடனுவார். ஸ்விட்ஜர்லாண்டு நாட்டில் சர்க்கார் இவரை இருக்கலாகாது என வற்புறுத்தவே, இவ் வெண்ணங் களின் கவலை யொழிந்து எங்கு செல்லலாமென சிந்தையி லாகி இங்கிலாந்து சென்றுர். இப்பொழுது வயது 44 இருக்கலாம். ஆங்கிலேயர்களை ஒருவாறு நேசிக்கவு மாரம்பித்துவிட்டார். இங்கு மற்ற மூன்று நண்பர்களோடு கந்தை, கஞ்சியில் காலந்தள்ளினுர். தாய் தரணி தளர்ந்ததும் வருடந்தோறும் அவள் அளிக்கப்பட வேண்டும் என எழுதிவைத்த உயில்படி 160 பவுன் கிடைக்கும். அதை ஏழை எளியவர்களுடன் அவர் உண்ணுவார். நண்பர்கள் வெகு மதியா யளிக்கும் பொருளையும் அவர் பெறுவதில்லை. திருட்டுத் துப்பாக்கி ஒரு காலத்தில் அவசியமா யிருக்கும் பொழுது நான் ஏன் ஏழையாய்ப் பிறந்தேன் எனத் தவித்தார். ஆனால் தன் உணவு, உடையைப்பற்றி அவர் கவலையே கொள்வதில்லை. அவர் இருப்பதோ சிறிய அறை; ஆனால் எங்கும் நூல்கள். சதா காலமும் எழுதுவார். தொழிலாளிகளுக்குப் பணம் சேகரிப்பார். மனம் ஆற்றலையளிக்க உபதேசஞ் புரிவார்.

லண்டனில் இவரின் இவ் வாழ்க்கையைக்கண்டு மனக் கவர்ச்சி யாகாதவர்களே இல்லை. மெலிந்த உடல், வெண்மை தாடி, நிமிர்ந்த நெற்றி, பெண்கள் உதடு, நெருப்புக் கண்கள், துக்க முகம், சடேரென சிரிக்கும் பற்கள், இவை தான் மாஜினி என இக்காலத்தின் அவர் வடிவை ஒருவர் கூறியுளார். அஞ்ஞாதவாசத்தைப் பற்றித்தான் அவருக் குக் கவலை. தேசத்திலே தேசத்திற்காக நான் மரிக்க வேண்

டும். நான் வேறு நாட்டில் இறக்கலாகாது என எண்ணு வார். ஆனால் இப்பொழுது இதாலியிலே நிலையுமில்லை. 1848-ம் வருடத்திலேயே தந்தை இறந்துவிட்டார். நமது மகன் ஏன் இங்ஙனம் கஷ்டப்பட வேண்டும் என அவர் எண்ணிய போதிலும் தேசத்திற்காக உழைப்பவன் என அவர் கர்வமுமாவ துண்டு. 1852-ம் வருடத்தில் அவர் தாய் மறைந்தாள். இடி விழுந்ததுபோல் கலங்கினார். என் தாய் ஸ்தானத்தில் ஒருவருமில்லையே எனத் தவித் தார். இடாலி சுதந்திர முடனானல் எனது தாயைப்பார்க்க வேண்டுமென விரும்பினேனே? ஆனால் துக்கிப்பதில் பய னில்லை என திடமாகி எனது தாய் என்னுடனிருக்கிறாள். எனக்கு இனி புத்துயிரளிப்பாள் என உற்சாகமானார். கடமையின் புனிதத்தை அதிகமாய்க் கண்டு இனி தேசத் தை தாயைப்போலவே தாய் உடல் என மனப்பூர்வமாய்க் கருதவேண்டும் என பன்மடங்கு உணர்வுடன் உழைக்க லானார். தூங்குங்கால் தாயை நினைத்து எழுச்சியாய் அம்மா! என் வேலை பூர்ணமாக வில்லையே!! எனக் கதறு வார். நான் இதை முடித்துவிடுவேன் என பதிலளிப் பார். இவர் துக்கத்தைக்கண்டு ஆங்கில நண்பர்கள் மிக்க ஆதரவை அளிப்பார்கள். இவரை ஒரு முறை கண்டவர் கள் சதா காலமும் மறப்பதில்லை. இனிய குரலை செவி யுற்ற இளைஞர்கள் மனதில் கற்சிலைப் போல் குணமாவார். ஆங்கிலேயர்களின் சுதந்திரத்தைப் புகழ்வார். ஒப்பிக்கும் செயல்களை அவர் விரும்புவதில்லை. அந்நிய நாட்டு ஜனங் களுக்கு மோட்சமளிக்கக் கருதும் பைபில் சங்கத்தை அவர் போற்றவில்லை. காப்டனால் ஸ்தாபனஞ் செய்யப் பட்ட சாந்த சங்கங்கள் அடிமைகளிருக்கும் வரை

யாதொரு பயனையு மளிக்காது என்ருர். கிரிமியன் யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் சேராம லிருக்கவேண்டு மென்பது அவர் சித்தம். பல நண்பர்களின் உதவியால் இதாலியைப்பற்றி நல்லெண்ணங்கள் பகிரங்கஞ் செய்தார். பல ஆங்கிலேயர்கள் இவரை நேசித்தார்கள். 'மாஜினியே! உன் உடல் தளர்ந்திருக்கின்றது. நீ சுகமாயில்லை எனத் தோன்றுகிறதே' என ஒருவர் வினவியதற்கு அவர் உரைத்த தாவது:—

தேசம் சுதந்திரத்திற்குப் போராடுங் கால் தேக அசௌக்கியமாவது மதியீனமே.

மாஜினி நாட்டிலே இருக்கும் வரை, பிராடஸ்டண்டு கிறிஸ்தவர்கள் ஒருவாறு நன்மை செய்கிருர்கள் என எண்ணிய போதிலும் அந்நிய நாட்டு விஷயத்தில் நாம் நுழைவதில்லை என்று சொல்வதை விரும்பவில்லை. அதைப்பற்றி அவர்களுக்கு உரைப்பதாவது:—

ஒரு நிலை வேதாந்தம்

நாங்கள் அந்நியர் விஷயத்தில் சேர்வதில்லை என்பதுவாய் வேதாந்தம். ஆதிகாலத்தில் அதன் உண்மையை அறிந்து நிலையாய் அறிஞர்கள் கைப்பற்றிய போதிலும் நவீனத்தில் அது சுயநலத்திற்கே பயன் செய்யப்படுகின்றது. பிரஞ்சு நாட்டில் புரட்சி புலனுன காலத்தில் நீங்கள் நடு நிலையுடன் நிற்கத் தவறி, மன்னனுதவியால் குடியரசுடன் அரசனுக்காக போர் புரிந்தீர்கள். அன்னியர் விஷயத்தில் தலையிடுவதில் என்ருல் அடுத்த வீட்டில் நெருப்புப் பிடித்தால் எங்களுக்கு அக்கரை இல்லை. பிளேக்கும் கால்ராவும் ஏழைகளிடம் தோன்றினுல் நமக்கென்ன

என சும்மா யிருக்க முடியுமோ? அந்நியர்களிடத்தில் அநியாயம் நடந்தால் நீங்கள் நுழையாம லிருப்பது நியாய மாகுமோ? உங்கள் தேசம் ஒற்றுமையுடனுகி ஒரு மனித னுய் விளங்கி சுதந்திரமாய் வாழும் பொழுது அந்நியர்கள் அடிமையினின்று நீங்க முயற்சித்து கஷ்டங்களை யனுப வித்தால் நீங்கள் மௌனமாய்ப் பார்ப்பது நியாயமாகு மோ? ஈசன் நிலையமான இந் நாட்டில் நாம் எல்லாரும் ஒரு உரிமை, ஒரு கடமை ஒரு நோக்கத்துடன் கூடிய மக் கட்கள். நித்தியமான உரிமைகள் நம்முன் கொலை செய் யப்படுங்கால் எமது உரிமைக்கு பங்கம் ஒன்றுமில்லை என அகங்காரமுடன் அமைதியா யிருப்பீர்களோ? ஈசனருளிய சுதந்திரம் எங்களுக்கு உரிமை எனச் சொல்லி மற்றவர் கள் உரிமைகளை கவனியாம லிருக்கலாமோ? அந்நியர்கள் அதோகதியிலாகி அவஸ்தைப் படுங்கால் நீங்கள் கிறிஸ் தவர் எனக் கூறிக்கொண்டு சும்மா யிருக்கலாமோ? வேறு ஜனங்களின் உயிர் அசத்தியத்தால் ஆபத்திருக்குங்கால் சுயநலத்தை யுத்தேசித்து சும்மா யிருக்கலாமோ? நாங் கள் சுதந்திரர்கள்; ஒருநாளும் அடிமைகளாவோம் எனச் சொல்லிக்கொண்டு அயலான் அடிமையா யிருப்பதைக் கண்டு அமைதியாகலாமோ? பக்தர்கள் எனப் புகன்று, அந்நியப் பாமரர்கள் கஷ்டம் அனுபவிக்குங்கால் மௌன மா யிருந்தால் பக்தியாகுமோ? என இவ் வெண்ணங்க ளுடன் பலவாறு புகன்று ஆங்கிலேயர்களின் உதவியை நாட முயன்ருர்.

மிதவாத தந்திரம்

இப்பொழுது இதாலியில் போப்பின் அரசாட்சியும், அரசனின் ஆட்சியும், ஆஸ்திரியாவின் ஆதிக்கியமும்,

பிராஞ்சின் நிலையமும் இன்னம் அழியவில்லை. ஆஸ்திரியாவை ஒழிக்க மன்னனும் இசைந்தான். ஜனங்களும் விரும்பினார்கள். மறுபடியும் எழுச்சி. ஆனால் அரசனுடன் கேவார் என்னும் ஒரு மிதவாதி மந்திரியாயிருந்தான். மாஜினியைப் போல் குடியரசு அவன் நோக்கமில்லை. சண்டையன்னியில் இதாலி முன்னேற வேண்டுமென்பது அவன் எண்ணம். பிரஞ்சு நாட்டு உதவியைக் கொண்டே ஆஸ்திரியாவை துரத்த முடியுமென நினைத்தான். ஆனால் மாஜினி, இதனாலுண்டாகும் தந்திரமெனப்படும் பொய் வஞ்சகங்களுக்கு ஈடுபட வேண்டுமென இதற்கிசையவில்லை. புரட்சிக்காரன் உதவியைக் கொண்டு மிதவாதி பெருமையடைய விரும்புகிறான் என எண்ணினார். புரட்சிக்கு பகைவனாய் விளங்கிய பிரஞ்சு நாட்டோடு ஒரு பொழுதும் சேரக்கூடாதென்பதை எத்துணை வற்புறுத்தியும் கேவார் கேட்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் பழைய குடியரசு நண்பனனை மானின் என்பவன் இப்பொழுது அரசாங்கப் பெரிய பதவியொன்றிலிருந்தபடியால் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு 'கடும் கொள்கை' என்பதைப்பற்றி மாஜினி மனம் புண்ணாக வேண்டுமென்னும் எண்ணத்தோடு ஒரு வியாசம், அவரை காரிருளின் கொலைப் பாதகன் என உணர்வாகும் குற்றஞ் சாட்டி எழுதினான். அவ்வியாசத்தைக் கண்டு மாஜினி மனம் பதறி, எரிமலை கொழுந்துவிட் டெரிவதுபோல் தன் உணர்வை யெல்லாம் எழுச்சி செய்தார்.

கடும் கொள்கை என நீ லண்டன் பத்திரிகைக்கு எழுதுகிறாய்! அந்நிய நாட்டுப் பத்திரிகை! இராஜ தந்திரத்

துடன் இடாலிக்கு சீர்திருத்தம் வேண்டுமென கக்குகின்றது. நமக்கு ஒன்றுமே அவசியமில்லை எனச் சொல்லிய பத்திரிகை! ஏன் இப்பொழுது புலம்ப வேண்டும்? ஆஸ்டிரியர் ஆதிக்கம் அவசியமென வற்புறுத்தும் பத்திரிகை! சுயமரியாதை, தேசத்தின் கண்ணியத்தை உத்தேசித்து நீ இப் பத்திரிகையில் எழுதாம லிருந்திருக்கவேண்டும். நீ இவ் வெண்ணங்களை இவ் வன்னிய நாட்டுப் பத்திரிகையில் எழுதுவதால் சத்துருவிற்கு எதது‌ணைச் சக்தியை யளிக்கிருய் என்பதை நீ அறிவதில்லை. தேசபக்தர், தேசியத்தின் பகைஞர்களிடம் நீ எழுதுகிருய்? சமயமும் சந்தர்ப்பமும் நேரிடுமே யானல் நீயும் நானும் ஒரு வேளை கலந்தால் நம்மிருவரையும் காரிருள் கொலைப்பாதகர்கள் எனக்கூறுமே? இச் சனங்களுக்கு சுதந்திரம் ஏனே எனத் தலையங்கம் எழுத ஆரம்பித்து விடுமே!

இந்தக் கடிதமும் வீரமுடன் எழுதினுய் என படாடோபம் செய்கிருய். வீரம்! கடுமைக்கு விரோதமானல் இடாலியிலேயே குணக் குன்று என கீர்த்தியாகக் கருதுகிருய். இவ் வெண்ணமுள்ளவர்களைக் கொலை செய்வதையும் கடுந் தண்டனை யளிப்பதையும் பெரும் நீதி எனப் புலனக்கவோ நீ எழுதியது போலும்! மறைமுகமாய் என்னை அவதூறு செய்வதே உன் நோக்கமென அம் மொழிகளால் நான் அறிந்தபோதிலும், அத்தகைய ஆன்மத் துரோகம் உன்னிட மிருப்பதாக நான் கருதவில்லை. 25 வருட காலம் உன்னுடன் நெருங்கிப் பழகிய நானே அங்ஙன மறிந்தால் மற்றவர்கள் அறிவதைக் கேட்பானேன். நீ இங்ஙனம் கடிதம் எழுதியது ஒற்றர்கள், பிடாரிகள், துரோகிகளுக்கு கன்னக்கோல் கொடுத்தது போலாகும். காரிருளில் கடு

மையால் கஷ்டம் செய்வதை நன்மை என எந்தச் சங்கம் கூறிற்று. தேசமும் கொடியுமற்ற அடிமை நாட்டிற்கு கடமையின் இலக்கியத்தைக் காட்டி இங்ஙனம் கூறி விளக்க விரும்புகிறாயோ?

எழுச்சியாகவும், அழிக்கவும் அல்லது அழிந்துபோகவும் நீங்கள் மனிதர்களில்லை, அந்நிய அரசாங்கத்திற்கு ஆதரவாயுள்ள ஒரு துணைக்கருவியாகும். நீங்கள் மகா சனங்களில்லை, நிந்தனைக்குள்ளாகி நிலை இழந்த பேதைகள், நீங்கள் இடாலியர்களில்லை, பேடிகளும், பறையர்களுமாவீர்கள். உங்களுக்குப் பெயருமில்லை, நாடுமில்லை, எல்லாம் பூஜ்யத்தின் பிரதிநிதிகளே. யோகிகளின் சந்ததிகளான நீங்கள் சிறைச்சாலையிலும், கடுந் தண்டனையிலும் காலந் தள்ளுகிறீர்கள். மனிதர்களாகத் திகழ்வதே உங்கள் முதற் கடமை. இது நான் கல்வியின் ஆரம்பம். நீங்கள் நிலையாறு லொழிய நெறியை அடைவ தெங்ஙனம்? ஆதலால் எழுச்சியாகிய நிலையுடனாகவும், ஈசனால் காண்பிக்கப்படும் வழியை நாடி, காராக்கிரக வன்மையை யெல்லாம் வீராவேசத்துடன் எதிர்க்கவும். புனிதமான கோபமுடன் எழுச்சியாகவும்.

சண்டைக்காக பகிரங்கமாகாதே. இரகசியமாய்ச் செய்யவும் தன்னந்தனி தேசத் துரோகிகளை வதை புரியவும், இருளிலே குத்தவும் பழிக்குப்பழி வாங்கவும் குற்றவாளி எனக்கருதுபவர்களை கூறுவதற்கும் சந்தர்ப்பமளிக்காமல் கொலை புரியவும்.

முதல் சொன்னவற்றை பகிரங்கமாய் நான் ஒரு வேளை ஆமோதித்தபோதிலும் பின் சொன்னவற்றை நான் எங்கு சொன்னேன் எங்கு கூறியுளேன்? இதற்கு

அத்தாட்சி யுண்டோ? அநியாயமாய் சுடப்பட்ட அண்ணன் தம்பி, தந்தை நண்பனின் பழிக்குப் பழி வாங்க எவராவது காரிருளில் கொலை செய்தால் அதற்கு நானோ காரணம்? அதற்கு இளஞ் சங்கம் யாது செய்யும்? உதாரண மொன்று.

ஆஸ்டிரியரால் கொலை செய்யப்படுவதற்கு முன், மன்டுவாவிலே கால்வி என்பவருக்கு, அவர் கடனைத் திருப்பிக்கொடுக்க கர்விரி என்பவன் பொருள் அளிக்க பிரயத்தினஞ் செய்யப்பட்டபடியால் ஒரு வாரம் தினந்தோறும் 20 சவுக்கடி பெற்றான். ஆஸ்டிரியர்கள் அப்பணத்தைப் பறிமுதல் செய்து அப்பொருளால் கொலை செய்யும் கயிறு ஒன்று வாங்கி கொலை பாதகனுக்கு வெகுமதி அளித்தனர். அக்கால்வி அல்லது கர்விரியின் பந்து ஒருவன் ஆஸ்டிரிய கொடுங்கோலான அந்நியன் ஒருவனைக் கண்டு குத்திவிட்டால் அதற்கு யார் என்ன செய்வது?

மனத்தின் நினைவு தண்டனை செய்யப்பட்டால், தேசத்தை நேசித்ததற்கு வீடு வாசல் பறிமுதலானால், அந்நியர்கள் சதா காலம் அமிழ்த்தினால், ஒற்றர்களும் போலீஸ்காரர்களும் உபத்திரவஞ்செய்தால், நித்தியமான இழிவானால் எங்கும் நிலவும் கல்வி யில்லையானால், ஜனங்கள் நோக்கத்திற்குச் சுதந்திரமில்லையானால் படாத பாடுகளைப் பட்டால் காரிருளும் கடுமை நிலையமே பாதுகாப்பெனப் பதுங்குகிறார்கள்.

ஆனால் ஒரு சங்கமும், சபையும் அச் செயலை அநுமதிக்கவில்லை. சிலர் செய்தால் அதற்கு நாம் என்ன செய்வோம். நாட்டிலே துக்கமிருக்கும் வரை அத்தகைய சிலர்கள் இருப்பார்கள். கடுமையால் ஒருவன்

கஷ்டப்படுங்கால் தலை குனிந்தவனை நோக்கி, நீ பதிலுக்குப் பதில் கொடுமை பயன் செய்யாதே என்று சொல்வது பஞ்ச காலத்தில் இறப்பவனிடஞ் சென்று நீ சும்மாயிருக்கவும், உதிரமானது உன் நரம்பில் ஓடிக்கொண்டே யிருக்கும் எனச் சொல்வது போலாகும். நாட்டில் காரிருள் கடுமையே இல்லை. நாடு சுதந்திரமாகி, உரிமைகளை யெல்லாமடைந்தால் கடுமை என்பதே காணுமலாய் விடும்.

கடுமையை நான் விரும்பவில்லை. நான் வருந்துகிறேன். ஆனால் நான் அதை வெறுக்கவில்லை. தேசத்தின் நண்பன் என பாசாங்கு செய்து பிறகு ஒருவன் துரோகஞ் செய்தால், அவனைத் தொழிலாளி யொருவன் கழித்துவிட்டால், அத்தொழிலாளியை நான் வாய் திறந்து திட்டேன்.

பெருமையான நோக்கமன்னியில் ஒரு துளி இரத்தம் பாயவும் எனக்குப் பிரியமில்லை. தூக்கு மேடையை ஒழிக்க வேண்டு மென்பதே எங்கள் விருப்பம். நீதியான முறையில் ஒருவனுக்கு நியாயம் கிடைக்கவில்லையேல், தன்னந் தனியாய் அவன் பழியைத் தீர்க்குங்கால் நான் அவனை எங்ஙனம் வெறுப்பது? நான் குடியரசில் ஈடுபட்டிருந்த காலத்தில் மார்ஷல்லாவினுல் தீர்மானிக்கப்பட்ட ஒருவன் உயிரையும் நீக்க மறுத்தேன்.

ஆனல் சில சந்தர்ப்பங்களில் அவசியம் கஷ்டத்தைக் கொன்ற கத்தியும், கடுமையை யழித்த சக்கிரமும், பொய்யைத் தொலைத்த ஈட்டியும், அகத்தை அழித்த சூலமும் பூவுலகம் போற்றும் புனிதப் பொருள்களே. நீதியை மறைத்து, மகா ஜனங்கள் மனத்தை ஒரு கொடுமை அழித்தால், ஜனங்களைச் சுதந்திரமாக்க விரும்பும்

சர்வேசன், அவர்கள் நடுவில் அகங்காரம் பேராசை யன்னியிலுள்ள ஒருவனை உற்பத்தி செய்யலாம். அவன் அக் கொடுமையை அணுகி ஆயிரக்கணக்கான என் சகோதரர்களை நீ அவஸ்தை செய்கிறாய். ஈசனால் அளிக்கப்பட்டதை நீ மறுக்கிறாய், அவர்கள் தேகத்தை அழித்து ஆன்மாவை அலறச் செய்கிறாய். உன்னால் என் நாடு நாசமாகின்றது. அடிமை அதோகதி, அநீதிகல்லாம் நீயே காரணம்; உன்னைக் கஷ்டஞ் செய்வதால் மேற் சொல்லிய தீமைகளை யெல்லாம் அழிக்கிறேன் எனக் கூறி அதை அமிழ்த்தினால், கொடுங்கொடுமையை அழிக்க வந்த கடவுளென்னாமல் அவனை வேறு என்னவென அழைப்பது? நான் நினைப்பதுபோல் பலர் நினைக்கிறார்கள். ஆனால் சிலரே சொல்வார்கள். உன்னைப்போல் அவர்களைப் பேடி எனச் சொல்லேன். நீ செய்வதை நிறுத்தும் வரை, உனது காரியம் நிறைவேறாது எனச் சொல்லவும். எனக்குத் தைரியமில்லை. ஒரு வேளை கஷ்டப்படுத்துவதற்கு அருகதையானவை இருக்குமே யானால், அந்நியவைகளிடம் பயன் பெற்று நன்மைகளை உபத்திரவஞ் செய்து பரிதவிக்க முயன்று, தூக்குமேடை அனுப்பும் பொய்யர்களை பாழாக்கி நிறைவேற்றலாமே? அவைகளை ஜயிக்கவேண்டுமானால் அதிகமான நற்குணங்கள் நம்மிட மிருக்கவேண்டும். அநியாயத்தை அழிக்கலாமே யன்னியில், தன்னந் தனி மனிதர்களைக் கஷ்டஞ் செய்வது நீதியாகா தென அவர்களுக்கு நான் உரைப்பேன்.

என் நோக்கம்

சின்னஞ்சிறு கஷ்டம் வேண்டாம். தன்னந்தனிக் கொடுமைவசியமில்லை. போர் புரிந்தால் பகிரங்க பெரும்

போர் வேண்டும். அதற்குப் பிறகு சச்சரவே இல்லை. ஆதலால் அப்போருக்கே பிரயத்தினஞ் செய்யவும். இதுதான் அறிஞரின் கொள்கை. மார்பிலே கைவைத்து நீயும் அநியக் கொடுமை வேண்டாமென்று ஒரு நாளாவது நீ நினைக்கவில்லையா? ஒரு காலத்தில் நீ என்னுடன் சேர்ந்து உதவி புரிந்து நமது இயக்கத்தை ஓங்கச் செய்யவில்லையா? நீ கடுமையை விரும்பவில்லையானல், குணத்தை ஏன் அளிக்கலாகாது? அநீதியால் தேசம் ஆதாயம் அடையுமென எண்ணுகிருயோ? இல்லை. பிறகு ஏன் பகிரங்கமாய் என்னுடன் சேரலாகாது. உன் கைகளை சிரஞ் சொல்வது போல் ஏன் செய்யலாகாது? என அவனுக்கு பதிலளித்துவிட்டு மறுபடியும் பெருஞ் செயல்கள் செய்வதில் இறங்கிவிட்டார். எதிர் கால சர்க்கார் கடன் என பணம் திரட்டவும் முயன்ருர். அங்கங்கு சில சண்டைகளையும் கிளப்பினுர். காரிபால்டியுடன் சேர்ந்து ஜினிவா முதலிய நகரங்களில் குறிப்பிட்ட தினத்தன்று கிளம்ப நினைத்தார். ஆனல் சர்க்காருக்கு எல்லாம் தெரிந்து விட்டது. பலர் பிடிபட்டனர். மாஜினி உயிர் தப்பியது அற்புதமாய் விட்டது. மாஜினியை சிரச்சேதஞ் செய்யவேண்டுமென கடுமையான தண்டனைச் செய்தியும் பகிரங்கமாய் விட்டது. மாஜினி மாறு வேஷ மணிந்து தப்பித்துக் கொண்டு மறுபடியும் இங்கிலாந்து சேர்ந்து விட்டார்.

அத்தியாயம் 10.

தொழிலாளிகளே—கல்வி—விண்ணப்பம்—உபதேசம்.

1850ம்-வருடத்தினின்று 1872-ம் வருஷம் வரை, இங்கிலாந்தினின்று இதாலி செல்வதும் இதாலியினின்று இங்கிலாந்து திரும்புவதும் எழுதுவதும், பேசுவதும் தொழிலாளி சங்கம் ஸ்தாபிப்பதும், ஆயிரக் கணக்கான கடிதங்கள் எழுதுவதும், கிளர்ச்சியைக் கிளப்புவதும், காரிபால்டியுடன் திட்டஞ் செய்வதும், பெரும் போர் புரிய சாதனங்கள் சேர்ப்பதும், ஜர்மனியின் பிஷ்மார்க்கின் உதவியை நாடுவதும், மனஞ் சளைக்காமல் உழைப்பதும், பிறர் வருந்தாமலிருக்க புன்னகை புரிவதும், உற்சாக மன்னியில் கடமையைக் கருதி செய்வதும், மற்றவர்களின் துக்கமறியத் துணை யளிப்பதும் அதிகச் சங்கீதப் பேச்சை விரும்பாமலிருப்பதும், புஸ்தகாலயங்களில் பழய ரிஷிகளைக்காண முயலுவதிலும், தோல்வியிலே தளராமலிருப்பதிலும், அடிமைச் சித்தத்தை யொழிப்பதிலும் காலத்தைக் கழித்தார். என்னைப் புகழவேண்டாம். எனக்குப் பொருள் வேண்டாம் என் இதாலி சுதந்திரமாக வேண்டு மென்னும் சித்தத்திலேயே ஒன்றுக்குமே அஞ்சாமல் உழைத்து வந்தார்.

அலட்சியம், ஆலஸ்யம், தாட்சண்யம், பதரும்பயம், இவைகளே எளிய நெஞ்சை நாசஞ் செய்யும். சாந்தம் என மருளச் செய்து நினைவை நிலையன்னியிலாக்கி வாழ்க்

கையை நோக்க மன்னியில் நழுவச் செய்யும். களைப்பைக் கண்டு அஞ்சுகிறார்கள். சண்டைக்குப் பயம். ஈசனின் சாபமான பயம் ஒன்றைத் தவிற வேறு யாவற்றிற்கும் கலங்குகிறார்கள். எதற்காகப் பிறந்தோ மென்பதை அறிவதில்லை. இது தான் நிலையான நிலம். நீ சோம்பலுடன் வாழலாம் என ஈசன் உன்னைச் சிருட்டிக்கவில்லை. காலம் கடுங்கோரமாய் கழிகின்ற தென்பதை நீ கனவிலும் கருதுவதில்லை. எழுந்து செல்லவும்! இனியும் உறங்க வேண்டாம். உன் நிலையற்ற நினைவை நாசமாக்கி, சங்கற்பத்தை யடையவேண்டும். கடமை ஒன்றே நீ பிறந்ததினின்று சுடுகாட்டுவரை, சுவர்க்கத்திலும் உன்னுடன் செல்லும்.

இவ்வுலகில் இருக்கும் வரை நீ ஈசனின் போர்வீரனே. தீமையைத் தொலைப்பதற்காக புவியின் சைன்யத்தில் நீ பிறந்துளாய். ஒழுங்கின்மையை ஒழிப்பதற்கும், இருளைத் துரத்துவதற்கும், உன்னுடைய எல்லா சக்தியையும் சிறப்பித்து சண்டைபுரியவும். உலகத்தில் அநியாயம் தாண்டவமாடுங்கால் மௌனமாய் ஒரு பொழுதுமிராதே. கோவில்களை யெல்லாம் குட்டிச்சுவராக்கும் கரை புரண்டோடும் அநீதி வெள்ளம், ஒவ்வொரு கல்லாய்ப் புரட்டி அடித்துச் செல்லும்பொழுது கருங்கல் சிலையைப்போல் நிற்கவேண்டாம். ஈசனை மனமார நீ போற்றினால், சும்மாயிருப்பது தர்மமாகாது. மனத்திலுள்ள சக்தியை தூக்கத்தால் மறைப்பாயோ? நம்பிக்கை யிருந்தால் செயல் வேண்டும். தூக்கம் வேண்டாம். தியாகம் வேண்டும். தளராமல் தலைவன் நெறியினின்று காண வேண்டும். உலகத்திற்காக இறந்தால் புத்துயிர் பெறுவாய்.

உங்களை தண்டிக்கலாம். உங்கள் மொழிநிறைந்த நூல்களை எரிக்கலாம். உங்கள் உணர்வு மறையாது. உங்கள் உணர்வு புனர்ஜன்மம் எடுத்து மறுபடியும் சக்தியத்தைக் காக்கும். தவறுதலாகி, தரணி உங்களைத் தள்ளியும் உங்களைச் அவள் தைரியமுள்ளவர் களாக்கலாம். ஆனால் மறுபடியும் தழைப்பீர்கள். ஆன்மாவிற்கு அழிவில்லை. உலகத்திலுள்ள யாவும் ஒன்று திரண்டு ஆன்மாவின் மொழிகளை அழிக்க முயன்றால் அது இயலாது. ஆன்மா புனிதமாகும். கடவுளைப் போல் அதற்கும் அழிவில்லை. மரணம் என்பது உடலைப் போல் அது ஒரு வடிவமே. உங்கள் குழந்தைகளினிடம் களிப்புடனிரு எனக் கூறாமல் குணக் குன்றாயிரு எனக் கூறவும். பணக்காரனாயிரு எனப் புகலாமல் வருந்துவதற் கேற்ற வன்மையை யடையவும். புயல் காற்றிலும் அமைதியாயிருக்க முயலவும். இதைவிட பொக்கிஷம் புவியிலில்லை. குழந்தைப் பருவத்திலே கருதுவதை யெல்லாம் சத்தியம் சத்தியம் என சிரத்தையுடன் நாட்டவும். நீ காணும் கனவு கைவல்லியமானக் காட்சியாகும் எனக் கூறவும், விடுதலையுண்டு. அதுவே மலரான ஆன்மாவின் அரும்பாகும். நட்பில் சாய்ந்து அன்பை உபாசிக்கவும். ஆனால் அன்பிலும் நட்பினும் ஆனந்தாவேச மாகாதே. விடுதலையாக அவ்விரண்டும் இரு கால்களாகும். நீ நிந்திப்பதென்ன? உனக்கு எவர் விரோதம்? நீ செய்யும் செயல்களும் இச் சகத்திலேயே பயன் வருமென எண்ணுகிறாயோ? இப்புவியிலே ஆனந்தமுமில்லை; அமைதியுமில்லை. நீ அமைதி எனச் சொல்வது அகங்காரமாகும்; அது ஆன்மாவை அழிக்கும். நீ ஆனந்தமென நினைப்பது மனித சீவனின் முடிவாகும். இங்கு

முடிவே இல்லை. நம்பிக்கை யொன்றைத் தவிர நீ வெல்வதற்கு ஒன்றுமே இல்லை. நீ கடந்து செல்வதற்கு முன் குணத்தை யளிக்காவிட்டால் அது கடவுளின் பிழையோ? நீ நடுக்கடலிலே நீந்துகிறாய்; வீரமாய்ப் பயன்புரியவும், கைகள் கடலிலும் உன்னை பயமுறுத்தும். அலையே உன்னை எடுத்துச் செல்லும். அதை அடக்கி யாளும் வன்மையும் உன்னிடமுண்டு. கைகளைத் தளர்ச்சியாக்காமல், கருத்தைக் கலைக்காமல் செல்லவும். இல்லையேல் மூழ்குவாய் அல்லது திரும்பிவிடுவாய். சுகம் இன்பத்தை அகற்றிவிடவும். சூரியன் ஒளியால் மின்னும் மூடுபனியே அவைகள். அடுத்த நிமிஷம் கடுமையாகவே காணும். கலக்கம்போதுள்ள கடமை யொன்றைத் தவிர வேறென்றுமே சத்தியமாகாது. அது ஒன்றே புனிதமானது. ஈசன் உன் வன்மையை அதிகரிப்பார். நானும் கஷ்டப்பட்டுள்ளேன். கசப்பையும் அருந்தியுள்ளேன். என் நெஞ்சம் துடித்திருக்கின்றது. ஈசனும் கடமையுமே என்னைக் காப்பாற்றின. மனிதர்களெல்லாம் கொடியவர்கள் எனவும் நான் அறிந்துள்ளேன். அதிகமாய் உழைப்பதற்கு அது ஒன்றே போதாதா? அன்பின் ஆசையை அன்பென நான் எண்ணியதுண்டு. நான் நினைவில் நிலையற்றுருகுங் காலத்தில், என்னைக் காட்டிலும் அதிகமாய் அவஸ்தைப்படுபவர்களையும், வறுமையால் வருந்துபவர்களையும், துக்கத்தில் தோய்ந்தவர்களையும், ஞானி அறிவிலி எனப்படுவதையும், அடிமையின் அதோகதியையும் நினைத்து, புன்னகையுடன் தர்மத்திற்கு உயிரை யளித்த பரம புருஷர்களின் தியானத்தால் தேர்ச்சியாகி மறுபடியும் கடமையி லாழ்ந்தேன்.

இம்மொழிகளை மனத்தில் அமைத்து மாஜினி 1870ம் வருடம் வரை ஒப்வன்னியில் பல விபத்துகளுக் கிடையில் பகைஞர்கள், நண்பர்களின் நடுவே, படமுடியாத துயரங் களையெல்லாம் பட்டு, ஆனால் தாமரையில் தேங்கும் நீர் போல், விடா முயற்சியுடன் தேசம் ஐக்கியமாய் ஓங்கிவளர உழைக்குங் கால், காலனின் கோலமும் காண ஆரம்பித்து விட்டது. 35 வருட காலம் முயற்சி என் தேகத்திலே களைப்பை அளித்துவிட்டது. மதம் என்னும் பெயருடன் எனது ஒரே சகோதரியும் என்னைப் பார்க்க மறுத்துவிட்டாள். காரிபால்டியையும் சமாதானஞ் செய்யமுடியவில்லை என ஏங்குவார். வாத நோயும் அவரை உபத்திரவத்திற்குள்ளாக்கியது. நான் நேசித்தவர்களெல்லாம் நீங்கிவிட்டனர். நான் ஒருவனே ஏன் நிற்கவேண்டும் எனக் கலங்கியதுமுண்டு. நான் எத்துணை நாள் ஜீவித்தாலென்ன? உன்னைக் குறைவாய் நேசிப்பேனோ? உனக்கு உழைப்பதை நிறுத்துவேனோ எனது நாடே! நான் இறந்த போதிலும் நீ முன் செல்வாய் என நம்புகிறேன். என புவி பிரிய சில தினங்கள் முன் உரைத்தார். இதாலித் தொழிலாளிகளை அவர் கடைசியாய்க் கண்டு கூறியதாவது:—

துரதிர்ஷ்டமான இந் நாட்டிற்கு அன்புடனும் ஆதரவுடனும் உழைக்கவும், இது பெரிய நிலையை யடையுமென்பதில் சந்தேகமில்லை. அதை யொருபொழுதும் தடைசெய்யவேண்டாம். ஒருவனுக்குதான் அளிக்கவேண்டிய கடனை பல நாட் சேகரித்துவைத்த பொருளைத் திருப்பிக் கொடுத்தார். 1872-ம் வருஷம் பீசாவிலே தனது நண்பன் வீட்டில் பார்ப்பவர்கள் பிரமிக்கத்தக்க வதனமுடன் குழந்தைகளுக்கெல்லாம் களிப்பளித்து கடை நாட்களை

க்ழித்தார். மார்ச்சு மாதம் அதிக நோயுடனுகி பத்தா வது தினத்தன்று பூவுலகம் பிரிந்து புகழ்லோகஞ் சென் ருர். கடவுளை நம்பவும் நான் அவனை நம்புபவனே. எனவே அவர் கடைசியாய் கூறிய மொழிகள். தனது தாயினருகில் அவர் சேரப்பட்டார். ஆனுல் அவர் ஆன்மா சாந்தமாகி எங்கும் நிலவும். இனி மாஜினி மனிதர் கடமைகளைப்பற்றி கூறிய அவர் அமுத மொழிகளை எழுதுவோம்.

தொழிலாளிகளே! உங்களின் கடமைகளைப் பற்றி பேச விரும்புகிறேன். நாமறியும்படியான சர்வேசன், ஜன சமூகம், தாய் நாடு, குடும்பத்தின் நன்மைகளை யெல் லாம் என் நெஞ்சு எனக்குரைப்பதுபோல் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் அன்புடன் உங்களுடன் பேசப்போவது போல், நீங்களும் அன்புடன் எனக்குச் செவி கொடுங்கள். பல வருஷங்களின் துக்கம், தோற்றம் பயிற்சியில் பெருமையாகி, அதில் புலனுன மொழிகளே என் மொழிகள். உங்களுக்கு குறிப்பிடப்போகும் கட மைகளை, என் முழுவன்மையுடன் நான் சிறப்பாய் செய் வதுடன், இனி நான் ஜீவிக்கும்வரை நான் செய்யப்போகி றேன். நான் பிழைகள் செய்யலாம், ஆனுல் என் சித்த மோ புனிதமாகும். நான் ஒருவேளை ஏமாறலாம். ஆனுல் உங்களை நான் ஏமாற்றேன். சகோதரன் போல் எனக்குச் செவிகொடுக்கவும்; நான் உண்மையையே உரைக்கிறேனு என நீங்களே சிந்தனையில் பரிசீலனை செய்யவும். நான் பொய்யைப் பிரசாரஞ் செய்கிறேன் என உங்களுக்கு புல ஞனுல் என்னிடமிருந்து பிரியவும்; ஆனுல் என்னை சத்திய புருடன் என நீங்கள் எண்ணினுல் நான் சொல்வதுபோல்

செய்யவும். தவறுதலாய் எண்ணுவது பரிதவிக்கத் தகுந்த துரதிருஷ்டமே; ஆனால் சத்தியத்தை அறிந்து அதை செயலில் சிறப்பிக்காதது ஜகமும், சுவர்க்கமும், கண்டிக்கும் பெருங் குற்றமாகும்.

உங்களின் உரிமைகளைப்பற்றி பேசாமல், நான் ஏன் முதலில் உங்கள் கடமைகளைப் பற்றிப் பேசவேண்டும்? சமூகத்தில் ஒவ்வருவரும் உணர்ந்தோ உணராமலோ உங்களை உபத்திரவஞ் செய்து, மனிதர்களுக்குரிய உரிமைகளை யனுபவிக்க ஒரு பொழுதும் இடங்கொடாமலுள்ள துக்கத்திலேயே நீங்கள் தோய்ந்துள்ளீர்கள். ஆனந்தமென்பது மற்றவர்களுக்காம்! அப்படி இருக்குங்கால் நான் வெற்றி யடைவதைப் பற்றி பேசாமல், ஏன் தன்னலமற்ற தியாகத்தைப்பற்றி பேசவேண்டும்? தர்மம், தெளிவு, கல்வியைப்பற்றி யுரைத்து ஏன் பொருளில் பெருமையாவதைப்பற்றி பேசலாகாது? வேறு எதையாவது நான் பேசுவதற்கு முன்னால் இவ்வினாவிற்கு நான் முதலில் விடையளிக்கவேண்டும். ஏனெனில் ஐரோப்பாவில் மற்றவர்களால் மொழியப் படுவதற்கும், நமது கோஷ்டியரால் கூறப்படுவதற்கும் வித்தியாசம் இதிலே யறிவித்துள; மறுபடியும் கஷ்டப்படும் உழைப்பாளியின் கோபக் கருத்திலே இதுவே முதல் வினாவாக விளங்கும்.

நாம் ஏழை, அடிமைப்பட்டு ஆனந்த மற்றுளோம், பொருளில் பெருமையாவது, சுதந்திரம் சந்தோஷம் முதலியவைகளைப் பற்றியே மொழியவும். நாங்கள் கஷ்டங்களுக்குள்ளாகி எப்பொழுதுமா இந்த அதோ கதியிலிருக்க வேண்டுமென்பதைச் சொல்லவும். அல்லது எங்களுக்கும் இவ்வானந்தத்தை அனுபவிக்க சந்தர்ப்பம்

ஏற்படுமோ? எங்கள் தலைவர்க்குக் கடமைகளைப் பற்றிக் கூறவும், எங்களை ஒரு இயந்திரம் போல்கருதி, சகலருக்கும் பொதுவான செழிப்பை யெல்லாம் கவர்ந்துள்ள அவர்களுக்கே இதைச் சொல்லவும். எங்கள் உரிமைகளைப்பற்றி எமக்கு உரைக்கவும். அதை அடையும் முறையைப்பற்றியும், எமது வன்மையைப்பற்றியும் நாங்கள் ஒரு நிலையான வாழ்க்கையை யடையும்வரை காத்திருக்கவும்; பிறகு எங்கள் கடமை, தியாகம், முதலியவைகளைப் பற்றி பேசலாம். இதுவே நமது உழைப்பாளிகளெல்லாம் சொல்வதாகும். அவர்கள் இஷ்டம்போல் கூறும் அறிஞர்களையும் அமைப்பையுமே அவர்கள் பற்றுகின்றார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். அதாவது அவர்கள் கோரும் கற்பனை ஐம்பது வருஷங்களாகக் கூறப்படும் உழைப்பாளிகளின் பொருளாதார நிலையை, ஒரு கடுகளாவது குணமாக்க வில்லை.

கடந்த 50 வருடங்களாக நமது அபிவிருத்தியின் காரணத்திற்காகவும், ஏகபோக ஆட்சிக்கு விரோதமாய் செய்த நன்மையும், பரம்பரை பிரபுக்களின் விபரீதத்திற்காக செய்த எதுவும், மனிதர்களின் உரிமைகள் என்னும் பெயராலேயே செய்யப்பட்டது; சுதந்திரமே அதன் சாதனம் என்னும் பெயராலும், வாழ்க்கையின் நோக்கம் சிறப்புட னிருப்பது என்னும் பெயராலேயே அவை யெல்லாம் செய்யப்பட்டன. பிரஞ்சுப் புரட்சியின் எல்லாச் செயல்களும், அதைத் தொடர்ந்த புரட்சிகளும், அதைப் போல் நடந்த யாவும் மனிதர்களின் உரிமைகளைப் பகிரங்கஞ்செய்த பயனெனவே யறியவேண்டும். அறமறிந்தவர்களால் தயார் செய்யப்பட்ட எல்லா நிலையையும் சுதந்திர

நோக்கமென்னும் அஸ்திவாரத்திலேயே அமைந்துள்ளது. மனிதர்களுள் அவர்களின் உரிமைகளை ஒவ்வொருவருக்கும் அறிவிக்கச் செய்வதின் அவசியமே அவர்களின் நோக்கமாயிருந்தது. எல்லாப் புரட்சி சபைகளும் மனிதர்கள் ஆனந்தத்திற்காகவே பிறந்தார்கள் என பகிரங்கஞ் செய்தது, அதைத் தன்னிடமுள்ள எல்லா வன்மையின் வழியாலும் நாடலாமென்றும், இதை நாடுங்கால் எவருக்கும் அதைத் தடுக்க உரிமை இல்லை என்றும், வழியில் தோன்றும் எல்லா இடையூறுகளையும் உதறித் தள்ளுவதற்கு உரிமையுண்டென்றும், எல்லாப் புரட்சி சபைகளும் பகிரங்கஞ் செய்தது. எல்லாத் தடைகளும் உடைத்தெறியப்பட்டு, சுதந்திரம் செயிக்கப்பட்டது. பல நாடுகளில் அநேக வருஷம் அது தழைத்தது; சில நாடுகளில் இன்னம் அது தழைக்கின்றது. ஆனால் ஜனங்களின் நிலை முன்னேறிற்றோ? அவர்கள் எதிர்ப்பார்த்து புகலப்பட்டது போல் கைகளால் தினந்தோறும் உழைத்து உண்ணும் கோடிக்கணக்கான ஜனங்கள் அச்சிறப்பின் அணுவின் அணுவையாவது அனுபவிக்கிறார்களா?

இல்லை ஜனங்களின் நிலையோ மாறவில்லை. ஆனால் ஒவ்வொரு நாட்டிலும், அவர்கள் நிலை தாழ்ந்து இன்னும் தளர்ச்சி நிலையிலேயே தடமாடுகின்றது. நான் இதை எழுதும் இந்நாட்டிலும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளின் விலையோ இன்னும் ஏறிய வண்ணமாகவேயுள. ஆனால் உழைப்பாளிகளின் கூலியோ எல்லாத் தொழில்களிலும் குறைந்து வருவது கண்கூடு. ஜனத்தொகையோ பெருக்கமாகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் உழைப்பாளிகளின் நிலை நிலையற்று ஆபத்திற்குள்ளாகி

விட்டது. ஆயிரக் கணக்கான உழைப்பாளிகள் அடிக்கடி வேலையில்லாமல் சிலகாலம் சும்மாயிருக்கும் சீரழிந்த நிலை சகஜமாகி விட்டது. ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு குடியேறுபவர்களின் அதிகத் தொகையும், ஐரோப்பாவி லிருந்து மற்ற தேசங்களுக்குப் போவதும், தர்மசாலைகளின் விருத்தியும், பிச்சைக்கார தானமும் தழைப்பதே இதற்கு அத்தாட்சி. பொது ஜனங்கள் இத் தவிப்பிற் கெல்லாம் அதிக ஊக்கங் காட்டுவதும் அவர்களின் துக்கத்தைத் தெளிவாக்கும். ஆனால் பிரத்தியட்சமாய் அக் கஷ்டங்களைக் குறைக்க சக்தியற்றிருப்பதும், தாங்கள் தானத்தை செய்தும் அவர்கள் இன்னும் மேன்மேலும் எளிமையில் குறையாமல் அதிகம் விருத்தியாவதுமே அதை நிரூபிக்கும்.

ஆனால் கடந்த ஐம்பது வருஷங்களில், ஊர் செல்வத்தின் ஊற்றும், பொருள் பெருமை பொக்கிஷங்களெல்லாம் திடமாய் தழைத்தோங்கியுள. விளைவோ இருபங்கதிகம். நிரந்தரமான ஆபத்தின் நடுவில், சமூக அமைப்பற்ற நிலையில், சகஜமாக இருப்பதே சிறப்பாகின்றது. அவ்வாபத்தில் வியாபாரமானது, பெரும் வன்மையான முயற்சியிலாகி, இச் சக மெல்லாம் சிறந்து விளங்கும். போக்குவரவு துரிதமாயும், பெரும் பந்தோபஸ்துடனும் விட்டது. இங்குமங்கும் செலவு குறைந்தபடியால் பொருள்களின் விலையும் குறைந்து விட்டது. மனிதர்களுக்கு இயல்பாய் உரிய உரிமைகளின் நோக்கமெல்லாம் இப்பொழுது எல்லோராலும் அங்கீகரிக்கப் படுகின்றது. செயலில் அதைச் சிறப்பிக்க அஞ்சும் வஞ்சகர்களும் மொழியில் அதை அங்கீகரிக்கிறார்கள். இப்படி இருந்தும் ஜனங்களின் நிலை என்

விருத்தியாகவில்லை? விளைவாகும் பொருள்கள் ஐரோப்பாவிலுள்ள சமூகத்தின் ஒவ்வொருவருக்கும் சமானமாய் சேராமல் புதிய பிரபுக்களாகிய குறைவான ஜனங்களிடமே என் அதிகமாகவேண்டும். தொழில் வியாபாரத்திற்களிக்கும் இவ் வுற்சாகமானது பலபேர்களுக்கு நன்மையாகாமல் என் சிலருக்கே செழிமையாக வேண்டும்?

செயல்களை சற்று உற்று நோக்குவார் களுக்கு இதன் விடை விளக்கமாகும். கல்விக் கேற்றவாறே மனிதர்க ளாவார்கள். அவர்கள் அடைந்த கல்வியின் நோக்கம் போலவே அவர்கள் செயலாகும். புரட்சிகளைத் தோற்றுவித்த புருஷர்கள் ஒருவனுக்கு உரிய உரிமையென்னும் எண்ணத்துடனேயே அதை ஆதரித்தார்கள். புரட்சிகளே சுதந்திரத்தைப் பெருமையாக்கிற்று. ஒவ்வொருவரின் சுதந்திரம், கற்பனையின் சுதந்திரம், நம்பிக்கையின் சுதந்திரம், வியாபார சுதந்திரம் ஒவ்வொன்றிலும் சுதந்திரம், ஒவ்வொருவருக்கும் சுதந்திர எல்லாம் புரட்சியாலேயே பெருமையாயிற்று. உரிமையைப் பயன் செய்து உபயோகிக்கத் தெரியாதவனுக்கு, அதை அங்கீகரிப்பதினுலுண்டாகும் ஆதாயம் யாது? ஒழிந்த வேளையும், அதனுல் ஆதாயமடையத் தெரியாதவனுக்கு சுதந்திர சிட்சையால் பயன் யாது? வியாபாரம் செய்வதற்கு ஒன்று மில்லாமல், முதலும் நாணய மற்றவனுக்கு, வியாபார சுதந்திரத்தால் வரும் பயன்யாது? இப் பெருமையெல்லாம் பகிரங்கமாகும் நாடுகளை கவனிப்போம். அந் நாட்டிலுள்ள சமூகத்தால் சிறுபான்மையோரே நிலம், நாணயம், முதலையுடையவர்கள்; ஆனுல் பெருந் திரளான பாமரர்களுக்கோ அவர் கைகளைத் தவிர வேறு கதியில்லை. ஆதலால் அச்

செல்வவான்களுக்கு ஊழியஞ் செய்ய வற்புறுத்தப்படு கிறார்கள். தங்கள் ஜீவனத்திற்காக எந்தச் சம்பளத்திற் காவது நாள் முழுவதும் உதர நிமித்தத்திற்கு உற்சாக மற்ற ஒரே செயலில் சாயும்படி நேரிடுகின்றது. பசியுடன் எப்பொழுதும் போர் புரியும் இவர்களுக்கு சுதந்திர மென் பது மருளும் மாயை யன்னியிலும், கசப்பான கேலியன்னி யிலும், வேறு யாதாகும். வேறு விதமாகச் செய்ய வேண்டு மானால், நேர்மையான நிலையிலுள்ளவர்கள், உழைப்புக் காலத்தைக் குறைத்து சம்பளத்தை உயர்த்தி, இலவசக் கல்வியை சமமாய் ஸ்தாபனஞ் செய்து, தொழிலாளர்க் கேற்ற கருவிகளை எங்கும் தழைக்கச் செய்து, திறமையும் தூய நினைவுமுள்ளவர்களுக்கு வெகுமதி யளித்து, அவர் கள் முன் னேற்றத்தில் கருத்துவேண்டும். ஆனால் அவர்கள் ஏன் செய்ய வேண்டும்? ஜீவ வாழ்க்கை யின் சிறப்பாக இருப்பது யாவற்றிலும் சிறந்த தல் லவா? பூவுலகில் எல்லாப் பொருள்களினும் பொன் பொருளாசை பெருமையான தல்லவா? ஏனையோர் களின் லாபத்திற்காக அவர்கள் தங்கள் இன்பத்தை ஏன் குறைத்துக் கொள்ளவேண்டும்? தமக்குத் தாமாகவே உதவி புரிந்துகொள்பவர் கொள்ளட்டும். மனிதர்களுக் குரிய உரிமைகளை யெல்லாம் அதைப் பயன் செய்பவர்க ளுக்கு சமூகம் பாத்திரப்படுமேயானால், அதற்கேற்றவாறே அது செய்துகொள்ளும். இவ்வுரிமைகளைப் பயன்செய்து கொள்வதற்கு தன் தாழ்ந்த நிலையான விதியினின்று தளர திறமையன்னியி லிருப்பவன், தானே தயங்குவதால் மற்ற வர்களைக் குறைகூறி பயன் யாது?

அவர்கள் இங்ஙனம் சொல்வது சகஜமே. இப்படியே அவர்கள் சொல்வார்கள். அதிர்ஷ்டத்தால் உற்று செல்வ

நிலையிலுள்ளவர்கள் எளியவர்களைப்பற்றி எண்ணும் இவ்வெண்ணம், சில நாட்களில் பரஸ்பரம் ஒருவருக்கொருவரார்ய்விட்டது. தன்னுடைய உரிமையையே ஒவ்வொருவனும் நாடினன் மற்றவர்களின் உரிமையை எண்ணமல் தன் நிலையில் நேர்மையாவதையே நாடினன். தன்னுரிமை மற்றவர்களின் உரிமையோடு இணைந்தால் அதுவே யுத்தமாகும். அது தங்கமும் குயுக்தியுடன் கலந்ததே யன்னியில் உதிரப்போராகாது. அப்போரைவிட இது ஆண்மை பிரிந்ததே யானுலும், நாசஞ் செய்வதில் இதுவும் அதற்குச் சமானமே யாகும். சக்தியுடன் செல்வாக்குள்ளவர்கள் ஈவு இரக்கமன்னியில், பலங் குன்றியவனையும், புத்தி குறைந்தவனையும் கொலை செய்யும் கடும்போரே இதுவாகும். இந்த நிரந்தரமான யுத்தத்தில் கேவலம் சிற்றின்பத்திற்காக அகங்காரத்திலும், அதி ஆசையிலுமே கற்பிக்கப்பட்டவர்களாகும். நம்பிக்கையில் சுதந்திரம் எல்லாச் சமூகங்களின் சுதந்திரத்தைச் சிதறடித்துவிட்டது. கல்வியில் சுதந்திரம் ஆன்ம அநாயகத்தை அளித்துவிட்டது. பொதுப்பாசமற்று, பொறுமையான தர்மநிலை தளர்ந்து சுய காரியத்தையே சந்தோஷமென எண்ணுபவர்கள், அவரவர்கள் இஷ்டம்போல் தங்கள் வழியிலேயே செல்லுகின்றபடியால் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் தங்கள் சகோதரர்களின் தலையை மிதித்து அமிழ்த்துகிறேமென்பதை கவனிப்பதில்லை. ஆனல் பெயரளவில் சகோதரரன்னியில் சத்தியமாய் அவர்கள் சத்துருக்களே யாகும். அவர்களுக்காகவே நாம் வந்துள்ளோம் நாம் அந்த உரிமையின் கற்பனைக்கே நன்றியுள்ளவர்களாயுளோம்.

உரிமை நிச்சயமாகவே யுண்டு. ஆனால் ஒருவரின் உரிமைக்கு மாறானால், அதை நாம் எங்ஙனம் சமாதான மாக்கி, சமரசம் செய்வது? உரிமையை விட உயர்ந்த தொன்றை நாம் சரணமடைவதை விட வேறு வழி யாது? ஒருவனுடைய அல்லது பலர்களுடைய உரிமை, நாட்டின் உரிமைக்கு விரோதமானால் அதை நாம் எந்த நீதியினிடத்தில் முறையிடுவது? நலமுடனிருக்கும் உரிமை, நிகரற்ற நலமுடனிருக்கும் உரிமை, ஒவ்வொருவனுக்கும் சொந்தமானால், தொழிலாளிக்கும் தலைவனுக்குமுள்ள தகராறைத் தீர்ப்பது யார்? சீவனுடன் பிழைத்திருப்பது முதல் உரிமையாவதுமன்னியில் அதுவே ஒவ்வொருவரின் புனித உரிமையானால், அன்னியர்களின் ஆதாயத்திற்காக இந்த ஜீவ வாழ்க்கையின் தியாகத்தை எவன் கேட்பான்? தேசம், சமூகம், சகோதரக் கூட்டத்தின் பெயரால் நீங்கள் அதைக் கேட்பீர்களா? நான் எவர்களுக்காகப் பேசுகிறேனே அவர்களுடைய அபிப்பிராயத்தில் தேசம் என்பது ஒவ்வொருவர்களின் உரிமையும் சாசுவதமாக சிறந்துள்ள ஒரு நிலையமென்பதைக் காட்டிலும் வேறு யாது? ஒவ்வொருவர்களின் உரிமைகளைக் காக்க பல ஜனங்கள் தங்கள் பலத்தைத் திரட்ட உடன்படும் ஜனக்கூட்டத்தை தவிர சமூகமென்பது வேறு யாது? சமூகம் என்பது ஒவ்வொருவரின் உரிமைகளை நிரந்தரமாய் நிச்சயமாக உபயோகஞ் செய்வதற்கேயாகும் என கடந்த ஐம்பது வருடமாய் கற்பித்த பிறகு சமூகத்திற்காக அவனை அதையெல்லாம் தியாகஞ் செய்யச் சொல்லி அதைச் சிறப்பிப்பதற்கென ஒருவனை அதற்கடிமையாகச் செய்து, முடியுமானால் ஓய்வில்லா பணியிலும், காராகிருகத்தி

லும், அக்ஞாதவாசத்திலும் ஒருவனை அமையும்படிச் செய்யலாமா?

ஜீவவாழ்க்கையின் நோக்கம் சிறப்புடன் ஜீவிப்பதே என்பதை அறிவித்து, அன்னியர்களினின்று விடுதலை யாக்குவதற்கென ஒருவனின் சிறந்த வாழ்க்கையையும், சீவனையும் திடிரென சிதறடிக்க சொல்வாயோ? அல்லது அவனன்னியிலுள்ள வேறு சமூகத்திற்குள் இலாபத்திற் கெனவும் நீ செய்யலாமோ? புவியின் பெருமைகளை யெல் லாம் பல வருடங்கள் புகன்று, பொருளும், பொன்னும் அவன் புலனெதிரில் காட்டி, அவன் சகோதரர்களுககுத் தீமையாகுமென அதைப்பற்றுவதற்கு முயலுங்கால் அவன் கைகளை நீட்டத் தடுப்பது என்ன நியாயமாகும்?

என் நாட்டுத் தொழிலாளர்களே! என் சித்தத்தில் திடீரென தோன்றும் சிந்தனை என இதை நினைக்கவேண் டாம். இதற்கு உண்மையில் ஆதாரமில்லாமலில்லை. இந்த சரித்திரம், இப்பொழுது நிகழும் சரித்திரமே யாகும். அச்சரிதையின் ஒவ்வொரு பக்கத்திலும் உதிரம் ஒழுகு கின்றன. எல்லா ஜனங்களின் உதிரமே ஒரு வகுப் பினர்களின் இலாபத்தை வேறு வகுப்பினர்களின் இலா பத்திற்காக 1830-ம் வருஷப் புரட்சியை மாற்றிய அதா வது மூன்று நாள் போர் புரிந்து தங்கள் உயிரை யளித்த பிரஞ்சு சகோதரர்களின் பிணங்களை ஏறும்படியாக மிதித்து முன்னர் விளங்கிய புருடர்களிடம் 1830-ம் வரு டத்திற்கு முன் கடமையென்று நவீன கற்பனையி லில்லா மல், மனிதர்களின் உரிமை யென்னும் கற்பனையிலே ஸ்தாபிக்கப்பட்டுள என்பதை அவர்களுக்கு அறைகூவி உரைக்கவும்; இன்று தேசத்துரோகிகள் எனவும், பதிதர்

கள் எனவும் அழைக்கிறீர்கள். ஆனால் அவர்கள் தங்கள் கற்பனைக்கு கோணமலேயே இருந்தார்கள். பத்தாவது சார்லஸ் மன்னனுக்கு விரோதமாக முழுமனதுடன் அவர்கள் சண்டை செய்தார்கள். ஏனெனில் அந்த சர்க்காரானது அவர்கள் தோன்றிய வகுப்பிற்கு விரோதமாய் அவர்களின் உரிமைகளை எதிர்த்து அடக்க முயன்றார்கள். எவ்வளவு உரிமை இருத்தல் வேண்டுமோ, அது இல்லையென்ற எண்ணத்துடனேயே, நாம் சிறப்புடன் இருக்க வேண்டுமென்னும் பெயராலேயே போர் புரிந்தார்கள். சிலர் நினைவில் சுதந்திரமா யிருந்ததற்கு சிட்சை யடைந்தார்கள். சித்தத்தில் சிறப்படைந்து சிலர் தங்களில் தாழ்ந்த திறமையுள்ளவர்கள் பெரும்பதவியிலிருப்பதைப் பார்த்து தாங்கள் தள்ளப்பட்டவர்கள் என தெளிந்தார்கள். பிறகு ஜனங்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் அவர்களுக்குக் கோபம் விளைவித்தது. அதனால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளைப்பற்றி மனப்பூர்வமாய் வீரம் செறிந்து எழுதினார்கள். பிறகு அவர்கள் இராஜீய ஞான உரிமைகளை அடைந்து, பெரும்பதவியின் பாதையில் சகஜமாகி தாங்கள் கோரிய நலமான வாழ்க்கையை வெற்றி பெற்றவுடன், ஜனங்களை மறந்துவிட்டார்கள். கல்வி, கருத்தில், குறைந்த வேறு சிலர் தங்கள் உரிமைகளை உபயோகஞ் செய்ய முயற்சிப்பதையும், தங்கள் நலத்திற்குப் போராடுவதையும் மறந்து விட்டார்கள். மற்றவர்களைப்பற்றி யாதொரு கவலையுங் கொள்ளாமல் தங்களில் தேர்ச்சியிலேயே தோய்ந்து சித்த சாந்தமானார்கள். அவர்களை ஏன் தேசத்துரோகிகள் என அழைக்க வேண்டும்? ஏன் அவர்கள் கல்வியை கபடம் நிறைந்ததென்று கூறுதலாகாது?

பிரஞ்சு நாட்டில் அப்பொழுது வாழ்ந்து, நூல்கள் எழுதிய ஒருவனை ஒருநாளும் நீங்கள் மறக்கலாகாது. ஏனெனில் சகல ஜனங்களின் ஒன்று சேர்ந்த சித்தத்தை விட அவன் சித்தம் சக்தி வாய்ந்ததாகும். அவன் அப்பொழுது நமது எதிரியா யிருந்தான்; ஆனால் அவன் தன் கடமையையே கருதினன். பொதுஜன நன்மைக்கு தன்னையே தியாகஞ் செய்வதையும் சத்தியத்தை நாடி அதன் வெற்றியிலுமே கடமை எனக் கண்டான். அவன், மாந்தர்கள், காலத்தின் நிலைகளையுமாழ்ந்து கண்டான். துதியினாலோ, தோல்வியினாலோ, கடமையினின்று தான் தளரவில்லை. ஒரு வழியைப்பற்றி அவன் தோல்வியடைந்தால், பாமரர்கள் பெருமையை யடைய அவன் வேறு வழியை நாடினன். வெகு நாள் அனுபவத்தில் கர்ம பூமியிலே எவர்கள் குணக்குன்றுகி, நம்புவதற் கரு கதை யாகிறார்களோ அவர்களே சொல்லுவது போல் செய்கிறேன் என வேஷம் போடுபவர்களை விட மேன்மையும் நம்பத்தகுந்தவனுன். இதுவரைச் சொல்லிவந்த அவன் 'லெமான்னியஸ்' என்பவனுவன். அவனே 'நம்பியவர்களின் மொழிகள்' என்னும் நூலுக்கு ஆசிரியனுவன். அதை நீங்கள் ஒவ்வொருவரும் படித்திருப்பீர்கள். நாம் எந்த விஷயத்தில் சகோதர ராயிருக்கிறோமோ, அதன் தீர்க்க தரிசி என அவனை அழைக்கலாம். இளைஞர்களை யுத்தத்திற்கு இழுத்து கொடுங்கோன்மைகளைக் கழிக்கக் குணமாகும் முயற்சிகளின் உற்சாகம் குறையுமே யானல், சில வருஷங்களின் ஊக்கத்திற்குப்பிறகு, அத்தகைய சந்தர்ப்பத்தில் சாதாரணமாய்த் தோன்றும் தோல்விக்குப் பிறகு அவர்கள் தளராமலிருக்க நாம் எவ் வுபாயத்தால்

நடுக்க வேண்டும். ஓயாச் சண்டையினாலும், ஆபத்தாலும் கலங்கி, ஒவ்வொரு நிமிஷமும் சிறைவாசம், தூக்குமேடை, தீவாந்திர சிட்சை நிகழும்போதுள்ள நிலையற்ற ஜீவனைவிட வேறு எந்தவிதமான சாந்தமாயுள்ள வழியை அவர்கள் ஏன் பற்றக் கூடாது? இதுவே இன்று வெகு சாதாரண மாய்ப் பார்க்கும் எல்லா இத்தாலியர்களுடைய நிலையா கும். இது பழைய பிரஞ்சு எண்ணங்களைப் பற்றியதாகும்; இது பரிதவிக்கத் தகுந்ததே யானாலும், சீவயாத்திரையை யாரம்பிக்குங்கால் பற்றிய நோக்கங்களை மாற்றின லன்னி யில் அதைத் திருப்புவது எங்ஙனம்? விபத்துக்களும் தோல்வியும் அவர்களை வன்மையாக்கு மென்றும், சில வருஷங்களே அல்ல, ஆயுள் நாட்களின் முடிவுவரை போர் புரிய வேண்டுமென எங்ஙனம் எவர் பெயரால் அவர் களுக்கு அறிவுறுத்துவது? அவனிலும் நான் இதுவரை சொல்லி வந்த புருஷனிலும் உரிமை, கடமை யறிந்தவர் களின் வேற்றுமையைக் காணலாம். முதலில் சொன்ன வனுக்கு தூண்டுகோல் இல்லையேல் தளர்ந்துவிடுவான். ஆனால் இரண்டாவதாகச் சொன்னவனே ஜீவனுள்ளவரை தளரான்.

ஜனங்கள் அடியோடு அடிமையாகியுள்ள நிலையில், கிளர்ச்சி என்பது பற்பல விபத்துகளாகவும், ஒவ்வொரு முன்னேறும் நற்செயலும் தியாகியின் இரத்தம் தோய்ந்த தாகவும், அநீதியை அழிக்க முயலும் செயல்கள் அவசிய மாகவும், அதனால் பகிரங்கம் துதியின் துணை பிரிந்து புனித சமூகப் போரை ஒவ்வொருவரின் தனித்தனி உரி மையின் இழிவுச் சண்டையாகவும் செய்துவிடுவார்கள். அப்பொழுது முன்னேறும் வழியில் அவர்களுக்கு நிரந்தர

ஊக்கம் உற்சாகத்தை அளிக்கும் வன்மை எது? நான் சகஜமாக எங்கும் எல்லா நோக்கங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சியையே பேசுகிறேன். தனிமையாய் ஏதாவது விபரீதமாய் தோன்றுவதைப்பற்றி நான் பேசவில்லே. இளம் இரத்தம் குளிர்ந்து, சண்டை செய்வதால், அமைதியா யிருப்பதைவிட அதிகக் கஷ்டமா யிருக்கும் பொழுது உன் உரிமைகளுக்கு நீ போர் புரிந்த வண்ணமாகவே இருக்கவும் என ஒருவனுக்கு எவர் உரைப்பது?

நம்மைவிட நேர்மையாக நிலைக்கப்பட்டுள்ள சமூகத்தில், உரிமையையே முழுவதும் நம்புபவனுக்கு, பொது நோக்கத்திற்கு உழைக்க வேண்டுமெனவும், சமூக சிந்தனைக்கே தான் சாயவேண்டு மெனவும் எவன் அறிவுறுத்துவான்? அவன் விரோதமாகக் கிளம்பி, அவன் அதில் அதிக உற்சாகமாகி அடியிற்கண்டதை சொல்வானேயானல், உரிமையின் கற்பனையையே உறுதியாகப் பற்றியுள்ள அவனுக்கு என்ன மறுமொழியை நீ அளிப்பாய்? 'நான் சமூக ஐக்கியத்தைச் சிதறடிப்பேன். என் இஷ்டம், என் நினைவு, என்னிலுள்ள யாவற்றையும் விருத்தி செய்து அதை விளக்குவதே என் புனிதமான, பிரிக்கப்படாத உரிமையாகும். ஒவ்வொருவருடன் நான் சண்டை செய்ய விரும்புகிறேன்.' அவன் இஷ்டத்திற்கும், அவன் மனம்போல் நினைக்கும் நோக்கத்திற்கும் விரோதமாயுள்ள சட்டத்திற்கு அவனைக் கீழ்ப்படிய வற்புறுத்துவது, நீங்கள் அதிகமா யிருந்தபோதிலும் உங்களுக்கு என்ன உரிமை யுண்டு? அவன் அதை மீறுவானே யானல் அவனை தண்டிக்க உங்களுக்கேது உரிமை? உரிமை என்பது ஒவ்வொருவருக்கும் சமமாகவே சொந்தமாகும். எல்லாரும்

ஒருமிக்க வாழ்வதினுலேயே ஒருமையாய்விடாது. சமூகத்திற்கு வன்மையோ அதிகம், ஆனால் ஒருவனுக் குரிய உரிமையைவிட அதற்கு அதிக உரிமையில்லை. இந்நாட்டிலோ, அல்லது ஜகத்திலுள்ள ச்கோதர ஜன சமூகத்தின் சங்கற்பத்தில், அவனுடைய சங்கற்பத்தைச் சாய்த்துவிட வேண்டுமென ஒருவனுக்கு நீங்கள் எப்படி நிரூபணஞ் செய்து தெளிவாக்குவீர்கள்? தூக்கு மேடையாலா, அல்லது சிறைவாசத்தாலா அறிவிப்பீர்கள்? இதுவரையுள்ள சமூகங்கள் இத்தகைய வழிகளாலேயே சிறந்தது. ஆனால் அது யுத்தமாகும். நாம் விரும்புவதோ சாந்தமாகும். அது கொடுங்கோன்மையான அடக்குமுறை. ஆனால் நாம் விரும்புவதோ கல்வியாகும்.

கல்வியே நான் சொன்னதுபோல் பூவுலகிலுள்ள எல்லாக் கற்பனைகளும் ஒருமையுடனமைந்த பெரும் மொழியாகும். இந்த நூற்றாண்டில் கிளர்ச்சியாயுள்ள ஜீவாதாரப் பிரசினையும் கல்வியைப்பற்றிய பிரசினையே யாகும். துராக்கிருகத்தால் பொருள்களின் புதிய அமைப்பை ஸ்தாபனஞ் செய்வது நமது வேலையாகாது. புராதனத்தைவிட நன்மையா யிருந்தபோதிலும், இங்ஙனம் ஸ்தாபனஞ்செய்யப்படும் பொருள்களின் அமைப்பானது எப்பொழுதுமே குரூரப்படுத்துவதாகும். முன்னேறுவதற்கான ஒவ்வொரு முயற்சிக்கும் முரண் செய்யும்; இன்று இந்த மிருக வன்மையை அடியோடு நமது வன்மையால் உடைத்தெறிய வேண்டும். நாம் மனப்பூர்வமாய் புதியதாய் எண்ணும் பொருள்களின் புதிய அமைப்பை அவர்கள் இஷ்டம் போல் விளக்க சுவாதீன மளித்து, அவர்களின் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடவேண்டும். ஆனால் அதை விருத்தி

செய்து அதன்படி ஒழுக, அவர்களுக்கு எத்துணைக் கல்வியை யளிக்கவேண்டுமோ, அதைக் குணமாக்கும் செயலில் ஈடுபடவும். உரிமைகளின் கற்பனை எழுச்சி செய்து இடையூறுகளையொழிக்க வன்மை பெற்றதாயிருந்தபோதிலும், நாட்டின் பற்பல ஜனங்களை ஒன்றுபடச் செய்யும் சாந்தம் அதனிடமில்லை. ஆனந்த நிலை, சிறப்புடன் ஜீவிப்பதே வாழ்க்கை முக்கிய எண்ணமாக யுள்ளவர்கள் பழைய இராகத் துவேஷத்தை புதிய அமைப்பில் பதித்து சில நாட்களில் கேடுகளை விளைவிக்கும், ஸ்தூலத்தைப் பற்றும் அகங்கார புருஷர்களையே நாம் செய்பவர்களாவோம். ஆதலால் மாந்தர்களுக்கு இன்னம் பெருமையான வழி காட்டி நிரந்தரத் தியாகத்தைக் கற்பித்து, எல்லா மனிதர் தர்களின் வன்மைக்கும் கீழ்ப்படியச் செய்யாமல், அல்லது ஒருவரின் நோக்கத்திற்கே தாழ்மையாகாமல் எல்லா ஜனங்களையும் இணைக்கும், எல்லாக் கற்பனைக்கும் மேன்மையான கல்வியின் நோக்கத்தை நாம் காணவேண்டும். இந்த நோக்கமே கடமை எனப்படும்.

நாம் ஒரே ஈசனின் மக்கட்கள் எனவும், ஒரு சட்டத்தையே கீழ்ப்படிய வேண்டு மெனவும், இங்கு மாநிலத்தில் ஒவ்வொருவனும் தனக்கு மாத்திரமே யன்னியில் மற்றவர்களுக்காக வாழவேண்டும். சந்தோஷத்தில் அதிகமாவதும், குறைவாகச் செய்துகொள்வதே வாழ்க்கையின் நோக்கமாகாது; தானும், மற்றவர்களும் சற்று அதிகமாகத் தழைக்கச் செய்வதே அதன் நோக்கம். அநீதி, பிழைக்கு விரோதமாய் சண்டை செய்து மற்றவர்களுக்கு இலாபமளிப்பது உரிமை மாத்திரமில்லை, கடமையுமாகும்;

பாப மன்னியில் இக்கடமையினின்று பிரிய முடியாது. இதுவே ஜீவனின் முழுக் கடமையு மாகும்.

விண்ணப்பம்.

இதாலியத் தொழிலாளிகளே! என் சகோதரர்களே! என்னைப் பூர்ணமாய் அறிந்துகொள்ளவும். பெருமையாய் புலனுகும் நிரந்தர லாபத்தை மாந்தர் அடைய, அவர்களறியும் உரிமைகளின் ஞானம் போதாதெென நான் சொல்வதினுலேயே இந்த உரிமைகளை நான் விடச் சொல்வதாக எண்ணவேண்டாம். கடமைகளை நிறைவேற்றி அதனுலுண்டாகும் பயனைத் தவிர அது வேறு இல்லை எனவே நான் சொல்லுகிறேன். முன் சொன்னதை பின் புகன்ற கடமையினுலேயே அடைய முடியும். வாழ்க்கையின் நோக்கம், சந்தோஷம், சிறப்பு நிலை, பொருள் பெருமை என எண்ணுபவன் அகங்கார முள்ளவனுவன் என்று நான் சொல்வதினுலேயே அதை நீங்கள் பற்றவே கூடாது என நான் சொல்வதாக எண்ண வேண்டாம். இகப் பொருளை சாதனமாக எண்ணுமல் நோக்கமாக நாடினுல், அது எப்பொழுதும் இந்தப் பெரும் விபத்தான பயனையே யளிக்கும். பழைய ரோமாபுரி ஜனங்கள் உணவு உற்சாகத்தைத் தவிர வேறு எதையும் தங்கள் தலைவர்களான சக்கிரவர்த்திகளிடம் கேட்கவில்லை. அதனுல் அவர்கள் பிற்காலத்தில் மிகவும் இழிந்த நிலையிலானுர்கள். அப்பால் கொடுங்கோன் மன்னர்களின் கொடூர குரூரத்துவம், கயத்தன்மைக்கு அவர்கள் கீழ்ப்படிந்து காட்டுமிராண்டிகளின் படை யெடுப்பில் வீழ்ச்சியடைந்து இழிவான அடிமையானுர்கள்.

பிரஞ்சிலும் இன்னம் மற்ற வேறு பல இடங்களிலும் சமூக விருத்தியின் விரோதிகள் தீமைகளை யெல்லாம் விதைத்து, தூலப்பொருள் தழைப்பதில் உழைத்து, மாந்தர்கள் மனம் மாறுபடாமலிருக்க நினைவைத் திருப்பினார்கள். நம்முடைய கைகளாலேயா நமது சத்துருவுக்கு நாம் உதவி செய்வோம்? தூலப் பொருள்களின் பெருக்கு அவசியமே, நாம் அதைப் பற்றுவதற்கு முயலுவோம். ஏனெனில் அது நன்றாய் உணவு வீடு வாசலை, நமக்கு அவசியமாய் அளிப்பது என்பதினாலேயே இல்லை. ஆனால் எப்பொழுதும் ஏதாவது வேண்டும் என்றுள்ள யுத்தத்தில் நமது மனதை பயிற்சிக்கும், சுய மதிப்பு விளக்கத்திற்கும் அது அத்யாவசியமானது. நீங்கள் 10 அல்லது 12 மணி காலம் ஒரு நாளையில் உழைத்தால், நீங்கள் தன்னந் தானாகவே பயிற்சியை அடைய சமயம் வாய்க்குமோ? நீங்களும் உங்கள் குடும்பமும் ஜீவித்திருப்பதற்கேற்ற வருமானம் கிடைப்பதே கஷ்டமாகில் நீங்கள் தன்னந் தானாகவே பயிற்சியை அடைய சாதனங்கள் ஏது? உங்கள் நிலையற்ற உத்தியோகம், அது அடிக்கடி இல்லாமல் போவது, இவை இரண்டும் அதிக உழைப்பிலும் சோம்பலிலும் காலத்தைக் கழிக்கச் செய்கின்றது; அப்படி யிருக்கும் பொழுது செயல்களை ஒழுங்காய் முறையுடன் முயற்சியாய் செய்வது எங்ஙனம்? நீ சம்பாதிக்கும் அற்பத் தொகை, பிற்காலத்தில் நமது குழந்தைகளுக்கு எப்பொழுதுதாவது உபயோகமாகும் எனவோ அல்லது நமது கிழத்தசைக்கு காப்பாற்றுவதற்கேற்ற ஊக்கத்தை யளிப்பதோ யில்லை; அப்படி இருக்கும்பொழுது நீங்கள் திட்டமாய் செலவு செய்ய கற்பது எங்ஙனம்? குழந்தைகளை நன்

ருய்க் காப்பாற்றுவது என்பது ஒருபுற மிருக்க, உங்களுடைய தரித்திரம் குழந்தைகளிடமிருந்து பிரியும்படி வற்புறுத்துகின்றது. இப்படி யிருக்குங்கால் தொழிலாளிகளின் எளிய மனைவிகள் அவர்களுடைய குழந்தைகளை எந்த முறையில் எங்ஙனம் வளர்ப்பது? அவர்கள் அன்புடன் அவர்களை வெகு தூரத்திற்கப்பால் உற்று நோக்குவதை விட வேறு என்ன செய்வது? அரையணு இலாபத்திற்காக பிடித்த மில்லாத இயந்திர சாலைகளில் அவர்கள் அனுப்பப்பட்டால் குடும்ப அன்பைக் காட்டி கீர்த்தியான செயல்களை செய்வதெங்ஙனம்? நாட்டினர்க்குரிய உரிமை இல்லை, சர்க்காரில், தேர்தல் முதலியவற்றால் உங்கள் ஜீவன் செயல்களை பாதிக்கும் சட்ட திட்டங்களில் கலந்து கொள்ளவும் உங்களுக்கு சந்தர்ப்பமில்லை. இங்ஙனம் இருக்குமேயானால் தேசத்தின் மகன் என்னும் மேன்மையான உணர்வும், சர்க்காரில் சந்தோஷமும், சட்டங்களில் உண்மையான ஆசையும், எப்படித் தோன்றும்? நீதியான மற்ற வகுப்பினர்களுக்குச் செய்யப்படுவது போல், அதே சமதிருஷ்டியுடன் உங்களுக்குச் செய்யப்படுவதில்லை, அதனால் நீதியினிடம் அன்பு, மரியாதையை எங்ஙனம் காட்ட முடியும்?

சமூகமானது போலி ஆதரவுடன் உங்களை நோக்குங் காலத்தில், சமூகத்தினிடம் நீங்கள் உங்கள் அன்பு ஆதரவை எங்ஙனம் காட்ட முடியும்? ஆதலால் நீங்கள் மனோவிருத்தி யடைவதற்கு உங்களின் பொருளாதார நிலை மாறுதலாக வேண்டுவதவசியமே. உங்கள் மனதிற்கு பயிற்சி யளித்து பெருமையுடனாக தினந்தோறும் அதற்காகச் சில காலம் வேண்டும். உழைக்குங்காலமான உங்

களில் வேலைப் பொழுது குறைந்தா லொழிய அது முடியாது. பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்னும் புத்தி புனிதமாகச் செய்யவும் உடனுக்குடன் செய்யும் குற்றச் செயலும், உங்களுடன் அநீதியுடனிருந்தவர்களுக்கு அநியாயஞ் செய்யவேண்டு மென்னும் ஒவ்வொரு எண்ணமும் தூய்மையாகும்படி செய்வதற்குக் எதிர்காலத்தைப்பற்றி ஒரு கவலையும் உங்களுக்குக்கூடா து. அக்கவலையை எல்லாம் கழிக்க சிறிய பொருளை பிற்காலத்திற்காகக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அதற்கேற்ற அதிகமாய்த் தேவையான வருமானம் அவசியமாகும். இம்மாறுதலுக்கு நீங்கள் முயன்றால் கட்டாயமாக அதை அடைவீர்கள். ஆனால் அதை முடிவாக எண்ணாமல் ஒரு சாதனமாக எண்ணி முயலுங்கள். உரிமை என்று மாத்திரம் எண்ணாமல் கடமை என எண்ணி அதற்கு முயலுங்கள். பொருளுடன் மாத்திரம் பெருமையுடனாக வேண்டுமென எண்ணாமல் நீங்கள் மேன்மையாக யாவதற்கே முயலுங்கள். இல்லையேல் உங்களுக்கும் குரூரத்துவம் செய்பவர்களுக்கும் வேற்றுமை யாது? தங்கள் நலம், இன்பம், வன்மையைக் கோரி வேறு எதைப்பற்றியும் எண்ணாதவர்கள் குரூரத்துவ முள்ளவர்களே!

நீங்கள் இதை விட நலமுடனாவதற்கு, இதுவே உங்கள் வாழ்நாட்களின் நோக்கமாக இருக்கவேண்டும். உங்களை நீங்களே விருத்தி செய்துகொள்வதால் இப்பொழுது இருப்பதைவிட குறைவான சந்தோஷத்திலாக மாட்டீர்கள். கேவலம் பொருள் பெருமைக்கோ, குறுகிய சமூகத்திற்காகவோ, நீங்கள் உழைத்தால் உங்களில் ஆயிரக்கணக்காய் கொடுங்கோல் செலுத்துகிறவர்கள் தோன்று

வார்கள். சமூக நிலையின் நியமங்கள் மாறுபடுவதாலேயே பெரிய வேற்றுமையை அளித்துவிடாது. ஏனெனில் உங்களிடமும் அவர்களிடமும், இன்னும் அகங்காரம், துராசையும், விட்டபாடில்லை. சில மூலிகைகள் பத்தியத்திற்குத் தகுந்தாற்போல் விஷமாகவும், சஞ்சீவியாகவும் மாறுவது போலவே சமூகத்திற்குச் சங்கங்களாகும். நல்லவர்கள் புன்மையான சங்கங்களையும் புனிதஞ் செய்கிறார்கள். பொல்லாதவர்கள் நல்ல சங்கங்களையும் பாழ் செய்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ உங்களை உபத்திரவஞ் செய்யும் சங்கங்களையோ, சாதியையோ, அமைப்பையோ நீங்கள் ஒழுக்கமாக்கவேண்டும். அவர்களின் கடமையையும் அறிவிக்க வேண்டும். கூடியவரை நீங்களே நல்லவர் காளானாலொழிய அவர்களை ஒருபொழுதும் நல்லவர்களாக்க முடியாது.

உரிமைகளைப் பிரதிஷ்டை செய்வதினாலேயே சாத்தியமாய் விடும் என சமூகச் சீர்திருத்தத்தி னவசியத்தைப்பற்றி உங்களுக்கு எவராவது உபதேசஞ் செய்தால், அவர்கள் நல்லெண்ணத்திற்கு நன்றியறிவுள்ளவர்களாகி, அதன் பயனை ஒருபொழுதும் நம்பவேண்டாம். ஒரு பகுதியாவது நல்ல நிலையிலுள்ளவர்களுக்கு ஏழைகளின் துக்கங்கள் தெரியும்; தெரிந்திருந்தாலும் அவர்கள் உணர்வதில்லை. பொது நோக்கம் இல்லாமலிருப்பதால் தோன்றும், சாதாரண அசிரத்தையில், நலமுடன் புவியில் வாழ்வது சிரேஷ்டம் என்றும், பல வருஷம் கற்பனையினின்று கட்டாயம் குணமாகும் அகங்காரத்தில், கஷ்டப்பட்டு அனுபவிக்காதவர்கள், இத்துக்கங்கள் சமூக அமைப்பில் அத்தியாவசியமான தீமை என கொஞ்

சம் கொஞ்சமாக பழக்கமடைந்து அதில் சகஜமாய் விடுகிறார்கள். அதில் சகஜமடைந்து, அத்துக்கங்களை வரப்போகும் சந்ததிகளே சிகித்ஸை செய்துகொள்வார்கள் என அவர்கள் அலட்சியமாய் விட்டுவிடுகிறார்கள். அவர்களைத் தெளியவைப்பதில் கஷ்டமில்லை; ஆனால் அவர்கள் அறிந்ததும் சோம்பலினின்றி சுழலச் செய்து அவர்களை காரியத்தில் செய்யச் சொல்வது, ஒன்று கலந்து செய்வது உங்கள் துக்கம், அவர்களின் பயங்களை மனிதர்களுடைய நிலையானது அனுமதிக்கும் வரை அழிக்கச் செய்வது, பிறகு சமரசமாய்க் கலந்து புதிய சமூக அமைப்பைச் சிறப்பிக்க ஒன்றுபட்டு கர்ம பூமியில் நிற்கச் செய்வதே சற்று கடினமாகும். ஆனால் இது நம்பிக்கையுடன் செய்யப்படவேண்டுவதாகும். பூமியிலே மனிதப் பிராணிகளுக்கு பரமனால் புலனுக்கப்பட்ட பெரும்பணி என அதில் நம்பிக்கை வேண்டும். இப்பெரும் பணியை நிறைவேற்றுதவர்களுக்கு ஏராளமான பொறுப்பை சுமக்கவேண்டுமென்பதில் நம்பிக்கை வேண்டும். அதுவுமன்னியில் சத்தியத்திற்காக ஒவ்வொருவரையும் நிரந்தரமாய் உழைக்கச் செய்யும் கடமையிலே பூர்ண பக்தியுடனான நம்பிக்கை வேண்டும். உரிமைகளின் எல்லாக் கற்பனைகளும், நலமுடனிருப்பதென்பதிலுள்ள எல்லா எண்ணங்களும் தன்னந்தனிமையாய் உங்கள் வன்மையிலேயே அடங்கி இருக்கும் வரை யாதொரு பயனையுமளிக்காது. ஆனால் வகுப்பினருக்குள் உட்சண்டையானது பெரும் போராடும் இழிவான பெரும் சமூகக் கொலையையே கொண்டுவந்துவிடும்.

உபதேசம்

இடாலியத் தொழிலாளிகளே! என் சகோதரர்களே! பெரியார்கள் தோன்றி பெரும் மாறுதலை புவியில் செய்த காலத்தில் அதைப் பெறுவதற்கு அவசியமில்லாத பிரபுக்களுக்கு உரிமைகளைப்பற்றியே பேசவில்லை. பிரபுக்களைப் பார்த்து அப்படியே துஷ்டபிரயோசனஞ் செய்யும் ஏழைகளுக்கும் உரிமைகளின் அவசியத்தையே உரைக்கவில்லை. இலாபம், தன்னலம், என்பதில் தோய்ந்து கேடடைந்திருக்கும் ஜனங்களிடம் இலாபம், தன்னலத்தைப்பற்றி பேசவில்லை. கடமைகளைப்பற்றியே பேசினார்கள். அன்பு, தியாகம், நம்பிக்கை இவைகளைப்பற்றியே பேசினார்கள். அவர்கள் செயலால் மானிட கோடிகளுக்கு நன்மையைச் செய்வதில் முதன்மையாக இருக்கவே முயல வேண்டுமென்றார்கள். ஜீவாக்கினி கொஞ்சமேனும் இல்லாத சமூகத்தின் செவியில் இம் மொழிகள் விழுந்தவுடன் புத்துயிர் தோன்றி, ஜனங்களெல்லாம் ஜெயமாகி புவியெல்லாம் பெருமையுடனாகி மனித சமூகத்தின் கல்வி நிலை ஒரு பிடி உயர்ந்ததெனலாம். இதாலிய தொழிலாளிகளே! அத்தகைய பெரியோர்களின் காலம் போலுள்ள யுகத்திலேயே நாம் இப்பொழுது வாழ்கிறோம். ரோமாபுரி பாழடைந்ததுபோல் அழுகியுள்ள சமூகத்திலேயே நாம் வசிக்கிறோம். அதற்குப் புத்துயிர் அளித்து மாற்றுவதற்கு நாம் உள்ளத்தில் ஊன்றி உணருகிறோம். சீவர்களில் நாட்டியுள்ள எல்லாப் புலன்களை சுதந்திரமாய் விருத்தி செய்ய ஒருநோக்கம்—ஒரு சட்டம், ஒரே நம்பிக்கையில் ஜனங்களை யெல்லாம் சேர்த்து அவர்களைச் சிறப்பிக்க நாம் உள்ளூற உணருகிறோம். சுவர்க்கத்தில் யிருப்பதுபோலவே

சகத்திலும் அவன் சட்டமே நிலவவேண்டுமென நாம் நாடு கிறேம். இல்லையேல் சுவர்க்கமடைய இச்சகத்தைச் சாதக மென கருதி, தேவாமுதத்திற்கு சமூகம் படிப்படியாய் விருத்தியாகும்—விடாமுயற்சியெனவும் நாம் ஈடுபட்டுள் ளோம்.

பெரியார்கள் ஒவ்வொரு செயலிலும் அவர்கள் புகல் வது போலவே பூர்ணமான நம்பிக்கையுடன் பிரகாச மானுர்கள். அவர்களைச் சுற்றியிருந்த சிஷ்யர்களும் அவர் கள் பெற்ற நம்பிக்கையை செயல் வடிவம் சிறந்ததுபோல் நீங்களும் இருந்தால், நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங் களைவிட மேலானவர்களுக்கும் கடமைகளைப்பற்றியே கூறவும், உங்களுடையக் கடமைகளைக் கூடியவரை நிறை வேற்றவும், நீங்களும் ஒழுக்க முடனுகி தியாகஞ் செய் வதிலும் அன்புடனிருப்பதில் தயங்கவேண்டாம். கோப மன்னியில், பழிக்கு பழியான நினைவகன்று, மிரட்டாமல், உங்களின் அவசியங்களையும், நோக்கங்களையும் தீரமாய் இடித்துக் கூறவும். மிரட்டல் அவசியமானல் பயங்கர மான மிரட்டல் பிடிவாதமாய் நிலையுடனிருப்பதே வேண் டும். கோப மொழிகளாகாது. எதிர்கால வாழ்க்கை யின் நோக்கங்களைப்பற்றி உமது நண்பர்களுக்கு நீ பிர சாரம் செய்யுங்கால், பெயர், கல்வி, செயல், சம்பளம் முத லியவைகளுடன் சுயமரியாதை தொழிலான அத்தேசீய நோக்கங்களை நிலவச் செய்யுங்கால், சீர்கெட்ட சர்க்கார், அன்னிய நாட்டான் எவ்வளவு வன்மையுடனிருந்தபோதி லும், அவர்களை ஜெயிக்க, அந்த அவசியமான கடும்போ ருக்கு கட்டாயமாய்த் தயார் செய்வதற்கான அவர்களின் உணர்வை கிளர்ச்சி செய்யுங்கால், நீங்களே நன்மையாவ

தற்கும், யாவற்றையும் கற்றுக்கொள்வதற்கும், உங்களுடைய கடமைகளில் பழகுவதற்கும் முயலவேண்டும். இதாலியிலே பெரும் பாகத்தில் வசிக்கும் பாமரர்களுக்கு இது பெருங் கஷ்டமான முயற்சியாயிருக்கலாம். சனங்களின் பொருளாதார நிலை மாறினலொழிய, சர்வ சனக் கல்வியின் திட்டம் ஒரு நாளும் சாத்தியமாகாது. இராஜீயப் புரட்சியன்னியிலும் அது இலங்காது. மேலோங்குவதற்கு அதுவே அவசியமான முறை என நம்பி தன்னைத்தானே வஞ்சகஞ் செய்துகொள்பவர்கள் சோம்பல் என்னும் சுவிசேஷத்தைத் தவிர வேறு எதையும் சொல்லவில்லை என்பதை அறிந்துகொள்ளவும், நிலையிலே சற்று நன்மையையடைந்துள்ள உங்களில் சிலர், அயல் நாட்டிலே கற்று அதிக சுதந்திரக் கல்வியை அடைந்த நீங்கள் அதைச் செய்யலாம். ஆதலால் நீங்களே அதைச் செய்து தீரவேண்டும். சமஸ்த சனக்கல்வியின் சத்தியமான நோக்கங்கள் எதில் சாய்ந்துள என்பதை உணரும் இச்சிலர்களே, ஆயிரக்கணக்கானவர்களுக்கு வழி காட்டுவதற்குப் போதுமானவர்கள். அதனல் அவர்கள் பிழைகளின்று பாதுகாக்கப்பட்டு, அவர்களை கொள்ளைகொண்டு போகும் பொய் சித்தாந்தங்களிலிருந்து பிரிவார்கள்.

அத்தியாயம். 11

ஈசன்—வழிபடும்முறை—வைதிகர்கள் தோல்வி—பூமி கனவல்ல—சுதந்திர மேன்படுவதென்ன—சுவர்க்கமும் பூமியும் ஒன்றே—சத்தியத்தால் கொடுமையை எதிர்.

எல்லாக்கடமை களுக்கும் உற்பத்தி நிலை ஈசனேயாகும். உங்கள் கடமைகளின் விளக்கம் ஈசனின் இயல்பில் இலங்கும். படிப்படியாய் அதைக் கண்டு அவன் இயல்பென்னும் சட்டத்தை பிரயோகஞ் செய்வதே மனிதரின் வேலையாகும்.

ஈசனுண்டு. அதை உங்களுக்கு நிரூபணஞ் செய்ய அவசியமில்லை. நான் அதை விரும்பவு மில்லை. அதற்காக நான் முயற்சி செய்வதே எனக்கு தேவ நிந்தனை போல் தென்படுகின்றது. அதை இல்லை என்பதோ முட்டாள் தனமாகும். ஈசனுண்டு: ஏனெனில் நாமிருப்பதே அதற்கு அத்தாட்சியாகும். நமது சித்தத்திலே ஈசனுளார். மனித கோடிகளின் சித்தத்திலும் நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்திலும் அவர் உளார். மனித கோடிகள் மாறுதலடைந்து மாசு நிறைந்த போதிலும், அவன் திருநாமத்தை மறைக்கவோ முடியவில்லை. பிரபஞ்சமானது ஒழுங்கிலும், சமரசத்தில், அறிவு நிறைந்த அதன் அசைவு, அமைப்பில் அவனை விளக்க மாக்குகின்றது. உங்களில் நாஸ்திகர்களே இல்லை; அங்ஙனமிருந்தால் அவர்களுக்கு கண்ணீரே சொரிய வேண்டு மன்னியில், அவதூறுக்கு அருகராகார். நட்சத்திரம் நிறைந்த வானத்தில், அன்பன் சென்ற மயானத்தில், தன்னையே பலி யளித்தவனின் முன்

னிலையில், ஈசனை மறுப்பவன் பெரும் துக்கமுள்ளவனாக வோ, பெரும் பாதகனாகவோ இருப்பான். முதலில் தோன்றிய நாஸ்திகனானவன் சந்தேக மன்னியில் மற்றெல்லா மனிதர்களிடமிருந்து குற்றத்தை மறைத்து, அதன் வேதனை பச்சாதாபத்தால் மூச்சுத் திணறி எவனிடமிருந்து ஒளிக்க முடியாதோ, அத்தகைய ஒரே சாட்சியினின்று நீங்குவதற்காக ஈசனை மறுக்க முயன்றிருக்க வேண்டும். ஒரு வேளை அவர்களின் சுதந்திரமுடன் அவன் சகோதரர்களின் பாதி ஆன்மாவை கொள்ளை கொண்டு கடமையிலும் நித்திய உரிமையிலும் நிலைத்துள்ள நம்பிக்கைக்குப் பதிலாக மிருகத்தன்மை யென்னும் உபாசனையை நாட்டுவதற்கு முயன்றிருக்கவேண்டும். அவனுக்குப் பிறகு அடிக்கடி தத்துவமறிந்து விபரீதஞ் சொல்லுபவர்கள் தோன்றி அதனால் நாஸ்திக சித்தாந்தங்கள் நிலவியிருக்கலாம். ஆனால் அவர்களோ குறைவு; அவமானமடைந்தவர்களாகும்: பிறகு சில நாளைக்குப் பிறகு, தங்கள் வகுப்பு, தன்னலம், குரூரவன்மையின் மேன்மைக்காக பொய்யும் புத்தியீனமான நோக்கத்தையே கடவுள் என்ன பலர் போற்றியிருக்கலாம். ஆனால் சிலர் அதனால் வேதனையடைந்து ஈசனே இல்லை என மறுத்திருக்கலாம். ஆனால் அது ஒரு சிறிய காலத்திற்கேயாகும். அச்சிறிய காலத்திற்குள் தேவத் தன்மையின் அவசியம் அதிகமாகி, தர்க்கம், என்னும் தேவியையும், இயல்பென்னும் இலட்சுமியையும் உபாசிக்கும்படியாய் விட்டது. எல்லா மதங்களையும் வெறுப்பவர்கள் இன்னம் இப்பொழுது முண்டு. ஏனெனில் பழக்கத்தில் எல்லாம் பாழுடனிருப்பதையே பார்க்கிறார்கள். எதிர்காலத்தில் அதில் நன்மை நிலவு

மென்னும் அறிகுறியையும் அவர்கள் அதில் பார்ப்பதில்லை; ஆனால் அவர்களில் ஒருவராவது தன்னை நாஸ்திகர் என அழைத்துக் கொள்ள அஞ்சுகிறார்கள். புரோகிதர்கள் ஈசனின் பெயரை அங்காடி சாமான்கள் போல் விலை கூறி விபசாரஞ் செய்வதிலுளார்கள். வன்மையுள்ளவனுக்கு அஞ்சுகிறார்கள். குரூரமுள்ளவன் தன் குரூரத் தன்மையில் பாதுகாக்கப் படுவதற்கு, அவ்வீசனை அழைத்து நிந்தனை செய்கிறான். சூரியனின் ஒளி பல காலங்களில் மங்கி, துர்க்கந்த மேகங்களால் மூடுண்டால், பிரபஞ்சத்திலே பிரகாசமான கிரணங்களை பாய்ச்சும் சூரியனை இல்லை என்று நாம் சொல்லி விடலாமா? துஷ்டர்கள் சில காலத்தில் தாறுமாறாய் செய்வதாலேயே, நாம் சுதந்திரத்தை சபிக்கலாமோ? பொய்யும், பித்தலாட்டத்தாலும் அவர் பெயரை மாந்தர்கள் மறைத்தாலும் ஈசனிலுள்ள நம்பிக்கையானது அதன் மூலமாகவும், நித்திய ஜோதியுடன் சுடர் விட்டெரிகிறது. கொடுமை கழிவது போல் பொய்யும் பித்தலாட்டமும் பறந்துவிடும். ஈசனே நிலைப்பார். ஜனங்களே சாசுவதம், ஈசனின் இயல்பே இலங்கும். அடிமை, கஷ்டம், எளிமை இவைகளின் வழியாய் ஜனங்கள் படிப்படியாக, சித்தம் வன்மை, விடுதலையை வெற்றி பெறுவது போல், மாசு நிறைந்த பல பதங்களின் பாழினின்று ஈசனின் திருநாமமானது சோதியாய் புனிதம் சூழ்ந்து, பெரும் ஊக்கம், அறிவு நிறையும் உபசரணையால் மேல் கிளம்புகின்றது.

வழி படும் முறை

நீங்கள் அவனைக் கட்டாயமாய் உபாசிக்க வேண்டுமெனவும், நான் ஆஸ்திகத்தை ஸ்தாபனம் செய்வதற்காக

வோ, ஈசனைப்பற்றியோ பேசப்போவதில்லை. ஒவ்வொரு தடவையும் உங்கள் சிவனை உணரும் பொழுதும், உங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொரு ஜீவனையும் நீங்கள் காணும் பொழுதும், அவரின் திருநாமத்தை உரைக்காமலேயே நீங்கள், அவனை உபாசனை செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் எப்படி அவனை உபாசிக்க வேண்டுமெனவும், உங்களை அரசு புரியும் பல மனிதர்களின் மனதில் பெருமையாகும் பிழைகளை உங்களுக்கு எச்சரிக்கை செய்யவும், அவ் வுதாரணங்களின் வழியாய் பெரும் பாதகமாயும், நாஸ்திகத்தை விட அபாயமாயுள்ள உங்களுடைய மனதைப் பற்றியே நான் பேசப்போகிறேன்.

உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்காயுள்ள இப் புவியில், ஈசனை அவரின் செயலினின்று தனிமையாய்ப் பிரிக்கும் பிழையே சுருங்கச் சொல்லில் புலனாகின்றது.

'கடவுளிருப்பது சத்தியமே; அவர் உண்டு என்பதை ஏற்று அவரைத் துதி செய்வதே யாவுமாகும்' என உங்களுக்கு உரைக்கும் மனிதர்களுக்குமுள்ள சம்பந்தத்தை அறிந்து விளக்குபவர்கள் ஒருவருமில்லை. இந்த வினவை உங்கள் சித்தமே அந்த ஈசனுடன் தர்க்கஞ் செய்யவேண்டும். அதைப்பற்றி நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் உனது சகோதரர்களிடம் உனது நம்பிக்கையைப் பற்றி வியாக்கியானஞ் செய்யாதே. புவியிலுள்ள பொருள்களிடம் பிரயோகஞ் செய்வதற்கும் முயலாதே. இராஜீயம் ஒரு விஷயமாகும்; ஈசுவரீயமோ வேறாகும். ஒன்றையொன்று கலக்க வேண்டாம். சுவர்க்கத்திலுள்ள பொருள்களில் பதிந்துள்ள பரம

பிதாவின் அரசுரிமைக்கே விட்டுவிடவும். உங்களிஷ்டம் போல் உள்ள எண்ணமானது, உங்களின் நம்பிக்கை களுக்கு விரோதமானல் அதை விட்டுவிடவும்; அவரவர் கள் இஷ்டப்போல் நினைத்து நம்பலாம். புவியிலுள்ள பொது விஷயங்களைப்பற்றியே நீங்கள் பாடுபடவேண்டும். லௌகிகர்களானலுஞ் சரி, வைதீகர்களானலும் சரி, சுதந் திரத்திலும் மனிதர்களின் சமத்துவத்திலும் உங்களுக்கு நம்பிக்கையுண்டா? பலஜனங்கள் பெருமையுடன் வாழ நீங்கள் விரும்புகிறீர்களா? சர்வ ஜனங்களின் சம்மதி வேண்டுமென்பதை விரும்புகிறீர்களா? இவ்விச்சைகளை யெல்லாம் அடைய நீங்கள் ஒற்றுமையுடனகவும். இக்காரி யத்தை நிறைவேற்றுவதற்கு சுவர்க்கத்தின் நிலைகளைப் பற்றி ஒரே அபிப்பிராயம் வேண்டுமென்பது அவசிய மில்லை.

ஈசனுண்டு, நமது செயல்களால் நாடி அடைவதற்கு முடியாத படைத்தபொருள்களுக்குப் புலனகாத அவ்வ ளவு பெரியவனயும், பரமனகவும் அவன் இருக்கிறன் என வேறு பக்கத்தில் உங்களுக்கு உரைப்பவர்களுமுண்டு புவியோ கனவேயாகும். வாழ்க்கை என்பது ஒரு வின டியே. புவியிலிருந்து உன்னல் எவ்வளவு பிரியமுடியுமோ அவ்வளவு பிரியவும், வாழ்க்கையை அதற்கதிகமாய் மதிக் காதே. ஆன்மாவின் நித்திய வாழ்க்கையானது புவியி லுள்ள பொருள்களுக்குத் துரும்பு போலவேயாகும். இந் தச் சிந்தனை செய்து சுவர்க்கத்தைப்பற்றி எண்ணவும். நீங்கள் எந்த நிலையில் இப்புவியில் வாழ்ந்தாலும் அதைப் பற்றிக் கவலை ஏன்? நீங்களோ இறக்கும் மானிடர்கள்; நீங்கள் புவியைப்பற்றி என்ன எண்ணினபோதிலும், அவர்

ஒன்றுஞ் செய்யாமல், அவரைப்பற்றி என்ன நினைக்கிறுயோ அதற்கேற்றவாறே உனக்கு நன்மை செய்வார். நீ கஷ்டப்படுகிறுயா? இவ் அவஸ்தைகளை யெல்லாம் அனுப்பும் அவரைப் போற்றவும், இத்தரணி வாழ்க்கை யெல்லாம் ஒரு சோதனை போலவேயாகும்; இவ்வகிலமோ அஞ்ஞாத வாசமான மாநிலமாகும். இதை இலட்சியம் செய்யால் இதற்கதிகமாய் எழுச்சியாகவும், கஷ்டங்களின் நடுவில் வறுமை, அடிமை, வாழ்க்கையின் மத்தியில், பெரும் பயனை அடையும் எதிர் வாழ்க்கையின் நம்பிக்கையாகி, உலகப் பொருளை வெறுத்து, துதியால் அவனை உபாசனை செய்வதால் நீங்கள் தூய்மை யுடனுகலாமே.''

இங்ஙனம் பேசுபவர்களில் முதற் சொன்னவர்கள் ஈசனை நேசிப்பதில்லை; பிறகு சொன்னவர்களோ, அவர்களை அறிவதில்லை.

வைதீகர்கள் தோல்வி

மனிதர்கள் ஒன்றே என முதற் சொன்னவர்களிடம் உரைக்கவும், அவன் பிறப்பு, நோக்கம், புவியில் சிவனின் நியமங்கள், முதலியவைகளில் உனக்கு மாறுபாடாக வேறு அபிப்பிராயம் கொள்ளுங்கால், சமூகத்தின் நிர்ணமான திட்டங்களில் ஒரே எண்ணத்தை அடையலாம் என இரண்டாகப் பிரிப்பதானது அசாத்தியமான ஒரு உபாயமேயாகும். மதமே மாநிலத்தை அரசுபுரியும்: இந்தியாவிலே சிலர் தெய்வமான பிரம்மாவின் முகத்தினின்றும், கைகளிலிருந்தும் கால்களிலிருந்தும் பிறந்ததாக எண்ணி, அவ்வெண்ணத்தில் மனித சாதியை நிர்மாணஞ் செய்தார்கள். முகத்திலிருந்து மலர்ந்தவர்கள் கல்வியி

னும், கைகளில் பிறந்தவர்கள் போரிலும், காலிலிருந்து பிறந்தவர்கள், ஊழியத்திலேயே ஈடுபட வேண்டுமென செய்தார்கள். இந்த எண்ணத்தில் நம்பிக்கை இருக்கும் வரை இவ்வாசையானக் கட்டுபாட்டில் அமிழ்ந்து வரும் இவர்கள், இன்னும் அமிழ்ந்து அவஸ்தையிலேயே இருப்பார்கள். மனித கோடிகளெல்லாம் ஈசனின் மக்களே• எல்லாரும் சகோதரர்களே என உலகத்தில் ஒரு சித்தாந்தம் தோன்றியவுடன் மனிதர்களில் இருவகையுண்டு, எனச் சொல்லி, அடிமைகளுக்கு சுதந்திரமாகாது. சமூகத்தில் புரட்சியான புதிய அமைப்பு வேண்டாம், எனச் சொல்லிய பழய வைதீகர்கள், அறிஞர்களின் போராட்டங்களெல்லாம் பிரயோசனமில்லாமல் போய்விட்டது. மத நம்பிக்கைகளில் ஒரு படி விருத்தியாகும் பொழுதெல்லாம் மனிதர்களின் சரிதையில், சமூக மேன்மை அதற்கேற்றறாறு ஒரு படி உயர்ந்துள்ள தென்பதை நாங்கள் காட்டக்கூடும். மத விஷயத்தில் அசிரத்தையாயிருக்கும் உங்கள் சித்தாந்தமானது தாறுமாருய்த் தோன்றும் பயனை யளிப்பதைத் தவிர வேறு எதை அளிக்குமேன்பதை நீங்கள் சொல்வது கஷ்டம். நீங்களோ அழிப்பதற்கு வல்லவரானீர்கள். ஆனுல் நிர்மாணவேலை செய்யும் வன்மையையோ யடையவில்லை; இதை உங்களால் மறுக்கமுடியாது. சுதந்திரம் என்பதிலுள்ள ஒரு அழிவை சுதந்திரதேவி இப்பொழுது கழிக்க முயலுகிறுள். அதிகப் படாடோபஞ் செய்து ஒருவனின் சுயசுதந்திரத்திலேயே யாவுமென விஷயங்களைக்கொண்டு வருவதால் உங்களை அது எங்கு செலுத்தி இருக்கின்றதென்பதை எண்ணவும். வியாபாரத்தில் அது விபரீதத்தையே விளைவித்துள்ளது. ஏழைகளை

அமிழ்த்துவதேயாகும். தேசீயத்தில் தன்னிஷ்டம்போல் நடப்பதிலேயே செய்துவிட்டது, சாதனம், கால, மன்னியில், தங்களுக்குரிய உரிமைகளை பயன் செய்வதற்கற்ற புத்தி யன்னியிலுள்ள பாமரர்களான ஏழைகளை அவமதிப்பதேயாகும். ஒழுக்கத்தில் அது அகங்காரத்தையே விளைவித்துள்ளது. தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ள சக்தியற்ற ஏழைகளைச் சீர்குலைத்து தனிமையாக்குவதேயாகும். நமக்கு சபை வேண்டும். வழி காட்டும் ஒரு பொது நோக்கத்தில் நினைவாகி, ஒரே நம்பிக்கையில் கலந்து, ஒரே பெயராய் சபதஞ் செய்துள்ள சகோதரர்களன்னியில் இதை பத்திரமாய் அடைவ தெங்ஙனம்? நமக்குக் கல்வி வேண்டும். புவியிலே மனித வாழ்க்கை, அதன் நோக்கம், நிலை இவைகளில் பொதுவான நம்பிக்கையாகி, அதன் ஆதாரமான ஒழுக்கமன்னியில் அதை எப்படி அளிப்பது அல்லது பெறுவது? நமக்குப் பொதுவான கல்வி வேண்டும்; பொது நம்பிக்கை இருந்தாலொழிய இதில் வெற்றி பெறுவது எங்ஙனம்? நாம் ஒரே ஜனங்களாக விரும்புகிறோம்; பொது நோக்கத்திலும், பொதுக் கடமையிலும் நமக்கு நம்பிக்கை இருந்தாலொழிய இதில் வெற்றி பெறுவது எங்ஙனம்? ஈசனைப் பற்றியும், நமக்கும், அவருக்குமுள்ள சம்பந்ததைப் பற்றியுமுள்ள எண்ணங்களிடமிருந்தன்னியில் வேறு எங்கிருந்து பொதுக் கடமைகளைப்பற்றி அனுமானஞ் செய்வோம். சர்வஜன தேர்தல் உண்மையில் சந்தேக மன்னியில் சிறந்ததாகும். அடிக்கடி பெரும் விபத்துக்களில்லாமல் தன்னைத்தானே அரசு புரிந்துகொள்ள இதுவொன்றே சட்ட நீதியான சாதனமாகும். ஒரே நம்பிக்கையால் பெருமை

யடைந்துள்ள நாட்டின் நினைவையும் அபிப்பிராயத்தையும் உண்மையாய் அறிவிக்கும். ஆனால் பொது நம்பிக்கை யற்ற ஒரு தேசத்தில், அதிக ஜனங்களின் தன்னலத்தை விட, மற்றவர்களை அமிழ்த்தும் எண்ணத்தைக் காட்டிலும் வேறு எதை அது விளக்க வல்லமையாகும். தர்மமன்னியி லுள்ள, அல்லது தர்மத்தில் அசிரத்தையாயுள்ள நாட்டில் ராஜீய சீர்திருத்தங்கள், சில ஜனங்களின் எண்ணம், தன் னலம் திகழும் வரையிலேயே வெளியாகும். இவ்விஷயத் தைக் குறித்துப் போதுமான அளவு கடந்து ஐம்பது வருஷ அனுபவங்கள் நமக்குக் கற்பித்து விட்டன.

பூமி கனவல்ல.

சுவர்க்கத்தையும் சகத்தையும் தனியாகப் பிரித்து பேசுபவர்களுக்கு, வழியைப்போலும், வழியின் முடிவைப் போலும், இரண்டும் ஒன்றே என உரைக்கவேண்டும். பூமியைக் கனவென்று எங்களிடஞ் சொல்லவேண்டாம். பூமியும் பரமனைச் சேர்ந்தது; அதன் மூலமாய் ஏறி அவ னைப் பற்றுவதற்கே, அவர் அதை சிருஷ்டித்துள்ளார். பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவோ, அல்லது பாபஞ் செய்வதற்காகவே தனிமையாய் ஏற்படுத்தப்பட்டதே இத்தரணி என எண்ணவேண்டாம்; நாமே உழைத்துமுன் வருவதற்கும், பெரிய நிலையில் பெருமையடைவ தற்குமே ஏற்படுத்தப்பட்ட நிலையும்எனவே இதை அறியவேண்டும் உட்கார்ந்து தியானஞ்செய்வதற்காக இதை ஏற்படுத்த வில்லை; செயலுக்காகவே இது சிறந்தது. நம்மையும் அவர்போலவே சிருஷ்டித்தார். இவரும் நினைவும் செயலு மானவர். இன்னம் சொல்லப்போகில் அவரிடம் நினைவும்

செயலும் ஒரே வினாடியில் நடைபெறும் புவியின் பொருள்களை யெல்லாம் இகழ்ந்து இகவாழ்க்கையை துக்கமாக எண்ணவேண்டுமென நீங்கள் உரைக்கிறீர்கள். ஏனெனில் அப்பொழுதுதான் அவருக்கு சிந்தனையிலே ஈடுபட முடியுமென்பது உங்கள் அபிப்பிராயம்.

புவியின் வாழ்க்கை பரவாழ்க்கைக்கு முகவுரை போலன்னியிலும், அதை அடைவதற்கு இது ஒரு படியே எனவும் என்பதைவிட வேறு யாது? கட்டாயமாய் ஏறியாக வேண்டிய கடைசி ஏணிப்படிக்கு, நீங்கள் நன்றியுள்ளவர்களா யிருந்தும் அதைப் பாவமெனப் புகல்வதால் நம் முன்னுள்ள பாதையைப் பிரிப்பது போலாகவில்லையா என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? சீவான்மாவின் ஒவ்வொரு நிலையும் புனிதமான நிலையேயாகும். புவியின் நிலையும் அதன் பிற்கால வாழ்க்கையும் அப்படியே யாகும். முதல் நிலை பிற்கால நிலைக்குக் கற்கும் காலம் போலாகும். ஒவ்வொரு முகப்பெருமையும் நம்மில் ஒவ்வொருவர்களிலும் பிரகாசஞ் செய்யப்பட்ட நித்தியமான சீவனின் விடாமுயற்சியான விருத்திக்கெனவும், நாம் ஒவ்வொருவர்களும் தனிமையாய் செயல்களைச் செய்வது அதனால் விருத்தியாகும் சமூகத்தின் சிறப்புக்கென்பதையு மறியவேண்டும்.

கடவுள் உங்களை பூமியிலே பெருமையாக்கியுளார். உங்களைப் போலுள்ள கோடிக்கணக்கான சீவராசிகளை உங்களைச் சுற்றி சூழும்படி செய்துளார். அவர்களுடைய சித்தம் உங்களுடைய சித்தங்களால் போஷிக்கப்பட்டு அவர்களுடைய விருத்தி உங்களுடன் விருத்தியாகி, அவர்கள் வாழ்க்கையால் விருத்தியாகின்றது. தன்னந் தனிமை

யான பெரும் விபத்திலிருந்து நீங்கள் தளரவும், உங்களா லேயே நீங்கள் திருப்தியாவதற்கு முடியாத எல்லா அவ சியமான பொருள்களையும் அருளி, மிருகங்களினின்று மேன்மையான அவைகளில் மறைந்துள்ள சமூக சிந்தனை களால் உங்களைச் சிறப்பாக்கியுமுளார். அழகால் பிர காசமாகி, சீவன்கள் நிறைந்து, நீங்கள் மறப்பதற்கு முடி யாத உயிருடன், விளங்கும் கடவுள் நாணயம் போல எங் கும் சீவனால் நிறைந்துள்ள, நீங்கள் துச்சமாய் இகமென்று சொல்லும், சகத்தையெல்லாம் உங்களைச் சுற்றி செம்மை யாக்கியுளார். ஆனால் அவை உங்களுக்காகவே காத் திருந்து, விளக்கமாக உங்களிலேயே சாய்ந்து, உங்களின் முயற்சிக்குத் தகுந்த வண்ணமே, வன்மையில் விருத்தி யாகும். அணைக்கமுடியாத அன்பையும், துக்கப்படுபவர் பரிதவிப்பையும், ஆனந்தமுடனிருப்பவர்களுக்கு சந் தோஷத்தையும், சகோதர சீவன்களை அமிழ்த்துபவர் களுடன் கோபமாய் சத்தியத்தில் இடைவிடா தாகத்தை யும், இதுவரை அறிந்திராத சத்தியத்தின் பகுதியைக் கண்டு பிடித்தவர்களுக்கு களிப்பையும், எல்லாருக்கும் சகாயமாகும்படி சொல்வதுபோல் செய்பவர்களுக்கு ஊக் கத்தையும், செய்யமுடியாத காரியத்தில் தாமாகத் தியா னத்துடனுகி, தங்கள் இரத்தத்தினுலேயே உண்மையை இலக்கும் பலியாகப் பிராணனை யளிக்கும் பெருமையையும், உங்கள் அகத்திற்குள்ளேயே பெருமையாக்கியுளார். உன் னைச்சுற்றி ஏராளமாய் ஈசனுல் நிறைத்துள்ள நோக்கங் களின் அறிகுறிகளையெல்லாம், நீங்கள் மறுத்து வெறுக் கிறீர்கள். அவரின் விளங்கும் பொருள்களை யெல்லாம் வேண்டாபொருள் என கருதுகின்றீர்கள், தன்னங்

தனிமையாய் வருந்தி செய்தால் தூய்மையும், தலைநெறி யாவதற்கும் முடியாமலுள்ள அகச்சுத்தியில் எல்லா கவனமும் செலுத்த வேண்டுமென்று நீங்கள் கூறுவது எதற்காகவோ தெரியவில்லை.

சுதந்திர மென்பதென்ன ?

இங்ஙனம் செய்பவர்களை ஈசன் தண்டிப்பதில்லையா ? அடிமை அதோ கதியிலில்லையா ? கல்வியினால் திடமடையாமல், தெய்வீக சீவனை பல புறப்பயிற்சி முறையில்மூழ்கி காலங்கழிக்கச்செய்து அதோகதியிலுள்ள ஏழைத்தொழிலாளியின் பாதி யான்மா, நீங்கள் கேவலம் தூலமென்று அழைக்கும் காணுதியல்பான பசிமுதலியவற்றால் பரிதவித்து திணறுவதில்லையா ? மேல் நாட்டில் தன்தேசத்திற்கும், விடுதலைக்கும் போராடும் சனங்களில் இருப்பதை விட ரஷிய நாட்டு அடிமையினிடம் அதிக ஊக்கமான தர்மசிந்தனை யிருக்கின்றதா ? பன்னிரண்டாவது நூற்றாண்டு லோம்பார்டுக் குடியரசு சனத்தையும், பதினான்காவது நூற்றாண்டு பிளாரண்டையின் குடியரசுசனத்தைவிட போப்பின் அதோகதி அடைந்த அடிமையினிடமும், கொடுங்கோன் மன்னனின் பிரஜையினிடம் ஈசன்மேல் அதிக உற்சாகமுடன் ஊக்கம் இருப்பதாக நீங்கள் காண்கிறீர்களா? ஈசனின் சுவரூபம் எப்படி இருந்தபோதிலும் பூவுலகிலே பெரும் வல்லமை அடைந்த அவதார புருஷர்களால் சொல்லப்பட்டதுபோல் சுதந்திரமென்பது ஒன்றுண்டு. அவர்கள் பிரசாரஞ்செய்த தர்மம் அடிமைச் சங்கிலியை அறுப்பதற்கு ஆக்ஞாபித்து. ஈசனின் சீவர்களின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கும் அடி

மையாயிருக்குங்கால், ஈசனை நன்ருய் அறிந்து நேர்மையாய் உபாசிப்பது எங்ஙனம்? உங்களுடையதை தர்மம் என்றே சொல்வதற்கில்லை. நீங்கள் உங்கள் உற்பத்தியை மறந்த சனக்கூட்டம்; சீர்கெட்ட சமூகத்திற்கு விரோதமாய் பெற்றோர்களால் போராடப்பட்ட போர்களை மறந்து தியானத்தில் தோய்ந்தவர்களாகும். அப்போரினுலுண்டான வெற்றிகளையும் நீங்கள் இகழும் அவைகளையெல்லாம் அவர்கள் செய்தார்கள் என்பதையும் மறந்துவிட்டீர்கள். அதோகதியாய் பாழடைந்த பழைய சமயக் கோட்பாடுகளிலிருந்து ஊக்கமாய்த் தோன்றும் எந்த நோக்கங்களும் நிகழும் சமூக அமைப்பை அடியோடு மாற்றிவிடும். ஏனெனில், ஊக்கமான எந்த நோக்கமும் மனித சமூகத்தின் ஒவ்வொரு கிளைகளினும் புகுந்து பிரயோகஞ் செய்வதற்கு பாடுபடுகின்றது. சுவர்க்கத்திலே நம்பிக்கையடைந்த புவியானது ஒவ்வொரு காலத்திலும் சுவர்க்கத்தைப்போல் இருக்கவே முயல்கின்றது. பலவிதமான வேறுபாடு, காலங்களுக்கேற்ற பல நிலைகளினும், சுவர்க்கத்தைப்போலவே சகத்திலும் அவன் அரசுரிமையாகின்றது, என்னும் அமுத மொழிகள் அடிக்கடி உண்மையாகின்றன.

சுவர்க்கமும் பூமியும் ஒன்றே.

சுவர்க்கத்தைப் போலவே சகத்திலும் உமது அரசுரிமையாகுக என்னும் அமுத மொழிகள் பழைய காலத்தைவிட அதிக ஞாபகஞ் செய்யப்படுத்தி இன்னும் பெருமையுடன் பயன் செய்யப்படட்டும். சகோதரர்களே! அதுவே உங்கள் நம்பிக்கையாகவும் தோத்திரமாகவும்

இருக்கட்டும். அவை நிறைவேற்றுவதற் கேற்றபடி செயல்களைச் செய்யவும், சோம்பலான ஆத்மதான கற்பனை சகப்பொருள்களில் சிரத்தை அநியாயமா யிருந்தபோதிலும், புவியின் அரசனுக்குக் கீழ்ப்படிதலானக் கற்பனைகளையும், அர்த்தமற்ற அடியிற்கண்ட உபதேசங்களை ஒருநாளும் இலட்சியஞ் செய்யாதே; அரசனுக்குரியவற்றை அளிக்கவும், ஈசனுக்குரியவற்றையு மளிக்கவும். ஈசனுக்குரியவையற்ற ஒரு பொருளை அவர்கள் புகலமுடியுமா? தெய்வீக சம்பந்தமான சட்டத்திற்குட்படும் வரையிலேயே அரசர்களுக்கு அளிக்கவேண்டும். அரசன் என்பவன் அநித்திய வன்மை பொருந்தியவன். இலௌகீக அமைப்பின் அதிபதியாவன். காலம் அனுமதிக்கும் வரை, வன்மை விளங்கும்வரை, ஈசனின் எண்ணத்தை நிறைவேற்றுவனாகவும், அதிகார புருடனாகவே எண்ண வேண்டும். அவனுடைய ஆக்ஞையை அவன் மீறுவானேயானால், உங்களுடைய உரிமை என நான் சொல்லேன். அதை மாற்றுவது உங்களுடைய கடமை எனவே நான் வற்புறுத்துவேன். உங்களின் நிலையிலேயே, உங்கள் சக்திக்கேற்றவாறு, ஈசனின் இச்சைகளை நிறைவேற்றுவதைவிட வேறு எதற்காக நீங்கள் இப்புவியிலிருப்பது? தன்னலத்திற்குத் திகழும் வகுப்புப்பிரிவினை ஜன சமூகத்தை பலவாறாய்ப் பிரிக்கும் பகைஞர்களான பல வேற்றுமைகளை ஒழிப்பதற்கு நீங்கள் முயலாதிருக்குங்கால், ஜன சமூகத்தின் ஐக்கிய பாவத்திலும், அதன் பயனை, எங்கும் நிறைந்துள்ள ஐக்கியமான ஒரு ஈசனிலும் நம்பிக்கை இருப்பதாக ஏன் பறை சாற்றிக் கொள்ளவேண்டும். மனித சமூகத்தின் பொறுப்பிற்கு ஆதாரமான மானிட

சுதந்திரத்திற்கும் பங்கம் விளைவிக்கும் இடையூறுகளையும், அப்பொறுப்பையே பாழ்செய்யும் பிரதிபந்தங்களையும் தொலைப்பதற்கு நீங்கள் முயலாதவரை, அச்சுதந்திரத்திலும் பொறுப்பிலும் ஏன் நம்பிக்கை வேண்டும்? புவியே நாம் உழைப்பதற்கான நிலமாகும். அதை நாம் சபிப்பதில் பயனில்லை; அதை நாம் புனிதமாக்கவேண்டும். நம்மைச் சுற்றியுள்ள புவியின் வன்மைகளெல்லாம் நாம் உழைப்பதற்கேற்ற கருவிகளாகும். அதை நாம் வெறுக்கக்கூடாது; நன்மைக்காக நாம் அதை பயன் செய்ய வேண்டும்.

சத்தியத்தால் கோடுமையை எதிர்

ஈசனன்னியில் நீ இதைச் செய்ய முடியாது. கடமைகளைப்பற்றி நான் உங்களுக்குக் கூறிவிட்டேன். விருத்தியின் மார்கத்தில் நித்தியமாய் வழி காட்டுவதற்கு உரிமைகளைப்பற்றிய அறிவே போதாதென நான் சொல்லிவிட்டேன்; நீங்கள் கோரும் நிலைகளுக்கு நிரந்தரமான விருத்தியின் மேன்மையான நெறியானது உரிமையின் அறிவினுலேயே அடையமுடியாதென சொல்லிவிட்டேன். ஈசனன்னியில் கடமைகளை நாம் எங்கிருந்து காண்போம்? ஈசனன்னியில், நீங்கள் நாடி பற்றடையும் எந்த விதமான லௌகிக சர்க்காரும், அறியாமையும் மிருகத்தன்மையான கொடுங்கோன் வன்மையிலேயே சாய்ந்துள்ளதாகும். இதிலிருந்து தப்புவதற்கோ இல்லை. மனித சமூகத்தின் மேன்மை ஈசனின் நியமத்திலே சாய்ந்திருக்க வேண்டும். அதை நாம் யாவரும் சேர்ந்து கண்டுபிடித்து பயன் செய்ய பொறுப்பாளிகளாக உளோம். அல்லது

தற்செயல், காலத்திற்கேற்ற கோலம் வன்மைகளெ யெல்லாம் பயன் செய்யும் மனிதர்களுடைய கையிலிருக்க வேண்டும். நாம் ஈசனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அல்லது மனிதர்களுக்கு அடிமையாக வேண்டும். மனிதனில் ஒருவனுட்சியோ, பலர்களாட்சியோ, எல்லாம் ஒன்றே! எல்லா ஜனங்களுடைய சித்தங்களெயும் அரசுபுரியும் சிறந்த சித்த மொன்றில்லேயேல், நம்மைவிட அதிக வன்மையை அடையும்பொழுதெல்லாம் உண்டாகும் நமது உடன் சகோதரர்களின் குரூரத்திலிருந்து நம்மை பாதுகாப்பது யார்? மனிதர்களால் தோற்றுவிக்கப்படாமலுமுள்ள சட்டமொன்று இல்லேயேல், ஒரு செயல் நீதியோ, அநீதியோ என எச்சட்டங்களால் நாம் அதை எங்ஙனம் அறிந்துகொள்வது? கொடுமையையும் வேற்றுமையையும் எவனுடைய பெயராலும் எதன் துணையாலும் நாம் எதிர்ப்பது? ஈசனுக்கு நிகரான தலைவன் சத்தியத்தைத் தவிர வேறு எவனுமில்லே. சத்தியத்தின் முன் ஜகத்திலுள்ள ஒவ்வொருவனும் சாய்ந்தே யாகவேண்டும்; போனபர்டானுலுஞ்சரி, புரட்சியாளுலுஞ் சரி அவனைப் படிந்தே யாகவேண்டும். நோக்கங்கள் ஏட்டுச்சுரக்காயாய் இருக்கும் வரை நம்முடன் கலந்து பிறகு பிரியும் இங்கு வங்குள்ள புவியின் புருடர்கள் சோம்பலாயிருப்பதற்கே சத்தியத்திற்கு அச் சமாதானஞ் செய்கிறார்கள். நம்முடைய சொந்த அபிப்பிராயம் என்னும் பெயரால் தியாகத்தையும், அவர்கள் தேகத்தையும் நாம் எப்படிக் கேட்பது? நமது சொந்த இஷ்டங்களின் வன்மையினுலேயே கனவைக் காரியமாகவும், சூட்சம நோக்கங்களெ செயலாக மாற்றவும் முடியுமா? நீங்கள் ஏமாறவேண்டாம். எந்த

நோக்கமாயிருந்த போதிலும் ஒவ்வொருவரும் அவரவர் புத்திக்கேற்றவாறு என்னும் பெயரால் பேசும்வரை, இப்பொழுது நம்மிடமுள்ள மொழிகளைப்பற்றி செயல்களை விலக்கும் சுபாவங்களையே நாமடைவோம். பெரிய புரட்சி காலத்தில் முழங்கிய பேரிரைச்சலான ஈசன் இதையே விரும்புகிறார், ஈசன் இதையே விரும்புகிறார் என்னும் பெரும் முழக்கமே சோம்பலை செயலில் சாயும்படி எழுப்பி பயமுள்ளவனுக்கு வீரமளித்து, அதிக சிந்தனை செய்தவனுக்கு தியாகத்தில் உற்சாகமளித்து. எல்லா சாதாரண மனிதர்களின் அபிப்பிராயங்களை நம்பிக்கையில் நோக்குகிறவர்களுக்கு சிரத்தையை யளிக்கும் மேலெழுச்சியாகி, விருத்தியாவதற்கான செயல்களை, ஈசனின் மனோபீஷ்டமான நோக்கமென நீங்கள் அழைப்பீர்களானால் ஒருவரும் உங்களுக்கு விரோதமாகார். புவியிலே செய்து முடிக்கும் செயல்கள் அவர்களின் நித்திய சீவனின் ஒரு அவசியமான அங்கமென அவர்களுக்கு நிரூபணஞ் செய்தால் எதிர்கால அத்தியாவசியமானவைகளின் முன் நிகழ்ச்சியில் நினைவாகும். சோம்பலான எண்ணங்களெல்லாம் நாசமாகும். ஈசனன்னியில் நீங்கள் அதிகாரஞ் செய்ய முடியுமானால் இணங்கச் செய்வதற்கு முடியாது. அதனால் உங்கள் நிலையில் உங்கள் பாகத்திற்கும் கொடுமை செய்பவர்களாகி, அறிவை வளர்ச்சி செய்தும் அவதார புருஷர்களாக ஆவாரார்கள்.

ஈசன் சிந்தனை அதுவே! ஈசன் சிந்தனை அதுவே! சகோதரர்களே இதுவே ஜனங்களின் பெருஞ் சத்தமாகும்; இதுவே உங்கள் நாட்டு ஜனங்களின் பெருங் கூச்சலாகும். இதுவே இத்தாலி நாட்டின் பெருங் கூக்

குரலாகும், ஒரு வேளை சிலர் நமது ஜனங்களின் சுபாவம் ராஜீய சுபாவமற்றதென்றும், தர்ம சம்பந்தமான உணர்வு தளர்ந்து விட்டதென்றும் தேசத்திற்குப் பூர்ண அன்பு சிரத்தையுடன் உழைப்பவர்களான உங்களுக்குச் சொல்வார்களே யானால், நீங்கள் அதனால் ஏமாற்றமடையும்படி செய்து கொள்ளாதீர்கள். வகுப்புவாதங்கள் அதிகமாகி, வன்மை முயற்சியுடன் விளங்கினாலும், நமது நாடு இருக்கும் வரை தர்ம உணர்வு என்பது ஒரு நாளும் தளராது. பிளாரன்ஸ் வீழ்ச்சியை அடைந்த காலத்திலும், அன்னிய நிலத்துடன் கூடிய ஐந்தாவது சார்லஸ், இதாலியின் சுதந்திரத்தைச் சிதறடித்த காலத்திலும் போப்பானவர், ஏமாற்றிய காலத்திலும் அது தளர்ந்திருந்தது.

அப்பொழுது தேசீய சுபாவத்தை எல்லாம் தளர்ந்து விட்டு வாழ ஆரம்பித்தோம். ஸ்பானியர்கள் ஜர்மனியர்கள் பிரஞ்சுக்காரர்கள் என எண்ணி வாழ்ந்தோம். ஒவ்வொருவர் களையும், ஒவ்வொன்றையும் பார்த்து சிரிக்கும்படி செய்து அதிலேயே ஊக்கம், உற்சாகத்தை யளித்து சிற்றரசர்கள் முன் நமது அறிஞர்கள் விதூஷகர்களைப் போல் நடிக்க ஆரம்பித்தார்கள். ஜனங்களுக்குக் கல்வி பரவச்செய்ய வேண்டு மென்பதையும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டு மென்பதையும் மறந்து, தர்ம சம்பந்தமான சத்தியோபதேசங்களை பிரயோகஞ் செய்வது அசாத்தியமென அறிந்து, புனிதப் பொருள்களில் வியாபாரஞ் செய்ய நமது புரோகிதர்கள் தலைப்பட்டார்கள். அப்பால் அறிஞர்களால் ஜனங்கள் இகழப்பட்டு, புரோகிதர்களால் ஏமாற்றமடைந்து பிழியப் பட்டு சன சமுதாய விஷயத்தில் செல்வாக்கெல்லாம் சிதறடிக்கப்

பட்டு, அவர்கள் பழிக்குப் பழிவாங்க, அறிஞர்களை அலட்சியஞ்செய்து, புரோகிதர்களிடம் நம்பிக்கைஇல்லாமல், எல்லா வகுப்புகளினிடமும் துவேஷமடைந்தார்கள். ஏனெனில் அவை பாழடைந்ததென அவர்களுக்குப் புலனாயிற்று. ஆனால் அதற்கப்பால் நோக்கவோ அவர்களுக்கு இயலுவதில்லை. வழக்கம், சர்க்கார் மூடவிசுவாசம் முதலியவைகளால் நம்மில் சுமத்தப்பட்ட விபரீத ஆசாரங்களின் நடுவில், அக்காலத்தின் முதல் இழிவிலும், பேடி சுபாவத்திலும், நம்மை நாமே இழுத்துக்கொண்டு சென்றிருக்கிறோம். மறுபடியும் மேன்மையாகவும் மரியாதை யுள்ளவர்களாகவும் எழுச்சிபெற நாம் விரும்புகிறோம். பழைய நாகரீகங்களை நாம் ஞாபகஞ்செய்து கொள்வோம். ஈசனுடைய நாமத்தை அவர்கள் நாவில் மொழிந்து, போர்க்கள நடுவில் தர்ம சின்னங்களான துவஜத்தை அடைந்து, பன்னிரண்டாவது நூற்றாண்டில், நமது லொம்பார்ட் சகோதரர்கள், படையெடுத்த ஜர்மனியர்களை அட்டகாசஞ் செய்து அழித்தார்கள் என்பதை நமது ஞாபகத்தில் வைத்துக் கொள்வோம். அதனால் அவர்கள் இழந்த சுதந்திரத்தை மறுபடியு மடைந்தார்கள். டஸ்கன் நாட்டு குடியரசின் ஜனங்கள், தங்களுடைய பார்லிமெண்டு சபையை கோவில்களிலேயே நடத்தினார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பிளாரண்டைன் நாட்டுச் சிற்பத் தொழிலாளிகள், குடியரசிற்குத் தலைவனாக, ஈசுவரனையே தேர்ந்தெடுத்து எப்படி மெடிகியின் அரசுரிமைக்குக் கீழ்ப்படியாமல் மறுத்தார்கள் என்பதையும், ஈசுவரனின் பேரில் பக்தியையும், ஜனங்களுடைய உரிமைகளையும் ஒரே மூச்சில் மொழிந்து எப்படி சாவோனு

ரோலன் வெற்றி பெற்ருன் என்பதையும், 1746-ம் வருஷத்தில் பனிவா நாட்டினர்கள் தங்கள் குல தெய்வத்தின் பெயரான மார்ரியம்மனுல் ஆயுதங்களான கற்களால் ஜர்மன் சேனேகளே தங்கள் தேசத்தினின்று தொலேத்து எப்படி வெற்றி பெற்ருர்கள் என்பதையும், தர்மத்தால் திகழ்ந்து காக்கப்பட்டு அதனுல் பெருமையடைந்த இடாலியின் ஜன சமூக சிந்தனேகளடங்கிய இதைப்போலுள்ள இன்னம் எல்லாச் செய்கைகளின் செயல்களே ஞாபகஞ் செய்து கொள்ளவும். தர்ம சிந்தனேகள் நமது ஜனங்களின் சித்தத்திலே தூங்குகின்றது; எழுச்சி பெறுவதற்காகவே அவைகள் காத்திருக்கின்றன. அதை எப்படி எழுப்புவது என்பதை அறிபவன் இருபது இராஜீய தத்துவங்களின் கற்பனேகளேவிட அதிகமாக தேசத்திற்கு ஊழியஞ் செய்பவனுவன். அன்னிய அரசாங்க அமைப்பைப் போலுள்ள நிர்மாணங்களிலும், இடாலியில் கடந்த போர்கள் எழுச்சியிலும் பகிரங்கமான பொது நோக்கம் இல்லாததற்கும், இதுவரை நடந்த எதிலும் உற்சாக மில்லாததற்கும், நாம் முதலில் சொல்லிய தர்ம சம்பந்தமான எண்ணமில்லாததே யாகும். ஆகையால் சகோதரர்களே ஈசன் பெயரால் பிரசாரஞ் செய்யவும். இத்தாலிய சித்தத்தை உடையவன் உங்களேப் பற்றுவான்.

ஈசன் பெயரால் பிரசாரஞ் செய்யவும். அறிஞர்கள் ஒரு வேளே சிரிக்கலாம்; அவர்கள் தங்கள் தேசத்திற்கு இதுவரை என்ன செய்தார்களென்று கேட்கவும். புரோகிதர்கள் உங்கள் சாதியை விட்டு விலக்கலாம்; அவர்கள் எல்லாருஞ் சேர்ந்து அறிவதைவிட நீங்கள் ஈசனே அதிகமாய் அறிவதாகவும், ஈசனேயும் அவன் இயல்பையும்

இணைக்க நீ அவசியமில்லை எனவும் புரோகிதனுக் குரைக்கவும். ஜனங்கள் உங்களை அறிந்துகொள்வார்கள்; 'ஈசனே தலைவன், தலை நெறி, தெள்ளமுதம் சிருட்டி கர்த்தா, சகங்களின் ஆசாரி புருஷன்' என, அவர்களும் உங்களுடன் உரைப்பார்கள். இப்படிச் சொல்வதால் நீங்களும் ஜனங்களும் வெற்றியை யடைவீர்கள்.

அத்தியாயம் 12.

சட்டம்—உண்மையை உணர்—சர்வஜன சம்மதம்—மனச்சாட்சி—அறிவுடைய சீவன்—ஒழுக்கத்தின் முன்னேற்றம்

நீங்கள் சீவனுடன் வசிக்கிறீர்கள். ஆதலால் சீவனின் நியமங்களன்னியில் வாழ்க்கை என்பதே இல்லை. பூவுலகிலிருக்கும் எல்லாப் பொருள்களிலும் ஒரு குறிப்பிட்ட குணங்கள் நிலைகளுக் கேற்றவாறு ஒரு நியமத்திற் குட்பட்டு நிலவி ஆக்கிரமிக்கும் குணமே தாதுப் பொருள்களில் திகழும்; வளர்ச்சியை யடையும் நியமத்தையே வனஸ்பதியில் காணலாம். அசைவதான நியமமே நட்சத்திரங்களில் நிலவும்; உங்களையும், உங்கள் வாழ்க்கையையும் ஒரு நியமம் அரசுபுரியும். நீங்கள், எல்லா சிருட்டிப் பொருள்களிலும் எப்படி சிறந்து விளங்குகின்றீர்களோ, அப்படியே இந்நியமங்கள் எல்லாவற்றிலும் பெருமையுடையதும் பெரியதாயும் ஒன்றுண்டு. உங்கள் நியமப்பிரகாரம், நீங்கள் விருத்தியை நாடி முயன்று, அதனோடு இயைந்து வாழ்வதே உங்களுடைய முதன்மையான ஒரே கடமையாகும்.

(2) ஈசன் உங்களுக்கு சிவனை அளித்துளார்; ஆதலால் உங்களுக்கு நியமத்தையு மளித்துள்ளார். சமஸ்த ஜனங்களுக்கும் ஈசன் ஒருவரே நியமத்தை அளிப்பவராகும். அந்நியமமான ஒரே சட்டத்திற்கே நீங்கள் கீழ்ப்படிய வேண்டுவ தவசியமாகும். மனிதர்களால் இயற்றப்படும் நியமங்களான சட்டங்கள், ஈசனல் அருளப்பட்ட நியமத்திற்கு அனுகூலமாயிருக்கும்வரை, பலம் பொருந்தி பெருமையுட னிருப்பதாக எண்ணவும். அம் மானிட சட்டங்களை விளக்கம், பிரயோகங்களால் அறிந்துகொள்ளலாம். ஈசனின் நியமத்திற்கு விரோதமாகவும், வேற்றுமையாகவு மிருந்தால் அதைத் தீமை என உடனே தெளிந்து கொள்ளவும். அத்தகைய சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல், அதை அழிப்பது உங்களுடைய உரிமைமாத்திர மன்னியில், கடமையுமாகும். ஈசனின் மேன்மையான நியமத்தை மனித சமூகத்தில் பயன்படச் செய்பவன், நீதியான உங்கள் தலைவனுவன்; அவனை நேசித்துப் பற்றவும். ஈசனுக்கு வஞ்சகமாகவும், விரோதமாகவும் இருந்தாலொழிய, ஈசனைத் தவிர வேறு தலைவன் உங்களுக்கு இல்லை; அவனை அடைவதும் கூடாது.

(3) உங்கள் வாழ்க்கையின் நியமமான அறிவில், ஈசனின் நியமத்தை அறியும் அறிவில், உங்கள் ஒழுக்கத்தின் ஆதாரம், உங்கள் செயலின் சட்டங்கள், கடமைகள், பொறுப்பின் பரிமாணங்களின் நிலைகளெல்லாம் ஈசனின் நியமத்திலேயே நேர்மையா யுள்ளன. ஒருவனின் சுயேச்சாதிகாரம் அல்லது பலரின் சுயேச்சாதி காரத்தால் உங்கள் மேல் சுமத்தப்பட்ட அநியாயச் சட்டங்களுக் கெல்லாம் அதுவே உங்கள் காவலாகும். இச்

சட்டத்தை அறியாமல் மனிதர்களென உங்களைச் சொல்லிக் கொள்ளவோ, உரிமைகளை அறிந்தவர்களெனவோ நீங்கள் பாவனை காட்ட முடியாது. எல்லா உரிமைகளுக்கும் ஆதாரம் ஒரே சட்டமாகும். அதை நீங்கள் நாடாத வரை நீங்கள் கொடுமை யுள்ளவர்களாகவோ, அடிமைகளாகவோ இருக்கலாம். அதைத் தவிர வேறு இல்லை; வன்மையுட னிருந்தால் கொடுமையுட னுவீர்கள்; வன்மையற் றிருந்தால் அடிமைகளுவீர்கள். மிருகம், செடி, தாதுப் பொருள்களி லிருந்து மனிதரின் இயல்பு எப்படி விசேஷமாகின்றதென்னும் சட்டத்தை, மனிதர்களா யிருந்தால் நீங்கள் கட்டாயம் அதை அறியவேண்டும். உங்களுடைய செயல்களையும் அவ்வியல்போடு இயைந்து இலங்கும்படி செய்யவேண்டும்.

உண்மையை உணர்.

(4) கடமை என்னும் மொழியை மொழிந்தவர்களிடம் மனித சமூகம், எல்லா சமயங்களிலும் இவ் வினவையே வினவிற்று; இன்னம் விடைகள் வேற்றுமையாகவே யளிக்கப்படுகின்றது.

(5) சிலர் ஒரு ஸ்மிருதியையோ ஒரு புஸ்தகத்தையோ காட்டி, பூவுலகிலுள்ள எல்லா ஒழுக்கமும் இதில் அடங்கியுள என விடையளித்துளார்கள். ஒவ்வொருவனும் மனதுடன் வினவினல் நன்மை புன்மை எது என்பதை நன்ருய் அறிந்துகொள்வான் என வேறு சிலர் சொல்லியுளார்கள். மற்றவர்கள் மனிதரின் சுயசிந்தனையையே மறுத்து சர்வஜன சம்மதத்தை நாடி சமஸ்த ஜனங்களும் கூடி ஒருமையாய் நம்புவதையே சத்தியமென சொல்லவேண்டுமென்கிருர்கள்.

(6) எல்லாம் பிழையே. மனித சமூகத்தின் சரிதை யானது குற்றமனுகாத உண்மையால் இவ்விடைகளி லுள்ள சூன்யத்தை நிரூபணஞ் செய்துளது. புவியிலுள்ள எல்லா ஒழுக்கங்களும் ஒரே புஸ்தகத்தில் பதிந்துள்ள தென்றும், அல்லது ஒரு மனிதன் மொழியிலேயே மறைந் துள்ள தென்றும் சொல்பவர்கள், பல நூற்றாண்டுகள் ஜனங்கள்நம்பி, வேறு பெருமையடைந்த நூல்மோழியை நாடி பிறகு அர்ப்பணஞ் செய்யாத புத்தகமே புவியில் இல்லை என்பதை, மறந்து விடுகிறார்கள். இதற்கு வேற் றுமையாக ஜன சமூகத்தில் இனி நடைபெறுமென்பதற்கு போதுமான காரண மில்லை.

(7) சத்தியத்தையும் நன்மை புன்மைகளை, சோதனை செய்ய சித்த மொன்றே என ஸ்தாபிப்பவர்கள், மதம் எவ்வளவு புனிதமாயிருந்தபோதிலும், புரட்டர்கள் என புகலப்படுவோரன்னியிலும், சித்தத்தின் பெயரால் பலி யளிக்கத் தயாராகி சித்தத்தை சாதகமாகக் கொள்ள இணங்காதவர்க ளன்னியிலும் ஒரு மதமும் நிலையாக வில்லை என்பதை, ஞாபகத்தில் வைக்கவேண்டும். புதிய மார்க்கமும் பலவகையாகப் பிரிந்து ஆயிரம் வகையான வேற்றுமையை அடைந்துள்ளது. எல்லாம், ஒவ்வொருவ ரது மனச்சாட்சி என்னும் சித்தத்தின் உரிமைகளிலேயே ஸ்தாபனஞ் செய்யப்பட்டதாகும். அவர்கள் பரஸ்பரம் போர்புரிய பிரீதியுடையவர்களாயினர். இப்பொழுது ஐரோப்பாவை வேதனைக் குள்ளாக்கி சமூக, ராஜீயப் பிளவுகளின் ஊற்றுக்கிணறான, நியமமற்ற இந்தநம்பிக்கை யையே இப்புதிய மார்க்கம் நிலையாக ஸ்தாபித்துள்ளது. ஒருவன் மன சாட்சியை நிராகரித்து. சர்வஜன சம்மதத்

திற்கு முறைபாடு செய்பவர்கள், மனிதசமூகத்தின் மேன்மையான விருத்திக்கு உதவியாயிருந்த பெரிய நினைவுகளெல்லாம் முதலில் சர்வஜன சமமதத்திற்கு விரோதமாயிருந்ததென்றும். ஜன சமூகத்தால் இகழ்ந்து தண்டித்து சித்திரவதைக்குள்ளான ஒரு சிலராலேயே உபந்யாசஞ் செய்யப்பட்ட தென்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

சர்வஜன சம்மதம்

(8) ஈசுவரன், சத்தியத்தின் நியமம் நிறைந்த அறிவை தனித் தனி சட்டங்களால் அடைவது அருமையாகும். ஆயினும் ஒருவனின் மனச்சாட்சி புனிதமாகும்; சர்வ ஜன சம்மதமும் புனிதமானதே; இதில் எதையாவது ஒன்றை விடுபவன் சத்தியத்தை அறிவதற்கான ஒரு சிறந்த மார்க்கத்தைச் சேதித்து விடுகிறான். இதுவரை, சத்தியத்தை இதில் ஏதாவது ஒன்றினாலேயே அடைந்து விடலாமென விரும்புவது சாதாரண பிழையாகும், ஆனால் இந்தப் பிழையினால் வரும் பயனோ விபத்துடன் விளங்கி, நிச்சியமான அதோகதியை யளிக்கும். ஒருவன் மனச்சாட்சியே சத்தியத்தைக்காணும் மார்க்கம் என்றால், தடுமாறிப் போவதைவிட வேறு நிலையாகாது. மனித சுதந்திரத்தைச் சிதறடிக்காமலும் கொடுமையிலே தலை கீழாக மூழ்கச் செய்யாமலும், மனோபீஷ்டமில்லாத சன சமூகத்தினிடம் குறித்த காலத்தில் சர்வ ஜன சம்மதத்தை அறிந்துகொள்ளமுடியாது.

(9) வேறு எதிலோ இருப்பதென நாம் எண்ணுவதைக் காட்டிலும், இம் மூல ஆதாரங்களிலேயே எல்லா

சமூக கோபுரங்களும் நிலைத்துள்ளன என்பதற்கு உதாரணங்களையும் அளிப்போம். அப் பிழையிலேயே பதிந்து ஒவ்வொருவரது உரிமைகளைப் பாதுகாப்பதென்பதற்காகவே சமூகத்தின் சிறந்த சந்தேகங்களை மறந்து, ராஜீய சங்கங்களை சிலர் ஸ்தாபனஞ் செய்தார்கள். வேறு சிலர், தனிப்பட்ட ஒவ்வொருவரின் சுதந்திரத்தையும் செயலையும் அழித்து, சமூக உரிமைகளிலேயே இராஜீய சங்கங்களை ஸ்தாபனஞ் செய்தார்கள். புரட்சிக்குப் பிறகு பிரஞ்சு நாடானது, இங்கிலாந்தின் திருஷ்டாந்தத்தால் முதற்சொன்ன திட்டம் எப்படி வேற்றுமையையும் பலர் கொடுமைகளையு மளிப்பதென்பதை நமக்குப் புலனாக்கி விட்டது. பொது ஜன வகுப்பாட்சியானது நிலைக்குமேயானல், இரண்டாவது சொல்லிய திட்டமானது விருத்தியையும் வளர்ச்சியையும் குறைத்து எப்படி சமூகத்தை சடப்பொருளான சிலைபோல் சிதைக்குமென்பதை நமக்குப் புலனாக்கும்.

(10) இப்படி சிலர் ஒருவரது உரிமை என்று சொல்லப்படுவதை சிந்தனை செய்து எல்லா சுதந்திரத்திலும் போட்டி போடுவது என்னும் கற்பனையால், நிகழும் பொருளாதார நிலைமையை ஒற்றுமையாக்குவதென்னும் வேற்றுமையையே செய்தார்கள். மற்றவர்கள், சமூக ஒற்றுமையையே எண்ணி சர்க்காரிடம் எல்லா வன்மை பெருமை விளையும் சூட்சயமங்களையும் அளித்துவிடுவார்கள். இதில் முதற்சொன்ன கற்பனை, தாறுமாறு என்னும் தீமையை யளித்தது. இரண்டாவது சொன்னதோ, சமூகத்தை உயிரில்லாத கட்டை போலாக்கி, கொடுமையின் எல்லாக் கடுமைகளையும் அளித்தது.

(11) உங்கள் உடன் சகோதரரான ஜனங்களின் சாதாரண அபிப்பிராயம், உங்களுடைய மனச்சாட்சி இவ்விரண்டையும் சிறகுகள் போல் எண்ணி, அதனால் அவரை அணுகுவதற்காகவே ஈசுவரன் அளித்துள்ளார். ஒரு சிறகைத் துண்டிக்கவே வேண்டுமென நீ ஏன் வற்புறுத்துகிறாய்? நீ ஏன் தன்னந் தனிமையாய் பிரியவேண்டும் அல்லது உலகத்தில் ஏன் அமிழ்ந்துவிடவேண்டும்? மனச்சாட்சியின் வாக்கை நீ ஏன் திக்கு முக்காடச் செய்யவேண்டும்? அல்லது சர்வ ஜன வாக்கையும் நீ ஏன் சிதறடிக்கவேண்டும்? இரண்டும் புனிதமானவைகளே. ஈசன் இரண்டிலும் பேசுகிறார். அவைகள் இரண்டும் சேருங்கால், ஜன சமூக வாக்கு உன்னுடைய சித்தத்தினால் உறுதியாகும் பட்சத்தில் அங்கேயே அதுவே, ஈசனின் வாக்கென அறியவும்' அங்கு நீ சத்தியத்தை யாதொரு சந்தேக மன்னியில் பற்றுவாய். ஒன்று மற்றொன்றை மெய்ப்பிப்பதற்கே யாகும்.

மனச்சாட்சி

(12) உங்களுடைய கடமை வெறும் விபட்சமாகவும், தீமை செய்யாதிருப்பதும், உங்கள் சகோதரர்களுக்கு ஹிம்சை செய்யாதிருப்பதுமே யானால், சற்று பெருமையடைந்துள்ள இந் நிலையில் உங்கள் மனச்சாட்சியின் ஒலியே பாமரர்களுக்கு வழிகாட்டப் போதுமானது. நன்மைக்கே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள், சட்டத்திற்கு நேர் விரோதமாய் செல்லும் ஒவ்வொரு காலத்திலும், ஜனங்கள் குற்றமென்று கூறும் செயல்களைச் செய்யும் ஒவ்வொரு காலத்திலும், உன் னகத்திலிருக்கும் ஒன்று உன்னைக் குற்

றுஞ் சொல்லும்; உன்னை அதட்டும். அந்த ஒலியை மற்ற வர்கள் காணுமல் மறைப்பதற்குள்ள வன்மையை நீ அடைந்திருந்த போதிலும், உன்னிட மிருந்தே மறைப் பதற்கு உன்னுல் முடியாது. சுபட்சம் எனப்படும் ஆக் கும் வேலைகளே உன் முதன்மையான கடமைகள். செய் யாம லிருப்பது மட்டும் போதாது; நீ செய்தே ஆகவேண் டும். சட்டத்திற்கு விரோதமாய் செய்யவில்லை என்னும் திருப்தியே போதாது; சட்ட ரீதியானவைகளை யெல்லாம் நீ செய்யவேண்டும். தீமை செய்யாதிருத்தலே போதாது; உன் சகோதரர்களுக்கு நன்மையைச் செய்யவேண்டும். இதுவரை ஒழுக்கமென்பது பலருக்கு ஆக்கும் வேலை என் றிராமல் அழிக்கும் வடிவமாகவே இருந்தது. நீ திரு டாதே, ஹிம்சை செய்யாதே என்றே ஸ்மிருதி செய்தவர் கள் சொன்னர்கள். சிருட்டியில் ஈசனுடைய எண்ணத்தை பூர்த்தி செய்வதற்கும், சகோதரர்களுக்கு நன்மையைச் செய்வதற்காகவும், மனிதர்கள் என்பதற்கு அறிகுறியான ஆக்கும் வேலைகளை ஒருவருமே அவர்களுக்குக் கற்பிக்க வில்லை.

(13) இதுதான் ஒழுக்கத்தின் முதன்மையான நோக்கமாகும். மனச் சாட்சியைச் சிந்தனை செய்வதா லேயே அதை அடைய முடியாது.

(14) ஒருவனது மனச்சாட்சி, அவன் கல்வி, சுபா வம், வழக்கம், உணர்ச்சிக்குத் தக்கவண்ணம் அமைகிறது. கானகத்திலே வசிக்கும் காட்டு மிராண்டியின் மனச் சாட்சி, பத்தொன்பதாவது நூற்றுண்டின் நாகரிக மடைந்த ஐரோப்பியனின் மனச்சாட்சிக்கு வேற்றுமை யாகவே வேறு பாஷையில் தொனிக்கிறது. சுதந்

திர மடைந்த மனிதனின் மனச் சாட்சியானது அவன் கடமைகளைக் காண்பிக்கும்; ஆனால் அடிமைக்கு அவன் மனச் சாட்சியோ அதைக் கனவிலும் காண்பியாது, அறிவிலியான புரோகிதனை உபாத்தியாயராயடைந்து, அவன் ஒருவனிட மிருந்து எல்லா ஒழுக்கங்களையும் கற்று படித்தவனுயிருந்தால், சிறிய வழிபாடு என்னும் ஒரு நூலைப் படித்துள்ள சாதாரண தொழிலாளியை நீங்கள் கேட்பீர்களேயானால், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக எந்தக் கூலிக்கும் நாள் முழுமையும் ஊக்மாய் உழைப்பதும், எந்த சட்டமா யிருந்தபோதிலும் கண்மூடியாய்க் கீழ்ப்படிந்து, மற்றவர்களுக்குத் தீமை புரியாம லிருப்பதுமே அவன் கடமைகள் என்பான். உன்னுடைய வேலையின் மதிப்பிற்குக் குறைவான கூலியைப் பெற நீ சம்மதிப்பது, உன் சகோதரர்களுக்குத் தீமை செய்வதாகும் அநியாயச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது உன்னுடைய ஆன்மாவிற்கும், ஈஸ்வரனுக்குமாருக பாபஞ் செய்வதாகும் என்று சொல்லி, தேசத்திற்கும், சமூகத்திற்கும் கடமைகளைச் செய்ய எப்படிக் கடமைப்பட்டிருக்கிருன் என அவனிடம் நீங்கள் சொல்வீர்களானல், புருவங்களை பயமுடன் உயர்த்தி, ஒன்று மறியாதவன் விடை கூறுவதுபோல் பதில் அளிப்பான். சற்று மேன்மையான நிலையில் பழகி, படித்தவர்களின் சகவாசத்தால் சில உண்மைகளை யறிந்துள்ள நமது தொழிலாளிகளை நீங்கள் வினவுவீர்களே யானல் தேசம் அடிமையாய்விட்டது, கேவலம் பொருளாசையிலும் ஒழுக்க ஈனத்திலும் வாழும் படியான அநியாய நிலை ஏற்பட்டுவிட்டது என அவன் மறுமொழி கூறி, அவன் சக்திக்கேற்றவாறு இந்த அநீ

தியை மறுப்பதே அவன் கடமை என உணர்வதாக சமாதானஞ் சொல்வான்.

ஒரே காலம், ஒரே தேசத்திலுள்ள இரு மக்களுள்ளும் ஏன் வேற்றுமையானதூண்டுதல் நிகழ வேண்டும்? மனிதர்களின் விருத்திக்கும் மேன்மைக்கும் சாதகமாயிருப்பது இந்த சித்தாந்தமே என ஒரு மதத்தைச் சொல்லும் பத்து மனிதர்களில் இந்த சித்தாந்தத்தைச் செயலில் காண்பிக்குங் கால், பத்து விதமான கொள்கைகளை ஏன் அடைகிறார்கள்? எல்லாவிதமான நிலைகளிலும் மனச்சாட்சியின் வாக்கு ஒன்றே போதாதென்பது இதனால் தெரிகின்றது. சட்டத்தை அறிந்துகொள்ள வேறு வழியன்னியில் அது ஒன்றே அவ்வளவு பயனை விளைவிக்காது. சட்டங்கள் இருப்பதெனவே மனச்சாட்சி நமக்குக் கற்பிக்கலாம்; ஆனால் கடமைகளால் குணமாகும் இயல்பை அது கற்பிக்க முடியாது. மமதை அதிகமிருந்த காலத்திலும் இக்காரணத்தாலேயே தேசத் தியாகம் செய்யாதவர்கள் இல்லாமலில்லை. இப்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் பகிரங்கமாய் விளங்கும் பிழைகளுக்கு கடமைகள் என மனதில் கனவு கண்டு, எவ்வளவு பேர்கள் தங்கள் தேசத்தைத் துறந்துளார்கள்.

அறிவுடைய ஜீவன்

(15) உங்களைச் சூழ்ந்த இருளைக்கடப்பதற்கான ஒளி வீசும் தீபஸ்தம்பம் உங்கள் மனச் சாட்சிக்கு அவசியமாகும். அதுவே உங்களை நேர்மையாக்கி உறுதியுடன் இருக்கச் செய்யும். அத்தகைய தீபகற்பமான நியமமே, அறிவும், சனங்களுமாகும்.

நீங்களே சற்று, அவருடைய சட்டங்களை அறிந்து கொள்வதற்கு ஈசன் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவைக் கொடுத்துள்ளார். பல நூற்றுண்டுகளின் பிழைகளால் வேரூன்றியுள்ள இந்த தரித்திர நிலையும் உங்கள் அதிகாரிகளின் பிடிவாதமும் கல்வியைக் கற்பதற்கு பெரும் தடையாயிருக்கின்றன. ஆதலால் இந்தத் தடைகளையெல்லாம் வல்லமையால் தொலைக்கவேண்டுவது அவசியமாகும். இந்தத் தடைகளை யெல்லாம் தொலைத்தபோதிலும் அறிவொன்றே ஈசனின் சட்டத்தை உங்களுக்குக் கற்பித்துவிடாது. அதற்குச் சாதகமாய் மானிட சமூகத்தின் மதியின் உதவியே வேண்டும். உங்களுடைய வாழ்க்கையோ அற்பம், ஒவ்வொருவரது அறிவோ சொற்பமாகும். திறமன்னியிலுள்ள அதற்கு ஆதாரம் வேண்டும். ஈசன், உங்கள் உதவிக்காக உங்களுடன் தொடர்பாயுள்ள ஒரு சீவனையளித்துளார். நாலாயிர வருஷங்களுக் கதிகமாய், எல்லா ஜனங்களின் அறிவையும் ஒருமைப்படுத்தி, தனித்தனி மனிதர்கள் பிழைகள் குற்றங்கள் செய்த போதிலும், அறிவு அமுதத்திலேயே பாய்ந்துள்ளதாகும். அச்சீவன் அதன் ஒவ்வொரு அங்கத்திலும் யுகத்திலும் ஈசனுனவன் என தன் சட்டத்தின் ஒரு மொழியை எழுதியுளார்.

இந்த சீவனையே ஜனசமூகம் அல்லது ஜனநாயகம் என்பது.

கடந்த நூற்றுண்டில் ஒரு அறிஞர் உரைத்ததுபோல், ஜன சமூகமானது எப்பொழுதும் கற்ற வண்ணமாகவே யுளது. மனிதர்கள் மறையலாம்; அவர்கள் பிரகாசஞ் செய்த உண்மையும், அவர்கள் செய்த நன்மைகள் யாவும்

அவர்களுடன் மறையாது. ஜன சமூகம் அதை பெரும் பொக்கிஷம் போல் சேர்த்துள்ளது. அவர்கள் இறந்த நோக்கத்தை அறிபவர்கள் அதன் ஆதாயத்தைப் பெறு வார்கள். இது வரை சென்ற மனிதகோடிகளால் விடப் பட்ட எண்ணம், நம்பிக்கையின் நடுவில் நாம் பிறந்து ளோம். வரப்போகும் சமூகத்திற்கு அவசியமான ஒரு மூலப் பொருளை, நம்மை யறியாமலே நாம் கொண்டு வந் துளோம். பாதையில் செல்லும் ஒவ்வொருவரும் ஒரு கல்லைச்சேர்த்து பெருங் கோபுரங்கள், எகிப்து தேயத்தில் காணப்படுவது போல் ஜன சமூகத்தின் கல்வியும் பெரு மையும் அடைகின்றது. பாதையில் செல்லுபவர்களாக நாமும் இருந்து நமது கைங்கரியத்தை செய்யவேண்டும். நம்மில் ஒவ்வொருவ ரிடத்திலும் மின்னல் போலவே அது மின்னுகின்றது. ஆனால் அவ்வறிவு மெதுவாகவும், நிரந் தரமாயும் மேன்மையாக தொடர்ச்சியுடன் ஜன சமூகத்தி லேயே தென்படுகின்றது. ஜன சமூகம் என்னும் மனிதத் தன்மையிலேயே ஈசுவரனின் ஜீவ மொழிகள் உள. ஈசுவர னின் உணர்வு அதை பயன்படும்படி செய்கின்றது. ஒவ் வொரு யுகத்திலும் அதை அதிகப் புனிதமாகச் செய்து, அதிக முயற்சியுடனுக்கி பயன்களை விளைவிக்கும். இது தனி நபர் மூலமாகவோ, அன்றி ஒரு கூட்டத்தின் மூல மாகவோ பிரதிபலிக்கும். முயற்சியிலிருந்து முயற்சி, நம் பிக்கையிலிருந்து நம்பிக்கையாக ஜன சமூகமான மனிதத் தன்மையானது, அதனுடைய ஜீவன் சுயுரூபத்தைப் படிப் படியாக தெளிவுப்படுத்திக் கொள்ளும். அது அந்த மார்க் கத்திலேயே அதன் சந்தேகத்தையும், ஈசனையும், அவன் சட்டத்தையும் அறிந்து கொள்ளும்.

ஈசன் தானுகவே ஜன சமூகத்தில் தொடர்பாகத் தோன்றுகிறார்; ஈசனின் சட்டமோ ஒன்று; ஏனெனில் ஈசனே ஒன்று, நாம் அதைப் படிப்படியாகவும், அணு அணுவாகவுமே அறிந்து கொள்ளுகிறோம். யுகங்கள் தோறும் தோன்றும் தெள்ளிய அனுபவத்தையும், பல ஜனங்களின் நெருங்கிய, விரிந்த சேர்க்கை சிறப்பினுலுண்டாகும் பெருமையையுமே நாம் படிப்படி அணு அணுவான அனுபவமென்பது. ஒருவன், அல்லது ஒரு கூட்டம், ஒரு நூற்றுண்டில் இந்த உண்மையின் பரிபூர்ணத்தை கண்டு பிடித்ததாக கூற முடியாது. எல்லா மனித சமூகமும் ஒன்ருக சேர்ந்து, எல்லா வன்மையும் மனிதர்களின் எல்லா அறிவும் ஒருமிக்க விருத்தியாகி தேர்ச்சியடைந்து, ஜன சமூகம் திறமையுடன் ஆனல், அப்பொழுதே ஜனசமூகச் சட்டத்தையும், ஒழுக்கத்தின் ஒழுங்கான மார்க்கத்தையும் ஒருமையுடனறியலாம். ஆனல் அதுவரை கல்வியில் அதிகத் திறமையை தேர்ச்சியில் நாம் கோரும் சட்டத்தின் ஒரு பகுதியை நமக்கு அறிவிக்கின்றது. அதன் சரிதையில் ஈசுவரனின் நோக்கத்தை நாம் காண்கிறோம்; அதன் அவசியங்களில் நமது கடமைகளை அறிந்து கொள்கிறோம். அவசியங்களில் என நான் சொன்னது எதற்கென்றல், காலங்களுக்கேற்றவாறு கடமைகள் மாறும். ஈசுவரனுக்கும், காலங்களுக்கும் பிரயத்தனம் செய்துள்ள கல்விக்கும், விருத்திக்கும், ஜன சமூகத்தை எழுப்பி ஒற்றுமையாக்குவதே நமது முதற் கடமையாகும்.

ஒழுக்கத்தின் முன்னேற்றம்

ஆதலால் ஈசுவரனின் சட்டத்தை அறிந்து கொள்ள உங்கள் மனச் சாட்சியை மாத்திரம் நீங்கள் கேட்கவேண்டுவதன்னியில், ஜன சமூகத்தின் சித்தத்தையும், சாட்சியையும் நீங்கள் வினவவேண்டும். ஜன சமூகத்தின் கல்வியும், உங்கள் கல்வியும் எப்படியோ அப்படியே, ஒழுக்கமென்பது, மேன்மேலும் விருத்தியாவதேயாகும்; தர்மம் அறிந்தவர்களின் ஒழுக்கம் தர்மமற்றவர்களின் ஒழுக்கம் போலிராது; இந்த நூற்றாண்டின் ஒழுக்கமானது கடந்த நூற்றாண்டின் ஒழுக்கம்போலாகாது, இன்று உங்கள் அதிகாரிகள், மற்ற வகுப்பினர்களிட மிருந்து எங்களைப் பிரித்து, எல்லாச் சங்கங்களையும் தடை செய்து, அச்சுக் கூடங்களுக்கு அதிகமாய் இடையூறுகளுடன் தடைசெய்து மனித சமூகத்திற்கு அவசியமானவைகளுடன் கூடிய உங்கள் கடமைகளை உங்களிடமிருந்து மறைக்க முயலுகின்றார்கள். ஆனால் கூடிய சீக்கிரம் தேசமானது, கடந்த ஜன சமூகத்தின் சரிதையான கல்வியை, இலவசமாகக் கற்பிக்கும். நிகழும் அவசியமானவைகளையும் கற்பிக்கும். நீங்கள் விரும்பினால் அக் கல்வியின் பகுதியாவது மறு ஜன சமூகத்தைப் புனிதமாக்க உங்களால் முடியும். ஒவ்வொரு தேசத்திலும், தினந்தோறும் நடைபெறும், துராக்கிரகமும், பக்குவமற்ற செயல்களும், மனித சமூகத்தின் மெய்யான அவசியங்களை விளக்குகின்றன. ஏனெனில், அணுவும் அசையாத மௌனமே ஒரு முடிவான சட்டமாகாது. அடிமை நாட்டிலுள்ள என் சகோதரர்களே! அவைகளை அறிவதிலிருந்து உங்களைத் தடுப்பது எவர்? அன்னிய நாட்டில் யாத்திரை செய்யும் பலரை அடைந்துள்ளவும்,

இலட்சக் கணக்கான ஜனங்களுடனுன நமது இத்தாலிய நாட்டினிரிடமிருந்து ஐரோப்பிய சரிதையை அறியும் வன்மையை யழிக்கும் சக்தியுள்ள சம்சயமுடனுன கொடுமையுள்ளவன் எவன்? பகிரங்கசபைகள் கூடாது என தடுக்கப்பட்டால், இரகசியமான சங்கங்களை தடுக்க எவனுல் முடியும்? ஆனுல் அது வெளிச்சின்னங்களை யொழித்து கலக்கமான சபைகளன்னியில் சகோதரச் சங்கிலி யொன்ருலேயே இணைக்கப்பட்டு, நாட்டின் எல்லையிலுள்ள எல்லா நிலைகளிலும் நேர்மையாக வேண்டும். உங்கள் கடல் நிலத்தின் எல்லைகளில், உங்களுக்குத் துணைபுரிவேன் என்று வந்ததற்காக, உங்கள் அதிகாரிகளால் தேசத்தினின்று துரத்தப்பட்ட உமது உண்மையான நண்பர்கள், தேசபக்தர்களை ஒவ்வொரு நிலையிலும் நீங்கள் காண்பீர்கள். சத்தியத்தின் தூதர்கள் போல் அவர்கள் உங்களுக்காகி, ஜனசமூகத்தின் புராதன அனுபவம், நிகழ்ச்சியின் விருப்பம், முதலியவற்றை, அவர்களுடைய கல்வி, அக்ஞாதவாசத்தால், உங்கள் மேலுள்ள அன்பின் மிகுதியால், உங்களுக்கு உரைப்பார்கள். நீங்கள் இஷ்டம் வைத்து விரும்பினுல், உமது சகோதரர்கள் அக்ஞாதவாசத்தில் உங்களுக்காக அச்சடிக்கும் நூல்களை, அதை பெறச் செய்யாமல் தடுப்பவன் எவன்? உங்கள் அதிகாரிகளால் அனுப்பப்படும் சித்திரவதை செய்வோர்கள், மறுதினம் வந்து உங்கள் குடும்பத்தை குற்றவாளிகளாக்காமலிருக்க அதைப் படித்து உடனே நெருப்பிலிடவும். நமது நோக்கங்களை விருத்தி செய்யவும், பொதுப்படையான சரிதைகளை எழுதி பிரசுரஞ் செய்யவும், உங்கள் தேசத்தின் சரிதையை எழுதவும், உங்களது காணிக்கைகளைக் கொடுத்து எங்களுக்கு உதவவும். அவை

களை எங்கும் பரவச் செய்வதற்கான போக்குவரவு சாதனங்களைப் பெருக்கி எங்களுக்கு உதவவும், உங்களுடைய கடமைகளை கற்பனையன்னியில் ஒரு நாளும் அடையமாட்டீர்கள் என்பதை நிச்சயமாக அறியவும்; சமூகமானது நீங்கள் கற்பதற்கு அனுமதிக்க வில்லையானால், ஒவ்வொரு குற்றத்தின் பொறுப்பு உங்களுடையதாகாது. ஆனால் சமூகத்தி னுடையதாகும். உங்களுக்கு சந்தர்ப்பமளித்து நீங்கள் கற்கவில்லையேயானால் அப்பொழுதிலிருந்தே உங்கள் பொறுப்பு ஆரம்பமாகும். உங்களை அறியாமையில் அமிழ்த்தும் சமூகத்தை அடியோடு மாற்றுவதற்கு சந்தர்ப்பம் தோன்றினால், அப்பொழுது உடனே அதை பயன்படுத்தித் கொள்ள முயலாமலிருக்கும் தினத்திலிருந்து உங்கள் பொறுப்பு ஆரம்பமாகும். நீங்கள் அறியவில்லை என்பதினாலேயே குற்றமற்றவராக மாட்டீர். நீங்கள் அறியாமையிலிருக்கவே நீங்கள் ஆத்மதானஞ் செய்வதால் நீங்களே குற்றமுள்ளவராவீர்கள். புலன்களுடன் அதை விருத்தி செய்யவும். கடமைகளையும் அவர் அளித்துளார் என அடிக்கடி மனம் தூண்டியும், நீங்கள் சிந்தனை செய்யும் புலனை ஆன்மாவில் உறங்கும்படி செய்கிறீர்கள். உங்களுக்குச் சத்தியத்தில் அன்பை, அதைப்பற்றும் வன்மையன்னியில் ஈசன் அளித்திருக்கமாட்டார் என நீங்கள் அறிந்திருந்தும், நிராசையாகி அதைத்தேடும் முயற்சியை விட்டுவிட்டு, சற்று வெற்றியடைந்துள்ளவன் வன்மையின் விளக்கத்தையும், அவ்வன்மைக்கு தன்னையே விற்பனை செய்துள்ள புரோகிதனின் மொழிகளையுமே சத்தியமெனக் கருதுகிறீர்கள்.

(20) பரம பிதாவான பரமன், ஜனசமூகத்தின் ஆசாரியன். அவனுடைய சட்டத்தை காலத்திலும், நிலையிலும்

ஜனங்களுக்கு பிரகாசஞ் செய்கிறான். ஒரு நூற்றாண்டின் குறிப்பிட்ட ஜன சமூகத்தினிடமாவது, அல்லது குறிப்பிட்ட கருத்துக்களை உடையவர்களிடமாவது, அது முழுமையுமிருப்பதாக எண்ணாமல், எல்லா நூற்றாண்டுகளிலும், சென்ற, நிகழும் பெரும்பான்மை ஜனங்களான, அந்த சகோதரர்களான சபையிலே ஜனசமூகத்தின் சூட்சமத்தை வினவவும். உனது மனச்சாட்சியின் ஒலியானது ஜன சமூகச் சித்தத்துடன் இணைந்தால் அதுவே சத்தியமென்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளவும்; அப்பொழுதே ஈசுவரனின் சட்டத்தில் ஒருவரியை அறிந்துள்ளதாக நிச்சயமாக எண்ணவும்.

நாங்கள் ஜனசமூகத்தையே நம்புகிறோம். புவியிலேயே பரமன் சட்டத்தை விளக்குபவன் அவன் ஒருவனேயாவன். நமது மனச்சாட்சியுடன் சர்வஜன வாக்கு இணைந்தால் எதை நாம் அறியலாமோ அடியில் கண்ட அதையே நாம் சொல்லப் போகிறோம்.

அத்தியாயம் 13.

சன சமூகமும் நமது கடமையும்—தேசபக்தி—உபாசனைகள்—சமூக ஐக்கியம்—அந்நியர் வியாபாரம் — பிறற்கேனை வாழுங்கள்.

ஜனசமூகத்திற்குச் செய்யும் உங்களுடைய முதற் கடமைகளை காலத்தின் பரிமாணத்தினாலேயே நாம் காண முடியாது. எது முதன்மையானதோ அதுவே உங்களின் முதற்கடமைகளாகும். இதை நீங்கள் அறியவில்லை

யானுல். மற்றவைகளை யெல்லாம் குறைவாகவே நீங்கள் நிறைவேற்றமுடியும். நகரவாசிகள், புத்திரர்கள், புருஷர்கள், தந்தைகள் என பலவகைக் கடமைகள் உங்களுக்குண்டு. புனிதமாய் மீறக்கூடாத இக் கடமைகளைப்பற்றி நான் இப்பொழுது பேசுகிறேன். மனிதர்களாகப் பிறந்த நிலையே உங்கள்பேரில் சுமத்தப்பட்ட இக்கடமையானது என்புனிதமாகவும், மீறக் கூடாததுமான, சந்தேகமாயிருக்கவேண்டும்? ஈசுவரனுடைய சட்டத்தைச் சிறப்பாக்கி, உபாசனை செய்யவேண்டுமென்பதை மனிதர்களுக்குக் கற்பிப்பதற்காகவே நீங்கள் தந்தைகளாவது. நீங்கள் நகரவாசிகள், உங்களுக்கு ஒரு நாடு உண்டு. இவைகளெல்லாம் எதற்காக? குறிப்பிட்ட உங்களுடைய சிறிய நாட்டிலுள்ளவும், மொழி, சுபாவம், வழக்கம் முதலியவற்றுல் இணைந்து உங்களது ஜனங்களுக்கு அவர்கள் எப்படி இருந்தாலும், எதிர்காலத்தில் எப்படியாவது ஆனபோதிலும், அவர்களின் எல்லாருடைய நன்மைக்கும் பாடுபடுவதற்கேயாகும். இதைத் தன்னந் தனிமையாகவே ஒருவன் செய்யமுடியாது. ஆயிரக்கணக்கான தன் சகோதரக் கூட்டங்களின் நடுவே தனிமையாயுள்ளவன் பலம் குன்றி மறைந்துவிடுவான். உமது குடும்பம் தேசத்திற்கே எல்லாத் தொண்டையும் செய்வது கடமை என குறுகிய கருத்துடன் கூறுபவர்கள் சற்று ஏற்றத் தாழ்வான தன்னல அகங்காரத்தையே உரைப்பவர்கள். இதனுல் அயலார்களுக்குத் தீமையாகும். அதுவே உங்களுக்கும் முடிவில் தீமையை யளிக்கும். தேசமும் குடும்பமென்பது பெரிய சக்கரத்தில் பதிந்துள்ள இரு சக்கரங்கள் போலாகும். ஏணியின் இருபடிகள் போலாகும். ஏதாவது ஒரு

படி யன்னியில் நாம் மேலேறுவது கஷ்டமே. ஆனால் ஏணிப்படியிலேயே நீங்கள் நிலைக்கப்படாது எனவும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

நீங்கள் மனிதர்கள், பகுத்தறிவும் பரஸ்பர சேர்க்கையினாலேயே பலத்தை அடையும் சமூகப் பிராணிகள். அதன் விருத்திக்கு எல்லையை விளக்கஞ் செய்பவர் ஒருவருமில்லை. சமூகத்திற்கு அளிக்கப்பட்ட, நாம் தற்காலத்தில் அறியும் சீவனின் சட்டம் இதுவேயாகும். இந்த இயல்பே மனித இயல்பில் கண் கூடாவது; நம்மைச்சுற்றியுள்ள சீவன்களிட மிருந்து இக்குணங்களே நம்மை பெருமையாக்குவது. இந்த பொறுப்பான வித்தை மரமாக்குவதற்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டுள. உங்கள் இயல்பின் முதற் புலன்களான இவைகளை ஒழுங்காய் விருத்திசெய்து உங்கள் சீவ வாழ்க்கை முழுமையும் பயன் செய்ய முயலவேண்டும். இப்புலன்களில் அல்லது அறிவில் ஒன்றை நீங்கள் அழுத்தினபோதிலும் அல்லது எல்லா அறிவையும் பகுதியாகவோ, பூர்ணமாகவோ நீங்கள் அமிழ்த்தினால் நீங்கள் மனிதர்கள் நிலையினின்று விழுந்து தாழ்ந்த மிருகங்களின் அந்தஸ்தை அடைகிறீர்கள். அதனால் ஈசுவரனின் சட்டமான உங்களது வாழ்க்கையின் இயல்புக்கு விரோதமாகிறீர்கள்.

உங்களிலோ அல்லது மற்றவர்களிலோ விளங்கி மனித இயல்பை இலங்கச்செய்யும் அறிவை நீங்கள் அமிழ்த்தியோ அல்லது அமிழ்த்தப்படுவீர்களானால் மிருகங்களின் நிலையில் விழுந்து ஈசுவர சட்டத்திற்கு விரோதமாகிறீர்கள். ஈசுவரன் தன்னுடைய சட்டத்தை ஒவ்வொருவரிடமும் தனிமையாக நிறைவேற்றுவதையே

விரும்பி இருந்தால் உங்களைத் தனிமையாகவே சிருஷ்ட்டி செய்திருப்பார். ஆனால் பூமி முழுவதும், தன் சாயையி லுண்டான எல்லா சீவன்களிடத்திலும் அது நிறைவேற வேண்டும். நித்திய புனிதத்தின் நினைவும், அன்பும் இவ் வுலகில் தினந்தோறும் வெற்றியுடன் அதிகரித்து, அதிகம் போற்றப்பட்டு நன்றாய் விளங்கவேண்டுமென்பதே அவர் விருப்பம். உங்களுடைய தனிமையான புவியின் வாழ்க்கை, அற்பமான வன்மையையும், குறுகிய காலத்தையுமே யடைந்துள்ளதால் அவர் இயல்பை அபூர்ணமாயும், பின்ன மாயுமே கொஞ்சமாய் விளக்கமுடியும். முழுமையான ஜன சமூகமே பல தலை முறைகளின் மூலமாகவும், புவியி லுள்ள தனித்தனி அறிவால் போஷிக்கப்பட்ட பொது அறிவாலேயே ஈசுவரனின் இயல்பை மெதுவாக விளக்க வும் பயன் செய்யவும் பிரகாசஞ் செய்யவும் முடியும். ஜன சமூகத்தின் மேன்மைக்கு உதவி செய்யவே உங்க ளுக்கு சீவனையும், உங்கள் சொந்த அறிவை ஜன சமூகத்தினறிவை விருத்தி செய்வதற்காகவுமே ஈசன் அளித்துளார். அத்தகைய பொது நன்மைக்கு பேரா தாரமாக வேண்டுமென்பதற்கும் சத்தியத்தைக் காண் பதற்குமே, நீங்கள் பணிகளை செய்யவேண்டும். இதுவே அவர் கருத்து. இதையே பல தலை முறைகள் ஜனங்கள் மெதுவாய் ஆனால் நிச்சயமாக செய்துவருகிறார்கள். நீங் கள் தானாகவே கல்வி பயில வேண்டும்; மற்றவர்களையும் கற்பிக்கவேண்டும். நீங்கள் ஒழுக்கமாக வேண்டும். மற்ற வர்களையும் ஒழுக்கமாக்கவேண்டும். சந்தேகமன்னியில் ஈசுவரன் உங்களகத்தில் உளார். ஆனால் அப்படியே இப் புவியிலுள்ள ஒவ்வொருவரிலும் அவர் இருக்கிறார். இது

வரை சென்றுவிட்ட இப்பொழுது நிகழும், எதிர்காலத்தில் தோன்றும் எல்லா ஜனங்களின் சீவன்களிலும் அவர் உளார். இதுவரை விருத்தியான, விருத்தியாகும் ஜனங்களிலும், அவனைப்பற்றிய எண்ணங்களிலும், அவர் சட்டங்களிலும், நமது கடமைகளிலும் அவர் உளார். அவர் எங்கிருந்தபோதிலும் அவரை உபாசனை செய்து நீங்கள் போற்றவேண்டும். பிரபஞ்சமே அவர் தேவாலயமாகும். எதற்காகவும் பிராயச் சித்தஞ் செய்யாத தேவாலயத்தின் தேவ நிந்தனைகளை எல்லாம் நம்புகிறவர்கள் என்பவர்களிடத்திலேயே அது நிலவும். தீமைகள் உங்கள் சமீபம் இருந்து, அதை நீங்கள் தகர்க்காதவரை உங்களின் கடமைகளுக்கு நீங்கள் பொய்யாவ தன்னியில், நீங்கள் தீமையினின்று தனிமையாகி புனிதமாயிருக்க இயன்ற போதிலும், நீங்கள் புனிதமெனச் சொல்லிக்கொள்வது வெறும் பேச்சே யாகும். நமது ஒரே தாயின் மக்கள்களான நமது சகோதரர்கள், எந்த மூலையிலாவது பிழையிருக்குங்கால் உங்கள் மனதால் சத்தியத்தை உபாசிக்கிறேன் என்பதனால் பயன் ஒன்றுமே இல்லை. அப் பிழைகளை உங்கள் பலத்திற் கேற்றவாறு சிதறடிக்காத வரை உங்கள் கடமைகளுக்கு நீங்கள் வஞ்சகர்களாவீர்கள். உங்கள் சகோதரர்களான நித்திய ஆன்மாக்களில் ஈசனின் சாயையானது சிதைக்கப்பட்டுள்ளது. ஈசனை அவருடைய சட்டத்திலேயே நாம் உபாசனை செய்யவேண்டுமென அவர் விரும்புகிறார். ஆனால் அவருடைய சட்டமோ தப்பு வியாக்கியானஞ் செய்யப்பட்டு, சீர்குலைந்து உங்களைச் சுற்றி எல்லாம் நிராகரிக்கப்பட்டுள. ஈசன் தன் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தி

யள்ள ஜனசமூகமானது தன்னைத் தானே வஞ்சகஞ் செய்துகொள்ளுகிறது, நீங்கள் சோம்பலா யிருக்கும் பொழுது நம்பிக்கையுள்ளவர்களென உங்களையே எங்ஙனம் அழைத்துக்கொள்வீர்கள்.

ஏதோ ஒரு தேசத்திய ஜனங்கள் கிரேக்கர்கள், போலிஷ் நாட்டினர்கள், காக்கஷியர்கள், தேசீய கொடியை, சுதந்திரநாதத்தைக் கிளப்பி சண்டைசெய்து. வெற்றியாகி, அதற்காக உயிரையும் அளிக்கிறார்கள். அந்தச் சண்டைகளின் கதையைக் கேட்குங்காலத்தில் ஏன் உங்கள் நெஞ்சு துடிக்கவேண்டும். ஒருவன் உங்கள்தேச வாசியாகவேஇருக்கலாம். எல்லாரும்அமைதியாயிருக்கும் பொழுது ஏதாவது மூலையில் அவன் சத்தியமென்றுதான் நம்புவதை தீரமாய் உரைத்து தண்டனை, சிறைச்சாலைக்கும் அஞ்சாமல் அதை ஸ்தாபனஞ்செய்து, தூக்குமேடையிலும் அதை கர்ஜனை செய்கிறான். சன்னியாசி என்றோ, தியாகி என்றோ உரைத்து அவனை ஏன் நீங்கள் மரியாதை செய்யவேண்டும். உங்கள் குழந்தைகள் அவர்கள் ஞாபகத்தில் மரியாதை யாகும்படி கற்பித்து நீங்களும் ஏன் மரியாதையுடன் எண்ண வேண்டும்.

தேச பக்தி

கிரேக்கர்களின் கதையில் எழுதப்பட்டுள்ள தேசீய பக்தி ததும்பும் அற்புதங்களை அவாவுடன் நீங்கள் ஏன் படிக்கிறீர்கள். உங்கள் பெற்றோர்களின் கதைபோலவே எண்ணி, சற்று பெருமையான உணர்வுடன் குழந்தைகளுக்கு நீங்கள் ஏன் கூறவேண்டும்? அந்த கிரேக்கர்களின் செயல்கள் இரண்டாயிரம் வருஷங்களாய் விட்டது, அத்

தகைய நாகரிக யுகம் உங்களுடையதுமில்லை. நீங்கள் அடையவும் இயலாது. தியாகி எனச்சொல்லப்படுபவன் நீங்கள் கருதாத ஒரு எண்ணத்திற்காக ஒரு வேளை இறந் திருக்கலாம். அவன் தானுகவே அங்ஙனம் இருந்ததால் புவியில் தான் பெருமையாவதைப் பாழாக்கிக் கொண் டான். வெற்றியிலும், தோல்வியிலும், நீங்கள் போற்றும் ஜனங்கள் அன்னியர்களும், ஒருவேளை அறியாதவர்களே யாகும். பாஷையோ வேறு. அவர்கள் வாழ்க்கைக்கும், உங்களுக்கும் சம்பந்தமே இல்லை. அங்கு சுல்தான் ஆண்டாலென்ன, பவேரியா அல்லது ருஷிய மன்னனின் செங்கோலே அங்கிருந்தாலென்ன ? அல்லது ஜனங்களிஷ் டம்போலவே சர்க்கரர் இருந்தால் என்ன? ஆனுல் உங்க ளுடைய சித்தத்தில் தோன்றுவது என்னவென்றுல்— இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஜனங்கள் வெகுதூரத்திற் கப்பாலிருந்து நமக்காக யுத்தம் புரியும் அவர்கள், நீங்கள் சாவதற்கு இயலாத சித்தம் சிறந்த அந்தத் தியாகிகள் அப்பொழுதும், இப்பொழுதும் உங் கள் சகோதரர்களாகும். உற்பத்தியும் இயல்பினுலேயே சமூக சகோதரர்களன்னியில் செயலிலும் சித்தத்திலும் சமூக சகோதரர்களாகும். பழைய கிரேக்கர்கள் மறைந்து விட்டார்கள் ; ஆனுல் அவர்கள் செயல்களோ இன்னம் அழியவில்லை. நீங்கள் இப்பொழுது அடைந்துள்ள அறிவு ஒழுக்கத்தின் விளக்கத்தை அச் செயல்களன்னியில் நீங் கள் இந் நிலையில் நிலவ முடியாது. நீங்களும் இப்பொழுது சண்டை செய்வதுபோல் அவர்களுடைய தேசீய சுதந்திர சித்தத்திற்கு தங்கள் இரத்தத்தால் பலி யளித்தார்கள், தியாகி தன்னுடைய சாவினுல் மனிதர்கள் எல்லாப்

பொருள்களினின்றும் பிரியவேண்டுமென்பதைபகிரங்கஞ் செய்தார். அவசியமானல் தான் சத்தியமென்று எண்ணுவதற்கு உயிரையும் அளிக்கவேண்டும். இரத்தத்தால் தங்கள் நம்பிக்கையை முத்திரை செய்தவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையின் மேன்மையைக் குறைத்ததினல் கவலை கொள்வதில்லை. ஈஸ்வரன் அவர்களுக்கு வேறு எதிலோ நிறைவேற்றுகின்ருர். ஆனல் ஜன சமூகத்தின் விருத்தியோ அவசியமாகும்.

உங்களுடைய எதிர்ப்பு தியாகங்களால் கற்பிக்கப்படும் வரும் சந்ததிகள் சத்தியத்தை அறிந்து கொள்வதிலும் உபாசிப்பதிலும், மேன்மையாய் மலர்ந்து வன்மையில் வளரவேண்டுவது அத்தியாவசியமே. மனிதர்கள் இயல்பு அனுபவங்களால் திறமையுடனுகி திடமுடனுகி, புவியில் பரமனுடைய விருப்பத்தை அதிகமாய் அறியவேண்டுவது மிக்க அவசியமே. மனிதர்கள் இயல்பு மேன்மையாகி, புதிய உண்மை புலனுகி கல்வி, விருத்தி, ஒழுக்கம் முதலியவைகளில் ஒரு படி முன்னேறும் பொழுதெல்லாம், மானிட முன்னேற்றத்தில் அது ஒரு உயர்ந்தபடி என எண்ணவும். அது ஒரு லாபமாகும். அது இப்பொழுதோ பிறகோ எல்லா ஜனசமூகத்திற்காகவும் பயனை அளிக்கும். ஒரே யுத்தத்தில் வெற்றியை யடைய, பல வழிகளில் செல்லும் சைனியங்களின் சிப்பாய்களே நீங்களாகும். ஆனல் நீங்கள் நெருங்கிய தலைவர்களையும், பற்பல உடைகளையும், வேற்றுமையான கட்டளையுமே நீங்கள் இப்பொழுது பார்க்கலாம். போர்புரியும் பலர் தூரமாயிருப்பதாலும் இடையிலே மலைகள் அவர்களை மறைப்பதாலும் நீங்கள் உண்மையான நிலையை அறியமுடியவில்லை. உங்களுடன் நெருங்கி

யுள்ள முடிவான நோக்கத்திலேயே நீங்கள் கண்ணுங் கருத்துமாய் நிலையுடனிருக்க வேண்டும். பூர்ணமாய் முழு மையும் பார்த்து எல்லா முயற்சிகளுக்கும் வழிக்காட்டும் ஒருவன் உங்களெல்லோருக்கும் உயர்ந்தவனு யிருக்கிறுன். போரின் இரகசியத்தை ஈசுவரனே அறிவான்; ஒரே கொடி யின் கீழ் ஒரே கூடாரத்தில், உங்கள் எல்லாரையும் சேர்க்க வல்லவன் அவனே.

உபாசனைகள்

நமது ஆன்மாக்களில் அதிர்ச்சி செய்யும் இவ்வெண் ணம், இனி வரப்போகும் புதிய ஒழுக்க யுகத்தின் ஆதர வான இது, பழைய காலத்தின் புழுக்கத்திற் காதரவா யிருந்த எண்ணத்துடன் எவ்வளவு விரிந்த வேற்றுமையுட னிருக்கின்றது? தெய்வீக சர்க்கார் என எண்ணும் எண்ண மும், கடமைகளைப் பற்றி எண்ணும் எண்ணமும் எவ்வளவு நெருங்கிய சம்பந்தத்துடனுள்ளது! ஆதியிலுள்ள மனிதர் ஈசனை அறியாமல் உணர்ந்தார்கள்! அவனுடைய சட்டத் தில் அவனை அறிவதற்கு முயலாமல், அவனை வன்மையிலே யே உணர்ந்தார்கள்; ஆனல் அன்பினு லறியவில்லை. மனி தர்களுக்கும், அவனுக்கு முள்ள சம்பந்தத்தை ஏதோ கலங்கின கருத்தினுலேயே யறிந்தார்கள். அதைவிட அதிக மாய் அறியவில்லை. புலன்களுக்கு நன்ருய்ப் புலனுகும் புறப்பொருள்களி லிருந்து அவனைத் தனிமையாய்ப் பிரிக்க அவர்களுக்கு முடியவில்லை. அடியிற்கண்டவைகளில் அவ னைக் கண்டார்கள். இடியால் வீழ்ச்சியடைந்த மரம், தங் கள் குடிசைக் கருகிலுள்ள மலை, தங்கள் கண்களில் முதன் மையாகத் தோன்றிய மிருகம். மதசரிதையில் கானக

உபாசனை என சொல்லப்படும் உபாசனை இதுவேயாகும். அக்காலத்தில் குடும்பத்தைத் தவிர வேறு எவ்விதமான ஒற்றுமையையும் அவர்கள் அறியவில்லை, அதாவது தங்களைத்தான் தோற்றுவிப்பதைத் தவிர வேறு எதையும் அறியவில்லை. குடும்பத்தைத் தவிர மற்றவர்களை எல்லாம் புதியவர் போலவே எண்ணினார்கள். அவர்களை சாதாரணமாக சத்துருவாகவும் எண்ணினார்கள். தங்களையும் தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றுவதே ஒழுக்கத்தின் ஒரே நிலை என நினைத்தார்கள். பிற்காலத்தில் கடவுளைப் பற்றிய கருத்துக்கள் விரிந்தது. புலன் பொருள்களிலிருந்து பயமுடன், பல பிரிவினுடனுள்ளவர் என அவரை நினைத்தான். அவரைப் பொதுவாக எண்ணினான். ஈசன் குடும்பங்களை காப்பாற்றுபவனில்லை, பலகுடும்பங்கள், நகரங்கள் ஜனங்களைப் பாதுகாப்பவராக எண்ணப்பட்டது. கானக உபாசனையிலிருந்து பல தேவஉபாசனைகளாயிற்று.

செயல் நிலை ஒழுக்கமும் விருத்தியாயிற்று. குடும்பங்களைவிட, விரிந்த கடமைகள் பெருஞ் சமூகத்திற்கு செய்ய வேண்டுமென்பதை மனிதன் உணர்ந்தான். குலம் தேசத்தின் நன்மைக்காக பிறகு உழைத்தான். இருந்த போதிலும் ஜனசமூகம் கவனிக்கப்படவில்லை. ஒவ்வொரு தேசமும் மற்ற தேசத்தினர்களை கானகவாசிகளென அழைத்தார்கள். அவர்களை அங்ஙனமே கருதி வன்மையினாலோ, மோசத்தாலோ, அவர்களை வெற்றி பெறவோ வதைக்கவோ எண்ணினார்கள். ஒவ்வொரு தேசத்திலும், அன்னியர்களும் கானகவாசிகள் எனப்படுபவர்களுமிருந்தார்கள். நகரவாசிகளின் மதச் சடங்கு

களுக்கு இலட்சக்கணக்கான அந்த ஜனங்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வேற்றுமையான குணமுள்ளவர்களென கருதப்பட்டார்கள். சுதந்திர புருஷர்களின் நடுவில் அடிமைகள் போல் அவர்கள் வாழ்ந்தார்கள். ஒருமையான ஈசுவரன் இருந்தாலொழிய ஒருமையான ஜன சமூகத்தைச் சிந்திப்பது எங்ஙனம்? ஏகதேவ உபாசனையைப்பற்றி பழைய காலத்தில் சிலரே சொல்லியுளார்கள். மோசஸும் ஒரு பிழையைத் தவிர அதையே பகிரங்கஞ் செய்தான். புதிய மதம் தோன்றி ரோமாபுரி அழியும்வரை இதை ஒருவரும் கவனிக்கவில்லை. புதிய மதத்தின் இணைபிரியா இரு உண்மைகள் யாதெனில்—ஒரே ஈசனுகும். எல்லா மனிதர்களும் அவன் மக்கட்கள். இவ்வுண்மைகள் பகிரங்கமானவுடன் புவியின் தோற்றத்தையே மாற்றிவிட்டது. இதனுல் ஒழுக்கமுள்ளவர்கள் உலகத்தில் சீவப் பிராணிகளிலேயே கவனத்தை அதிகம் செலுத்தினுர்கள். குடும்பக் கடமைகளுடன், தேசக் கடமைகளுடன், ஜனசமூகக் கடமைகளையும், சேர்த்தார்கள். பிறகு சகோதர மனிதனை எங்கு கண்டபோதிலும், அவனை சகோதரன் எனவும், தன்னைப்போல் நித்திய ஆன்மாவை அடைந்துள்ளான் என்றும், ஈசுவரனில் எழுச்சி அடையக்கூடியவன் என்றும், அன்பிற்குப் பாத்திரமாகும் சகோதரன் எனவும், அவசியமானுல் உபதேசம், செயலுக்கு, அருகன் எனவும் கற்றுன். பிறகு பரம புருஷர்களிடமெல்லாம் புனிதமொழிகள் புலனுயிற்று. பழைய காலத்தில் புனித மதங்களிலிருந்தும் ஜனங்கள் அதை அறிந்து கொள்ளவில்லை. பரம புருஷர்களைப் பின்பற்றியவர்களும் இதைப் பற்றவில்லை. ஒரே

தேகத்தில் பல அங்கங்கள் இருப்பதுபோல எல்லா அங்கங்களும் ஒரே வேலையை செய்யாததுபோல் ஈசனில் ஒன்ருயிருப்பதுடன், பரஸ்பரம் ஒவ்வொரு அங்கம் போலிருக்கின்ருேம். ஒரே கூட்டமும் ஒரே தலைவனும் வேண்டும். 1800 வருடங்களின் கல்வி, அனுபவம் முயற்சிக்கப்பால், இச்சத்தான உபதேசங்களை விருத்தி செய்வதற்கு தருணமாய்விட்டது. ஒவ்வொரு மனிதருக்கு மாத்திரமில்லை. சமூகமெனச் சொல்லப்படும் பழைய புதிய எல்லா ஜனசமூக அறிவு வன்மையிலும், பிரயோகஞ் செய்யத் தருணமாய்விட்டது. சத்தியத்தைப் பிரகாசஞ் செய்ய ஜனசமூகத்தை ஒருமையாகவே கருதவேண்டும். அதுவுமன்னியில் அது ஒரு சட்டத்தாலேயே நடத்தப் படவேண்டும். அச்சட்டத்தின் முதல் நிபந்தனை வளர்ச்சி அல்லது விருத்தியாவதே யாகும். நம்முடைய சக்திக் கேற்றவாறு ஈசுவரனின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் மேன்மையான நிலைக்கு நாம் கற்பதும், புவியில் வளர்ச்சி அல்லது விருத்தி எனப்படுவது. ஜனசமூகமென்பது ஒரு சரீரமாகையால், நாம் அதன் பல அங்கங்கள் போலிருப்பதால் அதன் வளர்ச்சிக்காக உழைத்து, சமாதானமாகவும், முயற்சி, வன்மையுடன் அதை விளங்கச் செய்வதற்கேற்ற காலமாய்விட்டது என மனிதர்களுக்குக் கற்பிக்க வேண்டும். நமது சகோதரர்களுடைய ஆத்மாக்களின் மூலமாகவே நாம் எழுச்சி பெறலாமென்பதை உணரவேண்டும். காலம் குணமாகிவிட்டது. ஜனங்கள் கேட்காதபோதிலும் புனிதஞ் செய்யவேண்டுவது நமது கடமையாகும். ஈசன் விரும்பும் ஒரு பகுதியான விருப்பம், வையகத்தில் எல்லா

ஜனங்களின் சேர்க்கையினுலேயே முடியும். அதற்கேற்ற காலமே இது. தானம் என ஒவ்வொருவருக்கும் அளிப்ப தற்குப் பதிலாய் ஐக்கியமாயிருந்து செயல்கள் செய்வதை தீர்மானஞ் செய்யவேண்டும். எல்லா ஜனசமூகத்தின் வளர்ச்சியே இதன் நோக்கமாக வேண்டும். இதற்காகக் குடும்பத்தையும் தேசத்தையும் நிர்மாணஞ் செய்யவேண் டும்.

சமூக ஐக்கியம்

இன்னம் வேறு விரிந்த கடமைகள் எதிர்காலத்தில் தாஞகவே நமக்குப் புலஞகும். நமது ஜீவனின் சட்டத் தைப்பற்றிய சித்தம் நன்ருய் குற்றமற்று அதிகமாய் குண மாகும்பொழுது அக்கடமைகள் நமக்கு நன்ருய் விளங் கும். இங்ஙனம் நமது தலைவஞன ஈசுவரஞனவன் மெது வாய்-ஆஞல் வளர்ச்சியுடன் கூடிய-தர்ம சம்பந்தமான கற்பனையால் உயரிய பொருள்களில் ஜனசமூகத்தை சாயும் வண்ணம் செய்கிருன். இவ்வளர்ச்சியால் ஒவ்வொருவ னும் விருத்தியடைகிருன்.

ஜனசமூகத்தின் வளர்ச்சியுடன் நாமும் விருத்தியாகி ருேம்; எல்லாம் தேர்ச்சியடைந்து விருத்தியாகும்வரை உங்களுடைய தனித்தனி ஒழுக்கமும் பொருள்நிலையும் பெருமையாகாது. சாதாரணமாக சொல்லப்போகில் ஜனசமூகத்தினிடமிருந்து நீங்கள் தனிமையாகப் பிரிந்தா லும் பிரியமுடியாது. நீங்கள் அதிலேயே வசித்து, அத ஞல் அதற்காகவே இருக்கிறீர்கள். சில அபூர்வமான வன்மைகளுடன் கூடிய சிலரைத் தவிர உங்களுடைய ஆத் மாக்கள், தேகம் தன்னைச் சுற்றியுள்ள குணுதி செயல்களி லிருந்து கலைவது கஷ்டமாகும். கொடுமையுடன் ஒற்றர்

கள் சத்தியமான ஒருவனின் எண்ணங்களை தடுப்பதுமன்னியில், முக்கால்பாகம் அது பொய்யென்று நிராகரிக்கும் நாட்டில் உங்கள் மக்கட்களை அனுப்பவேண்டுமென்பதை நீங்கள் அறியும் சமயத்தில், அவர்கள் சத்தியத்தையே மொழியவேண்டுமென்னும் கற்பனையை யளிக்க, உங்களில் எத்தனை பெயர்களுக்கு அதற்கேற்ற மனோபலமுண்டு. மரியாதை, அந்தஸ்து, மேன்மை, இவைகளை, பொன் ஒன்றே அளிப்பது என்ருகி, பலமும் வன்மையுமுள்ளவர்களின் கடுமையும் நிந்தனையினின்று கலைய இப்பொன் ஒன்றே எனப்படும் சந்தர்ப்பத்தில் பொருளை வெறுக்க வேண்டும் என்னும் கல்வியை யளிக்கும் தீர்மானத்தை எவ்வளவு பெயர்கள் செய்து கொள்வீர்கள். நல்லெண்ணம் அன்புடன், இத்தாலியில் நண்பர்களுடன் இங்ஙனம் மொழியாதவன் எவன்? மனிதர்களை நம்பாதே, தனிமையாகி, தேசீய வாழ்க்கையினின்று தளரவேண்டும்; தர்மம் நமக்குப் பிறகல்லவா. ஒழுக்கமற்ற இத்தகைய நீதிகள் சமூகத்தின் சீர்கேடான நிலையினின்று தோன்றுவதாகும். மானிட சமூகத்திற்காக தன்னந்தானுவே தன் தேகத்தை யளித்த அவதார புருஷர்களில் நம்பிக்கையுள்ள தாய்மார்களும், தன் சகோதரர்களுக்கு உதவி புரிய ஆபத்தான முயற்சியில் மகன் ஈடுபட்டால் அதை தடை செய்கிருர்கள். அங்ஙனம் தடுக்காத தாயு முண்டோ? இதற்கு விரோதமாய்க், கற்பனை செய்யும் வன்மைகளை நீங்கள் அடைந்திருந்த போதினும், எல்லா சமூகமும், அதன் ஆயிரம் நாக்களால், நூற்றுக் கணக்கான உதாரணங்களுடன் உங்கள் மொழியின் பயனை பாழாக்கி விடாதா? துர்க்கந்தம்

தாழ்மை திகழும் ஆகாயத்தில் உங்களுடைய ஆத்மாக்களை நீங்கள் புனிதஞ் செய்து கொள்ள முடியுமா? பொருளாதார நிலையை உற்று நோக்குவமேயானால், எல்லா ஜனங்களையும் சிறப்புறச் செய்தாலொழிய நிரந்தரமான மேன்மை யென்பதை நீங்கள் எப்படி நினைக்கலாகும்?

அந்நியர் வியாபாரம்,

எளிமையில் விழுந்த பலரது உதவிக்கு இவ்விதத்தாலியிலே தனித்தனி தானத்தால் லட்சக் கணக்கான தொகை செலவழிக்கப் படுகின்றன. ஆனால் எளிமையோ வருஷந்தோறும் விருத்தியாகி வருகின்றது. தனித்தனி புருஷர்களுக்குத் தானமளிப்பது தீமையை ஒழிப்பதில் வன்மை யற்றதாகின்றது. ஐக்கியமாகச் சேர்ந்து தரித்திரம் முதலியவைகளை தொலைப்பதே தூய்மையான நெறியாகுமென தரணி எல்லாம் எண்ணுகிறார்கள். கொடுமையாய் அவஸ்தைப்படுத்தி அநியாய சட்டத்தால் அதிகாரம் நிலைத்துள்ள நாட்டில், விரிந்த நீண்ட பெரும் முயற்சிகளுக் கேற்ற ஏராளமான பணம் எங்கிருந்து தோன்றும்? யதேச்சாதிகார சர்க்காரின் இச்சை போல் வரிகளும் தடைகளும் தோன்றி, தான் தொலைந்து விடுவோமென்றும் பயத்தால் தன்னைக் காப்பாற்றுவதற்கவசியமான சைன்யங்கள், ஒற்றர்கள் அதிகாரிகள், சம்பளக் காரர்களால் செலவு அதிகரித்த நாட்டில், தொழில்களும் வியாபாரங்களும் திகழ்ந்து விருத்தியடையுமென எண்ணுகிறீர்களா? சர்க்காரின் அதிகாரத்தை செம்மையாகச் செய்வதாலும், சமூக வாழ்க்கையை சிறப்புடன்

செய்வதாலேயே, எல்லாம் நிறைவேறிவிடுமென மறுமொழியளிக்கிறீர்களா? அதனால்மட்டும் நிறைவேறாது. ஒருவர் தேசத்தில் விளையும் பொருள்களாலேயே எச்சனங்களும் ஜீவிக்க முடியாது. நீங்கள் உண்டியல், பண்டமாற்றும் செயல்களாலேயே, ஜீவிக்கிறீர்கள். அக்கைமாறுகள் ஏற்றுமதி இறக்குமதியாலுண்டாகின்றன. வாங்கும் ஜனங்கள் குறைந்து ஏழ்மையானால் அன்னியநாடு உங்கள் வியாபாரத்திற்கு குந்தகமேயாகும். சிதைந்த சர்க்காரால் அன்னிய வியாபாரத்திற்கு விளையும் சிதைவும் அழிவும், உங்கள் வியாபாரத்திலும் அழிவையும் அதோகதியையும் விளைவிக்கும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆபத்து விளையுமானால் இத்தாலி நாட்டிற்கும் ஆபத்தை விளைவிக்கும். நாணயம் தேசியமாத்திரமில்லை. அது மாந்தர்களின் நிலையம் போலாகும். தேசிய சீர்திருத்தத்தின் எந்த முயற்சிக்கும் எல்லா சர்க்கார்களும் உங்களுக்கு விரோதமாகவே இருப்பார்கள். இக்காலத்தில் சமூக பிரசினையே சாதாரண பிரசினை என முதன்முதலில் அறிந்த சிற்றரசர்கள், பரஸ்பரம் செய்துள்ள உடன் படிக்கைகளே இதற்குக் காரணம். பூலோகத்தையே பெருமையாக்கினாலொழிய உங்களுக்கும் க்ஷேமமில்லை. எல்லா ஜனங்களின் சகோதரத்துவத்தில் உங்களுடைய சிறப்போங்கும். நமது கண்டத்தின் க்ஷேமத்தால் சர்வ ஜனங்களும் க்ஷேமமாவார்கள். ஆதலால்சகோதரர்களே! உங்களுடைய நன்மைக்காகவும் கடமைக்காகவும் உங்களுடைய சமூகத்தின் முதற்கடமைகளைப்பற்றி மறக்கவேண்டாமென வற்புறுத்துகிறேன். இம் முதற்கடமைகளை நீங்கள் நிறைவேற்றவில்லையானால், குடும்பம்

தேசத்திற்கான கடமைகளை நிறைவேற்ற முடியாதவர்களாக ஆவீர்கள்.

பிறர்கென வாழுங்கள்

உங்களுடைய மொழிகளும் செயல்களும் எல்லாருக்குமாக வேண்டும். ஏனெனில் அவருடைய அன்பிலும் சட்டத்திலும் ஈசுவரன் யாவருக்குமே யுளார். நீங்கள் எந்த தேசத்தில் இருந்தபோதிலும் சரி, உரிமை, சத்தியம், நீதிக்காகப் போர்புரியும், ஒவ்வொருவனும் எங்கிருந்தபோதிலும், அவன் உங்கள் சகோதரனே. பிழை அநீதி கொடுமையால் அவஸ்தைப்படுபவன் ஒவ்வொருவனும் உங்கள் சகோதரனே. சுதந்திர புருடர்களும் அடிமைகளும் உங்கள் சகோதரர்களே. பிறப்பு, சட்டம், நோக்கம், இவைகள் யாவருக்கும் ஒன்றேயாகும். உங்கள் மதம், செயல், கொடியின் கீழ் போர் புரிவதெல்லாம் அப்படியே ஒன்றாக இருக்கட்டும். அவர்கள் பேசும் பாஷை வேற்றுமையானதென ஒரு பொழுதும் உரைக்காதே. கண்ணீர்கள், செயல்கள், தியாகம் எல்லா மனிதர்களுக்கும் பொது பாஷையாகும். அத்தகைய பாஷையை நீங்கள் எல்லாரும் அறிகிறீர்கள். சர்வஜன சமூகம் மகா பெரியதென்றும், நாமெல்லாம் பலமீன முள்ளவர்கள் எனவும், ஒரு பொழுதும் உரைக்காதே. ஈசுவரன் வன்மைகளை இலட்சியஞ் செய்வதில்லை; ஆனால் விருப்பத்தையே எண்ணுகின்றார். சர்வஜன சமூகத்தை அன்புடன் நேசிக்கவும். உங்கள் குடும்பம் நாட்டிற்காக செய்யும் ஒவ்வொரு செயலிலும் நீங்கள், நான் செய்யும் இக்காரியத்தை புவியெல்லாம் எல்லாருக்கும் செய்தால் பூவுலகிற்கு அது நன்மையாகுமா, புன்மை

யாகுமா என்பதை உங்களகத்திலேயே வினவிக் கொள்ள வேண்டும். அது ஜனசமூகத்தைச் சிதைக்குமென உங்கள் சித்தம் சொல்லுமேயானால் அதை ஒழிக்கவும். உங்கள் தேசத்திற்கு உடனே பயன் விளைவிக்கக்கூடியதா யிருந்த போதிலும் அதை உடனே நீக்கவும். குடும்பத்திற்கு அது நன்மையாயிருந்த போதிலும் அதைக் கழித்து விடவும். இந் நோக்கங்களின் நாயகர்களாகவும், சர்வதேச சங்க சகோதரத்துவம், மனித சமூக ஒற்றுமையின் அவதார புருஷர்களாகவே இருக்கவும். இச்சித்தாந்தம் கற்பனையி லிருந்தபோதிலும் அனுபவத்தில் மறுக்கப் படுகின்றது. நீங்கள் எந்த நிலையிலும், எப்பொழுதும் எங்ஙனமெல் லாம் முடியுமோ அங்கனமெல்லாம் அத்தகைய அவதார புருஷர்களாக இருக்கவும். ஈசுவரனும் மனிதனும் இதை விட அதிகமாய் உங்களைக்கேட்க முடியாது. நீங்கள் அதிக மாகச் செய்யத் திறனற்று உங்களுக் குள்ளாகவே அத் தகைய அவதார புருஷர்களானால், அப்பொழுதும் ஜன சமூகத்திற்கு நன்மையையே செய்பவர்களாவீர்கள். புனித சுபாவத்தாலும், பலத்தாலும் மனிதர்கள் விருத்தியாவ தையே அவர்களுடைய கல்வியின் அறிகுறி என ஈசுவரன் கண்க்கிடுகின்றான். நீங்கள் புனிதமாகி அதிகமானால் உங் களை எண்ணும் ஈசுவரன் செயலை அடையும் கதவைத்திறக் கின்றார்.

அத்தியாயம் 14

தேசக் கடமை—இதாலிய நிலைமை—தேசத்தை நேசியுங்கள்—பிளவுகள் வேண்டாம்—தேசமென்பதென்ன — இதாலியின் சிறப்பு—சுதந்திரத்தின் புனிதம்.

முதன்மையான உங்களது முதற்கடமைகள், நான் சொன்னதுபோல், ஜனசமூகத்திற்கே யாகும். நகரவாசியாயும் தந்தையாயுமாவதற்கு முன் நீங்கள் மனிதர்களேயாகும். உங்களுடைய அன்பை மனிதசமூக முழுவதும் நிலவச் செய்யவில்லையானால், ஒருமையான ஈசனை எண்ணி ஐக்கியத்திலே யுள்ள உங்கள் நம்பிக்கையை விளங்கச் செய்யாமல் ஐக்கியத்தைக் காண்பிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஜனங்களின் சகோதரத்துவத்தில், நம்பிக்கையற்றும், எந்த மூலையிலாவது உங்கள் சகோதரர் துக்கப்படுங்காலும், பொய், கொடுமை முதலியவைகளால் அடிமையாய் நடத்தப்பட்டு அதை நீக்கும் வன்மை உங்களிடம் இருந்தும், அதை அழிக்கவில்லையானால், ஏமாற்றப்பட்டு அமிழ்த்தப்பட்டுள்ளவர்களை மீட்பதற்கு நீங்கள் முயலவில்லையாயினும், நீங்கள் ஜீவனின் சட்டத்தைக் கீழ்ப்படியாதவர்களேயாகும். இல்லையேல் எதிர்காலத்திற்கு நன்மையை விளைவிக்கும் தர்மத்தை அறியாதவர்களேயாகும்.

நீங்கள் ஒவ்வொருவரும், உங்களின் தனித்தனி வன்மையால், ஜனசமூகத்தின் ஒழுக்க மேன்மைக்கும், வளர்ச்சிக்கும் என்ன செய்ய முடியும்? உங்களின் தனிவன்மையால் நீங்கள் ஒருவேளை, உங்கள் நம்பிக்கையை பயனற்ற

மொழியால் பெருமையாக்கலாம்'. உங்களுடைய தேசத்தைச் சேர்ந்திராத ஒருவருக்கு ஏதாவது ஒரு உபகாரச் செயலைச் செய்யலாம். இதைவிட அதிகமாய் ஒன்றுஞ் செய்யமுடியாது. ஆனால் எதிர்கால வாழ்க்கைக்கு தானமோ, அல்லது உபகாரமோ பெரிய நோக்கமாகாது. பொது நன்மைக்காக சகோதரர்கள் ஒன்றுகூடி ஐக்கியமாயிருப்பதே எதிர்கால நோக்கமாகும். ஒருவருக்கொருவர் சுண்ணும்பு, கல் முதலியவைகளை உதவி செய்து கொண்டு தனித்தனியே தங்களுக்கே ஒரு வீட்டைக் கட்டிக்கொள்வதைவிட, யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரு பொதுக் கட்டிடத்தை எழுப்புவது எப்படி பெருமையாகுமோ, அப்படியே ஐக்கியத்தை நிலவுவது தானமளிப்பதைவிட சிறந்தது. பாஷை, வழக்கம், வன்மை இவைகளில் வேற்றுமை யிருக்குங்கால், நீங்கள் பொது ஊழியத்தில் ஈடுபட முடியாது. தனித்தனியாக ஒவ்வொருவரிடத்திலும் தினையளவு வன்மையுமில்லை; ஆனால் சனசமூகமோ பிரும்மாண்டமானதாகும். 'என் கப்பல் சிறியது! கடலோ பெரியது' என மானுமி யொருவர் மொழிவது போலவே நம் தனி நிலையாகும். உங்கள் வன்மையைப் பெருக்கி ஐக்கியமாக்கி பெருமையாக்காமல் தனித்தனியாக திகழுமே யானால், அது இம்மானுமியின் நிராதரவற்ற நிலையைப் போலவே யாகும். உங்களுக்கு நாட்டையளித்த பொழுது அதற்குரிய சாதனத்தையும் அவர் அளித்துள்ளார். அவர் தொழிலாளிகளின் சிறந்த தலைவன்போல், ஜனங்களின் வன்மைக்கேற்ற மாதிரி செயலையும் அளித்துள்ளார். ஜனசமூகத்திலுள்ள பல வகுப்புக்களுக்கு இதுவே காரணம். எல்லா தேசங்களின் அடி

நிலையும் இதுவே. ஐரோப்பாவை நோக்கினால் கொடுமை யான சர்க்கார் ஈசுவரனின் இச்சையை உருவழிக்துள் ளார்கள். நீங்கள் இதை விளக்கமாகக் காணலாம். நதி களின் வழியையும், மலைகளின் போக்கையும், பூகோளப் பிரிவினைகளையும், வெற்றியாலும், பேராசையாலும், உனக்கு எனக்கு அரசுரிமை என்பதாலும் இயற்கையின் இயல்பு வடிவை இழிவு செய்துவிட்டார்கள். இங்கிலாந்து பிரஞ்சு நாட்டைவிட வேறெந்த நாட்டிலும் நாம் சுய ரூபத்தைப் பார்ப்பதில்லை. தங்கள் குடும்பம், குலங்கள் ஜாதி அகங் காரங்களைத் தவிர வேறு எந்த தேசத்தையும் ஒத்துக் கொண்டதில்லை. ஒத்துக்கொள்ளவதில்லை. ஆனால் தெய் விக எண்ணங்கள் திடமாக நின்று நிறை வேறிவிடும். இயல்பான பிரிவினைகள், ஜனங்களுள் உள்ள இச்சைகள், கடுமையான சர்க்காரால் சுயேச்சையாய் செய்யப்படுவதற் குப் பதிலாகப் புலனாகும். ஐரோப்பாவின் பூகோள படம் மாறுதலடையும்; அரசர்களும் சாதிகளும் அதி காரம் வகித்து அநோகதியான அவர்களின் தேசங்களி னின்று ஜனங்களின் நாடு தோன்றும். இந்நாட்டினர்க் குள்ளே அமைதியும், சகோதரத்துவமும் நிலவும். பிறகு ஜன சமூகத்தின் சேவையான பொது வளர்ச்சியும், ஜீவ னின் சட்டத்தின் நிசஉண்மையும் பிரயோகமும் பிர காசமு மாகும். இவைகளெல்லாம் அமைதியாகவும், மேன்மையாகவுமே நிலவும். பிறகு அன்பு அதிகரித்து ஒரே பாஷையைப் பேசும் பல லட்சக்கணக்கான ஜனங் களின் உதவியால், ஒரே நோக்கமுடையவர்களாகி, ஒரே பழைய விதமான பெருமைகளை யடைந்து, உங்களுடைய சொந்த முயற்சியால் எல்லா ஜனசமூகங்களையும் செம்

மையாகச் செய்யலாம் என்பதற்கு நம்பிக்கை தோன்றும்.

இதாலிய நிலைமை

இதாலி நாட்டில் பிறந்த உங்களுக்கு ஈசுவரன் அதிக கிருபையுடன் பெருமையாய் இலக்கியமாகும் நாட்டை அளித்துள்ளார் எனலாம். வெளிநாடுகளில் எல்லையை நிர்மாணஞ் செய்ய அமைதியான காலம் ஏற்படும் வரை, எவ்வளவோ தேகம் இரத்தத்தைச் சிந்தவேண்டும். ஆனால் உங்கள் நாட்டிற்கோ அது அவசியமில்லை. புனிதமும், சண்டைக் கிடங்கொடாததுமான எல்லைகளை ஈசுவரன் உங்களுடைய நாட்டிற்கு அருளியுள்ளார்; ஐரோப்பாவின் பெரியமலை ஆல்ப் ஒரு பக்கம்; ஆழம்றியாத கடல் வேறு பக்கமாகும். ஐரோப்பாக் கண்டத்தின் படத்தை எடுத்துக்கொள்ளவும்; வடபுறமுள்ள பர்மாவை நிலையாகக்கொண்டு, வார் என்னும் முகத்துவாரத்தை தூரமாகக்கொண்டு ஒரு அரைச் சக்கிரவடிவை இழுக்கவும். இது ஈசான்ஸோ முகத்துவாரத்தில் சேர்ந்து ஈசனால் அருளப்பட்ட எல்லைப் புறத்தை நிர்மாணஞ் செய்துவிடும். இவ்வெல்லைவரை உங்கள் பாஷை பேசப்பட்டு, யாவராலும் அறியப்படும். இதற்கப்பால் உங்களுக்கு உரிமை இல்லை. ஸிஸிலி, சார்டினியா, கார்ஸிகா, இன்னம் நடுவிலுள்ள சிறிய தீவுகளெல்லாம் சந்தேகமன்னியில் உங்களைச் சேர்ந்ததேயாகும். மிருக பலத்தைக் கொண்டு இவ்வெல்லைப்புறத்திற்காக சில நாள் சண்டை செய்யலாம். ஜனங்களின் பல வருஷ ஒத்துழைப்பினால் அவ்வெல்லை உங்களுடையது என்றாய்விட்டது. இனி கடைசிப் பரிட்சை வருங்கால், எல்லைப்புறத்தில் உங்ளுடைய

மூன்நிறக் கொடியை நாட்டுங் காலத்தில், ஐரோப்பா முழுமையும், எழுச்சிபெற்ற இதாலியை ஆரவாரஞ்செய்து வரவேற்பார்கள். இந்தக் கடைசிப் பரிட்சையிலேயே உங்களுடைய எல்லா முயற்சிகளையும் நாட்டவேண்டும்.

தேசமன்னியில் உங்களுக்கு பெயர், நாணயம், மொழி உரிமை இல்லை. ஜனங்களின் சகோதர சமூகத்தில் செல்லவும் அதிகாரமில்லை. ஜனசமூகத்தின் சோரப் பிள்ளைகளாவீர்கள். கொடியில்லாத போர்வீரர்களாவீர்கள். யஹூதியர்களைப் போல் எங்கும் ஆதரவு, அன்பு இல்லாதவர்களாவீர்கள். எந்த நாடும் உங்களை மதியாது. உங்களுக்காகவே தேசத்தை வெற்றிபெறுதிருந்தால் அநீதியான சமூக நிலையினின்று விடுதலையாவீர் என நீங்களே வஞ்சித்துக் கொள்ளவேண்டாம். தேசமில்லையானல் நீங்கள் முறையிடுவதற்கு போதுமான பொருத்தங்களும் புலனாகாது. அங்கு அகங்காரம் என்னும் தன்னலமே அதிகாரம்வகிக்கும். வன்மையுள்ளவனே தலைமை வகிப்பான். ஏனெனில் எல்லோருடைய உரிமைகளையும் காக்க அங்கு ஒரு பாதுகாப்புமில்லை. தேசியப் பிரசினையைத் தீர்க்கும் வரை உங்கள் பொருளாதார நிலை விருத்தியாகுமென்னும் எண்ணத்தால் மயங்கவேண்டாம், நீங்கள் அதை செய்யமுடியாது. உங்கள் தொழில் சங்கங்களும். பரஸ்பர உதவி சபைகளும் உங்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் அளிக்கலாம்; ஆனல் நீங்கள் உங்கள் நாட்டை அடையும்வரை, அவைகள் சூன்யத்தையே யளிக்கும். முதன்மையாக பொருளாதார பிரசினை ஏராளமான பொருளையும் விளைவையும் வேண்டுகின்றது. உங்களுடைய தேசம் துண்ட துண்டமாக வகுக்கப்பட்டு கடல் சுங்கம்

முதலிய பல செயற்கை இடையூறுகளால் தடைப்பட்டிருக்குங்கால் உங்கள் வியாபார ஸ்தலங்கள் குறுகிவிடும். அதனால் நீங்கள் தொழிலாளிகளாக இல்லை என மனப்பால் குடிக்கவேண்டாம்; நீங்கள் அவ் வகுப்பினர்களின் ஒரு பகுதியேயாகும். ஆனால் உங்களுக்கு நீங்களாகவே நிர்மாணஞ் செய்து கொள்ளும் முயற்சிக்கு அவர்களுக்கு வன்மையுமில்லை. அநுகருமாகார்கள். தலைநகரத்தில் காலங்களை நன்றாய்க் காணும் தேசிய சர்க்கார் இருந்து தேசத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக நோக்கங்களின் பிரதிக்ஞையை திட்டஞ் செய்தாலொழிய உங்கள் விடுதலைக்கு அனுபவ பூர்வமான ஆரம்பமாகாது. தொழிலாளியே தூய்மையானவன். நாட்டின் எல்லா ஐசுவரியங்களுக்கும் அவர்களே ஆதாரம்' என்னும் மொழிகளை அந்நோக்கங்களிலே சேர்க்கவேண்டும்.

தேசத்தை நேசியுங்கள்

பொருளாதார விருத்தி என்னும் நம்பிக்கையால் ஏமாந்துவிட வேண்டாம். இப்பொழுதுள்ள நிலையில் அவ்வெண்ணம் மாயையே யாகும். வடபாகத்திலிருந்து தென்றுடு வரையுள்ள பிரும்மாண்டமாய் ஐசுவரியம் நிறைந்த உங்கள் நாடு ஒன்றே உங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யும். கடமைகளின் ஆக்ஞைகளை நீங்கள் கீழ்ப்படிந்தாலொழிய உங்கள் உரிமைகளை நீங்கள் அடைய முடியாது. நீங்கள் அதற்கேற்ற யோக்கியதையை அடைந்தால் அவைகளை அடைவீர்கள். சகோதரர்களே உங்கள் தேசத்தை நேசியுங்கள். நமது நாடே நமது வீடாகும்; ஈசுவரனால் அளிக்கப்பட்ட வீடு இதுவாகும். நாம் நேசிக்

கும் அநேக குடும்பங்களை அவர் இங்கு அருளியுள்ளார். நம்மை நேசிப்பவர்களும் இங்கு பலர் உண்டு. இதனால் சமூகத்தின் உணர்வை நெருங்கி நன்றாய் உணர்வதற்கு நமக்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் நினைவேற்பட்டு, குறித்த இடத்தில் அதிக ஞாபகம் தோன்றி, அவ் வொற்றுமையான பூதங்களால் தன்னந் தனி முயற்சியை அடையும்வன்மை யுடையதாகின்றது. நமது நாடு நாம் உழைப்பதற்கான நிலமாகும்; எல்லாப் புவியின் ஆதாயத்திற்காக நமது முயற்சியின் பயன்கள் எங்கும் செல்லவேண்டும். நன்றாகவும் வன்மையுடனும் நாம் உபயோகஞ் செய்யும் உழைப்பின் கருவி அதிலேயே நிலைத்துள. ஈசுவரனின் நோக்கத்திற்கு சிரத்தையன்னியி லிருந்தா லொழிய் அவைகளை நாம் மறுக்கக்கூடாது. அத னால் நம்முடைய வன்மையையே நாம் இழப்போம். உண் மையான நோக்கத்துடன் நமது நாட்டிற்கு உழைப்பது ஜன சமூகத்திற் குழைப்பதே யாகும். எல்லாப் பொது நன்மைகளுக்கும் நமது நாடு வண்டியின் அச்சாணியோ லாகும். ஜன சமூகமாகும் நாடுகளின் முன் சேர்வதற்கு முன்னால் நாம் ஒரு நாடாகவேண்டியது அவசியமே, சம முள்ளவர்களாய் ஆனாலொழிய சபை என்பது முடியாது. சபை யில்லையேல் அங்கிகரிக்கும் பொதுவாழ்க்கை என் பது இல்லை.

வன்மையடைந்து சண்டை செய்யும் சத்துருவை, காணாத நிலத்தில் ஜனசமூகம் அதை வெற்றி பெற நோக்கி செல்லும். ஜனங்களெல்லாம் பல பிரிவினையும், அணி வேற்றுமையு முடைய போர்வீரர்களேயாகும். ஒவ்வொரு வருக்கும் ஒருதனி நிலையுண்டு. தன்னந்தனிக் காரியத்தை-

சிலர் பிரத்தியேகமாக செய்யவேண்டும். பலவிதமான செயல்கள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் செய்யப்படு வதிலேயே பொது வெற்றி பதிந்துள்ளதாகும். போர் அமைப்பை நீ கலைக்காதே; ஈசுவரன் கொடுத்த கொடியை ஒரு நாளும் கைவிடாதே; அவசியமேற்படுமேயானால், நீங்கள் எங்கிருந்த போதிலுஞ்சரி, உங்கள் நிலை உங்களை எந்த ஜனங்களின் நடுவில் நிலைக்கச் செய்தபோதிலும், அந்த ஜனங்களின் சுதந்திரத்திற்காகப் போர்புரியுங்கள். ஆனால் நீங்கள் இதாலிவாசிகள் எனவே எண்ணி சண்டை செய்யுங்கள். ஏனெனில் நீங்கள் சண்டையில் சிந்தும் இரத்தம் மரியாதையையும் அன்பையும் உங்களுக்கு மாத் திரமன்னியில் உங்களுடைய நாட்டிற்குமாகட்டும். உங்க ளுடைய ஆன்மாவின் நிரந்தரமான நினைவுகள் நாட்டிற் காகவே இருக்கவேண்டும். ஜனசமூகத்தின் மேன்மைக் காக நீங்கள் எப்பொழுது உழைத்தபோதிலும் நாட்டின் கொடியின் கீழே நீங்கள் கூட வேண்டும். உங்கள் வாழ்க் கையின் எல்லாச் செயல்களும் அவளுக் கேற்றவாரே அமையவேண்டும். நான் என ஒரு பொழுதும் புகலாதே. நாங்கள் என சொல்லவும். உங்கள் தேசத்தின் அவதார புருஷர்களாகவே நீங்கள் ஒவ்வொருவருமிருக்கவேண்டும். நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் நன்மைக்காக உணர்ந்து அதற்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். மனிதர்களெல் லாம் தேசத்தை மரியாதை செய்து அன்புடன் நோக்கு வதுபோல் உங்களையும் அதே நினைவுடன் நோக்குவதற் கான செயல்களை நீங்கள் செய்யவேண்டும்.

உங்கள் நாடு ஒன்றே. அதைப் பிரிக்க முடியாது. சகோதரர்களின் அன்பினின்று அகற்றப்பட்டு உங்கள்

குடும்பத்தி லொருவர் வெகு தூரம் சென்றிருப்பாரே யாளுல், உங்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் ஒன்று சேர்ந்து உண்ணுங்காலும் உற்சாகப்படுவதில்லை.

பிளவுகள் வேண்டாம்

ஜனசமூகத்தில் உங்கள் கடமையை நிறைவேற்ற ஈஸ்வரன் உங்கள் தேயத்தை சந்தேகத்தின் அறிகுறியாக செய்துளார். இச் சந்தேகத்தை பரிபூரணமாய் நிறைவேற்றுவதற்கு மக்கள்கள் தங்களின் எல்லா வன்மை அறிவையும், ஒன்ருக்க வேண்டும். மற்ற ஜனங்களில் நீங்களயார்? நான் இதாலி தேசத்தான் எனச்சொல்வானே யாளுல், சில பொதுக் கடமைகளும், உரிமைகளும் அவனுக்குண்டு. உங்கள் தேசத்தினின்றும் தனிப்பட்ட அதிகாரியைத் தவிர மற்றவர்கள் எவர்களும் அவ் வுரிமைகளையும், கடமைகளையும் விளக்க முடியாது. ஆதலால் தேசமானது ஒரே சர்க்காரை அடையவேண்டும். நாட்டில் பல குட்டி ராஜ்யங்களை ஏற்படுத்தி, அதனுல் பல சகோதர நாடுகளைச் செய்வேன் எனச் சொல்லும் ராஜீய புருஷர்கள் ஐக்கியத்தின் அடிப்படையை அறியாமல் தேசத்தைத் துண்டுதுண்டாக்கி விடுவார்கள். நமது தேசத்திலே திகழும் பல குட்டி ராஜ்யங்கள் நமது ஜனங்களினுலேயே ஏற்படுத்தப்பட்டதில்லை, பேராசை, குருட்டெண்ணம், நிறைந்த பல அரசர்களாலும், அன்னிய ஜெய புருஷர்களாலும் ஏற்படுத்தப் பட்டவை. பெரிய நாட்டைப் பார்க்கிலும் குறுகிய கூட்டத்தையே விரும்பும் உள்நாட்டிலுள்ள பணக்காரர்களை முகஸ்துதி செய்வதைவிட வேறு பயன் அதனுல் விளையாது. நீங்கள் சிருஷ்டித்து, சிறப்பாக்கி, அன்பினுல்,

ஆனந்தத்தால், துக்கத்தால், இரத்தத்தால், அர்ப்பணஞ் செய்த நாடே உங்கள் நகரமும், நீங்கள் கலந்து பேசும் நாடுமாகும். அது மாகாணமும், ராஜாங்கம் என சொல்வதற் கில்லை.

உங்கள் பெற்றோர்கள் பிறந்து, குழந்தைகள் வசித்து உங்களுடைய அறிவு, சுய உரிமை, முதலியவைகளைப் பயன்செய்யும் நாட்டிலேயே நீங்கள் மனிதராக வாழ்கிறீர்கள் எனலாம். அதையே நீங்கள் நாம் சிருஷ்டித்த நாடு என கௌரவமாய்க் கூறலாம். நாட்டிற்கு ஐக்கியம் எப்படி அவசியமோ அப்படியே நகரத்திற்கு சுதந்திரம் அவசியமாகும். நகரத்தின் சுதந்திரமும் நாட்டின் ஐக்கியமுமே உங்கள் நோக்கமாக இருக்கட்டும். ரோமாபுரி டஸ்கனி எனவும், ரோமாபுரி லம்பார்டி, எனவும், ரோமாபுரி சிசிலி எனவும் சொல்லவேண்டாம். ரோமாபுரி பிளாரன்ஸ் எனவும், ரோமாபுரி சியானு எனவும், ரோமாபுரி லெக் ஹார்ன் எனவும் இங்ஙனம் இதாலியின் நகர மூலமாகவே யாவற்றையும் அழைக்கவும். எல்லா இதாலிய வாழ்க்கையை ரோமாபுரி விளக்கும் தனித்தனி நபர்களுடைய சிவனை நகரங்கள் காண்பிக்கும். மற்ற எந்தப் பிரிவினைகளும் செயற்கையே யாகும். அது உங்கள் தேசீய பழைய பெருமையுடன் பொருந்தாது.

தேசமேன்பதென்ன?

ஒரே உத்தேசத்துடன் சமமமாயும், சுதந்திரமாயும் சகோதரத்வத்தால் இணங்கிய உழைப்பில் ஒன்றாக உள்ள நிலையமே தேசமெனப்படும். நீங்கள் அதை சிருட்டி செய்து திறமாக்கவேண்டும். தேசமென்பது ஒரு கூட்ட

மாகாது. அது ஐக்கியமான ஒரு சங்கமாகும். சமமான உரிமையன்னியில் அது உண்மையான நாடாகாது. ஜாதி செல்வாக்கு, வேற்றுமை முதலியவைகள் தாண்டவமாடி சமமான உரிமை பரிமுதல் செய்யப்படுமேயானால் அது உண்மையான தேசமும் இல்லை. பல ஜனங்களின் வன்மையும், அறிவும் அமிழ்த்தப்பட்டு மறைந்திருந்து பொதுப்படையான நோக்கத்திற்கு இணங்காமல். விரோதமாய் விருத்தி செய்யப்படாம லிருந்தால் அதுவும் தேசமாகாது. அத்தகைய நிலைகளில் தேசம் ஜனங்கள் என்பதற்கில்லை. அவர்கள் ஒரு கூட்டமும் அகஸ்மாத்தாய் சந்தர்ப்பத்தால் சேர்ந்த ஒரு கும்பலேயாகும். வேறு சந்தர்ப்பங்கள் தோன்றினல் இவைகள் பிரிந்துவிடும். உங்களுடைய தேசத்திற்குள்ள அன்பின் பெயரால், உங்களைப் பெற்றெடுத்த பூமியிலுள்ள ஒவ்வொரு செல்வாக்கும், மேன்மையுடன் ஒழிவன்னியில் போர்புரிய வேண்டும். ஒரு செல்வாக்கே சட்ட உரிமை உடையது. ஒழுக்கத்துடன் சகோதரத்துவத்தில் சிறப்பாகும் புத்தியே அச் செல்வாக்காகும். இது ஈசுவரனல் அருளப்பட்டது. மனிதரால் இல்லை. நீங்கள் அதை மதித்து அவ்வுணர்ச்சியைப் பற்றினல், உங்கள் சொந்த சித்தத்தாலும், இச்சையாலும் நீங்கள் அதை மதிப்பவர்களாவீர்கள். பிறப்பினலும் வன்மையாலும், உங்களை அடிமைப்படுத்தும் செல்வாக்கையும், சம உரிமையில்லாத எந்த உரிமையையும் நீங்கள் எதிர்த்து அழித்துவிட வேண்டும். ஏனெனில் அது மிருக பலத்தால் வன்மையாகி கொடுமையுடன் கூடியதாகும். உங்கள் தேசமே உங்கள் தேவாலயமாகும். ஈசுவரனே உச்சியிலுளார். ஜனங்க ளெல்லாம்

சமமாகக் கீழேயுள்ளார்கள். உங்களுடைய தேசத்திற்கும், உங்களுக்கும் அவமானம் விளைவிக்க விருப்பமில்லையேல் வேறு எந்தவிதியையும்ஒழுக்க நீதியையும் நீங்கள் ஒத்துக் கொள்ளலாகாது.

அவைகள் அங்ஙனமாவதற்கும், அவைகளை நிலைக்கச் செய்வதற்கும் எல்லோரும் சேர்ந்து தொண்டுபுரிவது அவசியமாகும். ஒரு பகுதி ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டமானது அதன் இயல்பிற்கேற்ற வண்ணம், அப்பகுதியினர்களின் விருப்பத்தையும், நினைவையும் அமைந்துள்ளதா யிருக்கும். அது எல்லா ஜனங்களின் சித்தம் போலாகாது; தேசத்தின் அரை, கால் பகுதியாகவே, அவ்வெண்ணமிருக்கும். சட்டமானது எல்லா ஜனங்களின் மேன்மையைத் தழுவவேண்டும். தேசமக்கட்களின் நெஞ்சுசுத்தூரடிபோல் அது நிலவவேண்டும். ஆதலால் முழு தேசமே நேராகவோ, குறுக்காகவோ சட்டஞ் செய்யும் வன்மையை யடைந்துள்ளதா யிருக்க வேண்டும். இப்பொறுப்பை சில ஜனங்களுக்கே நீங்கள் அமைப்பது, எல்லா வகுப்பினர்களுக்கும் ஐக்கியத்தை யுண்டுபண்ணும் தேசத்திற்கு பதிலாக ஒரு வகுப்பினரின் தன்னலத்தை திடஞ் செய்தவர்களாவீர்கள்.

தேசமென்பது ஒரு திறந்த வெட்ட வெளி மாத்திரமில்லை; இத்திறந்த வெளி ஒரு பெருங்கடைக்காலைப் போலவே யாகும். இக்கடைக்காலி லிருந்து கிளம்பும் கருத்தே தேசமாகும். அது அன்பின் கருத்தேயாகும். மறுபடி தேசமென்பது சகோதரத்துவம் என்னும் சிந்தனையால் திறந்த வெளியிலுள்ள மக்கட்களை திரட்டும் நிலையமாகும். தேசீய வாழ்க்கையின் அபிவிருத்தியில் தன்

வோட்டால் பிரதிநிதியை அதற்குத் தேர்தல் செய்ய உரிமையற்ற ஒரு சகோதரன் இருக்கும் வரை, கற்றவர்களுள் கற்காதவன் ஒருவன் இருக்கும்வரை, வன்மை விருப்பமிருந்து வேலையில்லாமல் எளிமையில் ஒருவன் தவிக்கும் வரை, தேசம் தூய்மையாக வில்லை என்பதை அறிந்து கொள்ளவும். வோட்டு, கல்வி, உழைப்பு, இவைகளே தேசங்களின் மூன்று தூண்களாகும். இவைகளை நிலையாக உங்கள் கைகளால் நிறுத்தும் வரை, அமைதியாக இருப்பதென்பதை அடையவேண்டாம்.

இதாலியின் சிறப்பு

அவைகள் நிலை நிறுத்தப்பட்டபின், உங்கள் ஒவ்வொருவரின் தேகம் ஆன்மாவிற்கு வேண்டிய உணவை சேகரித்த பிறகு சுதந்திரமாய் தாயின் தோள்களில் குழந்தைகள் ஐக்கியமாவது போல் அழகும் புனிதமான ஒற்றுமையால் அறிவின் வளர்ச்சியில் நீங்கள் முன்னேற்ற மாவீர்கள். இதாலியின் சந்தேசத்தையும் சிறப்பிப்பீர்கள். அந்த சந்தேசமே ஐரோப்பாவின் ஒழுக்கத்தினுடைய ஒருமையாகும். அது உங்கள் பேரில் சுமத்தும் பிரும்மாண்ட பொறுப்பை நீங்கள் ஞாபகஞ் செய்துகொள்ளவும். ஒற்றுமையற்ற நாடுகளுக்கு இரு தடவை ஐக்கியம் என்னும் பெயரை கர்ச்சனை செய்தது இதாலி நாடு ஒன்றே யாகும். ஐரோப்பிய உலகிற்கு இரு தடவை ரோமாபுரி தலைநகரமாகவும், தேவாலயமாயும் திகழ்ந்தது. வெற்றியுள்ள நமது கொடி நாம் அறியும் எல்லா நாட்டிலும் பறந்தது; நாகரிக பஞ்சாயத்துக்களை முதன்முதலில் ஸ்தாபனஞ் செய்து ஒற்றுமையை எங்கும் ஸ்தாபனஞ் செய்தது.

இயல்பின் வன்மையால், இரண்டாவது தடவை வடதிசை வெற்றியடைந்தோர் தோல்வியானவுடன், அவ் வியல்பான பழைய ஞாபகங்கள், தர்ம சிந்தனைகளான, இதாலியின் அறிவு போப்பின் மூலமாக விளக்கமாகி அப்புனித பணியை செய்தது. நான்கு நூற்றுண்டுகளாய் விடப்பட்ட நமது ஜனங்களின் ஆன்ம ஒற்றுமையின் பிரசாரம் பிரகாசமாயிற்று. இப்பொழுது நமது நாட்டில் மூன்ருவது சந்தேசம் உதயமாகின்றது. நமது நாட்டு ஜனங்களைப் போல் விஸ்தாரமாய் அச் சந்தேசம் விரிந்துள்ளதாகும். நீங்கள் நிலைக்கச் செய்யும் சுதந்திரமும் ஒற்றுமையான நாடு, பழைய அரசர்கள் போப்புக்களைவிட பெரியதாகும். இந்த முன்னேற்றமான எண்ணம் ஐரோப்பாவையே கிளர்ச்சி செய்கின்றது. எல்லா தேசங்களின் கண்ணும் கருத்தும் நமது நாட்டுடன் கட்டுப்பட்டுள்ளன.

உங்கள் நாட்டின் கடமைகள், இச் சந்தேசத்தின் சிறப்பிற் கேற்றவாறு பிரகாசமாகின்றது. நீங்கள், தன்னலம், புரோகித சூழ்ச்சி, என சொல்லப்படும் இராஜதந்திரம், பொய் முதலியவைகளின் சேர்க்கையினின்று, அதைப் புனிதமாய் வைக்க முயலவேண்டும்.

நோக்கங்களின் உபாசனையில் உங்கள் உழைப்பின் மூலமாக தேசத்தின் சர்க்கார் ஸ்தாபனமாக வேண்டும். தன்னலம் சமயோசிதம் என்னும் மூர்த்தி யுபாசனையில் அதை ஸ்தாபிக்கக் கூடாது.

சுதந்திரத்தின் புனிதம்

உள் நாட்டிற்கே சுதந்திரமென்பது புனிதம், என எண்ணும் நாடுகள் ஐரோப்பாவிலுண்டு. ஆனல் அது

திட்டமாக வெளிநாடுகளில் மீறப்படுகின்றது. அங்ஙனம் மீறுபவர்கள் சொல்வதாவது, 'சத்தியமென்பது ஒன்று, இலாபமென்பது வேறு, கற்பனை ஒன்று, பழக்கம் வேறு, நீண்ட தனிமையான வாசம், கொடுங்கோன்மை ராஜரீகம், முதலியவைகளாலேயே அவர்கள் குற்றத்தை நிச்சயமாக பிராயசித்தஞ் செய்து கொள்வார்கள். உங்கள் தேசத்தின் நோக்கத்தை அறியலாம். ஆனால் வேறு பாதையில் நீங்கள் செல்லுவீர்கள். ஒரே ஈசுவரனாலும், ஒரே சத்தியத்தாலும், ஒரே தர்மத்தாலும் நமது நாடானது உங்களால் புவியில் ஒரே ராஜீய அதிகாரத்தை அடையும். நமது நாட்டினர்கள் எழுப்பும் ரோமாபுரியை விட ரம்மியமான, அந்த கோபுரத்திலே எல்லா தேசத்தினர் காட்சியில் பிரகாசமாகும்படி சுதந்திரம், ஐக்கியத்தின் கொடியை நீங்கள் நாட்டுவீர்கள். கொடுங்கோன் மன்னனின் அச்சத்திற்கும், ஒரு நாளின் சிற்றின்ப இலாபத்திற்கும் நீங்கள் அதைக் கீழே சாய்க்க மாட்டீர்கள். சிறுத்தையைப்போல் அதற்கேற்ற சக்தியையடைந்த வீரமுடையவர்களாவீர்கள். பூவுலகத்திற்கே கர்ச்சனையுடன் நீங்கள் சில மொழியையும் கூறுவீர்கள். பூவுலகத்திற்கே அதிபதிகளென உரைக்கும் புருஷர்கள் என்பவர்களுடன் அச்சமில்லாமல் அதை கூவுவீர்கள். நீங்கள் பேசும் அம்மொழிகள் நமது நாட்டினர்களின் நெஞ்சைத் துடிக்கும்படி செய்யும். அன்னிய நாட்டினர்களுக்கு விரோதமாக நீங்கள் ஒருபொழுதும் போகமாட்டீர்கள். தேசத்தின் ஜீவனானது உங்கள் மூலமாக அழகிலும், வன்மையிலும் அதிகரித்து அடிமையின் அச்சந் தவிர்த்து, சந்தேகமும் சஞ்சலமு மகன்று, சிறப்பாகும்.

ஜனங்களையே அத்தேசம் கடைக்காலமாக அடைந்து, தர்க்கரீதியாகத் தோன்றும் அறங்களையும், அதை வன்மையுடன் பிரயோகஞ் செய்வதையே சட்டமாகக் கொண்டு, எல்லோரின் வன்மையை தன் வன்மையாக நினைத்து ஜனங்களின் சிறப்பையே தன்சிறப்பாக எண்ணி ஈசுவரனின் நோக்கத்தை நிறைவேற்றுவதே தன் முடிவென எண்ணி தலையோங்கும். ஜன சமூகத்திற்கு நீங்கள் சாக சித்தமா யிருப்பதால் உங்கள் தேசத்தின் ஜீவன் அமுத வாழ்க்கை யாகும்.

அத்தியாயம். 15

குடும்பமும் கடமையும்—பெண்ணின் பெருமை—குழந்தைக்குதேச பக்தி—ஆண் பெண் சமத்துவம்—குடும்ப வாழ்க்கை—புத்திரர் சிறப்பு.

குடும்பமும் கடமையும்

இருதயத்தின் நாடு குடும்பமே யாகும். குடும்பத்தில் ஒரு தேவி அற்புத கருணை இனிமை அன்பினால் கஷ்டம் துக்கங்குறைத்து கடமைகளை நிறைவேற்றும்படி செய்கிறாள். புவியில் மனிதர்கள் ருசியுடன் புசிக்க, துக்கம் தோயாத சந்தோஷமுண்டானால் அது இத்தேவியினால் திகழும் குடும்ப சந்தோஷமே யாகும். சகவாச தோஷத்தால் இத்தேவியின் சிறகுகளின் கீழுள்ள புனித குடும்ப வாழ்க்கையை ஒருவன் அடையவில்லையானால் அவனுடைய ஆன்மாவில் துக்கத்தின் சாயை திடமாகத் திகழும். எதனாலும் நிறைக்க முடியாத குறை யொன்று

அவன் கருத்திலே குணமாகும். ஆனுல் என் நிலையைப் பற்றி நான் உரைக்கவேண்டியதில்லை. இத்தேவியை சிருட்டித்த தலைவனை நாம் போற்ற வேண்டும். குடும்ப சுகம் ஆதரவை அடைந்தவர்களே! அதிக ஆனந்தம், துக்கத்தின் பேராதரவை திடீரென வேறு எங்கேயாவது காணலாமென நீங்கள் கனவுகண்டு அவர்களை துச்சமாக எண்ணுதேயுங்கள். வேறு எங்கும் காணமுடியாத நிலையான நேர்மையை குடும்பத்திலேயே காணலாம். அதன் அன்பு உங்களைச் சுற்றி மெதுவாக சூழ்ந்து உங்களை அறியாமல் பிடிவாதமாயும், நிச்சயமாயும், மரத்தைச்சுற்றி கொடிபடர்வது போலாகி, ஒவ்வொரு விளுடியும் உங்களைப்பற்றி, வாழ்க்கை முழுமையும் அமைதியாய் உங்களைக் கலந்து விடுகின்றது. அதை சில நாளில் நீங்கள் அறிவதில்லை; ஏனெனில் அது உங்களில் ஒன்ருய்விட்டது. ஆனுல் அதை நீங்கள் சொல்ல முடியாத ஒரு பொருளை, உங்கள் வாழ்க்கைக்கு அவசியமும் மிக நெருங்கியதான ஒன்றை விட்டுவிட்டதாக உணர்வீர்கள். நீங்கள் அமைதியற்று ஆனந்தமகன்று திரியுங்கால் சிறிய சந்தோஷத்தையும், ஆதரவையும் நீங்கள் அடையலாம். ஆனுல் பெரிய ஏரியில் புலனுகும் அமைதி, ஆதரவான நித்திரையின் அமைதி, தாய் மார்பில் தூங்கச் செய்யும் தூக்கத்தின் அமைதியான சிறந்த ஆதரவை நீங்கள் எப்பொழுதும் அடையமாட்டீர்கள்.

பெண்ணின் பெருமை

குடும்பத்தின் தேவி ஸ்திரீயாகும். தாய், மனைவி சகோதரியான ஸ்திரீகளே ஜீவனை சீராட்டுபவர்கள். அவர்களின் அன்பு சிருட்டியில் சிதறி விழுந்த சர்வேசனின்

அன்பாகி ஜனங்களைப் பாதுகாக்கும் பரமனுடைய பேரன்பின் பேரொளியுமாகும். ஒவ்வொரு துக்கத்தையும் தேய்ப்பதற்கான கோமளமான காருண்யக் களஞ்சியமே ஸ்திரீகளாகும். எதிர்கால கற்பனையில் நம் ஒவ்வொருவரையும் ஸ்னனஞ் செய்விப்பவர்கள் ஸ்திரீகளேயாகும். தாயின் முதல் முத்தமே குழந்தைக்கு அன்பைக் கற்பிக்கும். மனிதர்கள் விரும்பும் வனிதையின் புனித முதல் முத்தம், மனிதர்களுடைய ஜீவ வாழ்க்கையில் நம்பிக்கையையும் சிரத்தையையு மளிக்கிறது. அன்பான காதலும், நம்பிக்கையும் புனிதமாவதற்கான விருப்பத்தை சிருஷ்டித்து அதைப் படிப்படியாய் அடைவதற்கான வன்மையை யளிக்கின்றது. அதுவே எதிர்காலத்தை சிருஷ்டி செய்கிறது. சுருங்கச் சொல்லில் அவ்வெதிர்கால சின்னமே குழந்தையாகும். நம்மையும் எதிர்கால சந்ததிகளைச் சேர்ப்பிப்பது குழந்தைகளே. தெய்வீக அற்புத உற்பத்தியுடன் கூடிய குடும்பம் அவள் வழியாகவே அமுதத்தைக் காட்டுகின்றது.

சகோதரர்களே ! குடும்பத்தைப் புனிதமாகக் கருதவும். ஜீவனிலிருந்து பிரிக்க முடியா தென்னும் நிலை என அதை அறியவும். பொய், பலவந்த தர்க்கம் நிறைந்த மனிதர்களின் எதிர்ச்சியை தகர்க்கவும். பேராசையின் ஊற்று என எண்ணியுள்ள அவசரமாய் நினைப்பவர்களின் செயல்களையும் தாக்கி, ஜாதியின் இயக்கம் வலுக்குமேயானல், கோபமாகி அதைக்கழிக்க அதைக் கொல்லுவதை விட வேறு வழியில்லை என்பதை கருத்திலாக்கவும்.

குடும்பமென்பது கடவுளின் கருத்தாகும். மனிதர்களுடையதில்லை. எந்த மனித வன்மையாலும் அதை

அழிக்க முடியாது. தேசத்தைப் போல, தேசத்தைவிட அதிகமாக குடும்பத்தில் ஜீவனின் ஒரு ஆதரவாகும்.

தேசத்தைவிட பெரியதென நான் புகலுகிறேன். மனித சமூகத்தின் ஒழுக்கமான சட்டத்தை ஒவ்வொருவனும் தனது கருத்தில் எண்ணுங்கால் நாம் புனிதமாய் எண்ணப்படும் தேகம் ஒரு காலத்தில் ஒரு வேளை மறையலாம்; ஆனால் குடும்பம் என்பது மனித கோடிகள் இருக்கும்வரை நிலையாய் நிற்கும். அதுவே மானிட கோடிகளின் பாலர் மஞ்சம் போலாகும்.

குழந்தைக்கு தேச பக்தி

மனித ஜீவனின் ஒவ்வொரு ஆதரவைப் போலவே அது வளர்ச்சிக்கு அதன் விருப்பம், நோக்கத்திற்கு விரிந்ததா யிருக்கவேண்டும். காலந்தோறும் அது மாறவேண்டும். அதனால் அது கொடுமையைக் காணாது.

குடும்பத்தைப் புனிதமாக மேன்மேலுஞ் செய்யவும். தேசத்துடன் அதை நெருங்கி இணைப்பதுமே உங்களுடைய நோக்கமாகும். மானிட கோடிகளுக்கு தேசமெப்படியோ, தேசத்திற்குக் குடும்பமாகும். தேசத்தின் வேலை மனிதர்களைக் கற்பிப்பது என நான் சொல்லியுளேன். அப்படியே குடும்பத்தின் வேலை நகரவாசிகளைக் கற்பிப்பதே யாகும். குடும்பமும் தேசமும் ஒரு இரேகையின் இரு முனைகளிலுள்ளதாகும். இது இல்லாத இடத்தில் புனிதப் பொருள் நாளடைவில் பாழடையும். வெறுப்பும், துஷ்டத்தனமும், அதிகமானல் புனிதப் பொருளான அன்பை, அதிகமாக பாழாக்கும். அதனல் அது சத்தியம் பிரிந்து வேறு பாதையிலாகும்.

தற்காலத்தில், 'சகவாச சக்தியால் தன்னலம் அடிக்கடி அரசுபுரிந்து குடும்பத்தை அதிகமாய் அதிகாரஞ் செய்கின்றன. சீர்கெட்ட சமூக அமைப்புகள் அதை தோற்றுவிக்கின்றன. ஒற்றர்கள், போலீஸ், சிறைச்சாலை, தூக்கு மேடையால் ஸ்திரமாகும் சமூகமானது, பரிதாபமான தாயை தன் மகனின் ஒவ்வொரு பெருமையான பெரிய தோற்றத்திலும் நடுங்கும்படி செய்து அவநம்பிக்கையை கற்பனை செய்யும்படி தூண்டுகின்றது. அவனை அடியிற்கண்டவாறு சொல்லும்படியும் செய்கின்றது. 'ஜாக்கிரதை! தேசம் சுதந்திரம், எதிர்காலம் முதலியவைகளைப்பற்றி பேசி தன்னுயிரையும் யளிக்க உபதேசம் செய்யும் மனிதன் ஒருவேளை தேசத்துரோகியைத் தவிர வேறு இல்லை.

யோக்கியதையுட னிருப்பது எந்த அமைப்பால் அபாயமாய், எதில் பொருளே வன்மைக்கும் ஆதரவிற்கும் காரணமாகின்றதோ எங்கு தண்டனையையும் அக்கிரமத்தையும் பொருளினாலேயே எதிர்க்கலாமோ, அங்கு அன்பானது சத்தியத்தை நாடும் மகனுக்கு அடியிற் கண்டதையே சொல்லும்படி செய்கின்றது. "ஜாக்கிரதை! பொன் பொருளிலேயே நீ பத்திரமாயிருப்பாய். சத்தியமொன்றே வன்மை தீமை முதலியவைகளி லிருந்து உங்களை காப்பாற்றுது" உங்களுடைய வியர்வை இரத்தத்தால் யோக்கியதையால் நிர்மாணஞ் செய்யப்போகும் சுதந்திர நாட்டை பரஸ்பர நன்மையை நாட்டப்போகும் நாட்டைப்பற்றியே நான் பேசப்போகிறேன். அக்காலம் வரை நீங்கள் விருத்தியாவதற்கு ஒரு வழியே உங்களுக்கு திறந்துள்ள என்பது உண்மையே. ஒரே சிறந்த கடமை

யையே நீங்கள் செய்யவேண்டும். அது நீங்கள் யாவரும் சேர்ந்து தயார் செய்து கொள்வதேயாகும். சரியான காலத்தை அறிந்து, சண்டை செய்து உட்கலகத்திலைா வது இதாலியை வெற்றியாக்கவேண்டும். அப்பொழுது தான் நீங்கள் கொடிய நிரந்தரமான இடையூரன்னியில் உங்களுடைய மற்ற செயல்களை சாதித்துக்கொள்ளமுடி யும்.

நான் மண்ணோடு கலந்து புழுதியான பிறகு, ஒரு வேளை நீங்கள் இந்நூலைப்படிக்கலாம். இதில் அடங்கி யுள்ள சில சகோதர உபதேசங்கள் உங்களை நேசிக்கும் இருதயத்திலிருந்து பாய்கின்றது. மனப்பூர்வமாயும் மன முணர்ந்தும் அவைகள் எழுதப்படுகின்றன.

ஸ்திரீகளுடன் அன்புடன் மரியாதையாயிருக்கவும், அவர்களுடன் ஆதரவை மாத்திரம் நாடாமல், வன்மை அருள், அறிவு ஒழுக்கத்தின் வளர்ச்சியையும் நாடவும். அவளைவிட எந்த விதத்திலும் நீ உயர்ந்தவன் என்னும் எண்ணத்தை நீ அழித்துவிடவும். அவளைவிட ஒரு அணு வும் நீ உயர்ந்தவனில்லை. சமமற்ற கல்வியால் அப்பார பட்சம் தோன்றிற்று. இக்கொடுமையை யாதரிக்கும்படி யான, புலப்படும் தாழ்மையான அறிவின் காரணங்களும், அடிக்கடி சட்டத்தால் நிகழும் கடுமையும் அச்சமற்ற கல் வியினாலேயாகும். எப்பொழுதும் கொடுமையைச் செய் பவர்கள் தங்களாலேயே சிருட்டி செய்துகொண்ட ஒரு பொய்ப் பொருளிலேயே சாய்ந்து புலனுவார்கள் என கொடுங் கோன்மை செய்பவர்களின் சரிதை உங்களுக்குக் கற்பிக்கவில்லையா? இதுவரை நமது ஜனங்களின் மக்க ளான உங்களுக்கு ஜமீன்தார் வகுப்பினர்கள் கல்வி என்

பதை அளிக்கவில்லை. பிறகு உங்களுக்குக் கல்வி இல்லை என்பதை காரணமாகக்கொண்டு பெரும் பதவிகளிலிருந்து சட்ட ஸ்தானங்களிலிருந்து உங்களைப் பிரித்து உங்கள் சமூக வாழ்வை சீர்திருத்தும் சட்ட சபைகளிலிருந்து நீக்குகின்றார்கள். அமெரிக்காவில் நிக்ரோவரை அச்சாதியானது அடிவரை இழிந்த ஜனங்கள் எனவும், கல்விக்கே யோக்கியதை இல்லை எனவும் அறை கூவுகின்றார்கள். ஆனால் கல்விக் கற்பிப்பவர்களை தண்டனை செய்கிறார்கள். கடந்த ஐம்பது வருஷங்களாக அதிகார வர்க்கத்தை ஆதரிப்பவர்கள் சுதந்திரத்திற்கு நமக்கு யோக்கியதை இல்லை என சத்தியஞ் செய்தார்கள். உண்மையாக அத்தடைகள் இருக்குமேயானால், அவைகளை நாம் வெற்றி பெறுமவிருப்பதற்காக உதர நிமித்தமான மிருக வன்மைகொண்ட சைன்னியங்கொண்டும் சட்டங்களாலும் நாம் முன்னேற்றுவதற்கான ஒவ்வொரு வழியையும் தடுக்கின்றார்கள். சுதந்திரத்திற்குக் கொடுமையே கல்வி போலும்!

ஆண் பெண் சமத்வம்

ஸ்திரீகளிடம் நாமெல்லோரும் அத்தகைய இன்னல் செய்யப் புகில் அதிகமான குற்றம், கொடுமைகளையே செய்பவர்களாகும். இந்த குற்றத்தின் சாயையும் உங்கள் சித்தத்தில் இருத்தலாகாது, ஏனெனில் ஒரு குடும்பத்தை இரண்டாகப் பிரித்து, ஒன்றை மற்றொன்று அதிகாரஞ் செய்யும் அல்லது செய்ய அனுமதிக்கும் குற்றத்தைவிட பெருங் குற்றம் ஈசுவரன் முன்னிலையிலில்லை. பரமபிதாவான ஒரே ஈசுவரன் முன்னிலையில் ஆணுமில்லை பெண்ணுமில்லை. ஆண் பெண் என்னும் இரு குணங்களை அடைந்துள்ளதாகும். இவ்விரண்டும்,

சமூகப்பற்று, கல்வித்திறமை, அறிவு வளர்ச்சி முதலியவைகளால் மிருகங்களிலிருந்து தனிமையாய் திகழ்கின்றன. எங்கெங்கு இந்த குணங்கள் குணமாகின்றதோ அங்கு மனித சுபாவம் சிறப்பாகும். அதனால் இருவர்களும் சமானமாகையால் சம உரிமைகளையும், சம கடமைகளையும் அடைந்துள்ளவர்களாகும். மரத்தின் இரு கிளைகள் போல் மனிதத்துவமென்னும் கடைக்காலில் வடிவத்தில் வேற்றுமையாகி ஆண் பெண்கள் தோன்றுவது. அவர்களுள் சமமின்மையே இல்லை; இரு மனிதர்களுக்குள் தொழிலால் சற்று வேற்றுமை விளக்கமாவது போல், அங்ஙனமே விருப்பங்களினாலும், தொழிலாலும் சற்று வேற்றுமை போலாகலாம். ஒரே இராகத்தின் இரு இசைகளை சமமில்லை எனவும் வேற்றுமையானதெனவும் சொல்ல முடியுமோ? மனித சமூகம் என்னும் இராகமான ஆண் பெண் என்னும் இரு இசைகளன்னியிலாகாது. குடியேற்றத்தினால் ஜன சமூகத்தின் சிறப்பை எங்கும் விருத்தி செய்ய ஒரு தனிப் பெருமையையும் நிலையையும் ஒருவன் அடைந்துள்ளதாக எண்ணவும்; மற்றொருவன் உலகமே போற்றும் சாஹித்தியம் கலை முதலியவைகளை தோற்றுவித்து அதனால் பிரசாரஞ் செய்வதாக எண்ணவும். இந்த இருவர்களின் கடமைகளும் உரிமைகளும் வேற்றுமையை யடைந்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ, ஒரே தெய்வீக எண்ணத்தின் திரு அவதாரமென இவ்விருவர்களையும் உரைக்கலாம். அவர்கள் நோக்கத்தில் இருவர்களும் சமமாயும் சகோதரர்களு மாவார்கள். இந்த இருவகை ஜனங்களைப் போல் ஆண் பெண்கள் ஜன சமூகத்திற்கு தன்னந் தனி செயல்களை செய்பவர்களா

வார்கள். இவ்விரண்டு வேலைகளும் சமமான புனிதப் பொருள்களாகும். பொது நலத்திற்கு இரண்டும் அவசியமே; ஆன்மாவைப்போல் பிரபஞ்சத்தில் ஈசுவரனால் புலனுக்கப் பட்ட நினைவின் இரு சுவரூபங்கள் எனவே இவைகளை உரைக்கலாம். உங்களுடைய சுகத்திற்கும், துக்கத்திற்கும் ஆதரவாயும், பங்காளியுமாகவே பெண்மணியை எண்ணவும். அது மாத்திர மன்னியில், உங்கள் விருப்பம் உங்கள் நினைவு, உங்கள் கல்வி உங்கள் சமூக ஊழியத்திற்கும் அவர்களைத் துணையாகவும் உள்நாட்டு ராஜீய விஷயங்களிலும் அவர்களை சமானமாக எண்ணுங்கள். நீங்கள் இருவரும் ஒன்றாக இருக்கவும்; நாம் அடைய வேண்டிய நோக்கத்திற்கு எழுச்சியாக, ஆன்மாவின் இரு சிறகுகளாக எண்ணி நாம் ஒன்றுவோம். ஈசுவரன் மனிதனையும், ஸ்திரீயையும், பைபிலில், மனிதனிலிருந்து படைத்தார் என எழுதப்பட்டுள. ஆனால் எதிர்கால பைபிலில் எழுதப்படுவது யாதெனில் ஆணும் பெண்ணும் விளக்கமாகும் ஜன சமூகத்தை சிருட்டித்துள்ளார்.

ஈசுவரன் அனுப்பும் குழந்தைகளை நேசிக்கவும். ஆனால் அவர்களை உண்மையாய் ஆழ்ந்த திடமான அன்புடன் நேசிக்கவும். தன்னலமும், அவர்களுக்கு அழிவுமான, நாடியற்ற, நினைவற்ற, குருட்டன்பால் அவர்களை நேசிக்க வேண்டாம். எதிர்கால சந்தானங்களின் பொறுப்பை யெல்லாம், எல்லாப்புனிதப் பொருள்களின் பெயராலும் அதை நீங்கள் மறக்கக் கூடாது. உங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட இந்த ஆன்மாக்களுக்காக ஜன சமூகம் ஈசுவரன் முன்னிலையில் உங்களுக்கு பிரும்மாண்டமான பொறுப்புண்டு. இதை மனிதர்களெல்லாம் அறிவார்கள்.

குடும்ப வாழ்க்கை

நீங்கள் வாழ்க்கையின் சிற்றின்பத்திலும், பேராசையிலும் அதைப் பயனுக்க வேண்டாம். ஜீவனிலும் கடமைகளிலும் அதைச் செலுத்தும் ஒழுக்கமென்னும் சட்டத்திலும் அதைப் பயன் செய்ய வேண்டும். நாஸ்திகம் நிறைந்த இந்த நூற்றுண்டில், முக்கியமாகச் சில செல்வக் குடும்பங்களில் சில தாய் தந்தைகளே தங்கள் புனிதமான கல்வியின் நோக்கத்தையும், பொறுப்பையு மறிகிருர்கள். நம்முடைய காலத்தில் நடைபெறும் மிகுதியான பலிக்கும் அடிக்கடி நிகழும் சண்டைகளுக்கும், நீண்ட தியாக காலமாகவே இருப்பதற்கும் முப்பது வருடத்திற்கு முன்னல் அளிக்கப்பட்ட தன்னலக் கல்வியின் பயனே என்பதையும் ஜீவன் என்பது கடமையுமில்லே. நோக்கமுமில்லே. சிற்றின்பமும் தன்னலத்திற்கான ஒரு சந்தர்ப்பமென குழந்தைகள் கருத்தில் குணமாக்க எளியதாயின் பொறுப்பற்ற தந்தைசெயலின் பயன் என்பதை சில பெற்ருேர்களே அறிகிருர்கள். தொழிலாளியின் மக்கட்களே உங்களுக்கு அவ்வளவு விபத்துகளில்லே. எளிமை வாழ்க்கையில் உங்கள் குழந்தைகள் நன்ருய் கற்றுளார்கள். ஆனல் தாழ்மையான சமூக நிலேயிலிருப்பதால் உங்கள் குழந்தைகளேச் சரிவரக் கற்பிக்க சந்தர்ப்பம் வாய்ப்பதில்லே. ஆயினும், உங்கள் மொழியாலும் உதாரணத்தாலும் அக் கஷ்டமான முயற்சியை ஒருவாறு நிறைவேற்றலாம்.

உங்கள் உதாரணத்தால் நீங்கள் ஒழுக்கமாகவும், ஒழுக்கமற்று மிருப்பது போலவே உங்கள் குழந்தைகளும் ஒழுக்கமாகவோ, ஒழுக்கங் குன்றியோ இருக்கும்.

நீங்கள் நேர்மையகன்று, உங்களுடைய சகோதரர்களுக்கு தயை யன்னியி லிருந்தால் அக் குழந்தைகள் எப்படி, யோக்கியமாயும் தயையுடன் கூடியதாயும் மனித இரக்கமுடன் மலரும். நீங்கள் இராஜத் துவேஷமுடனிருந்தால் அவர்கள் தங்கள் சிற்றின்பங்களை எப்படி அடக்குவார்கள் ?

அவர்கள் முன்னிலையில் துராசாரமுடனாகி துர்ப்பாஷணைகளை ஒழுக்கங்குன்றுமே என அஞ்சாமல் மொழிந்தால் குழந்தைகள் தங்களின் இயல்பான நற்குணத்தை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள முடியும் ?

அவர்களின் இயல் பென்னும் வடிவானது நடமாடுமான உங்கள் அச்சிசுப்போலவே அமைகின்றது. மக்கட்கள் மிருகங்களாவதும், மனிதர்களாவதும் உங்களாலேயேயாகும்.

புத்திரர் சிறப்பு

உங்கள் மொழிகளால் அவர்களைக் கற்பிக்கலாம். தேசம் எப்படி இருந்ததென்றும், எப்படி இருக்கவேண்டுமென்பதையும் அவர்களுக்கு உரைக்கவும். மாலைப்பொழுதில் தாயின் புன்னகையுடன், உங்கள் குழந்தைகள் முழங்காலில் கபடமற்று தவழ்ந்து, உங்கள் கஷ்டங்களை யெல்லாம் களையச் செய்யும் அத்தருணத்தில் பழைய நமது நாட்டுக் குடியரசில், சாதாரண ஜனங்களால் செய்யப்பட்ட பெரும் வீரச்செயல்களை மறுபடியும் அவர்களுக்கு உரைக்கவும். நமது நாட்டையும் நமது ஜனங்களையும் நேசித்த நல்லார்களின் நாமங்களை அவர்களுக்கு உரைக்கவும். கஷ்டம் அபவாதம், தண்டனைகளிலிருந்தும் தங்கள் நிலையை

விருத்தி செய்ய பாடுபட்ட அவர்களின் சரிதையை சொல்லவும். கொடுமை செய்பவர்களை வெறுக்கும்படி அவர் மனதில் பதியச் செய்ய வேண்டாம். ஆனால் கொடுமையைத் தகர்க்க திடமான தீர்மானங்களாகும், உணர்வையளிக்கும், உங்கள் நாவிலிருந்தும், தங்கள் தாயின் அமைதியான தலை அசைவி லிருந்தும், ஒழுக்கமென்னும் பாதை எவ்வளவு அழகானதெனவும், சத்தியத்தின் தூதர்களாக திகழ்வது எவ்வளவு சிறந்தது எனவும் வேண்டுமானால் சகோதரர்களுக்கு தியாகஞ் செய்வது எவ்வளவு தூய்மையானதெனவும், அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். துராக்கிரதத்தால் பற்றி வன்மையால் நிகழும் அதிகாரத்திற்கு விரோதமாய் போர்புரியும் விதையை, குழந்தைகளின் இளம் இதயத்தில் விதைக்குங்கால் அருளால் பெருமையாகி ஒழுக்கத்தின் அதிகாரியான ஒரே தலைவனை சத்தியத்திற்கு மரியாதை என்னும் அனலை அவர்கள் மனதில் மூட்டவும். கொடுமையையும், குழப்பத்தையும் அவர்கள் வெறுக்கிறார்களா என்பதை கவனிக்கவும்; பரம்பரை வழக்கமென்பதில் கட்டுப்படாமல் சித்தத்தில் சிறப்பாகும் செம்மையிலேயே சாய்கிறார்களா என்பதை கவனிக்கவும். இம்முயற்சியில் தேசம் உங்களுக்கு உதவி புரிய வேண்டும். உங்கள் குழந்தைகளின் பெயரால் தேசத்திலிருந்து பெறுவதற்கு உரிமையுண்டு. தேசீயக் கல்வியன்னியில் உண்மையான தேசமாகாது.

உங்கள் பெற்றோர்களை நேசிக்கவும். உங்களிடமிருந்து தோன்றும் படியான குடும்பம், நீங்கள் உதித்த குடும்பத்தை மறக்கும்படி செய்யவேண்டாம். புதிய பந்தங்கள் பழையவற்றை பிரிப்பதுபோல் பல இடங்களில்

அடிக்கடி புலனாகின்றது. ஆனால் மூன்று தலைமுறைகளைச் சேர்க்கும் அன்பென்னும் சங்கிலியின் புதுவளையமாக அதை எண்ணவேண்டாம். கடைசிக்காலம் வரை மரியாதையாகவும் கண்ணியமாகவும் பெற்றோர்களைக் கருதவும், மயான காலம் வரை அவர்களை மேன்மையுடன் போற்றவும். நிரந்தரமான அன்பினால், கஷ்டமடைந்த அவர்களின் ஆத்மாக்களில் அமுதம் சிரத்தை என்னும் மணத்தால் சிறப்புறச் செய்யவும். நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்குச் செய்யும் மரியாதை, உங்கள் குழந்தைகள் உங்களுக்கு இனி மரியாதை வைக்கப்போகிறார்கள் என்பதை காட்டும்.

பெற்றோர்கள், சகோதரிகள், சகோதரர்கள், மனைவி, குழந்தைகள் இவர்களெல்லாம் ஒரே மரத்தில் வேறு அமைப்புடன் வளரும் கிளைகளாகக்கருதவும். அன்பென்னும் ஐக்கியத்தால் குடும்பத்தை புனிதமாக்கவும். தேசத்திற்கு நீங்கள் எல்லோரும் ஒன்று கூடி தியாகஞ் செய்யும் தேவாலய மென குடும்பத்தை எண்ணவும்.

நீங்கள் சந்தோஷமா யிருப்பீர்களோ என்பதை நான் அறியேன். ஆனால் நீங்கள் இதைச் செய்வீர்களே யானால் பல கஷ்டங்களில் நடுவில், புனிதமான அறிவின் அமைதியையும், சாந்த சித்தத்தின் சாய்வையும், அடைவீர்கள் என நான் கட்டாய மாகச் சொல்வேன். அவ்வமைதி ஒவ்வொரு கஷ்டங்களிலும் அளித்து ஒவ்வொரு புயல் காற்றிலும் பிரும்மாண்டமான ஆகாசத்தை உங்கள் முன்னிலையில் திறந்துவைக்கும்.

அத்தியாயம் 16.

உங்கள் கடமை—சுதந்திரக் கல்வி—சமூக ஐக்கியம்—புராதீனக்கொள்கை—மனித உயர்வு—எதிர்கால தர்மம்.

உங்கள் கடமை

உங்களுக்கு சீவனுண்டு. அதனால் சீவனுக்கேற்ற சட்டமும் உங்களுக்கு உண்டு. நீங்களே உங்களை விருத்தி செய்துகொண்டு, சீவனின் சட்டப்பிரகாரம் நடந்து நிலவ வேண்டுமென நான் உங்களுக்குச் சொல்லியுளேன். சீவனின் சட்டம் யாதென்பதை அறிந்துகொள்ள இரு சாதனத்தை உங்களுக்கு சர்வேசுவரன் அளித்துளான் என்பதை நான் முன்னரே சொல்லியுளேன். உங்கள் மனச்சாட்சி ஜன சமூகத்தின் மனச் சாட்சியாகும். ஜன சமூகத்தின் மனச்சாட்சி என்பது சர்வ ஜனங்கள் மனப்பூர்வமாய் தெளிந்ததாகும். நீங்கள் உங்கள் மனச் சாட்சியை வினவி சரிதையால் சிறப்பையுடைய சர்வ ஜன சித்தத்தின் ஒலியுடன் சேருமே யானல், நித்தியமும் நிர்விகாரமுமான சத்தியத்தை உங்கள் பிடியில் கெட்டியாய்ப் பற்றி விட்டதாக எண்ணவும்.

சரிதையின் மூலமாகப் பேசும் ஜன சமூகத்தின் ஒலியை தற்காலத்தில் சற்று கஷ்டமுடனேயே நீங்கள் கேட்க முடியும். அதை அறிவதற்கேற்ற நல்ல நூல்களும் உங்களிடமில்லை. உங்களுக்கு நேரமு மில்லை. கடந்த நூற்றாண்டில் ஜன சமூக சாஸ்திரத்திலும் சிறந்த சரிதையின் கல்வியிலும் தங்கள் வன்மையாலும் நேர்மையாலும் இந்த

ஒலியிலிருந்து நன்ருய் திட முடனுவீர்கள் என்பதை நமது சில சீவனுடைய சட்ட சுவரூபங்களை செம்மையாகக் காட்டியுளார்கள். மனித இயல்பானது சிறப்பாய் சமூக சம்பந்தமாய், கல்விக்கேற்ற வன்மையை யடைந்துள்ள தென அவர்கள் கண்டுபிடித்துளார்கள். ஒரே ஈசனே இருப்பதாலும், இருக்கக்கூடு மாதலாலும் ஒவ்வொரு மனிதருக்கும் எல்லா ஜன சமூகத்திற்கும் ஒரே சட்டந் தானிருக்கக்கூடும். இதன் அடிப்படையும் சர்வாதரவான சுபாவம் வளர்ச்சி அல்லது அபிவிருத்தியேயாகும். எல்லா வித அறிவும் ஆமோதிக்கும் எதிர் வாதமில்லாத இந்த சத்தியத்திலிருந்து உங்களுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமைகளும் குணமாகின்றது. ஒருவித எல்லேக்குள் உங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு யாதொரு விதமான இடையூறு என்பது உங்களுக்குக் கூடாது. அதற்கேற்ற உதவி உங்களுக்கு அளிக்கப்பட வேண்டு மென்பதே அதன் ஒரு உத்தேசமெனலாகும்.

நீங்கள் சுதந்திர புருஷர்கள். சுதந்திரமாகவே உணர் கிறீர்கள். மனச்சாட்சி என்னும் கர்ச்சனேக்கு மாருன எந்த போலி நியாயமும் தத்துவமும் சுதந்திரத்தின் இரு சூட்சம சாட்சிகளான பச்சாதாபம் தியாகத்தை ஒரு பொழுதும் சும்மா இருக்கும்படி செய்ய முடியாதது. சோகிரதேயானின்று இயேசுநாதர் வரை, இயேசு நாதரி னின்று அடிக்கடி தேசத்திற்காக சாகும் தியாக புருஷர் கள் வரை, நோக்கத்திற்காக தங்கள் உயிரை பலிதானஞ் செய்பவர்கள், அடிமைக் கற்பனேக்கு விரோதமாக கர்ச் சனே செய்துளார்கள். நாங்களும் சீவனே நேசித்தோம். எங்களை அன்புசெய்த பொருள்களை நாங்கம் நேசித்தோம்

அவைகள் எங்களைவிட்டுவிட வேண்டுமெனவும் தூண்டின. எங்கள் இருதயத்திலுள்ள ஒவ்வொரு முயற்சியும் நாங்கள் சீவனுடன் இருக்கவேண்டுமெனவே தூண்டிற்று! ஆனல் எதிர்கால சந்ததிகளின் விடுதலைக்காக நாங்கள் உயிரை விட துணிந்தோம். இதுவே அவர்கள் சொன்னது எனலாம். விபீஷணனிலிருந்து நவீனமாயுள்ள நீசமான ஒற்றன் வரை, சகோதரர்களைக் காட்டிக் கொடுக்கும் ஒவ்வொருவரும், தீமையில் தோய்ந்துள்ள எல்லா மனிதர்களும் அவர்கள் ஆழ்ந்த ஆன்மாவிலே, சுய இகழ்ச்சி, அமைதியின்மையை அடைந்து 'என் நெறிகளை நீ விட்டு விட்டாய்' என்றும் இகழ்ச்சியான மொழிகளை மனத்தினல் செவியுறுகிறுர்கள்.

சுதந்திரக் கல்வி

நீங்கள் சுதந்திரமுள்ளவர்கள்; அதனல் பொறுப்புமுண்டு. இந்த மனே சுதந்திரத்திலிருந்து ராஜீய சுதந்திரத்தின் உரிமையு முண்டாகின்றது. நீங்கள் உங்களுக்காகவே வெற்றி பெற வேண்டுவது ஒரு கடமை. அதை பங்கம் விளையாமல் காப்பாற்ற வேண்டும். மற்றவர்கள் அதற்கு எல்லையை அளிப்பது அவர்கள் கடமையாகாது.

கல்விக்கேற்றவன்மை உங்களிட முண்டு. உங்களிடம் அறிவு சம்பந்தமான சில புலன்களுண்டு. அறிவு வன்மையும் ஒழுக்க நிலைகளுமுண்டு. ஆனல் கல்வியே அதற்கு முயற்சியையும், உயிரையும் அளிக்கும். இல்லையேல் அது மலடாகவும் மறைந்துமே இருக்கும். ஒரு வேளை விளங்கிய போதிலும் ஒழுக்கமான வளர்ச்சி யன்னியில் மின்னல் போல் குறைவாகவே தென்படலாம்.

கல்வி என்பது ஆன்மாவின் உணவே யாகும். தலமும், தேக சம்பந்தமான சீவனும், ஊட்ட மன்னியில் வளர்ச்சியையும் விளக்கத்தையும் அடையாதது போல், அப்படியே மனோ சம்பந்தமானவும் அறிவு சேர்க்கையான சீவனின் முழு மேன்மையும் விளக்கத்திற்கும் புறச் செல்வாக்கு அவசியமாகும். அதற்காக மற்றவைகளின் விருப்பம், எண்ணம், அன்பு முதலியவைகளின் ஒரு பகுதியை யாவது தன்னுள் ஜீரணஞ் செய்து கொள்ள வேண்டும். செடிகள் தன்னந்தனியாக தன் சுபாவம் நிலையிலே வளர்ந்த போதிலும், பொதுவான நிலத்திலே பயிராகி எல்லா சீவன்களுக்கும் பொதுவான ஊட்டத்தினாலேயே போஷிக்கப்படுகிறது. அப்படியே தான் தன்னந் தனி சீவர்களன் வாழ்க்கையுமாகும். ஒரு மனிதனை ஜன சமூகத்தின் வன்மையால் அது போஷிக்கப்பட்டு தனது சொந்த பலத்தை புனர் உத்தாரணஞ் செய்து கொள்ளுகிறது. இந்தப் புனருத்தாரணமும், ஊட்டமும் கல்வியினாலேயே நிறைவேறும். ஆனால் இக்கல்வியானது ஜன சமூக வளர்ச்சியின் பயனாலேயே நேராகவோ, பின்புறமாகவோ, ஒரு தனி மனிதனுக்கு இக்கல்வியை யளிக்கும் இதுவே வாழ்க்கைக்கு அவசிய மென்பது மாத்திரமில்லை. உங்களுடைய எல்லா சகோதரர்களுடன் புனித சம்பந்தத்தை யளிப்பதாகும். உங்களுக்கு முன் நிலைத்து முயற்சி செய்து வாழ்ந்த பல தலை முறைகளுடன் உங்களைச் சேர்க்கும். பயனை அளிக்கும் விதையாக ஈசுவரன் அளித்துள்ளவும், யாவற்றையும் சூழ்ந்து எல்லா அறிவையும் விருத்தி செய்யும்படியான, மனது அறிவு சம்பந்தமான கல்வியை கூடிய வரை, நீங்களே அதை வெற்றி

யடைய வேண்டுமென்பது சீவனின் நோக்கமாகும். அதுவே உங்களுடைய தனி சீவனையும், ஜன சமூகத்தையும், ஒன்றாய்ச் சேர்த்து ஒற்றுமையுடன் நிலை நிறுத்தும்.

இக் கல்வியின் முயற்சியானது அதிவேகமாய் பரவுவதற்கும் எல்லா சீவகோடி இராசிகளில் நிச்சயமாயும் நெருக்கமாயும் உங்கள் தனி சீவன் ஜன சமூக சீவனுடன் தோய்வதற்கு, ஈசுவரன் உங்களை சிறப்பாக சமூக சீவர்களாகவே செய்துளளார். தாழ்ந்த சீவனை ஒவ்வொன்றும் இயல்பைத் தவிர வேறு எது வன்னியிலும் தூலப் பொருளின் உதவியால் தன்னந் தானகவே நிலைக்கலாம். ஆனல் நீங்கள் நிலைக்க முடியாது. ஒவ்வொரு படியிலும் உங்களின் சகோதரர்கள் உதவி உங்களுக்கு வேண்டும். அவர்கள் செயலால் நீங்களே உங்களைத் துணை செய்துகொள்ளாத வரை, வாழ்க்கையின் சிறிய அவசியங்களையும் நீங்கள் பெறுவது கடினமாகும். உங்கள் ஜன சமூகத்துடன் நீங்கள் சேர்ந்திருந்தால் எவ்வளவு சிறந்தவர்களாக ஆன போதிலும், நீங்கள் தன்னந் தனிமையானல் பல பிராணிகளையும் விட பலம் குன்றியவர்களாவீர்கள். அப்பொழுது வளர்ச்சி பெற வன்மை குறைந்து தனி வாழ்க்கையும் துர்லபமாகிவிடும். இருதயத்தில் நிறைந்துள்ள எல்லா பெரும் விருப்பங்களும், தேச பக்தியைப் போலுள்ள பெரும் நினைவும், அதற்குத் தாழ்மையான மற்றவர் ஸ்துதிக்கு இச்சையாகி, புகழை விரும்பும் ஆவலும், உங்களைச் சூழ்ந்துள்ள இலட்சக் கணக்கான ஜனங்களுடன், உங்களுடைய சீவனை சேர்க்கவேண்டு மென்பதை இயல்பாகக் காட்டுகின்றது. ஆதலால் சபை சமூகத்திற்காகவே சிருட்டிக்ப்பட்ட தென்பதாகும். உங்கள் வன்மையை நூறு பங்கு

அதிகமாக அது பெருக்குகின்றது. மற்றவர்களின் எண்ணத்தை உங்களுடையதாகச் செய்யும்; மற்றவர்களின் வளர்ச்சி உங்களின் மேன்மையாகும். மனித குடும்பத்தின் ஐக்கியத்தினு லுண்டாகும் அன்பு வளர் பெரும் விருப்பம் முதலியவைகளால் நீங்கள் மேன்மையாகி எழுச்சி அடைந்து, உங்கள் சுபாவம் புனிதமாகும். விரிவாகவும் நெருங்கியும் எங்கும் உங்கள் சகோதரர்களுடன் ஐக்கியமானல், நீங்கள் தனித்தனி அபிவிருத்தியிலும் அதிகமாக முன்னேற்ற மடைவீர்கள்.

சமூக ஐக்கியம்

எல்லோருடைய ஐக்கியமான முயற்சி யன்னியில் சீவனின் சட்டம் பரிபூர்ணமாக நிறைவேருது. ஒவ்வொரு முன்னேற்றத்தை அடையும்பொழுதும், அந்த சட்டத்தின் ஒரு பகுதியானது புதியதாய் கண்டுபிடிக்கும்பொழுதெல்லாம் மனித சமூகத்தில் அதிக ஐக்கியமும், ஜனங்களுள் நெருங்கிய சம்பந்த மேற்பட்டிருக்கு மென்பதைக் காண்பிக்கும். அடிமை, தலைவன் என இரு சுபாவம் மனித சமூகத்திலுண்டு என்னும் 'அறிவிலியின் வேதாந்தத்திற்கு விரோதமாய் புதிய மதம் மனிதர்களின் ஐக்கியத்தை பகிரங்கஞ்செய்ய முற்படுங்காலத்தில், ஐரோப்பா அறியும் எல்லா ஜனங்களின் நடுவே ரோமாபுரி ஜனங்கள் தங்கள் கருடக் கொடியை நாட்டியிருந்தார்கள். போப்புக்களுக்கு இப்பொழுது புன்மையுடன் புலனுகலாம். ஆனல் முதல் நூற்றுண்டில் அது நன்மையையே விளைவித்து தர்மத்தில் திடம், தரணி வன்மையை விட பெரியது என முதலிய பிரசாரஞ் செய்தார்கள். நாகரீகமற்றவர்கள் என

நாமழைக்கும் படையெடுத்தவர்கள் ஜர்மனிய, இலாதின் ஜனங்களுள் போர்க் கிளர்ச்சியைப் புலனாக்கினார்கள். ஜனங்களுள் பிரயோகஞ் செய்யும் சுதந்திரத்தின் எண்ணம் ஏற்படுவதற்குமுன் நிச்சயமாய் வெற்றியடையும், தேசீய எண்ணமானது தோன்றிவிட்டது. பிரஞ்சுப் புரட்சியும் ஐரோப்பாவிற்கு வேற்றுமையான அடிமையாகும், சிந்தனையைக்கிளப்பி முயற்சியிலாக்கிவிட்டது.

எது எப்படி இருந்தபோதிலும் நீங்கள் அபிவிருத்தியாகும் சீவர்களாகும்.

புராதனர்கள் அறியாத இவ்வபிவிருத்தி என்னும் வளர்ச்சியானது இனி எல்லா ஜன சமூகத்தின் காயத்திரி ஜபம் போலாகும். அது சமூக, இராஜீய, தர்ம சம்பந்தமான எல்லாவற்றையும் மாற்றிவிடும்.

தலைவிதி, அதிர்ஷ்டம், அற்புதமாம் அறிய முடியாத வன்மை எதேச்சாதிகாரமாய் பரிபாலனஞ் செய்பவன் இஷ்டம்போல் சிருட்டித்து சிதைத்து, மனிதர்கள் அறிய முடியாதவாறு வேகமாகவோ, மெதுவாகவோ காரியங்களைச் செய்யும். தலைவன் முதலியவற்றையே புராதனத்தில் பழைய மதத்தில் பதிந்தவர்கள் நம்பினார்கள். நம்முடைய புவியில் நித்தியமாயும், அழியாததுமான எதையும் ஸ்தாபனஞ் செய்ய மனிதர்களுக்கு வன்மை இல்லை என்பதை நம்பினார்கள். மனிதர்களால், நிர்ணயஞ் செய்துள்ள நிலைகளிலேயே ஜனங்கள் நிச்சயமாய் வீழ்ச்சி யடையவேண்டுமெனவும், மேன்மையான வன்மையில் சிறந்தோங்குவதும் கிழத்தன்மையிலாகி, அழிக்க முடியாத நாசத்தில் அமிழ்வதுமே நிரந்தர இயல்பென எண்ணினார்கள். மிகவும் குறுகிய எண்ணம் விஷயங்களையே அவர்கள் முன் வைத்

துக்கொண்டு, தங்கள் தேசத்தைத் தவிரவேறு நாட்டின் சரிதையை யறியாதவராய் சிலர் தங்கள் நாட்டையும் பற்றி யறியாதவராய், அவர்கள், மனித கோடிகளை சீவனும் சட்டமுமில்லா ஒரே கூட்டமெனவும் தனித்தனித் தியானத்தினாலேயே நினைவெல்லாம் நேர்மையாகிற தென வும் எண்ணினார்கள். இத்தகைய கற்பனைகளின் பயனாக நிகழும் யாவற்றையும் நேர்மை என ஒத்துக் கொள்ளும் படி செய்து, அதை மாற்றுவதற்கு முயலாமலும் எண்ண மர்காமலும் இருக்கும்படி செய்கின்றது. சந்தர்ப்பங்க ளால் எங்கு குடியரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோ அங்குள்ள ஜனங்களெல்லாம் குடியரசு சித்தமுள்ளவர்களே. கொடு மை அதிகாரம் புரியும் நாட்டிலே, வளர்ச்சியில் இலட்சிய மில்லாமல் அவர்கள் அடங்கும் அடிமையாகவே யுளார்கள். அது குடியரசாயிருந்த போதிலுஞ் சரி, கொடுங்கோலாட் சியாய் இருந்த போதிலுஞ் சரி, அங்கெல்லாம் மனித குடும்பங்கள் கீழ் திசையைப் போல் நான்கு ஜாதியாகவும், அல்லது கிரீக் தேசத்தைப்போல் அடிமை, சுதந்திரம் என்னும் இரு பிரிவினைகளாகவும் இருந்ததை அவர்கள் அப்படியே ஒத்துக்கொண்டார்கள். மகா அறிஞர்களான பிளாடோவும், அரிஸ்தாதலரும் இதை அங்கீகரித்தார் கள். இத்தகைய மனிதர்களின் நடுவே உங்கள் வகுப்பு முன்னேற்ற மடைவது கடினமாகவே யாகும்.

புராதீனக் கோள்கை

எல்லா பழைய மதங்களுக்கும் பெருமையான புதிய பெரியாரின் மொழிகளில் தர்மம் ஸ்தாபனஞ் செய்யப் படுங்கால், மந்தமாய் அறிந்த போதிலும் வளர்ச்சி என்

னும் மொழியில் பதிந்துள்ள புதிய எண்ணத்தை அவர்கள் பற்றவில்லை. மனித சமூகத்தின் ஐக்கியமான ஒற்றுமையை அவர்கள் கண்டார்கள்; சட்டத்திலுள்ள ஐக்கியத்தையும் மாந்தர்களின் புனித தோற்றத்தையும் கண்டார்கள். ஆனால் அதைச் செய்து முடிக்க ஈசுவரன் நமக்கு அளித்துள்ள வன்மையையும், எந்த வழியில் அதை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் அவர்கள் அறியவில்லை. தன்னந் தானாகவே தியானமாகி, அதிலிருந்து திகழும் சீவனின் சட்ட அறிவிலேயே வரையறுத்துக் கொண்டார்கள். ஜன சமூகமென்பது யாவருஞ் சேர்ந்த ஒரு சரீரமென்பதை அவர்கள் அறியவில்லை. அவர்கள் தெய்வீகத்தை புராதன குருட்டு தலைவிதி என எண்ணினார்கள். அது ஜனங்களைக் காப்பாற்றுவதாக எண்ணினார்களேயன்னியில், ஜன சமூகத்தின் சட்டமெனச் சிந்திக்கவில்லை. அதை அகண்டமான பெரும் புனிதப் பொருள் என்னும் ஒரு குறிப்புடன் மனிதர்கள் துன்பந்தோய்ந்து அற்பாயுளான சீவன் என்னும் இந்த இரு நினைவுகளின் நடுவே இந்த இரண்டான ஈசன் மனிதனின் நடுவில் ஒரு இடைச் சீவனின் அவசியத்தை சிருட்டி செய்து கொண்டார்கள். ஜன சமூகத்தின் ஐக்கிய சித்தத்தை கிரகிக்கச் சக்தியில்லாமல், தெய்வீக அவதாரமொன்றை நாடினார்கள். இந்த அவதாரத்தில் நம்பிக்கை கொள்வதே மோட்சம், வன்மை, அருளுக்கு ஒரே மார்க்கம் எனப் பிரசித்தஞ் செய்தார்கள்.

ஜன சமூகத்தின் மூலமாக எப்பொழுதும் ஈசுவரனின் சுருதியானது இறங்குகிறதென கனவிலும் எண்ணாமல் ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஈசுவரனின் தனித்தயவினால் திகழ்ந்ததென ஒரு இணைக்கும் புருஷனிலும், தனிச்

சுருதியிலும் நம்பிக்கை கொண்டார்கள். மனிதர்களை ஈசுவரனில் இணைக்கும் தனிச் சங்கிலியை அவர்கள் கண்டார்கள். ஆனால் புவியிலுள்ள ஜனங்களை ஜன சமூகத்துடன் ஒன்றாய் இணைக்கும் சங்கிலியை அவர்கள் காணவில்லை. ஒரு தலை முறை மற்றொரு சந்ததியை எங்ஙனம் பயன் செய்வ தென்பதை அறியாதவர்களுக்கு சந்ததியின் தொடர்ச்சியைப் பற்றிய சிந்தனையே அவர்களுக்கு இல்லை.

ஆதலால் அதை அலட்சியஞ்செய்ய அவர்கள் வழக்கமடைந்தார்கள். எனவே எல்லா மனித சமூகத்தின் சமூக சம்பந்தமான பொருள்களி லிருந்தும், புவியிலிருந்தும் தனித்திருக்க முயன்றார்கள். அப்பால் புவியை பிராயச் சித்த நிலையமென்று, சுவர்க்கத்திற்கு நேர் விரோதமான தென நிலைநாட்டி அருள், சிரத்தையினால், சுவர்க்கமடையலாம் எனவும், அவை யன்னியில் நித்தியமாய் சுவர்க்கம் நீங்கவேண்டு மெனவும் சொல்லி, கடைசியில் நிகழும் பல சாலிகளிடம் புவியை ஒப்புவித்து அதை இகமென உரைத்துச் சமமாய் விட்டார்கள். அவதார புருஷர்கள் சொன்னதையும் குறிபிட்ட காலத்தில் தோன்றியதையே, அவர்கள் சுருதியென எண்ணியபடியால், அத்துடன் வேறு எதையும் இணைப்பது அனுவசியமென முடிவு செய்தார்கள். அச்சுருதியில் நிறைந்த தெல்லாம் நித்தியமான தெனவும், பிழையற்ற தெனவும் எண்ணினார்கள். "உங்களுக்குச் சொல்ல வேண்டுவதோ அதிகம்; ஆனால் நீங்கள் அதை இப்பொழுது கேட்கமுடியாது. சத்தியத்தின் உணர்வு வரும் பொழுது, எல்லாச் சத்தியத்திலும் உங்களுக்கு வழியைக் காண்பிப்பான்; ஏனெனில், அவன் தானாகவே பேசப் போவதில்லை; அவன் செவியுறுவதையே பேசப்போகி

ளுன்'. எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடும், தூய்மையாய் இம்மொழிகள் மொழியப்பட்டதென அவர்கள் மறந்துளார்கள். வளர்ச்சியின் விளக்கம் இதில் ஒருவாறு பதிந்துள்ளது. எனலாம்; ஜனசமூகத்தின் வழியாய் சத்தியம் தொடர்ச்சியாக, மலரும் என்பதும் இதில் அமைந்துள்ளது. ரோமாபுரியை எழுச்சிபெறச் செய்த ஈசுவரனும் ஜனங்களும் என்னும் மொழியின் தத்துவமும் இதில் அடங்கியுள. அதன் ஜனநாயகக் கற்பனையில் முன்னணியில் பிரகாசிக்கும் இம்மொழியை இதாலிக்கும் அளிக்கப்படும், சென்றகால நம்பிக்கையை யுடையவர்கள் இதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் காலம் இன்னும் அனுகூலமாக வில்லை.

பழைய புராணங்களைத் தொடர்ந்த மதங்களின் கோபுர முழுமையும் இப்பொழுது குறிப்பிட்ட கடைக்காலிலேயே சாய்ந்துளது. இத்தகைய அஸ்திவாரத்தில் புவியிலேயே உங்கள் மோட்சம் நிலைக்காதென நன்ருய் விளங்குகின்றது.

பிரபஞ்ச தர்மம்

இயேசு நாதருக்குப்பிறகு 1300 வருஷங்களுக்கப்பால் நமது நாட்டின் பெரும்பெரியார், அடியிற்கண்ட உண்மைகளை உரைத்துளார்:—ஈசுவரன் ஒன்று; பிரபஞ்சம் பரமனுடைய எண்ணமாகும்; ஆதலால் பிரபஞ்சமும் ஒன்றே; எல்லாப் பொருள்களும் ஈசுவரனிடத்தினின்று தோன்றுகின்றன. சிருஷ்டியின் நோக்கத்திற் கேற்றவாறு எல்லாம் ஒருவாறு தெய்வீக இயல்பிலேயே தோய்கின்றன. எல்லாச் சிருஷ்டிப் பொருள்களிலும் மனிதன் மேன்மையான

வன். மற்றவைகளை விட அவனிடம் தான் ஈசுவரன் தன் இயல்பை அதிகமாகத் திகழச் செய்கிறார். ஈசுரவரனி லிருந்து இலங்கும் ஒவ்வொன்றும் தம் இடத்திற்கேற்வாறு தூய்மையாவதிலேயே திகழும். மனிதன் தூய்மையாவதற் கோர் அளவில்லை. மனித சமூகமெல்லாம் ஒன்றே. ஈசுவரன் அனுவசியமான ஒரு பொருளையும் சிருஷ்டிக்கவில்லை. ஜன சமூகம் ஒன்றே யாகையால் எல்லா மனிதர்களுக்கும் ஒரே நோக்கம்வேண்டும். இதை எல்லோரும் ஒன்று சேர்ந்த உழைப்பினாலேயே நிறைவேற்றவேண்டும். அறிவு, வன்மையெல்லாம் சிதறியுள்ள சமூகத்தில், நினைவிலும் முயற்சியிலும் மேன்மையான நிலையை அடைய மனித சமூகமானது ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும். பிறகு மனித சமூகத்திற்கு பிரபஞ்ச தர்மம் புலனாகும் எனலாம்''.

இத்தகைய சிந்தனைகளை சொல்லியவர் டாண்டியாகும் இத்தாலியிலுள்ள ஒவ்வொரு நரகமும் இத்தாலி சுதந்திரமடைந்து ஐக்கியமானால், அவருக்கு ஒரு சிலையை எழுப்ப வேண்டும். ஏனெனில் இந்த சிந்தனைகளில் எதிர்கால தர்மத்தின் வித்துக்கள் நிறைந்துள்ளவெனலாம். 'டிமானார்கியர்' 'கான்விடோ' என்னும் இரு நூல்களை லத்தீன் பாஷையிலும் இத்தாலி பாஷையிலுஞ் செய்தார். அவைகளை அறிந்துகொள்வது கஷ்டம். அறிஞர்கள் என சொல்லப்படுபவர்களாலும் நிகழ்ச்சியில் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. அறிவென்னும் அகிலத்தில் இவ்வெண்ணங்கள் ஒருதடவை விதைக்கப்பட்டால், ஒருபொழுதும் அவைகள் அழியாது. அதன் பிறப்பை மற்றவர்கள் அறியவில்லையாயினும் அதன் பயனைப்பெறுகிறார்கள். மனி

தர்கள் ஆலமரத்தைக் கண்டு ஆனந்தமடைகிறார்கள்; ஆனால் எந்த வித்தினின்று அது தோன்றிய தென்பதை சிந்திப்பவர்கள் எவர்?

சத்தியமும் சட்டமும்

டான்டியானவன் விசாலமாய் விதைத்த விதையானது பயனை அளித்துவிட்டது. அடிக்கடி காலங்கள் தோறும் சிலவன்மையான அறிவால் வளர்ச்சியும் புஷ்டியுமாகி பதினெட்டாவது நூற்றாண்டின் கடைசியில் அது அபிவிருத்தியை அடைந்தது. அந்த அபிவிருத்தியின் எண்ணமே ஜீவனின் சட்டமாகக் கருதப்பட்டு மேன்மையாக்கப்பட்டது. அது சரிதையால் உண்மையாகி சாஸ்திரத்தால் சாசுவதமடைந்து எதிர்கால விருதுக்கொடியைப் போலாயிற்று. தன்னுடைய முயற்சிக்கு அச்சாணி போல் அதைக் கருதாமலுள்ள உண்மையான சிந்தனையற்றவனில்லை.

இன்று சீவனின் சட்டம் வளர்ச்சி என நாமறிவோம். ஒவ்வொரு புருஷர்களுக்கும் வளர்ச்சிவேண்டும். ஜன சமூகத்திற்கும் வளர்ச்சிவேண்டும். சனசமூகமே புவியின் சட்டத்தை நிறைவேற்றுகின்றது. தனிப்பட்ட புருஷர்கள் இங்கும் அங்கும் நிறைவேற்றுகின்றார்கள். ஒரே ஒரு ஈசுவரன்; ஒரே ஒரு சட்டம் சிருஷ்டியின் முதல் விநாடியிலிருந்து, ஜனசமூகமானது மெதுவாக-ஆனால் நிச்சயமாக-அந்தச் சட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. சத்தியம் தானாகவே முழுமையாகவோ திடீரெனவோ ஒருபொழுதும் விளங்குவதில்லை. தொடர்ச்சியாய்த் தோன்றும் சுருதியெல்லாம் சத்தியத்தின் ஒரு அம்சமேயாகும்.

யுகம் யுகமாகத் தோன்றும் அச்சட்டமே சத்தியத்தின் ஒரு மொழியாகும். புனிதமாகச் செய்யும் பாதையிலே இந்த ஒவ்வொரு மொழியும் மனிதர்களுடைய வாழ்க்கையை கம்பீரமாக மாற்றுகின்றது. நம்பிக்கை என்னும் சிரத்தையை நிர்ணயஞ் செய்கின்றது. ஆதலால் தர்ம சம்பந்தமான எண்ணமானது நித்தியமான வளர்ச்சியே யாகும். பின் பற்றும் நம்பிக்கைகள் இந்த எண்ணத்தை விசாலஞ் செய்து மேன்மேலும் புனிதமாக்குகின்றது. இது ஒரு நாள் பெரும் தேவாலயத்தின் பல தூண்கள் போலாகி, ஜன சமூகத்தின் சிறந்த மண்டப மொன்றை சிருஷ்டித்து விடும். அதுவே புவியின் ஒரு பெரும் தர்மமாகும். அறிவினுல் அருள் அடைந்த மனிதர்கள், சகஜமாக வுள்ள சிறப்பை விட அதிக மடைவதால் அவர்களே அதன் தூதர்களாகும். சமூகத்தின் ஐக்கியமான நினைவே மகா ஜனங்களை விளக்கும். அது இந்த சத்தியத்தின் சுருதியை அங்கீகரித்து, தலைமுறை தலைமுறையாய் அதைச் செலுத்தும் பல பிரிவினைகளிலும் மனித வாழ்க்கையின் பல விளக்கங்களிலும் அதைப் பிரயோகஞ் செய்து அனுபவ பூர்வமாக அதைத் திருப்பும்.

மனிதர் உயர்வு

நித்தியமான காலம் வாழ்ந்து எப்பொழுதும் கற்கும் மனிதனைப் போலவே ஜன சமூகமாகும். ஆதலால் மனிதர்கள் பிழையற்றவர்களில்லை. பிழையற்று இருக்கவே முடியாது. வன்மையிலும் அப்படியே. பிறப்பிலேயே பெரியவர்கள் எனவும், சட்டத்தை அவர்களே வியாக்கியானஞ் செய்ய அருகர்கள் எனவும் ஒரு வகுப்பு இல்லை;

ஒரு வகுப்பும் இருக்க முடியாது. ஜன சமூகத்தைத் தவிர ஈசுவரனுக்கும் மனிதனுககும் நடுவில் ஒருவரும் அவசியமில்லை; ஒருவர் இருக்கவும் முடியாது. ஜன சமூகம் மேன்மேலும் கல்வியில் விருத்தியாக, ஈசுவரன் தெய்வீக வழி விதியொன்றை ஏற்படுத்தி இருந்தபோதிலும், ஒவ்வொரு மனிதனின் மனத்தில் வளர்ச்சிவேண்டுமென்னும் இயல்பை இலங்கச் செய்த போதிலும் அதை நிறைவேற்றுவதற்கான அறிவையும் வன்மையையும், மனித இயல்பில் அவர் அதை பதித்துளார். சுதந்திரமும் ஜவாப்தாரியுமான ஒரு தனி மனிதன், கடமை என்னும் பாதையில் சென்றால் அதைச் சரியாகவும், அகம் என்னும் குருட்டு மாயையால் இழுக்கப்பட்டால் பிழையாகவும் பயன் செய்வான். அவன் தன்னுடைய அபிவிருத்தியை தாமதமாகவும் துரிதமாகவும் செய்து கொள்ளலாம். ஆனால் தெய்வீக வழியினின்று எந்த மானிட வன்மையாலும் தளர முடியாது. ஜனசமூகத்தின் கல்வி தானகவே பரிபூர்ணமாக வேண்டும்; நாகரிக உலகத்தையே நாசஞ் செய்துவிடும் போலிருந்த, நாகரிகமற்றவர்களின் படை எடுப்பானது பழமையைவிட பெருமையான புதிய நாகரிகத்தைப் புலனாக்கியது என்பதை நாம் பார்க்கிறோம். அப்புதிய நாகரிகம் புவியின் பல விடங்களிலும் பரவியுள்ளது. தனிப் புருஷர்களால் செய்த கொடுமைகளினின்று சுதந்திரத்தின் துரிதமான வளர்ச்சியை நாம் பார்க்கிறோம்.

எதிர்கால தர்மம்

புவியில் எங்கும் போலவே வளர்ச்சியின் சட்டமானது நிறைவேற்றப்பட வேண்டும். புவிக்கும் பரமபதத்

திற்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை. எந்த சுபாவமுள்ளதாயிருந்த போதிலும், தீமை, தன்னலம், கொடுமையிடம் நமது வீட்டை ஒப்புவித்து நமக்கே அளிக்கப்பட்ட அந்த வீடான ஈசுவரனின் வேலையை இகழ்வதானது குற்றமில்லை என கருதுவது தேவ நிந்தனையாகும். புவியானது பாவத்தை பிராயச்சித்தம் செய்து கொள்ளும் ஒரு இடமில்லை. அவரவர் ஆன்மாவில் முத்திரை செய்துள்ள சத்தியம், நீதியின் நோக்கத்தை அனுபவமடைய உழைக்கும் ஒரு நிலையமேயாகும். அவர் உத்தேசத்தை எவ்வளவு நிறைவேற்ற முடியுமோ, அந்தநோக்கத்தை செயலில் காண்பித்து, அதற்காக நம்மையே அர்ப்பணஞ் செய்து கொண்டு, ஜன சமூகத்தில் நமது செயலால் அவரைப் போற்றுவதினாலேயே அவரை அடையலாம். அதுவே புனித பதவியை யடையும் பதவியாகும். புனித பதவியின் படியில் நாம் சென்று பெருமை யாவதுக அல்லது பாவத்தில் அமிழ்ந்து நாம் ஒருவாறு முன்னரே சென்ற பிரயோஜன மற்ற பயனில் மறுபடியும் விழுந்து அவஸ்தைப்படுவது, ஆக இந்த இருநிலைகளில் ஒன்றை அடைவது, நாம் மற்றவர்களுக்கு எவ்வளவு நன்மையை செய்திருக்கிறோ மென்பதிலும், மற்றவர்களின் அபிவிருத்தியில் எத்துணை உதவி புரிந்துளோம் என்பதில் நிலைத்திருக்கின்றது. நமது வன்மை பெருகுவதற்கும், நமது கடமைகள் நிறைவேற்றப்படும் நிலையமும், விருத்தியின் செயல் சிறப்பிக்கும் மார்க்கமும், நமது சகோதரர்களிடம் அதிகமாக நெருங்கி எங்கும் நிறைந்த ஐக்கியத்தை அடைவதாகும். எல்லா ஜன சமூகத்தையும் ஒரு குடும்பம் போல் செய்வதே நமது நோக்கமாகவேண்டும். மற்ற

வர்களின் உதவிக்காக ஒவ்வொருவனும் தன்னை ஒரு ஒழுக்கச் சுடர்போல் எண்ணி மின்ன வேண்டும். யுகங்கள் தோறும், தலைமுறை தலை முறையாக ஜன சமூகமானது புனிதமாவது போல் நமது செயலுக்கேற்றவாறு ஜன்மங்கள் தோறும் நாம் புனிதமாகிறோம்.

வளர்ச்சி, அபிவிருத்தி, என்னும் மொழியிலே பதிந்துள்ளதே இச்சில உண்மைகளாகும். இதிலிருந்தே எதிர்கால தர்மம் திகழும். இந்த ஒரு மொழியிலேயே நீங்கள் விடுதலையை அடைய முடியும்.

அத்தியாயம் 17

சுதந்திரம்—அறிவுப் பயிற்சி—சமூக ஆதாரம்—சர்க்கார் விளக்கம்—இறைவனே தலைவன்—உங்கள் உரிமைகள்—சுதந்திரத்தின் உண்மைப் பொருள்.

சுதந்திரம்

நீங்கள் வாழும் இந்த வாழ்க்கையானது ஏதோ திடீரெனத்தோன்றும் ஒரு செயலாகாது. திடீரெனத்தோன்றுவ தென்பதற்கும், அதிர்ஷ்டமென்பதற்கும் ஒரு பொருளுமில்லை. சில பொருள்களின் அறியாமையை விளக்குவதற்கே இம்மொழிகள் உற்பத்தி செய்யப்பட்டதாகும். உங்களிடமுள்ள ஜீவனானது ஈசுவரனிடமிருந்து தோன்றுகின்றது. அதன் மேன்மையான அபிவிருத்தியிலே, அறிவுமயமான உத்தேசத்தை அது விளக்குகின்றது. அதனால் அவசியமாக ஒரு உத்தேசம் இருக்கிறது என் ,தாகின்றது.

எந்த முடிவான நோக்கத்துடன் நாம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோ மென்பதை நாம் இப்பொழுது அறியோம். இதனாலேயே நாம் ஏன் மறுக்கவேண்டுமென்பதாகவில்லை. எந்த நோக்கத்துடன் குடும்பம், நாடு, ஜன சமூகத்தைக் கடந்து செல்லவேண்டுமென சிறிய குழந்தைகள் அறியுமோ தெரியவில்லை. ஆனால் உத்தேசமோ உண்டு. அவனுக்காக நாம் அதை அறிய ஆரம்பித்துளோம். ஜன சமூகமென்பது ஈஸ்வரனின் குழந்தையேயாகும். எவ்வழியில் விருத்தியாக வேண்டுமென்னும் நோக்கத்தை அவனே அறிவான். ஜன சமூகமானது அதன் அபிவிருத்தியும் அதன் சட்டமென இப்பொழுது அறிய ஆரம்பித்திருக்கின்றது. அதைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தின் சிலவற்றை இப்பொழுதுதான் அறிய முயலுகின்றது. இச்சட்டத்தை அறிந்துகொள்வதற்கும் நம்மை அறிந்துகொள்வதற்கு முன்னால் பிரபஞ்சத்தைப்பற்றிக் கற்கவும், இப்புவியிலுள்ள பல ஜனங்கள், அடிமை, அநாகரிகம் கல்வி இன்மையில் மூழ்கியிருக்கிறபடியால் இன்னம் அதற்கு அருகராகவில்லை.

அறிவுப் பயிற்சி

அறிவைக் கற்பதற்கு சிறிய ஐரோப்பாவிலுள்ள சிலரே, அவர் மனத்தைப் பயிற்சி செய்யும் வன்மையை உடையவர்கள். கல்வி கற்பதற்கு சந்தர்ப்பமில்லாத உங்களிலும் கேவலம் பிண்டத்திற்காக, புன்மையாய்ப் பிரிக்கப்பட்ட ஜாதிப் பிரிவினையால் அமிழ்த்தப்பட்டு அப்புலன்களெல்லாம் மறைந்துள, அறிவென்னும் கோபுரத்திற்கு அவர்கள் காணிக்கையைச் செலுத்தவும் முடியவில்லை.

எல்லோரின் ஐக்கிய உழைப்பினுல் தோன்றப்படும் அறிவை இன்று தாம் மாத்திரம் எங்ஙனம் அறிந்து கொள்வது? இன்னும் நம்மில் சிலர் ஒற்றுமை இல்லாம லாகி புனிதமும் பயனுள்ளதுமான அம்மொழியை இன்னம் மழலைச் சொல்போல் சொல்லுங்கால், புவியின் கடை நிலை யான அபிவிருத்தியின் நிலயத்தை நாம் ஏன் அடையவில்லை என இப்பொழுதே குழப்பஞ் செய்யவேண்டும். இன்னம் வெகு நாளைக்கு நாம் அடைய முடியாமலிருக்கும் பொரு ளின் அறியாமையில் நாம் அமிழ்ந்த போதிலும், நாம் முயன்று காண முடியும் கல்வியை கோபத்தினுல் விட்டு விடாமலிருக்கவேண்டும். சத்தியத்தைக் காண நிலையான நிலைமையுடன் அமைதியும் பொருமையும் அவசியமாகும். சிந்தனையுடன்கூடிய கொடுமையைவிட, அவசரத்தினுலும் கர்வத்தினுலேயும் நந்நெறியினின்று பல ஆன்மாக்கள் பிரிந்து பாழாயிற்று. சுவர்க்கத்தை அளக்க பேராவல் கொண்ட கொடுங்கோல் மன்னன் எப்படி குழப்பமான கோபுரத்தைக் கட்டினுன் எனவும், மேரு பர்வதத்தை தாக்கிய அரக்கர்கள் எரிமலைகளின் கீழ் இடிமுழக்கத்தால் எப்படிவெடித்து சிதறுண்டார்கள், என்னுமான நாம் முத லில் மொழிந்த உண்மையை புராதனர் நமக்குக் கற்பிப் பார்கள்.

இதில் முதன்மையாய் நாம் அறிந்துகொள்ள வேண்டு வது யாதெனில், கடைநோக்கமான எதற்காவது நம்மை சிருட்டித்திருந்தபோதிலும், படிப்படியான வளர்ச்சியா லும், அறிவு புலன்களை முயற்சி செய்வதாலேயும் அதைக் கண்டு பிடித்து நாம் அடையலாம். நமது அறிவு முத லான புலன்களெல்லாம் ஈசுவரனுல் அளிக்கப்பட்ட

உழைப்புக் கருவிகளேயாகும். ஆதலால் அது அதிக வளர்ச்சியை அடைந்து மேன்மையாக வேண்டுவது அவசியமாகும். அதை சுதந்திரமாய் பயிர் செய்து அதை காப்பாற்ற வேண்டும். சுதந்திரமன்னியில் நீங்கள் ஒரு கடமையையும் நிறைவேற்ற முடியாது. ஆதலால் நீங்கள் சுதந்திரமாவதற்கு உரிமை உங்களுக்கு உண்டு. உங்களுக்கு அதை மறுக்கும் எந்த வன்மையுள்ளவனிடமிருந்தும் பிடுங்கிக் கொள்ள வேண்டுவது உங்கள் கடமையாகும்.

சமூகத்துக்கு ஆதாரம்

சுதந்தர மன்னியில் ஒழுக்கம் ஒரு நாளும் நிலைக்காது. ஏனெனில் நன்மையையும், புன்மையையும், பொது நன்மையில் பிரியத்தையும் தன்னல உணர்ச்சியையும் நாடுவதற்கு சுதந்திர மில்லையானல் பொறுப்புமில்லாமலாகும். சுதந்தர மன்னியில் உண்மையான ஒரு சமூகமும் நிலைக்காது. ஏனெனில் அடிமைக்கும் சுதந்திர புருஷனுக்கும் ஒருநாளும் ஐக்கியமாகாது. அது ஒன்றை மற்றவர்கள் அமிழ்த்துவதேயாகும். மனிதர்களைப் போல் அதன் பிரதிநிதியான சுதந்தர மில்லாத இடத்தில் சீவன் ஒரு யந்திரத்தின் கருவிபோலவே சிறியதாய்விடும். தன்னுடைய சுதந்திரத்தைச் சிதறடிப்பவன் தன் இயல்புக்குப் பொய்யாகின்றபடியால் ஈசுவரனின் நியமத்திற்கு விரோதியாவன். ஒரு வகுப்போ, குடும்பமோ, ஒரு மனிதனே தெய்வீக உரிமை என்னும் பெயரினலும், சன்மமென்னும் செல்வாக்கினலும் செல்வத்தினலும், மற்றவர்களின் பேரில் அதிகாரத்தைச் செலுத்துவானேயானல்' அங்கு சுதந்திர

மென்பதே இல்லை. சுதந்திர மேன்பது சகலருக்கும் வேண்டும். ஈசுவரன் தனது அரசுரிமையை ஒரு தனி மனிதனிடம் ஒப்புவிப்பதில்லை. அவர் ஆக்ஞையைச் செலுத்தும் செல்வாக்கானது இப்புவியில் ஈசுவரனால் தேசம் சன சமூகத்திற்கே அளிக்கப்பட்டுள. நன்மைகளுக்கு உபயோகஞ் செய்யாமல், அவருடைய இஷ்டத்தை நிறைவேற்றாமல் நிகழுமேயானால் அது அக்கூட்டமான சனசமூகத்தை விட்டுவிட்டு அங்கே நின்றுவிடும். ஆதலால் ஈசுவரனின் அரசுரிமை என்னும் உரிமையானது ஒரு தனிப்பட்ட ஒருவரிடமுமில்லை. நோக்கத்திலேயே அதன் அரசுரிமையாகும்.

சர்க்கார் விளக்கம்

அதைச் செலுத்தும் செயலிலும் அது உண்டு. நாம் முன்னேறிச் செல்லும் நோக்கத்தையும் செயலையும் எல்லோருடைய நீதிக்கும் அடங்கும்படி செய்யவேண்டும். ஆதலால் நித்தியமான அரசுரிமை என்பதில்லை; இருக்கவும். முடியாது. நாம் சர்க்கார் என்று சொல்லும் நிலையம் ஒருவித நோக்கமாகும். ஒரு நாட்டின் நோக்கத்தைச் சரிவர நிறைவேற்றுவதற்கு சிலரிடம் ஒப்புவிக்கப் பட்ட ஒரு சந்தர்ப்பமென சர்க்காரைச் சொல்லலாம். ஆனால் அந்நோக்கத்திற்கு மாறாக அவர்களில் சிலரிடம் ஒப்புவிக்கப்பட்ட இவ்வன்மை நிறுத்தப்பட வேண்டும். எல்லா சனங்களின் சங்கற்பத்தை ஸ்தாபிதஞ் செய்வதே சர்க்காராகும். இக்கருத்துடன் சர்க்காரில் தேர்தல் செய்யப்பட்டவன் இதை அறியாமலிருந்தாலுஞ்சரி, அறிந்து ஜனங்களின் சங்கற்பத்திற்கு விரோதமாய்ப் போனாலுஞ்

சரி அவனை நீக்கும் வன்மை வேண்டும். உங்கள் உரிமைக்கு பாதகமன்னியில் அதிகாரத்தை தங்கள் உரிமையினாலேயே ஸ்தாபனஞ் செய்துள்ள வகுப்போ குடும்பமோ இருப்பதற்கு நியாயமில்லை. உன்னிஷ்டமன்னியில் உன்னை அதிகாரஞ் செய்ய வன்மையடைந்துள்ள ஒருவனிருக்கும் வரை உங்களை சுதந்திர புருஷர்கள் என எப்படி அழைத்துக் கொள்ள முடியும்?. குடியரசு ஒன்றே நீதியானதும் தர்க்காரீதியானதுமான சர்க்காராகும்.

இறைவனே தலைவன்

சுவர்க்கத்திலே சர்வேசன். புவியில் சனங்களைத் தவிர வேறு தலைவர் உங்களுக்கு இல்லை. ஈசுவரனின் இச்சையான சட்டத்தின் ஒரு சொல்லை நீங்கள் கண்டவுடன் அதைப்போற்றி நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். உங்கள் சகோதரர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருவிதமான நோக்கத்தைப் பகிரங்கஞ் செய்தால் அதற்கு உங்கள் தலையை வணங்கி, ஒருவித விரோதமுமின்றிருக்கவேண்டும்.

ஆனால் உங்கள் தனித்தனி வாழ்க்கைக்கு சிற்சில அவசியமாகும். மனித சீவனுக்கு அவை அத்தியாவசியமும் முதன்மையானது மாகும். இவைகளில் ஜனங்களுக்கு யாதொரு விதமான உரிமையுமில்லை. எண்ணிக்கையில் அதிகமான ஜனங்களும், கூட்டமான ஜன சங்கியையும் உங்களை மனிதராகச் செய்யும் உரிமையை கொள்ளைக் கொள்ள முடியாது. மிகுதியாக வுள்ளவர்கள் கொடுமையைக் கற்பனை செய்யவோ, அல்லது அதன் சுதந்திரத்தை அழிக்கவோ, மாற்றவோ யாதொரு விதமான அதிகாரத்

தையும் படைத்தது இல்லை. அத்தகைய தற்கொலையை செய்யும் ஜனங்களிடம் தங்கள் வன்மையை பயன் செய்யக் கூடாது. ஆனல் எந்த முறைகளினல் அதை வெறுக்க வேண்டுமென்னும் உரிமையானது உங்களிடம் தோன்றி உங்கள் ஒவ்வொருவரிலும் நித்தியமாய் நிலைக்கின்றது.

சுதந்திரம், வாழ்க்கையின் ஸ்தூல சூட்சம பயிற்சிகளுக்கவசியமான யாவற்றையும் நீங்கள் அவசியமாய் அடையவேண்டும்.

சரீர சுதந்திரம், எங்கும் செல்லும் சுதந்திரம், மத நம்பிக்கையில் சுதந்திரம், எல்லா விஷயங்களிலும் சுதந்திர சித்தம், பத்திரிகையின் மூலமாகவோ, சாந்தமாகவோ அபிப்பிராயத்தை அறிவிக்கும் சுதந்திரம், மற்றவர்களின் மனத்தோடு இணைந்து உங்கள் சித்தத்தை இஷ்டமான சபையுடன் சேர்ந்து பயிற்சி செய்து கொள்வது, மனம், கைகால்களால் விளையும் பொருள்களில் சுதந்திரம்! இவைகளை ஒருவரும் உங்களிடமிருந்து எடுத்தல்கூடாது. ஆனல் மிகவும் நெருக்கடியான ஆபத்தான காலங்களில் செய்து கொள்ளலாம். அதை எவராவது கவர்ச்சி செய்வாரேயானல் உங்களுக்கு பெரும் அநீதியை செய்தவர்களாகி, அதற்கு விரோதமாக உங்களுக்கு கடமையைக் கருத்தில் குணமாக்கும்.

உங்கள் உரிமைகள்

சமூகத்தின்பேரில் உங்களைச் சிறைச் சாலையில் வைக்கவும், உங்களை அடைக்கவும் அல்லது உங்களை வேவு செய்யவும் எவருக்கும் உரிமை என்பதே இல்லை. அப்படிச்

செய்வார்களேயானல் அதன் காரணத்தை உங்களுக்கு உடனே தெரிவித்து தாமதமன்னியில் நாட்டின் நியாயாதிபதியினிடம் உங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்குப் போவதற்கு உங்களுக்கு இஷ்டமுண்டானல் பாஸ்போர்ட்டு அல்லது எந்த விதமான தடையினலும் உங்களைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை. உங்களுடைய தர்ம சம்பந்தமான சிந்தனையில் அதிகாரமோ, அதை அமிழ்த்துவதற்கோ, அதைச் சகிக்காமலும் அதற்குத்தனி சட்ட முதலியவைகளை ஏற்படுத்தவோ எவருக்கும் உரிமை இல்லை. எல்லா ஜன சமூகத்தின் சாந்தமான சித்தமே உங்கள் ஈசுவரன் சித்தத்தின் நடுவில் சிறப்பாவதற்கு உரிமை யுண்டு. ஈசுவரன் உங்களுக்குச் சிந்தனையை அருளியுள்ளார்; அதை அடக்குவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. நீங்களும் உங்களது சகோதரர்களும் சேர்வதற்கான ஒரே வழியென்னும் அபிவிருத்தியான அம் மனேசிந்தனையை தடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. பத்திரிகைகள் பரிபூர்ண சுதந்திரமுடனிருக்க வேண்டும். அறிவின் உரிமைகள் ஒரு நாளும் எதிர்க்கப் படலாகாது; அதைத் தடுப்பதற்கேற்ற எந்த முறையும் கொடுமையேயாகும். மற்றவைகளை தண்டிப்பதுபோல், குற்றம், ஒழுக்கமற்ற கற்பனைகளை பகிரங்கஞ் செய்யும் நூல்களையே சமுகம் தண்டிக்கலாம். பகிரங்க நீதி விசாரணையால் தண்டனை யளிப்பது மனிதர்களின் பொறுப்பைப் பயனக்கும். ஆனல் அதற்குமுன் இடையிலேயே அடிக்கடி நுழைவது சுதந்திரத்திற்கு விரோதமாகும். நினைவைப்போல் சாந்தமான ஐக்கியம் புனிதமாகும்; அதை வளர்ச்சியின் நித்தியமான சாதகமாக ஈசு

வரன் உங்களில் நிலைக்கச் செய்துளார். அத்தகைய எண்ணத்தில் ஐக்கியத்தை மனித குடும்பமானது ஒரு நாள் நிச்சியமாக அடையும். அதைத் தடுக்கவோ அதன் எல்லையை நிர்மாணஞ் செய்யவோ எந்த வன்மையுளோர்க்கும் உரிமை இல்லை. ஈசுவரன் அருளியுள்ள சீவனை பயன் செய்து பாதுகாத்து பேரபிவிருத்தி செய்வது உங்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். அதனால் சீவனுக்கு உழைப்பை அளிக்க கடன்பட்டுள்ளீர்கள். உழைப்பு என்பது புனிதமானதாகும். அதைத் தடுக்கவோ, விலங்கிடவோ, யதேச்சாதிகார சட்டத்தால் அதை முடியாமல் செய்யவோ, ஒருவருக்கும் உரிமை இல்லை. உங்கள் விளை பொருள்களின் சுதந்திர போக்குவரத்தை கட்டுப்படுத்த எவருக்கும் உரிமை இல்லை. உங்கள் சுதேசம் உங்கள் வியாபார நாடாகும்; அதன் எப்பகுதியி லிருந்தும் உங்களைத் தடுப்பது கூடாது.

இந்த சுதந்திரங்களை புனிதமான பகிரங்கமாய் நீங்கள் ஸ்தாபனஞ் செய்தவுடன், ஒவ்வொருவனும் தன் புலன்களை ஆராய்ச்சி செய்வதற்கேற்ற எல்லா சாதகங்களையும் சமஸ்த ஜனங்களால் ஸ்தாபிக்கப்பட்ட சர்க்காரை நீங்கள் நிறுவியவுடன் மறுபடியும் உங்களுக்கு உயரமாக பெரிய நோக்கமொன்று இருப்பதென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். அதை நிறைவேற்றுவது உங்கள் கடமையாகும். நீங்கள் ஒழுக்கத்தில் புனிதமாகி மற்றவர்களாலும் எதிர்காலத்தில் ஒரே சட்டத்தையே யாவரும் மதித்து, எல்லா மனித சமூகமும் நெருங்கிய விசாலமான சம்பந்தத்தை அடைவதுமான இவைகளே உங்கள் கடமைகளின் நோக்கமாகவேண்டும்.

"பிரபஞ்ச குடும்பத்தை ஸ்தாபனஞ் செய்து, ஈசுவரனின் நகரத்தை நிறுவி நிரந்தரமான உழைப்பால் மெதுவாக அவர் பணியை மனித சமூகத்தில் உண்மையாக்க ஈடுபடுவதே உங்கள் முயற்சியாகும்.

சகோதரர்கள் போல் நீங்கள் நேசித்து, பரஸ்பரம் அன்புடனுகி, ஒருவரின் நன்மையிலேயே சகலரின் நன்மையை நாடி, தன்வாழ்க்கையையும் ஒன்ருகக் கருதி சகலர்களின் நலத்தை தந்நலமாகக் கருதி, பொதுக் குடும்பத்தின் பெருமைக்காக தானே தியாகஞ் செய்யவும் தயாராகி, மற்றவர்களின் தீமைகளைத் தொலைக்க தான் தியாகஞ் செய்ய முன்னுல், சூரியன் உதயத்தில் எப்படி மேகங்களெல்லாம் மாயமாய் ஆகாயத்தில் மறைகின்றதோ அப்படியே இப்பொழுது மனித சமூகத்தில் தோன்றும் எல்லா துக்கமும் தொலைந்து விடும். ஏனெனில் அன்பு அணுவாக நெருங்கி சிதறியுள்ள சனசமூகத்தைச் சேர்த்து ஒரு சரீரமாக வேண்டுவது அவன் ஆக்ஞையாகும். அவன் எப்படியோ அப்படியே சனசமூகமுமாகும்.

சன்னியாசியைப் போல் இருந்து இறந்து, ஜனங்களையும் அவர்களின் எதிர்கால வாழ்க்கையையும் அதிக அன்புடன் நேசித்து இங்ஙனம் மொழிந்த மொழிகளை ஒரு பொழுதும் மனத்திலிருந்தும் நீக்க வேண்டாம்.

சகோதரர்களே! சுதந்திரத்தையும் சாதனமாகவே எண்ணவும், நீங்களும் உங்கள் எதிர்கால சந்ததிகளும் அதை முடிவாக எண்ணிவிட்டால் அதுவே பெரும் துக்கத்தை எங்களுக்கு அளிக்கும். ஒவ்வொருவர்களுக்கும் தங்களுக்குச் சொந்தமான சில உரிமைகளும் கடமைகளும் உண்டு. அதை நீங்கள் ஒரு காலத்திலும் விட்டு விடக்

கூடாது. உங்களுக்காக ஏற்பட்ட கடமைகளையும் உரிமைகளையும் ஆபத்தான தன்னலத்திற்கு பயன் செய்வீர்களேயானால் உங்களுக்கும் சந்ததிகளுக்கும் அது பெரும் விபத்தாகும். உங்கள் சுதந்திரமென்பது அதிகாரத்திற் கெல்லாம் அகன்றவை என்பதில்லை. ஆனால் சர்வ ஜனங்களின் சம்பந்த மில்லாமலுள்ள அதிகாரத்திற்கு அடங்கியதில்லை. உங்கள் சுதந்திர சித்தத்தின் இஷ்டமன்னியில் வேறு எந்த எண்ணத்துடனாவது ஸ்தாபிக்கப்பட்ட எந்த அதிகாரத்திற்கும் கீழ்ப்படியாததாகும். பிற்காலத்தில் சந்தேகம் தீர்ப்பவர்கள் என்பவர்கள் சுதந்திரத்தின் புனித சித்தத்தைப் புரட்சி செய்து மாற்றி விட்டார்கள்.

இன்னும் சிலர் அற்பமான ஒழுக்கமற்ற தன்னலமென்றே அதைச் செய்துவிட்டார்கள். அவர்கள் சொல்வதாவது :—

தன்னலமே யாவுமாகும், அதன் விருப்பங்களை விளக்குவதே மனித உழைப்பின் சமூக அமைப்பின் நோக்கமாகும். சர்வஜன சர்க்காரும், சர்வஜன அதிகாரமும் நீக்க முடியாத ஒரு குறையாகும். ஆனால் அதை எவ்வளவு தூரம் அடக்கி நெருக்கவேண்டுமோ, அவ்வளவு தூரஞ் செய்யவேண்டும். சுதந்திரத்திற்கு எல்லையே இல்லை! ஒவ்வொரு சமூகத்தின் ஒரே கடமை அதை எல்லையன்னியில் விருத்தி செய்வதேயாகும். மனிதனுக்கு தன்னிஷ்டம்போல் சுதந்திரத்தை பயன் செய்யவும் சீரழிக்கவும் உரிமையுண்டு. ஆனால் மற்றவர்களுக்கு அதனால் தீமை தோன்றக்கூடாது. ஒருவன் மற்றொருவனுக்குத் தீமை செய்யாமலிருக்க பார்ப்பதைவிட வேறு உத்தேசம் சர்க்காருக்குக்கூடாது. இத்தகைய பொய்யான கற்பனைகளை

மறுத்துவிடுங்கள். இப்பொழுதும் எதிர்கால மேன்மையைத் தாமதம் செய்பவர்கள் என அவர்களை எண்ணவும். முதல் சொன்னவர்கள் வகுப்பை தன்னலத்திற்காகப் பயன் செய்துவிட்டார்கள். பின் சொன்னவர்கள் சர்வ ஜனங்களின் நோக்கத்தையும், சீவனையும் தங்கள் பிரதிநிதியாகக் கொள்ளாமல், மேலாகத் தோன்றும் சாந்தத்தை நிலைக்கச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட போர்வீரனுகவும், போலீஸ்காரனுகவும், எண்ணிக் கொள்ளுகிறார்கள். இருவர்களும் சுதந்திரத்தை குழப்பமாகக் கலக்கிவிடுகிறார்கள். சமஸ்த ஜனங்களின் ஒழுக்க விருத்தியின் நினைவை அவர்கள் அழிக்கிறார்கள்; சமூகம் தானே வகிப்பதற்கான கல்வி, அபிவிருத்தியின் உத்தேசத்தையும் அவர்கள் விடுகிறார்கள். சுதந்திரத்தை நீங்கள் இப்படி எண்ணுவீர்களேயானல் நீங்கள் அதை இழக்க அருகதையாவீர்கள்; இப்பொழுதில்லையேல் கூடியசீக்கிரத்தில் நீங்கள் அதை இழந்துவிடுவீர்கள். கடமை என்னும் கருத்தினுலும், பொது மேன்மை என்னும் பக்தியாலும், கவரப்பட்டு அதுவிருத்தியாகுமேயானல் உங்களுடைய சுதந்திரம் அதுவரை புனிதமாகும். நன்மை செய்ய சாதனமாகவும் உங்களுடைய எல்லா வன்மை சுதந்திரமாக உபயோகஞ் செய்வதுமே உங்கள் உரிமை என எண்ணி உங்கள் மனேபீஷ்டம்போல் எந்த வழியிலும் உங்கள் புலன்களை நலமாகவோ, தீமையாகவோ செய்வதே உரிமை என எண்ணமல், நீங்கள் செல்லுவிர்களேயானல், உங்கள் சுதந்திரம் மேன்மையாகி ஈசுவரனுலும், மனிதர்களாலும் பாதுகாக்கப்படும்.

அத்தியாயம் 18.

கல்வி—கல்வியும் கற்பனையும்—அரசுரிமை தத்துவம்—தேசீயக் கல்வி—சுதந்திர கர்ஜனை.

கல்வி கல்விக்கேற்ற வன்மையை ஈசுவரன் உங்களுக்கு அளித்துளார். ஆதலால் உங்கள் சக்திக்கேற்றவாறு நீங்கள் கற்பது உங்களின் முதற்கடமையாகும். உங்களைச் சேர்ந்த சமூகம் யாதொரு விதமான இடையூரையும் உங்களின் கல்வியின் பணிகளுக்கு செய்யாமலிருக்க வேண்டுவது உங்களின் உரிமையாகும். கல்வியில் உங்களுக்கு அது உதவி செய்து, சந்தர்ப்ப மில்லையேல் அதை அடையும் சாதனங்களை அளிக்கவேண்டும்.

உங்கள் சுதந்திரம், உங்கள் உரிமை, அநீதியான சமூக நிலையினின்று விடுதலையாவது, புவியில் நீங்கள் பிறந்தால் ஏற்பட்ட பணியை செய்வதான யாவும் உங்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் அமைப்பைப் பொருத்ததாகும். நன்மை புன்மையில் நலத்தை நாடும் வன்மையை கல்வியன்னியில் அடையமுடியாது. உங்களுக்குரிய உரிமையின் அறிவையும் நீங்கள் பெறமுடியாது. உங்கள் ஜீவனை விடுதலை யாக்குவதற்காதாரமான இராஜீய வாழ்வில் பொறுப்பை அடைய முடியாது. உங்கள் சொந்த வாழ்க்கையின் உத்தேசத்தையும் நீங்கள் விளக்கமுடியாது. கல்வியானது உங்கள் ஆன்மாக்களின் உணவாகும். உழாத நிலத்தில், தண்ணீர்த் துணையின்றி குடியானவன் கவனமில்லாத இடத்தில் புதைந்துள்ள வித்தினுள் மறைந்துள்ள ஜீவ

வன்மை செழிப்பற் றிருப்பதுபோல், கல்வியன்னியில் உங்கள் புலன்கள் பயனன்னியிலும் உணர்வன்னியி லாகும்.

தற்காலத்தில் உங்களுக்குக் கல்வியில்லை. இருந்த போதிலும், நேர்மையற்ற கல்வியேயாகும். தமக்குத் தாமாகவே திகழ்ந்து ஒருவித நிலையான வழிகாட்டும் நோக்கமன்னியிலுள்ள மனிதர்களும், வன்மை யுள்ளவர்களே. அதற்குக் காரணம், அவர்கள் அதிகாரஞ் செய்யும் நாட்டில், இளங் கல்வியை சற்று உங்கள் குழந்தைகள் கற்க, இங்குமங்கும் சில கல்விச் சாலைகளை ஸ்தாபனஞ் செய்ததினாலேயே அவர்களால் முடிந்தவற்றை யெல்லாம் செய்து விட்டார்கள் என அவர்களிலும் அறிந்தவர்களும் நம்புகிறார்கள். இக்கல்வியும் முதன்மையாக, எழுதுவது படிப்பது கணிதம் கற்றல் என்னும் நோக்கங்களிலேயேயுள.

இக்கல்வியை கற்பனை என்றே கூறவேண்டும். நமது உயிருக்கும் உடலுக்கும் என்னவேற்றுமை யுண்டோ, அதே வேற்றுமை இக்கற்பனைக்கும் கல்விக்கும் உண்டு. உடலும் அதன் உறுப்பும் உயிராவது உயிரை விளக்குவதற்கான சாதனமும் கருவியுமே உடலாகும். அதிகாரஞ் செய்வதும் வழி காட்டுவதும் அதனுவில்லை. புனிதமான வாழ்க்கைக்கும் புன்மைநிறைந்த வாழ்க்கைக்கும் சமமான சாதகமாய் இருப்பவைகளே. அவைகள் கல்வியால் கற்பிக்கப்பட்டதை சாதகஞ்செய்வதற்கு அனுகூலம் அளிப்பதே கற்பனையாகும். ஆனல் அது கல்விக் கறிகுறியாகாது.

கல்வியும் கற்பனையும்

கல்வியானது ஒழுக்கப் புலன்களை பெருமையாக்கும். கற்பனையோ அறிவை நோக்கும். முதற்சொன்னது மனி

தர்களுக்கு தங்கள் கடமைகளை அறியும் வண்ணம் செய்யும்; இரண்டாவது சொன்னதோ அவைகளை நிறைவேற்றும் வன்மையை யளிக்கும். கற்பனை யன்னியில் கல்வி சில காலங்களின் பயனன்னியி லிருக்கலாம். கல்வி யன்னியிலுள்ள கற்பனை அச்சாணியற்ற வண்டிச் சக்கரம்போலாகும். நீங்கள் படிக்கலாம்; பிழைநிறைந்த புத்தகம், சத்தியம் செறிந்த நூல் இவைகளின் வேற்றுமையை நீங்கள் அறியவில்லையே யானால், அக்கற்பனையின் பயன் யாது? எழுதத் தெரிவதினால் சகோதரர்களுக்கு உங்கள் சிந்தனையை அறிவிக்க முடியும். தன்னலத்தையே அச்சிந்தனைகள் தெரிவிக்குமானால் அதனால் பயனென்னே! கற்பனையானது பொருள்களைப் போல் விரும்பிய வண்ணமாய் பயன் செய்யப்படுவது போல், நன்மை புன்மையை உபயோகிக்க மூலமாகலாம். பொது நன்மைக்கு அது அர்ப்பணஞ் செய்யப்பட்டால், நாகரீகத்திற்கும் சுதந்திரத்திற்கும் அது சாதகமாகும். சொந்த இலாபத்திற்குப் பயன் செய்யப்பட்டால் கொடுமை சிதைவின் வழியாக மாறும். ஐரோப்பாவில் இன்று அதற்கேற்றவாறு ஒழுக்க சம்பந்தமான கல்வியன்னியில் வெறுங் கற்பனை துக்ககரமான தீமையை விளைவித்து விட்டது. கற்பனையானது, பல வகுப்புக்களிலுள்ள உயர்வு தாழ்வை அங்ஙனமே நிலைநிறுத்தி சித்தத்தை வெட்டிச் சிந்தனையில் சாய்த்து தன்னலத்தில் தோயும்படி செய்து சத்தியம், அசத்தியத்தில் சமாதானஞ் செய்து, பொய் சித்தாந்தங்களை பெருமையாகும்படி செய்கின்றது.

கற்பனையை ஒருவாறு கற்பிப்பவருக்கும் உங்களுக்குக் கல்வியை அளிப்பவர்களுக்கும் நீங்கள் எண்ணுவதை

விட பெரிய வேற்றுமையிருப்பதாக அறிந்துகொள்ளவும். இவ் விஷயத்தைக் குறித்து நான் பிரத்தியேகமாய் சொல்ல வேண்டும்.

கொடுமைக்கு விரோதமாக சண்டை செய்யும் சுதந்திரக் கட்சியில் இருவகை நோக்கங்கள் அவர்களைத் தனிமையாகப் பிரிக்கின்றது. ஒரு தனி புருஷனிலேயே அரசுரிமை யாவும் பதிந்துள என முதற்கட்சி கூறும். சமூகத்திற்கே அந்த உரிமை உண்டென ஸ்தாபனஞ் செய்வது இரண்டாவது கட்சியாகும். பெரும்பான்மையோர் புலனுக்கும் சித்தம் போலவே அவர்கள் அரசுரிமை செய்ய எண்ணுகிறார்கள். மனித சுபாவத்திற்கு இயல்பெனப் படும் உரிமைகளை பகிரங்கஞ் செய்து சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதாலேயே அதன் தன்னந்தனியான நோக்கங்கள் நிறைவேறியாய் விட்டதென முதற்சொன்னவர்களோ யாவற்றிற்கும் சமூகத்தையே நோக்குகின்றார்கள். ஒவ்வொருவரின் கடமைகளை சமூகத்தைத் திரட்டி திட்டமாக்கும் சங்கத்தினின்றே அறிகிறார்கள். முதற்சொன்னவர்கள் நான் கற்பனை என கூறியதற்கப்பால் ஒன்றையுமே காண்பதில்லை. ஏனெனில் கற்பனையானது பொதுவான வழியைக் காட்டாமல் நிகழ்ச்சியிலுள்ள புலன்களின் வன்மைகளையே விருத்தி செய்கின்றது. சமூக திட்டத்தைப் புலனுக்கும் அவசியத்தை இரண்டாவது சொன்னவர்கள் அறிகிறார்கள். ஒழுக்கத்தில் குழப்பத்தையே முதற்சொன்னவர்கள் விளைவிப்பார்கள். இரண்டாவது சொன்னவர்கள் சுதந்திரத்தின் உரிமைகளை ஒருவேளை மறந்து பெரும்பான்மையோரின் கொடுமையிலும் கொண்டுவந்து விடலாம்.

அரசுரிமை தத்துவம்

பிரஞ்சு நாட்டிலே இம்முதற்கட்சியில் சேர்ந்த ஒரு தலைமுறையை சித்தாந்திகள் அல்லது கற்பனைக்காரர்கள் என அழைத்தார்கள். 1830-ம் ஆண்டின் புரட்சிக்குப் பிறகு ஜனங்களின் நம்பிக்கையை யெல்லாம் நாசஞ் செய்தார்கள். சுதந்திரத்தின் கற்பனைகளையே அவர்கள் பகிரங்கஞ்செய்து ஒவ்வொருவரும் தங்கள் புலன்களை பெருமையடையும்படிச் செய்ய சாதனங்களை அடைந்துள்ள நடுத்தர வகுப்பினர்கள் கைகளிலேயே அதிகாரஞ் செய்யும் எல்லா ஒப்பந்தத்தையும் நிலைநிறுத்தினார்கள். பழைய புராணங்களில் நம்பிக்கையும் அபிவிருத்திக்கு விரோதமான கொள்கைகளையுடைய வகுப்புக்களையும் வன்மைகளையுமே துரதிருஷ்டவசமாய் இரண்டாவது காட்சியில் காணலாம்.

மிகவும் குறுகியவும், தனி நோக்கங்களுமான இவ்விரு கட்சிகளும் பிழையிலேயே பதிந்துளார்கள்.

ஆனால் உண்மையோ இதுவாகும்; எல்லா அரசுரிமையும் ஈசுவரனிடமேயுள. புவியைப் பாதுகாக்கும் ஈசுவர நியமத்திலும் தர்மத்தின் ஆதரவிலுமே அது நிலைத்துள்ளது. பேர் ஒழுக்கங்களில் பெருமையாயுள்ள பேரறிஞர்களின் மொழிகளிலும், மனித சமூகத்தில் யுகங்கள் தோறும் புலனாகும் இயல்பான விருப்பத்திலும் அவர் விளங்குவார். நாமடையப் போகும் நோக்கங்களும், நிறைவேற்ற வேண்டிய சந்தேகங்களும் அவனிடமே நிறைந்துள்ளதென நினைக்கவேண்டும். ஈசுவரனுடைய நியமம் நினைவுடனாகி, அத்துடன் சாய்ந்தாலொழிய தனி நபருக்கும் சமூகத்திற்கும் அரசுரிமை செய்ய யாதொரு அதிகாரமு

மில்லை. ஒருவன் இந்த திவ்வியமான தர்ம நியமத்தின் அவதாரமாகி அதன் பெயரால் அதிகாரஞ் செய்யவேண்டும். அல்லது கவிழ்ப்பதற்குரிய கொடுங்கோன் மன்னனுக பெரும்பான்மையோரின் தேர்தல் யாவற்றிற்கும் சிறந்த தர்மநியமத்திற்கு விரோதமானல் அல்லது எதிர்கால அபிவிருத்திக்கு இடையூருனல், அரசுரிமையின் இயல்பு சூன்யமாகும். சமூகமேன்மை, சுதந்திரம், அபிவிருத்தி இம் மூன்று நியமங்களுக்குப் புறமாக அரசுரிமையே இல்லை.

சமூக மேன்மை எதனுலாவதென்பதை கற்பிப்பதே கல்வியாகும்.

சமூக மேன்மையின் சித்தத்தில் நிரந்தரமான அபிவிருத்தியை யடையும் சாதனத்தையுடைய சுதந்திரமான விருப்பத்தை ஒருவன் நிச்சயமாகக் கற்பனையால் அடைகிருன்.

அவர்களின் காலம், தேசத்திலுள்ள சகோதரர்களின் சீவனுக்கு வழிகாட்டியாயிருக்கும் அடிப்படையான நோக்கம் நம்பிக்கைகளை உங்கள் மக்கள் அறியும்படி கற்பிக்கவேண்டியது உங்களின் முதன்மையான காரியமாகும். தேசத்தின் மத, சமூக, இராஜீய எதிர்கால நோக்கமும், எந்த சட்ட உணர்வால் அவர்கள் செயலைக் காணலாம் எனவும், ஜனசமூகம் இதுவரை எந்த அபிவிருத்தியை யடைந்துள்ளது, இன்னம் அடையவேண்டுவது யாதென அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். அதுவே உங்கள் முதன்மையான கடமை. ஈசுவரனுல் சிருஷ்டிக்கப்பட்ட இலட்சக் கணக்கான சகோதரர்களுடன் பொது நோக்கத்திற்காக, அவர்கள் சிறுவயதிலிருந்து சமத்துவம் அன்பு என்னும் உணர்வில் அவர்களுடன் ஐக்கியமாக

வேண்டுமென்னும் எண்ணத்தை அவர்கள் நினைக்க வேண்டு வது உங்களுக்கு அத்தியாவசியமாகும்.

உங்கள் குழந்தைகளுக்கு இத்தகைய கற்பனையை யளிக்கும் கல்வி தேசத்தினின்றே தோன்றும்.

இக்கால ஒழுக்கக் கல்வியானது வெறுங் குழப்பமே யாகும். பெற்றோர்களிடம் அதை விட்டுவிட்டோமே யானால் அது வெறும் பூஜ்யமேயாகும். உணவிற்காக ஒய் வில்லாமல் எப்பொழுதும் உழைப்பிலாகி எளிமையுடன் கூடியிருந்தால் குழந்தைகளுக்குக் கற்பிக்க அவகாசமும் சந்தர்ப்பமும் வாய்ப்பதில்லை. உபாத்தியாயர்களுக்கு பணம் அளிக்கவும் அவர்களிடம் பொருள் இல்லை. தன் னலமும் தீமையும் திகழ்ந்து குடும்பத்தைக் கெடுத்திருக் குமேயானால் அங்குள்ள நிலையைக் கேட்பானேன். ஒரு வேளை செல்வாக்கு இருந்து பெற்றோர்கள் விருப்பம் போல் புரோகிதனோ உபாத்தியாயனைகவோ தோன்றினால், அறியாமை, சிற்றின்பத்தில் தோய்ந்து அல்லது பேடி சன்னியாசத்தில் விருப்பமாகி குழந்தைகள் வளரும். இங் ஙனம் கற்பிக்கப்பட்டால் அவர்கள் யௌவன திசையான மனித நிலையை அடைந்தவுடன், பொது நன்மைக்காக, சகோதர ஐக்கியமுடன் எங்ஙனம் சேரமுடியும். தேசத் தின் ஐக்கியத்தை தங்கள் சொந்தஹோதாவில் அவர்கள் எங்ஙனம் காட்டமுடியும். இதுவரை தீட்சை பெறாத பொது நன்மையின் அபிவிருத்தியில் அவர்கள் ஈடுபட வேண்டுமென சமூகம் அவர்களை அழிக்கும். அறியாமை யில் ஆழ்ந்த அவர்கள் சட்டத்தை மீறுவார்களானல் அதன் உணர்வு, எல்லையை ஒரு பொழுதும் சமூகம் அவர்களுக்கு கற்பிக்காமலிருந்தபோதிலும் சமூகம் அவர்

களை தண்டிக்கும். மனிதர்களாய் தேசீய புருஷர்களாக அவர்கள் மலருங்கால் எவராலும் கற்பிக்கப்படாத, ஒற்றுமையையும் தியாகத்தையும் சமூகமானது விரும்பும், இப்பொழுது நான் சொன்ன சித்தாந்த கட்சியானது அதிகாரஞ் செய்யும் உரிமையையும் ஒவ்வொருவர்களுக்கும் தனிமையாகக் கற்பிப்பதிலேயே எண்ணுவதும் விந்தையேயாகும். தேசீயத்தையும் சமூகத்தையும் பற்றி அது கற்பிப்பதே இல்லை. கற்பனையில் சுதந்திரமென அவர்கள் கூச்சலிடுவதானது ஒழுக்க வழியில் தேசத்தின் உரிமையை இழக்கும்படி செய்வதாகும். பணத்திற்குரிய விவகாரங்களிலும் இடை அளவு முதலியவைகளிலும் ஒருவித ஒரு தன்மையை யடைவது மிக்க அவசியமென அவர்கள் பகிரங்கம் செய்கிறார்கள். தேசீய நோக்கத்தைக் கண்டு அதை அபிவிருத்தி செய்ய ஒரே தன்மையான நோக்கங்கள் வேண்டுமென்பதை துரும்பாக எண்ணுகிறார்கள். சட்ட அமைப்பான சர்க்கார்களை ஆதரவு செய்பவர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் போகும் இந்தக் கூச்சலினால் நீங்கள் எப்பொழுதும் ஏமாறக்கூடாது.

தேசீயக் கல்வி

தேசீய மனத்தைத் திகழச் செய்யும் தேசீயக் கல்வியன்னியில், அத்தேசத்திற்கு மனமே இல்லை என்று விடலாம்.

எல்லா தேச மக்கட்களுக்கும் பொதுவான தேசீயக் கல்வியன்னியில் கடமைகளிலும், உரிமைகளிலும் சமத்துவம் என்பது கனவேயாகும். அப்பொழுது கடமைகளின் ஞானமும், உரிமைகளைப் பயன்செய்யும் வன்மையும் தற்

செயல் என்னும் அதிர்ஷ்டத்திற்கோ, உபாத்தியாயரை நியமிக்கும் யதேச்சாதிகாரிகளிடமோ ஒப்புவிக்கப்படும்.

ஒரே தன்மையான சமரசக் கல்விக்கு விரோதமாய்ச் செல்லுபவர்களும் சுதந்திரத்தை வேண்டுகிறார்கள். பெற்றோர்களின் யதேச்சாதிகாரத்தால் குழந்தைகளின் அமைப்பிலேயுள்ள சுதந்திரமானது சிதைக்கப்படுகின்றது. இளஞ் சந்ததிகளின் சுதந்திரமானது, வயோதிகர்களுக்குப் பலியளிக்கப் படுகின்றது; பிறகு அபிவிருத்தியின் சுதந்திரமானது மாயையாகவே மாறும். ஒரு வேளை பொய்யும், அபிவிருத்திக்கு விரோதமான தன்னந் தனி நம்பிக்கைகளே குழந்தைகளுக்குச் செலுத்தப்படுகின்றது. ஆராய்ச்சி என்பது அசம்பவமாகும் வயதை அடைந்துள்ள பெற்றோரின் அதிகார செல்வாக்கினால் அது குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றது. பிறகு நாள் முழுவதும் உணவிற்காக உழைப்புடன் சங்கிலியால் இணைக்கப்பட்டுள்ள உங்கள் வாழ்க்கையானது, இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள உங்கள் நம்பிக்கைகளை, மற்றவர்களுடன் வேற்றுமை கண்டு திருத்தி யமைத்துக்கொள்ள, அநுமதிப்பதில்லை. நான் இப்பொழுது பேசும் அப்பொய்யான அமைப்பு, மனோசாதி எனப்படும் கொடுமையிலும் கொடுமையைக் கண்டு ஸ்தாபனஞ் செய்யும்.

இவ்வமைப்பினால் சித்தாந்தஞ் செய்யப்படும் ஒன்றை நான் நிச்சயமாக யதேச்சாதிகாரமெனவே சொல்லவேண்டும். சுதந்திரம் என ஒருபொழுதும் சொல்லக்கூடாது. சமத்துவமன்னியில் சத்தியமான சுதந்திரம் ஒரு நாளுமில்லை. கடமையிலே ஒருவிதமான எண்ணமன்னியிலும்

பொதுநோக்க மன்னியிலும் ஒரேவிதமான ஆதாரத்தி னின்று செல்லாதவர்களிடம் சமத்துவமென்பதே இல்லை. இஷ்டம்போல் தீமையை விரும்பும் உரிமையே உண்மை யான சுதந்திரமாகாதென நான் முன்னரே சொல்லி யுளேன். நன்மை செல்லும் எந்தப் பாதையையும் நாடு வதற்கான உரிமையையே சுதந்திரமென சொல்லியுளேன். இந்தப் பொய் தத்துவதரிசிகளால் அழைக்கப்படும் இந்த சுதந்திரமானது, குழந்தைகளுக்காக தீமையை விரும்பும் தந்தைகளுக்கு அளிக்கப்பட்ட யதேச்சாதிகார உரிமை யாகும். என்ன? குழந்தையின் உடலை துண்டம் துண்ட மாகச் செய்யவோ, தீமைபுரியவோ தந்தை பயமுறுத்தி னால், ஜன வாக்கால் தூண்டப்பட்டு சமூகமானது இடை யிலே நுழையும்.

ஆனல் ஆன்மாவோ, இச்சீவனின் சித்தமோ இச்சரீ ரத்தைவிட குறைந்ததா? புலன்கள், அறியாமை என்ப தால் துண்டம் துண்டமாகப் போகாமலும், குருட்டு பக்தி எனப்படும் ஒழுக்கத்திற்கு மாறாகச் செல்லாமலும் சமூக மான அதைக் காப்பாற்ற வேண்டாமா?

சுதந்திர கர்ஜ்ஜனை.

முதலில் அது தோன்றிய காலத்தில் கற்பனையில் சுதந்திர கர்ச்சனையானது ஒருவாறு பயனை அளித்தது. அதனுடைய சித்தாந்த சுபாவங்களால் அபிவிருத்திக்கு விரோதமாகவுள்ள புரோகிதம், பழைய வைதீகம், கொடு மையான சர்க்காரிடம் ஒரு கற்பனையின் அதிகாரமெல் லாம் நிலைக்குமேயானல், நிகழ்ச்சியிலும் அது பயனையே அளிக்கும். அது குறைவாயிருந்தபோதிலும், கொடுமை

யைத் தகர்க்கும் கருவியாயிருந்து அது விடுதலைக்கு இன்றியமையாத காவல் கர்ச்சனையாகும். நீங்கள் அடிமையாகவுள்ள எந்த இடத்திலும் உங்களுக்கு அது தொண்டு செய்யட்டும். மதபக்தி என்பது தேவாலயங்களின் கதவுகளில் அபிவிருத்தி என்னும் மொழிகளை எழுதுவது, ஒவ்வொரு பகிரங்க கலாசாலைகளும் இதையே பலவிதமாகப் புகல்வது, அடியிற்கண்ட உபதேசத்தையே தேசீயக்கல்வி முடிந்தவுடன் கடைசியாகக் கூறுவது, இத்தகைய காலத்தைப்பற்றியே நான் இப்பொழுது உரைக்கிறேன்:—எப்பொழுது பொது உடன்படிக்கையுடன் வாழ வேண்டிய உங்களுக்கு, உங்கள் தேசீய நாடு இன்று நம்பும் நோக்கங்களை, இந்த உடன்படிக்கையின் அடிப்படையான ஆதரவுகளை நாங்கள் கற்பித்துவிட்டோம். இந்நோக்கங்களில் அடிப்படையானது அபிவிருத்தியாவதென்பதை ஞாபகம் செய்து கொள்ளவும். நீங்கள் எங்கிருந்தபோதிலுஞ் சரி, உங்கள் சகோதரர்களின் மனத்தையும்,இருதயத்தையும் மேன்மையாக்குவதே, மனிதனும் தேசீயவாதியான உனது உத்தேசமென ஞாபகஞ்செய்து கொள்ளவும். நாங்கள் அடைந்துளோமென நாங்கள் நம்பும் சத்தியத்திலும் மேன்மையான சத்தியத்தை நீங்கள் கண்டால், அங்கு சென்று, பரிசீலனை செய்து வேற்றுமையைக் காணவும். பிறகு மேன்மையானால் வீரமுடன் அதை பகிரங்கஞ் செய்யவும். அப்பொழுது தேசமெல்லாம் உங்களைப் போற்றும். உங்கள் அவசியத்திற்குத் தேவை இல்லை யெனவும் தேசத்தின் ஐக்கியத்திற்கு விபத்து எனவும் பிற்காலத்தில் கற்பனையில் சுதந்திரம் என்னும் கர்ச்சனையை விட்டுவிடலாம். ஆனால், அதற்குமுன் ஒருபொழுதும் விட்டு

விடலாகாது. எல்லோருக்கும் கட்டாயமான இலவச தேசியக் கல்வியின் அமைப்பை நிலைவுறுத்தக் கேட்டு, நெருக்கியாவது பெறவும்.

தேசத்தின் எதிர்கால திட்டத்தை நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் அறிவிக்க வேண்டியது தேசத்தின் கடமையாகும். ஒழுக்கக் கல்வியையும், சர்வதேச சரிதையின் சுருக்கத்தையும், ஜனசமூக வளர்ச்சியைப் பற்றியும், தன் தேச சரித்திரத்தையும், தேச சட்ட நிர்மாணங்களின் அடிப்படையான நோக்கங்களின் விளக்கங்களையும் ஒருவருக்கும் புண்படாத மிகுதியான எல்லாக் கற்பனைகளையும் ஒவ்வொரு தேசியவாதியும் அதன் பாடசாலைகளில் பெற வேண்டும். சமத்துவத்தையும், அன்பையும் இப்பாடசாலைகளில் ஒவ்வொருவனும் கற்கவேண்டும்.

இந்த திட்டம் ஒருதடவை ஜனங்களுக்கு அறிவிக்கப் பட்டால் அதன் உரிமைகளை சுதந்திரம் மறுபடியும் அடையும். குடும்பம் இன்னம் வேறு யாவற்றையும் கற்பது புனிதமேயாகும். ஒருவனின் சொந்த எண்ணத்தை மற்றவர்களுக்கும் அறிவிப்பதில் ஒவ்வொருவனுக்கும் எல்லை இல்லாத உரிமையுண்டு.

அதைக் கேட்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. சிந்தனையைச் சுதந்திரமாக எந்த சொரூபத்திலும் விளக்க சமூகமானது, உற்சாகமளித்து பாதுகாப்பையளிக்கவேண்டும். நன்மையை நாடும் சமூக திட்டத்தை சீர்திருத்தவும், விருத்தியாவதற்கான எந்த வழியையும் திருப்புவதற்கு அது உதவியாய், அனுகூலமாக இருக்க வேண்டும்.

அத்தியாயம் 18.

சங்கம்—சங்கங்களின் நோக்கம்—உபதேசம்.

சங்கம்

ஈசுவரன் உங்களை சமூகம் விருத்தியாகும் சீவனாக சிருஷ்டித்துள்ளார். அதனால் உங்கள் நிலைகளுக்கேற்ற வாறு, முயற்சியிலே சக்திக்கேற்ற வண்ணம் பரஸ்பரம் ஐக்கியமாகி அபிவிருத்தியாக வேண்டுவது உங்கள் கடமை யாகும். உங்கள் ஐக்கியத்திலும் வளர்ச்சியிலும் சமூகமானது எந்த இடையூறையும் செய்யாமலிருக்க வேண்டுவது உங்கள் உரிமையாகும். அது மாத்திர மன்னியில் ஐக்கியத்தைப் பெறுவதற்கான உதவியையும், சாதனத்தின் அறிவையும், வளர்ச்சியின் விளக்கத்தையும் அவசியமானால் அது அளிக்கவேண்டும்.

நன்மை புன்மையை நாடுவதிலும், கடமை தன்னலத்தை விரும்புவதிலும், சுய இச்சையை அளிப்பதே சுதந்திரமாகும். கல்வியில் எதை விரும்பவேண்டுமென்பதைக் கற்பிக்கவேண்டும். ஐக்கியச் சங்கமே அதைச் சாதனஞ் செய்யும் விருப்பத்திற்கு சாதக மாகவேண்டும். நீங்கள் விரும்பினால் அபிவிருத்தியையே நோக்கமாக உங்கள் முன்னிலையில் எண்ணவேண்டும். வளர்ச்சியில் நீங்கள் புலனாகும் வண்ணம் குணமானால் நீங்கள் பிழையில்லாமல் செல்லுகிறீர்கள் என்பதை காண்பிக்கும். மேற்சொன்ன நியமங்களில் ஏதாவது ஒன்றை நழுவவிட்டால் மனிதர்களுமில்லை, நகரவாசிகளு மில்லை எனச் சொல்லிவிடலாம்.

அப்படி அவர்கள் இருந்தபோதிலும் பூரணமாகாத நிலையிலாகி வளர்ச்சியினின்று நின்று விட்டார்கள் எனலாம்.

இவைகளுக் கெல்லாம் முதன்மையாக சங்கத்தின் உரிமைக்காக நீங்கள் சண்டை செய்யவேண்டும். அதன்னியில் சுதந்திரமும் கல்வியும் பயனற்றதாகும்.

ஆன்மாக்களின் ஐக்கியமான மதத்தைப்போல் சங்கங்களின் உரிமை புனிதமாகும். நீங்கள் எல்லாம் ஈசனின் மக்களே. ஆதலால் நீங்கள் யாவரும் சகோதரர்கள். ஆதலால் சங்கத்திற்கு இடையூறு செய்வது சகோதரர்களுள் சோதியாவதைக் குறைப்பது குற்றமில்லையா?

சோதியிலாவதைப்பற்றி புராதனத்தில் அது அழியாத சத்தியமெனச் சொல்லியுளார்கள். ஜன சமூகத்தின் தர்ம விளக்கத்தில் மேல் செல்லும்படியிலே அது ஒரு படியாகும். அதனல் தான் சோதியில் சேர்வது என்பதை சிந்தனையுடனேயே நான் உபயோகஞ் செய்துளேன். அது புனிதமான மொழியாகும். அது ஈசுவரன் முன்னிலையில் அவர்கள் ஒரே குடும்பத்தின் சமமானவர்கள் என்பதைக் கற்பித்தது.

அடிமையின் ஆன்மா வேறு, சுதந்திர புருஷனின் ஆன்மா வேறு. ஆதிகாலத்தில் ஜனங்களும் வேதாந்திகளும் நம்பினர்கள். அதைவிட நான் முன் சொன்னது எவ்வளவு முன்னேற்றமான எண்ணமென்பதை அறிந்து கொள்ளலாம். இந்த நோக்கமொன்றே தர்மத்திற்குப் போதும். ஆன்மாக்களின் சகோதரத்வம் சமத்துவத்தின் சின்னமே சோதியில் சேர்வது என்பதாகும். அந்த சின்னத்தில் மறைந்துள்ள சத்தியத்தை விருத்தி செய்வதும் பெருவதுமே ஜன சமூகத்தின் கடைவேலையாய் நின்றது.

தேவாலயம் அதைச் செய்ய முடியவில்லை. செய்யவு மில்லை. அச்சமும், ஆதரவற்றும் ஆதியிலாகி, அரசர் அதி காரியிடம் பிற்காலஞ் சேர்ந்து தன்னலத்தில் தோய்ந்து, ஸ்தாபனஞ் செய்த எண்ணத்திற்கு விரோதமாகி, நெறியி னின்று நழுவி சோதியில் சேர்வது என்பதின் உரையை யே குறைத்துவிட்டது. சாதாரண ஜனங்களுக்கு சோற் றிற்காவே சோதியில் சேரவேண்டுமெனக் கற்பித்து, இரு வகை சோதியின் கலப்பைப் புரோகிதர்களிடமே ஒப்பு வித்து விட்டது.

ஜனங்களுக் கேற்ற வண்ணம் முதலில் மொழிந்த திரு மொழிகளை உரைபுரியலானார்கள். இதனால் எவ் வளவோ வேற்றுமை யுண்டாகி விட்டது. வேற்றுமை வளர்ச்சியாகி நாளடைவில் தியாகம் அதிகரித்து மத சீர் திருத்தங்கள் மேன்மையாய் கொடுமைகளும் தாண்டவ மாடின. பொஹிமியா நாட்டு ஜான் ஹஸ்ஸு என் னும் புருஷன் சீர் திருத்தத்தின் தலையாய் விளங்கினான். அதற்காக போப்பின் ஆக்ஞையால் அவன் நெருப்பிலிட்டு எரிக்கப்பட்டான். பழைய சச்சரவின் சரிதைகளைப் பற்றி உங்களில் பலர் இப்பொழுது அறியாம லிருக்கிறீர்கள். இல்லையேல் கேவலம் தத்துவ விசாரணையில் தோய்ந்த பிடி வாதச் சண்டை என நீங்கள் மனதில் எண்ணலாம். தர்ம சிந்தனையில் தூய்மையாகும் ஒவ்வொரு நிலையும், அதற் கேற்றவாறு சமூகத்தில் ஒழுங்கான அமைப்பை செய்வ தென்பதை தேசியக் கல்வியினால் சகஜமான சரிதை கற் பிக்குமேயானால், அப்பொழுது அக்கிளர்ச்சியின் உண்மை யான தத்துவத்தை அறிவீர்கள். அப்பொழுதுதான்

நீங்கள் இந்தத் தியாகிகளால்தான் நன்மை ஏற்பட்டதென அவர்களை மரியாதையுடன் எண்ணுவீர்கள்.

ஈசுவ்ரனுக்கும் மனிதனுக்கும் நடுவில் பிறப்பினுலேயே உயர்ந்த ஒரு வகுப்பு இல்லை என்னும் அறிவு அடைந்ததற்கு இத்தியாகிகளுக்கும் அவரைப் பின் பற்றியவர்களுக்குமே நாம் கிருதக்ஞை யுள்ளவர்களாக விருக்கிறோம். தெய்வீக மனித அறிவிலும், ஒழுக்கத்திலும் நம்மில் சிறந்தவர்கள் மேன்மையான வழியில் நம்மைச் செலுத்தவேண்டும். அதற்கு அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஒரு வகுப்பும் பிரத்தியேகமாய் வன்மைகளையும் அதிக உரிமைகளையும் அடையக்கூடாது. சோதியில் சேரும் உரிமை சகலருக்கும் உண்டு என்னும்படியான இவ்வறிவுகளுக்காக நாம் அந்தப் பழைய தியாகிகளுக்கே கிருதக்ஞை யுள்ளவர்களாக இருக்கிறோம். சுவர்க்கத்தில் புனிதமானது புவியிலும் புனிதமாகும். ஈசுவரனில் மனிதர்கள் சேர்வார்களேயானல், அதன் பயனுக புவியிலும் மனித சமூகத்துடன் சேர்வார்கள். ஆன்மாக்களின் தர்ம சபையால் நினைவை நிசமாக மாற்றும் செயல், புலன்கள் நிறைந்த சங்கங்களின் உரிமை தோன்றும்.

சங்கம், சமூகத்தை உங்கள் கடமையாகவும், உரிமையாகவும் எண்ணவும்.

சங்கத்திற்கான ஜனங்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் சிலர் நாடே அல்லது தேசமே உங்கள் உண்மையான சங்கம் என்பார்கள். நீங்கள் அதில் கட்டாயமாக அங்கத்தினர்களாக இருக்கவேண்டு மென்பார்கள். ஆதலால் பட்சபாதமான சங்கங்களை உங்கள் நடுவில் புலனுக்கிக்

கொள்வது நாட்டிற்கு பாதகம் அல்லது அனுவசியமெனவும் முடிப்பார்கள்.

எல்லா ஜனங்களுக்கும் பொதுவான நோக்கம் பொருள்களில் ஈடுபடும் சங்கத்தையே, நாடு தேசமெனச் சொல்வது. எல்லா ஜனங்களுக்கும் அவசியமும் நோக்கமுமில்லாத கருத்துகள் உண்டு. அவை சிலருக்கே அவசியமாயிருக்கலாம். பொது எண்ணமும் பொதுத் தோற்றமும் பெருமையானுல் எப்படி ஒரு தேசமும் நாடு மாகின்றதோ, அப்படியே சில ஜனங்களுக்கு அவசியமான பொது எண்ணங்கள் செயல்களை அடைந்துள்ள சபையை தனிச் சங்கங்கள் என உரைக்கலாம்.

இதுவே சங்கங்களின் அடிப்படையான உரிமையாகும். சங்கங்களே அபிவிருத்தியின் அத்தியாவசிய ஆதரவுமாகும். நாட்டிலுள்ள ஜனங்கள் எல்லாம் அதை நிலை நிறுத்தும் பொழுது ஒருவித குறிப்பிட்ட நோக்கம் கூட்டமே பரஸ்பரம் இணைந்து கொள்ளும் நிலையமே தேசம் அல்லது சர்க்காராகும். புதியதும் சத்தியமான புதிய நோக்கம் தேசத்திற்குப் புத்துயிரை யளிக்கும் புதிய காரணம் நிறைந்த உண்மை; இவைகளை புதியதாய் சிலர் அறிந்தால், சங்க மன்னியில் அதன் அறிவை நாம் எப்படி பரவச் செய்கின்றது. சாஸ்திரத்தால் புதியதாய் கண்டு பிடிக்கப்பட்டதின் பயனுலும் புதிய போக்குவரவு சாதனங்களின் அனுகூலத்தினுலும், அல்லது வேறு எந்த காரணத்தினுலாவது, தேசத்திலுள்ள ஒரு பகுதி ஜனங்களுக்கு புதிய ஆதரவு தோன்றுமேயானுல், வெகு காலமாய் பழைய ஆதரவிலுள்ளவர்கள் தங்கள் ஒவ்வொருவர்களின் வன்மையையும், சாதனங்களையும் சேர்த்து ஐக்கிய

மாகாமல் எப்படி இருக்கமுடியும். எல்லாமனிதர்களா லும் ஆமோதிக்கப்பட்டுள்ள நீங்களும் நிலைகளில் இன்ப மும் ஆல்சியமுமாகி எவனாவது ஒருவன் அதிர்ச்சி செய்து வெற்றிபெற முயன்றாலும், அவர்கள் வழக்கப் பழக்கங்கள் இயல்பினால் அவனை அங்ஙனம் செய்ய அனுமதிப்ப தில்லை. ஆனால் அந்த ஒருவன் படிப்படியாகச் சங்கத்தி னால் நாளொரு மேனியும் வளர்ந்தால் அதைச் செய்து விடும். சங்கமென்பது எதிர்கால வழியாகும். அஃதன் னியில் தேசமானது இதுவரை சிறந்த நாகரிகத்திற்கே அடிமைப் பட்டு அபிவிருத்தியன்னியில் ஒரே நிலையிலிருக் கும்.

சங்கங்களின் நோக்கம் அபிவிருத்தியிலேயே இருக்க வேண்டும். எல்லா ஜனங்களும், நாடும் ஒப்புக்கொண்டு நிலைக்கும் உண்மைகளுக்கு ஒருபொழுதும் மாறாக இருத் தல் கூடாது. அயலார்கள் சொத்தைக் கொள்ளை யடிப்பதற்காக ஏற்பட்டுள்ளசங்கமும், அங்கத்தினர்களுள் பல பெண்களை மணப்பதற்கு அனுமதிக்கும் சங்கமும், தேசத்தைத்தனித்தனியாய் பிரிக்கவேண்டுமென்று சொல் லும் சங்கமும், யதேச்சாதி காரத்தைக் கோரும் சங்கமும் நீதியற்றதேயாகும். "மனித சுபாவம், ஒழுக்கம், தேசம் முலிதயவைகளுக்கு மாறாகச் செல்லும் கற்பனைகளை பிர சாரஞ் செய்யப்பட்டால் நாங்கள் அதை பொறுக்க முடி யாது. உங்கள் மனதிற்கிசைந்த தத்துவங்களை எங்கள் நாடுவிட்டு வேறு எங்கேயாவது சென்று நீங்கள் நிலைக்கச் செய்யவும்' என ஜனங்கள் மற்றவர்களுக்கு உரைக்க உரிமையுண்டு. ஜனங்கள் சாந்தமயமா யிருக்கவேண்டும். எழுதி பேசும் மொழிகளைவிட வேறு ஆயுதங்கள் அதற்குக்

கூடாது: அதனுடைய நோக்கம் தூண்டுதலா யிருக்க வேண்டுமே யன்னியில் ஒரு பொழுதும் வற்புறுத்தல் கூடாது.

சங்கங்களெல்லாம் பகிரங்கமா யிருக்க வேண்டும். சுதந்திரமும் தேசமும் திகழாத நாட்டில், இரகசியமான சங்கங்கள் சட்டரீதியாய் போர்புரியும் ஆயுதங்களாகும். சுதந்திரத்தின் உரிமை அனுமதிக்கப்பட்டு சிந்தனைகளின் அபிவிருத்தி தூய்மை முதலியவைகள் பாதுகாக்கப்படும் நாட்டில் அச்சங்கங்கள் சட்டமற்றதால் அவைகளைக் கலைத்து விடலாம். அபிவிருத்திக்குச் சங்கங்கள் வழியாக இருக்கவேண்டுவதுபோல் மற்றவர்களுடைய பரிசீலனைக்கும், நீதிக்கும் அது உட்படவேண்டும்.

மனித சமூகத்தின் முதன்மையான நிலைகளினின்று தோன்றும் மற்றவர்களின் உரிமைகளை கடைசியாக எந்தச் சங்கமும் மரியாதையாகக் கருதவேண்டும். தொழிலாளிகளின் சுதந்திரமானது நடுக்காலத்தில் ஏற்பட்ட செல்வவந்தர்களின் கூட்டத்தால் அபகரிக்கப்பட்டது போல் பறிமுதல் செய்யப்பட்டால், சர்க்காரின் மூலமாக தேசமானது யாதொருவிதமான குற்றமன்னியில் அதை அமிழ்த்தி விடலாம். இந்த எல்லைகளைத் தவிர ஜனங்களுள் சங்கத்தின் சுதந்திரமானது அதற்கு சீவனை அளிக்கும் வளர்ச்சியைப் போல் புனிதமும் மீறக்கூடாததுமாகும். இதைக் கட்டுப்படுத்தும் எந்த சர்க்காரும் காட்டிக்கொடுப்பவர் போலவேயாகும். அத்தகைய சர்க்காரை முதலில் எச்சரிக்கை செய்யவேண்டியது ஜனங்களின் கடமை; எல்லா சாந்த வழிகளாலும் பயன்பெறவில்லையே யானல் அதைக் கவிழ்த்துவிடவேண்டும்.

சகோதரர்களே! இந்த அடிப்படையான ஆதரவுகளி லேயே, உங்களுடைய கடமைகள் நிலைத்திருக்கின்றன. இந்த ஊற்றிலிருந்தே உங்கள் உரிமைகள் உதயமாகும். உங்களுடைய தேசிய வாழ்வில் பற்பல தனித்தனி பிரசினை கள் எழுச்சியாகும்; ஆனால் அதைப்பற்றி யெல்லாம் முன் யோசனை செய்யவும், அதை அறிவிக்க உதவி புரிவதற்காக வும் இந்நூல் எழுதப்படவில்லை. உங்கள் வாழ்க்கைக்குத் தீபகற்பத்தைப்போல் சில அடிப்படையான நோக்கங் களைக் காண்பிப்பதற்கும், இத்தகைய பிரசினைகளுக்கு வழிகாட்டியா யிருக்கவேண்டுமென்னும் ஒரே நோக் கத்தோடுமே இந்நூல் எழுதப்பட்டுளது. இதை மனப் பூர்வமாய் பிரயோகஞ் செய்தால், பல பிரசினைகளுக்கு விடைகள் தானாகவே புலனாகும். இதை நான் செய்து விட்டேன் என எண்ணுகிறேன்.

உபதேசம்

மனிதர்களுடைய சமத்துவத்திற்கு ஆதியும் மூலகார ணமும் ஈசனே எனவும், ஒவ்வொரு தேசிய சட்டத்திற்கும் தர்மமே மூலமெனவும், சட்டங்களைச் செய்பவர்களுக்கு ஜனங்களே காரணமென சட்டத்தின் அடிப்படையாய் முதன்மையாயுள்ள சுபாவம் அபிவிருத்தியாக வேண்டு மெனவும், அபிவிருத்திக்கு எல்லை இல்லை எனவும் அது நிரந்தரமாய் யுகந்தோறும் வளர்கிறதெனவும் மனிதர் களின் ஒவ்வொரு முயற்சியிலும் மேன்மையாக வேண்டு மெனவும், ஒவ்வொரு நினைவிலும் விளக்கமாகி, மதம், தொழில் பொருள்களைப் பங்கிடுவது முதலியவைகளிலும் விருத்தியாகவேண்டுமென நான் முதலிலேயே சொல்லி யுளேன்.

ஜன சமூகம், தேசம், குடும்பம், உங்களுக்கும் உங்களுடைய கடமைகள் என்னவென்பதை நான் காண்பித்து விட்டேன். நீங்கள் விருத்தி செய்வதற்குக் கடமைப்பட்டுள்ள மனிதத் தன்மையைச் செய்யும் சுபாவங்களிலிருந்து இக்கடமைகளை யெல்லாம் அனுமானித்து எழுதினேன். மனிதர்கள் மீறக்கூடாத இந்த சுபாவங்களாவது, சுதந்திரம், கற்கும்வன்மை, சமூக விருப்பங்கள், விருத்தியாவதற்கான வன்மையும் அவசியமுமாகும். இந்த முதன்மையான சுபாவங்களன்னியில் மனிதன் மனிதனுகான், தேசவாசியுமாகான். இந்த சுபாவங்களிலிருந்தே உங்கள் கடமை, உரிமை, தேசத்திற்கு நீங்கள் கோரும் சர்க்காரின் இயல்பு முதலியவற்றை நான் ஊகித்து எழுதினேன். இந்த நோக்கங்களை நீங்கள் ஒருபொழுதும் மறக்க வேண்டாம். அவைகள் மீறப்படாம லிருக்கவேண்டி நீங்கள் எப்பொழுதும் விழித்திருக்கவேண்டும். அவைகள் உங்களகத்திலேயே அவதாரஞ் செய்யவேண்டும். அதனுல் நீங்கள் சுதந்திரமுடனுவீர்கள்; அபிவிருத்தியையும் அடைவீர்கள்.

இக்கடமைகளை நிறைவேற்ற பெரும் இடையூறு தோன்றி, இப்பொழுதிருக்கும்படியான சமமற்ற சாதனமான ஜன சமூகத்தின் சித்தத்தினின்று, இவ்வுரிமைகளை பிரயோசஞ் செய்யும் உணர்வு தோன்றவில்லையேல், நான் எடுத்த வேலையானது அப்பொழுதுதான் பரிபூர்ணமாகாது.

கடமைகளை நிறைவேற்றுவதற்கும், உரிமைகளைப் பிரயோகஞ்செய்வதற்கும் காலம், அறிவின் வளர்ச்சி நிலையான வருமானமான என்னும் இம் முப்பொருள்கள் அவசியமேயாகும்.

உங்கள் பலரிடம் நிகழ்ச்சியில், அபிவிருத்திக் காதாரமான இப்பொருள்களே இல்லை. புவியில் சீவனுடன் இருப்பதற்கே நித்தியமான நிலையற்ற சண்டையில் நிலவுகிறீர்கள். இப்பொழுது அபிவிருத்தியைப் பற்றிய பிரசினையே இல்லை, சீவனுடன் இருப்பதே பெரும் பிரசினையாய்விட்டது.

நிகழ்ச்சியில் அமைந்துள்ள சமூகத்தில், ஆழ்ந்து அடிப்படையான தீமையொன்று தோய்ந்துள. அத்தீமை ஏதென்று விளக்கி, அதை நிவர்த்தி செய்யும் மார்க்கத்தை நான் காண்பிக்க வில்லையானால் என் உழைப்பு பயனற்றதாகும்.

பொருளாதார முறையின் பிரசினையே எனது உழைப்பின் கடைசி பாகமான விஷயமாகும்.

அத்தியாயம் 19.

பொருளாதார பிரசினை—அறிவும் செல்வமும்—முதலாளியும் தொழிலாளரும்—தொழிலாளர் கதி—அபிவிருத்தி—பூஸ்திதி

உங்களில் பலர் பெரும்பான்மையோர் ஏழைகள், உழைப்பாளிகள், பயிர்வேலை செய்பவர்கள், தொழிலாளிகள். மனித சமூகத்தின் பெரும்பான்மை யோருக்கு வாழ்க்கையால் அத்தியாவசியமான உணவிற்கு உழைப்பதே சீவனின் சதாகால போராகும். அவர்கள் கைகளால் தினந்தோறும் பத்துப் பன்னிரண்டு சிலகாலம் பதினான்கு மணியும் வேலைசெய்கிறார்கள். அப்படியும் இந்த முயற்சியான ஒரே தன்மையுள்ள கடின,உழைப்பிற்கு தூல

தேகத்திற்கு வேண்டுமோன உணவும் கிடைப்பதில்லை. அவர்களுக்கு அபிவிருத்தியின் கடமைகளையும், மனம் புலன், சம்பந்தமான பயிற்சியையும், இராஜீய உரிமை, கல்வியையும் பற்றிக் குறிப்பிட்டு பேசுவது, சமூகத்தின் இந்நிலையில் வெறும் வேடிக்கையே யாகும். அவர்களுக்குக் காலமும் இல்லை; அபிவிருத்திக்கேற்ற சாதனமு மில்லை. ஆயாசமாகி களைப்படைந்து, அற்பமான யந்திரத்திற்குரிய உழைப்பிலே சுற்றி காலங்கழிக்கும் வாழ்க்கையால் திகைப்பை அடைந்து, அதனால்அவர்களுக்கு வேலையளிக்கும் அதிகாரிகளிடம், மௌனம், பலவீனம், ஒருவேளை வெறுப்புடனுகக் கற்கிறார்கள். நிகழும் கஷ்டங்களை யெல்லாம் மறப்பதற்கும், நிலையில்லா மறுதினத்தையும் நினைவினின்று விலக்க பலத்த குடியின் மயக்கத்தை நாடுகிறார்கள். பிறகு நியாயமாய் குகைகள் எனக் கூறப்படும் அறையிலே படுத்து, மறுதினமும் இத் தூலதேகத்தை அதே மந்தமான பயிற்சியில் பெருமையாக்க இளைப்பாறுகிறார்கள். இது பயங்கரமான நிலையாகும்; இதை மாற்றி யாக வேண்டும். நீங்கள் மனிதர்கள், புறப் புலன்கள் மாத்திரமன்னியில் சூட்சும புலன்களான அறிவும் மனமும் உங்களுக்கு உண்டு. அதை விருத்திசெய்யவேண்டியது உங்கள் கடமையாகும். நீங்கள் தேசவாசிகளாகத் திகழவேண்டும்; பொது நன்மைக்காக உரிமைகளை பயன் செய்யவேண்டும். ஆனால் அதைப் பயன் செய்ய கல்வியில் ஒரு நிலையான தேர்ச்சியையும், ஒய்வான சிலகாலமும் உங்களுக்கு வேண்டும்.

இன்று உழைப்பதைவிட குறைவாக உழைத்து அதிகமாக சம்பாதிக்கவேண்டு மென்பது தெளிவாகும்.

ஈசுவரனின் மக்களான நாமெல்லாரும் அவரில் சகோதரரான நாம் ஒரு பெரும் குடும்பத்தை ஸ்தாபனஞ் செய்ய அழைக்கப்பட்டுளோம். இந்தக் குடும்பத்தில் வேற்றுமையான விருப்பம், பலவித வன்மை, வெவ்வேறு வேலைகளில் இச்சை, முதலியவற்ருல் சமங் குறைந்திருக்கும். ஆனுல் ஒரே நோக்கம் இதை அதிகாரஞ் செய்ய வேண்டும். மனிதர் எனச் சொல்லப்படும் ஏறக்குறைய எல்லா சுபாவத்திலும் தான் திடமடைந்துள்ள வாழ்க்கையை விருத்தி செய்வதற்கேற்ற கைம்மாறை,செயலை செய்வதற்கேற்ற திறமை அடைந்து சகலரின் நன்மைக்கு உழைக்க விரும்பும், எவனும் அடையவேண்டும்.

பயம் அதிகரித்த உங்களில் சில நண்பர்கள் உழைப்பாளிகளின் மனோ நிலையிலேயே பரிகார மிருப்பதாக நாடினுர்கள். சேவிங்க்ஸ் பாங்கைப் போனுள்ள சில நிலையங்களை ஸ்தாபித்து அவர்கள் தொழிலாளிகளுக்குச் சொல்வதாவது 'உங்கள் கூலியை இங்கு கொண்டு வாருங்கள்; சேகரியுங்கள் ; அதிகக் குடிச் செலவு முதலியவற்றினின்று நீங்கவும், ஆத்மத் தியாகத்தினுல் தேவையினின்று தளரவும், இவைகளெல்லாம் மேன்மையான உபதேசங்களே ; ஏனெனில் தொழிலாளிகளின் ஒழுக்கத்தை அவை தேடுகின்றன. அதன்னியில் எல்லா சீர்திருத்தமும் பயனற்றதாகும். ஆனுல் அது எளிமையை நீக்குவதில்லை, சமூகக் கடமைகளைப்பற்றியும் எண்ணுவதில்லை.

உங்கள் கூலியிலிருந்து உங்களில் சிலரே எதையாவது காப்பாற்றக்கூடும். மெதுவாய் பொருமையான சேகரிப்பால் தள்ளாத காலத்தின் ஒரு பகுதிக்காக சேர்க்கக்

கூடும். மனித வாழ்க்கைக்கு அவசியமாயும் வாழ்க்கையின் பரிபூர்ண விருத்திக்கும், மேன்மைக்கும், தேசம் தழைக்கவும் ஜனசமூகம் சிறப்பாகவும் அதற்கு வேண்டிய வாறு உதவியளிப்பதற்கு சக்தியை அளிக்கவல்ல பொருளாதார சீர்திருத்தமே வேண்டும். பொருளேயும் விளே பொருள்களேயும் எங்ஙனம் விருத்தி செய்வதென்பதே முதன்மையான செல்வமாகும். நான் இதுவரை இதைப்பற்றியுரைக்கவில்லே. ஜனங்களின் உழைப்பால் நிலேயாகி, விபத்து விளக்கமாகும் பொழுதெல்லாம் இரத்த பலியைக் கோரும் சமூகமானது அவர்களிடம் ஒரு புனிதமான கடனே அடைந்துள்ளது. ஜனங்களுக்கு விரோதமில்லாத சிந்தனு சக்தியுள்ள வேறு பலருமுண்டு. ஆனுல் அவர்கள் அசிரத்தை யுள்ளவர்களாகி, உழைப்பாளிகளின் இருதயத்தினின்று தோன்றும் துக்ககரமான கூச்சலுக்கு அவசியமாகி, பிரதானமான மாறுதலேச் செய்ய அச்சமுடன் இருப்பார்கள். தொழிலின் சுதந்திரத்திற்காகப் பல போர்களே வெற்றியுடனும், கீர்த்தியுடனும் போர்புரிந்த பொருளாதார பேரறிஞர் என்னும் கட்சியைச் சேர்ந்தவர்களே மேற்சொன்னவர்கள். ஆனுல் மனித சுபாவத்தினின்று அபிவிருத்தியும் ஐக்கியத்தின் அவசியமும் தனியாய்ப் பிரிக்கமுடியாதென்பதை மனதில் அறியாமல், ஒவ்வொருவனும் தன் நிலேயில் தன் சொந்த முயற்சியால் தன் சுதந்திரத்தை ஸ்தாபனஞ் செய்து கொள்ளலாம் என நான் சொன்ன தத்துவ தரிசிகளேப் போல் எண்ணுகிருர்கள். இப்பொழுதுள்ள எந்தத் தொழில் அமைப்பிலும் மாறுதல் அதிகம் எனவும், தீமை எனவும், ஒவ்வொருவரும் தன்னந்தானுகவே விருத்தியாகவேண்டும். ஆனுல் யாவ

ருக்கும் சுதந்திரம் என்னும் சித்தாந்தமே நாளடைவில் சமூகம் என்று சொல்லும்படியான வகுப்புகளில் இன்பமும் சுகமுமான சுமாரான சமத்துவத்தை ஸ்தாபனஞ் செய்யுமெனவும் அவர்கள் பகிரங்கஞ் செய்கிறார்கள். உள்நாட்டு வியாபாரத்தில் சுதந்திரம், சர்வதேச வியாபார சுதந்திரம், ஏற்றுமதி இறக்குமதி வரிக் குறைவு, பெரும் தொழில்களுக்கு ஆதரவு, போக்கு வரவு சாதனங்கள், பொருள்களை அதிகம் செய்யும் யந்திரங்களான இவைகளின் பெருக்கம், இவைதான் சமூகம் செய்யவேண்டியது என பொருளாதார நிபுணர்கள் உரைக்கிறார்கள். இனி அதிகமாக இதில் நுழைவது தீமை என உரைக்கிறார்கள். அவர்கள் சொல்வது சரியானால், எளிமை என்னும் நோயை நீக்குவதற்குப் பரிகாரமே இல்லை. இந்த நம்பிக்கையற்ற நாஸ்திக ஒழுக்கமற்ற சித்தாந்தத்தை உங்கள் அவஸ்தை விருப்பங்களுக்கு விடையாக நான் ஒரு பொழுதும் அவர்கள் சொல்வது போல் சொல்லாமலிருக்க வேண்டும். இவ்வறிஞர் எண்ணும் பரிகாரத்தை விட வேறு மேன்மையான நிலையை ஈசுவரன் ஆக்ஞாபித்துளார்.

அறிஞரும் செல்வமும்

இந்தப் பரிகாரங்களெல்லாம் ஒரு வேளை சொற்ப காலத்திற்கு பொருள்களை விருத்தி செய்யலாம். ஆனால் யாவரிடமும் அதைச்சமமாகச் செய்யாது. தத்துவ தரிசிகள் மனிதரையே நினைத்து புவியின் வாழ்க்கையில் பெருமையுடன் பொருளை அதிகரிப்பதில் கவனமன்னியில் கேவலம் ஒழுக்கமொன்றிலேயே முயன்றால், பொருளாதாரப் பேரறி

ஞர்கள் மனிதனைப்பற்றியே கவலை கொள்ளாமல் பொருள் விருத்தி செய்வதிலேயே சிந்தனையைச் செலுத்துகிறார்கள். அவர்கள் சுதந்தரத்தைப்பற்றியே உபதேசஞ் செய்யும் இவ்வதிகாரத்தில், அதனால் பாதிக்கப்பட்ட பொருள் நிர்வாக நிலையான நமது காலமானது முதற்பொருளும் முயற்சியிலும் மேன்மையான போதிலும் சர்வசன சுகமென்பதே தோன்றவில்லை. தொழிலாளிகளின் எளிமையோ அப்படியே மாறாமல் உளது. பூஜ்யமான முதலுடன் கூடி தினக் கூலியினின்றும் சேகரிக்கமுடியாமலுள்ள நிலையில், எதைச் செய்வதற்கும் ஒன்றுமில்லாமலுள்ள காலத்தில் போட்டா போட்டி சுதந்திரமளிக்கப்பட்டதென்பது வெறும் பொய்யே யாகும். கல்வியற்று கற்பனை இல்லாமல், சந்தர்ப்பமின்றி பிரயோகஞ் செய்ய ஒய்வு நேரங்களற்றவர்களுக்கு இராஜீய சுதந்திரத்தைப் போலுள்ள பொய் போலவும், முன் சொன்னதைச் சொல்லலாம். வியாபாரத்தில் பெருக்கமடைவது பணமாற்றுச் செலாவணியில் சற்று முன்னேற்றமடைவது பயிர் செய்பவனும் புசிப்பவனுக்கு நடுவிலுள்ள நடுத்தரவகுப்பு வியாபாரக் கொடுங்கோன் தரகர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலாளிகளைத் தலையோங்கச் செய்தபோதிலும், முதலாளிகளிடமிருந்து விடுதலை யாக்குவதில்லை. தொழிலில்லாதவர்களுக்கு அது வழியையும் காட்டுவதில்லை. பொருள்களை நீதியாகப் பிரித்து, அனுபவிப்பவர்களை அதிகமாக்குவதற்குப் பதிலாக, முதலானது சரியான திட்ட முறையினின்று திருப்பப்பட்டு சகலரிடமும் சுற்றி பரவுவதற்குப் பதிலாக தேக்கம் போல் தழைக்காமல் நிற்கின்றது. அப்பொழுது வாழ்க்கையின் அத்தியாவசியப்

பொருள்களின் அபிவிருத்திக்குப் பயனுகாமல் அனுவசியப் பொருள் சிற்றின்பம் முதலியவைகளுக்கும் பொய்த் தேவைகளுக்கும் பயன் செய்யப்பட்டு, அபாயமான, ஒழுக்க மற்ற சூதாட்ட வியாபாரத்தில் வீணுக்கப்படுகின்றது.

முதலாளியும் தோழிலாளரும்

முதலாவது நமது நிகழ்ச்சியிலுள்ள பொருளாதார சமூகத்திற்கு பெரும் பாதகமாகும். அதுவே தொழிலாளிகளின் கொடுங்கோலரசனுகும். செல்வ முறையினு லுண்டாயுள்ள நவீன மூன்று சாதிகளைத் குறித்துக் கூறுவோம். முதலாளிகள் தொழிலுக்கேற்ற சாதனம் கருவிகளை யடைந்துள்ளவர்கள். அதாவது, நிலம், யந்திரசாலை. ரொக்கப் பணம், விளை பொருள்கள் கண்டிராக்டர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளிகளுக்குத் தலைவர்களாய் அதை முதன்மையாய்த் தொடங்குபவர்களாகும். அறிவைக் குறிப்பவர்கள்-அல்லது குறிப்பவர்களாகவேண்டும். தொழிலாளிகள், இவர்களே கைகளால் வேலை செய்பவர்கள்; முதல் சொன்னவர் நிலத்தின் தலைவராகும் தொழிலைத் தழைக்கச் செய்வதோ, தாமத மாக்குவதோ அல்லது துரிதஞ் செய்வதோ அல்லது குறித்த நோக்கத்தில் அதை தோயச்செய்வது அவன் வேலையாகும். உழைப்பு அதிகமானல் விளை பொருள்களும் அவனுக்கு அதிகமாகும். உழைப்பிற்கேற்ற நிலையும் கருவியும் சகஜமாக அதிக மாறுதலை அடைவதில்லை. அவன் சில பொருளுடனிருப்பதால் அத்தியாவசிய மென்பதே சில காலம் வரை அவனுக்கு ஏற்படுவதில்லை. கண்டிராக்டரின் பாகமோ நிலையற்றதாகும். அவன் முயற்சியும் அறிவிலே

சாய்ந்துள்ளது. காலம், எதிராளிகளின் போட்டா போட்டி, சிந்தனையிலகப்படாத முதலை அதிகம் விடுவதும் முதலிய பலவான சந்தர்ப்பங்களால் அவன் பாதிக்கப் பட்டு உற்சாகமுயற்சியினலுண்டாகும் அற்பமான அல்லது அதிகமான ஆதாயத்தைப்பற்றி கவனியாமல் தொழிலாளி கள் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதற் கேற்ற வாறு அவர்கள் கூலி திட்டஞ் செய்யப்படும். அதாவது முதலாளி, உழைப்பாளிகளின் கூட்டத்தைப் பொருத்த தாகும். முதலாளிகள் அதிகமானல் சில வேலை மிகவும் சிறப்புற்றுல் வேறு அபரிமித காரணமில்லையேல் கூலி குரைந்துகொண்டே போகும். உழைப்பாளிகள் கைகளில் காலமில்லை. இராஜீய செலவாணிப்புரட்சிகள், தொழி லின் பல கிளைகளில் புதிய யந்திரங்களை திடீரென வைப் பது, ஒழுக்க மன்னியில் பொருள்களை விளைவிப்பது குறிப் பிட்ட திசையால் ஏராளமாய் குவிப்பது, சில நிலைகளில், முயற்சிகளில் தொழிலாளிகளை சமமன்னியில் பங்கிடுவது, இன்னம் தொழிலாளர்களை தடு மாட்டஞ் செய்யும் பல காரணங்கள் தொழிலாளியை இஷ்டம் போல் தன் நிலை யிலாக விடுவதில்லை. அத்தியாவசியமான தேவை, அல்லது கிடைக்கும் எந்தக் கூலி என்னும்படி இரு வழிகளே தொழிலாளிகளுக்குண்டு.

தொழிலாளர் கதி

நோயின் கிருமிகள் இந்நிலைகளிலேயுள்ளபடியால் இதை நீக்கவேண்டுமென நான் மறுபடியும் சொல்லுகி றேன். பொருளாதார அறிஞர் சொல்லும் மருந்தோ இதற்குப் பயனற்றதாகும்.

ஆயினும் நீங்கள் சேர்ந்துள்ள நிலை அபிவிருத்தி யையே யடைந்துள்ளது. எவ்வளவோ இடையூறுகளைக் கடந்து தொடர்ச்சியும் சரிதை சம்பந்தமான வளர்ச்சியை யும் அடைந்துள்ளதாகும். ஒரு காலத்தில் அடிமையா யிருந்தீர்கள், பிறகு சிற்றடிமை, இப்பொழுதோ கூலி சம்பாதிப்பவர்கள், அடிமை ஊழியனுயிருப்பதினின்று சுதந்திரமானீர்கள். கூலி என்னும் நுகத்தடியினின்று ஏன் கழன்று சுதந்திரமாய் பொருள்களை செய்பவர்களாக வும் நீங்கள் விளைவிக்கும் பொருள்களின் அதிபதியாகவு மாகக் கூடாது. அதன் அங்கத்தினர்களுடன் புனித கடமைகளை அடைந்துள்ள சமூகத்தின் உதவியுடன் உங் கள் முயற்சியால் சிறப்பான சிந்தனையையுடைய பெரியதும் மிக்க அழகுடையதுமான சாந்தமான புரட்சியை நீங்கள் ஏன் செய்யக் கூடாது? சகோதரத்துவத்திற்கு அடிப்படை யான பொருளாதாரம் தொழிலாளி, பூசொத்தின் பேரா தரவு உழைப்பின் பயன், என்னும் எண்ணங்களோடு புரட்சியைச் செய்து புசிப்பவர்க்கும் தோற்று விப்பவ ருக்கும் சமானமான ஒரு சட்டத்தின் கீழ் இவர்களைச் சேர்த்து யாதொரு விதமான வகுப்பு வேற்றுமையற்று, தொழிலாளிகளும் ஒருவர் மற்றொருவர் மேல் கொடுமை செய்யாமலிருக்க விளக்கி ஒரே தாயின் மக்கட்களைப் போலவும், நமது தேசமாகவும் செய்யவேண்டும்.

அபிவிருத்தி

குடியரசு பிரசாரத்தால் தொழிலாளிகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை மனிதர்கள் அதிகம் அறிவது மெச்சத்தக்கதே! இக்குணமானக் கருத்துகளெல்லாம்

எதிர்கால புரட்சியின் குணங்களைக் கழிப்பதற்கேயாகும். பிரஞ்சு நாட்டில் பெரும் புத்தியுடன் பலர் தோன்றியபோதிலும் அகம்பாவம் என்னும் அலைகளால் அடிக்கப்பட்டு அளவுக்கு அதிகமாகி அபரிமிதமான சித்தாந்தங்களை பரவச் செய்தார்கள். அவை பொருளாதார நிலைக்கு முற்றும் முரணாயிருந்தன. அதிக பூஸ்திதியுள்ளவர்கள் குடியரசில் சில நிலங்களைத் துறக்கவேண்டுமென அவர்கள் கர்ச்சித்ததால் இரு கட்சிகளுக்கு இடமாயிற்று. இப்பிளவால் எதிர்கட்சிக்கு வெற்றியேயாயிற்று.

அந்நாட்டிலேற்பட்ட ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் நான் விவரமாய்க் கூற விரும்பவில்லை. உற்சாக மயக்கத்தால் அவர்கள் ஓங்கியதால், செயல்கள் செய்யும் தருணத்தில் தவறிவிட்டார்கள். இவர்களை நீங்கள் நன்குகவனித்தால் அபிவிருத்திக்கு மாறான எத்துணை எண்ணங்கள் அவர்களிடமிருந்தது எனப் புலனாகும்.

சதாகால மாறுபாடாகி, வளர்ச்சியாகி படிப் படியாகவே அபிவிருத்தியானது அமையும். எந்தவித சட்டத்தாலும் அதை அமிழ்த்த முடியாது. இயல்பிலே ஆதாரமற்ற சில சமூக நிலை வழக்கங்களுக்கு பல காலங்களில், சில நாடுகளில் பட்சபாதமென்னும் பேராதரவினால் அவைகளைப் பெருமையாக்கியபோதிலும், அத்தவறுதலான அப்பழக்கமானது, சில காலங்கள் கழிந்த பிறகு, சில நாடுகளுக்கப்பால் பாழாகிவிடுகின்றது. நான் முதலில் சொல்லிய வண்ணம் உங்கள் ஆன்ம உணர்வை, எல்லா தேச வழக்க ஒழுக்கங்களுடன் இணைத்து மனித இயல்பிற்கு மாறுபட்டவைகளைக் கண்டு பிடித்து விடலாம். அவை சர்வஜன சமூகத்திற்கு சாதகந்தானா என்பதும் சிறப்பாகி

விடும். வாழ்க்கைக்கு அத்தியாவசியமென அறை கூவி அழைக்கும் மறைந்துள்ள இவ்வொலி, குறிக்கும் நோக்கங்களெல்லாம் காலங்களுக் கேற்றவாறு மாறி விருத்தியான போதிலும் ஒரு பொழுதும் அழிவதில்லை. வாழ்க்கைக்கு அவசியமான இப்பொருள்களில் மதம், சுதந்திரம் சமூகம் இன்னம் பலவற்றோடு பூஸ்திதியும் ஒன்றாகும்.

பூஸ்திதியின் நோக்கமும் மூலமும் மனித இயல்பிலேயே நிலைத்துள்ளன. அது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒரு பொருளாகும். அதை ஒவ்வொருவரும் காத்துக் கொள்வது கடமையாகும். மதத்தால், சாஸ்திரத்தால், சுதந்திரத்தால் மாறுபாடடைந்து வளர்ச்சி பெற்று ஒழுக்க அறிவுலகங்களை அடக்குவதற்கு ஒருவன் அழைக்கப்படுவதால், உழைப்பினால் பொன் பொருளை அடைவதற்கு மாறுபாட்டையும் விருத்தியையும் நோக்க அழைக்கப்படுவான். அந்நோக்கத்தை நிறைவேற்றிய குறிப்பே பூஸ்திதியாகும். இயல்பிலுள்ள வன்மைகளையெல்லாம் எவ்வளவுதூரம் ஒருவன் மாற்றி விருத்தி செய்து பயனுக்கு வளம்பெறச் செய்தான் என்பதைக் குறிக்கும்.

பூஸ்திதி

ஆதலால் பூஸ்திதி என்பது புற நோக்க மென்பது புலனாகும். ஜனசமுகத்தின் எக்காலத்திலும் எந்நிலையிலும் இது இருந்த தென்பதை நீங்கள் காண்பீர்கள். பூஸ்திதி எதனால் பெருமை யடைகிறது என்பது மனித வாழ்க்கையின் மற்ற வழக்கங்களைப் போல் மாறுபாடடைவதில் நிலைத்து வளர்ச்சி என்னும் சட்டத்திற்குக்

கிழ்ப்பட்டதாகும். இப்பொழுது நிலைத்துள்ள பூஸ்திதியின் நிலையையே புனிதமென எண்ணி அதை மாற்றுவதற்கு எதிர்ப்பவர்கள், வளர்ச்சியையே வேண்டாமென்று கூறுபவர்களாகும். பூவுலகச் சரிதைகளின் ஏதாவது இரு யுகங்களின் நிலைகளை கவனித்தால் இவை நன்கு விளங்கும். ஏதாவது ஒரு காலத்திலுள்ள பூஸ்திதியினலுண்டாகும் சில புன்மைகளை நோக்கி பூஸ்திதியை அடைவதென்பதையே அழிக்கவேண்டுமென பலர் மனித இயல்பையே மறப்பவர்களாகி, சீவன்களைச் சிதைத்து வளர்ச்சியைக் குன்றச் செய்பவராவர். பூஸ்திதி உடையதென்பதை அழித்தாலும் வேறு எவ்விதத்திலாவது அது தோன்றியே தீரும்.

அத்தியாயம் 20.

பூஸ்திதி—பொது உடைமைக் கொள்கை—தொழிலாளர் அடிமைகளா—ஆதிக்கம் வேண்டாம்—தொழிலாளர் கடமை.

இப்பொழுதுள்ள பூஸ்திதியானது சின்னபின்னமாய் நிலைத்துள்ளன. நவீனத்தில் அது வகுக்கப்பட்டபொழுது வெற்றியினாலேயே அது பிரிவினை செய்யப்பட்டது. படையெடுத்த பல ஜனங்கள் உழைப்பினல் தங்களுக்கு அருகதையற்ற நிலங்களை புராதனத்தால் துராக்கிரகத்தாலடைந்தார்கள். முதலாளி தொழிலாளிகள் உழைப்பின் பயனை சரிசமமாக பங்கிட்டுக்கொள்ளாததே இச்சீர்கெட்ட நிலைக்குக் காரணமாகும். மறுபடியும் இராஜீய

சட்ட சம்பந்தமான உரிமைகள் முதலாளிக்கு அளிக்கப்பட்டு தொழிலாளிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளதால், பல ஜனங்களுக்கு சந்தர்ப்பமன்னியில் சிலருக்கே யதேச்சாதிகாரத்தை நாளடைவில் நிலைக்கச் செய்வதால் பூஸ்திதி புன்மையாகவே நிலைக்கப்பட்டுள்ள வரி விதிக்கும் அமைப்புகள் சீரன்னியில் நிலைக்கப்படுவதால் பணம் பெருத்த முதலாளிகளுக்கு யதேச்சாதிகாரத்தை அவை விருத்திசெய்து ஏழைகளை அமிழ்த்தி அவர்களை பணம் சேகரிக்க முடியாமல் செய்வதால் பூஸ்திதி புன்மையிலே பதியப்பட்டுள்ளதென்பதாகும். ஆனால் தீமைகளைக் களைந்து மெதுவாய் அவைகளை எல்லாம் மாற்ற முயலாமல் ஒழிக்க வழி தேடுவது, பழங்களைப்பெற மரங்களையே வெட்டித் தள்ளும் பாமரர் போலாவார்கள்.

சிலரே பூஸ்திதியை அடைந்துள்ள இக்காலத்தில் அதை அடியோடு அழிப்பது அனாவசியம். ஆனால் பலர் பூஸ்திதியைப் பெறும் வழியைத் தேடவேண்டும்.

நியாயமான நோக்கத்தையே நாம் பின்பற்றவேண்டும். உழைப்பினாலேயே அதைத் தோன்றும்படி செய்ய வேண்டும்.

தொழிலாளிகளும் முதலாளிகளும் சரி சமமான பயனை அடைவதற்கேற்ற சமூகத்திலே திருஷ்டிவேண்டும்.

பிழைப்புக்கு அத்தியாவசியமாயுள்ள பூஸ்திதியின் வருமானத்திற்கு எந்த விதமான வரியிருந்தபோதிலும் அதை மாற்றிவிடவேண்டும். ஏழைகள் கொஞ்சம் கொஞ்சமாய் சேகரித்து பூஸ்திதியைப் பெறுவதற்கேற்றபடி சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டும். இதைச் சரிவர நிலவ

பூஸ்திதிக்காக ஏற்பட்ட எந்த உரிமையையும் நிராகரித்து சட்டஞ் செய்வதில் சகலருக்கும் சம்பந்தம் வேண்டும்.

இவைகளெல்லாம் சத்தியமாகும். நீங்களேயறிந்து கட்டுப்பாடாகி, விடா முயற்சியுடன் விளங்கி, அடைவதற்கு தீர்மானித்துக்கொண்டால் நீங்கள் அடைவீர்கள். பூஸ்திதியை அழிக்க முயலுவது அசாத்தியத்தை நாடுவதாகும். அங்ஙனம் அழைப்பது உழைப்பினால் சம்பாதித்தவர்களுக்கு அநீதிபுரிவதாகும். இதனால் வளர்ச்சிக்குப் பதிலாய் வீழ்ச்சியே விளங்கும்.

பூஸ்திதியை அடியோடு ஒழிப்பதே நிகரற்ற மருந்து என வகுப்புவாதிகளாலும் சமதர்ம கட்சிகளாலும் கூறப் படுகின்றன. அது மாத்திரமன்னியில் நவீனமாய் நிலவும் தர்ம சிந்தனையாலும், மதப் பிழைகளால் ஏற்பட்டுள்ள சர்க்கார் தோற்றத்தாலும், தேசீய திட்டங்களின் மாயையைக் கண்டு சகல மதங்கள் சகல அரசாங்கங்களுமான எல்லாத் தேசீய நிலையங்களையுமே தொலைக்கவேண்டுமென்கிறார்கள். இவை குழந்தைகளும் அறிவிலிகளும் சொல்வது போலாகும். அங்ஙனம் சொல்வதானது துர்க்கந்தத்தால் விளையும் தீமையைத் தொலைக்க எல்லாக் காற்றையும் தடுக்க முயலுவது போலாகும்.

சுதந்திரத்தின் பெயரால் கலக்கத்தை ஸ்தாபிதஞ் செய்து, சொந்த உரிமைகளைக் காக்க சமூகத்தைச் சின்னபின்னஞ் செய்பவர்களின் பிழைகளை நீங்களே, நான் சொல்லாமலறிவீர்கள். வளர்ச்சி, கடமைகள், சகோதரத்துவம், ஒற்றுமை, மற்றும் நானும் நீங்களும் மதிக்கும் மேன்மையானவைகளை மறைக்கச்செய்ய முயலும் கெட்ட நினவுகளை கழிக்கச் செய்வதிலே என் முழு வேலையும்

சிறப்பாகும், பொருளாதாரம் என்னும் பிரசினையால் சொந்த பூஸ்திதியை சிதைத்து, வகுப்புவாதத்தை விளங்கச் செய்பவர்கள் அபரிமிதமாகச் சென்று, தனி நபர்களையும் சுதந்திரத்தையும் மறுப்பதால் வளர்ச்சியின் வழியைத் தடுத்து சமூகத்தை அழுகச் செய்பவர்களாவார்கள்.

பொது உடைமைக்கோள்கை

பொது உடமைவாதத்தின் நோக்கங்களாவது சர்க்காரே, எல்லா நிலம், பொருள், இயந்திரம் கருவிகளையுமடைந்து, அவரவர்களுக் கேற்றவாறு வேலைகளையும் பொருள்களையு மளித்து சமமாகவோ அல்லது சந்தர்ப்பத்திற் கேற்றவாரோ யாவற்றையும் பயன்செய்வதாகும். இது நீர்நாய் வாழ்க்கையேயாகும்; மனிதர்கள் வாழ்க்கையானது இயந்திரம் போல் ஜனசமூகம் சிறப்பானல் சுதந்திரம், செல்வாக்கு மனச்சாட்சி யெல்லாம் மறைந்துவிடும். தேக சம்பந்தமாய் அது திருப்தியை அளித்தபோதிலும் அறிவு, ஒழுக்க வாழ்க்கை என்பது மறைந்துவிடும். அது மறைவதால் உற்சாகம், பொருளின்பம், சுதந்திர சங்கம், உற்பத்தியில் ஆர்வம், வளர்ச்சிக்குரிய சாதனங்களெல்லாம் சிதைந்துவிடும். அப்பொழுது ஆட்டுமந்தையைப் போல் கூட்டமாகவே ஜனங்களிருப்பார்கள். இத்தகைய அமைப்பை எவன் விரும்புவான்? சமத்துவம் சாசுவதமாய் விட்டதென்பார்கள், யாங்ஙனம்?

உழைப்பைச் சரி சமனக்குவதிலா? அது முடியாத காரியம். உழைப்பு எப்பொழுதும்போல பல வேற்றுமைகளையுடையது. அதைக் காலத்தினலும் அம்ளேவினலு கணக்கிட முடியாது. கஷ்டம், இஷ்டம் செலவு முதலிய

வைகளால் அவை நிர்மாணமாகி சமூகத்திற்கு அதனுல் விளையும் பயனுல் பெருமையாகும். கரிச் சுரங்கத்தில் ஒருமணி வேலையும், சேற்றில் தண்ணீர் இறைக்கவும் அதே கால வேலையையும், பஞ்சாலையில் செய்யும் ஒரு மணி வேலையுடன் ஒப்பிடலாமா? பலதிறம், குணம், வேற்றுமை, அறிவு முதலியவைகளுடன் கூடிய மனிதர்களின் வேலை யை ஒரே கால அளவில் நிர்ணயஞ்செய்வதின் அறியாமை யின் நிலையை என்னவென்று உரைப்பது? இவைகளால் பாரபட்சம் அதிகமாகிவிடும். சுலபமாயும் சிறப்பாகவும் கருதப்படும் ஒருவரின் வேலை மற்றவருக்குக் கடினமாயும் அசாத்தியமாகவுமிருக்கும். விளைபொருள்களை சரி பங் காகச் செய்து அளிப்பது இதுவும் இயலாது. இங்ஙன மளிப்பதும் ஆபத்தே. காலம், வன்மைகளுக் கேற்றவாறு அளிக்காமல் யோக்கியதை இயல்பிற்கேற்றவாறு குணஞ் செய்யாமல் பொருள்களை சமமாக அளிப்பது அநீதியா கும். அவசியத்திற்கேற்றவாறு பொருளை யளித்தபோதி லும் உழைப்பிற் கேற்றவாறு பொருளை யளிக்காத அநீதி அதிகமாகி பூஸ்திதியின் உரிமைகளை மறுப்பதாகும்.

அப்பொழுது ஒவ்வொருவரின் அவசியத்தை நிர் ணயஞ் செய்வது எவர்? சர்க்கார்!

தொழிலாளர் அடிமைகளா?

தொழிலாளிகளே! என் சகோதரர்களே! பொது சொத்துக்களின் அதிகாரிகளாக சில பிரபுக்களின் தலை வர்களின் கூட்டத்தை விரும்புகிறீர்களா? தன்னந்தனிக் கல்வியை உங்களுக் களிப்பதால் உங்கள் மனத்தின் தலை வர்களாக அவர்களாவார்கள். உங்கள் உழைப்பு வன்மை,

அவசியத்தை அவர்கள் நோக்குவதால் உங்கள் தேகங்களின் தலைவர்களுமாவார்கள். இது பழைய அடிமைத்தனத்திற்குத் திரும்புவதாகாதா? இவைகள் பல நாட்களுக்குப் பிறகு சுய லாபத்திற்குப் பயன் செய்யப்பட்டு ஆதிகாலத்திய பரம்பரை சாதி மறுபடியும் தோன்றிவிடாதா?

இல்லை, உழைப்பாளிகளுள் ஒருபொழுதும் சமத்துவம் எனப்படுவது சமத்தை நிலைக்கச் செய்யாது. நவீனத்திற் கவசியமான விளைபொருள்களையும் அது விருத்தி செய்யாது. சாதாரண மனிதனுக்கு, தனக்கு வேண்டுவது கிடைத்துவிடுமேயானல் அதிகத்துக்கு ஆசைப்படுவதில்லை. அப்பொழுது சிறந்த புருடர்களுக்கு மேன்மேல் செல்ல உற்சாகமாவதில்லை. புதியதாக கண்டுபிடிப்பதற்கும் புத்தி செல்லுவதில்லை. பொது சங்கத்தினல், நிலையும் அறிவுமற்ற கூட்டங்களின் குறிப்புக்களால் விருத்தியை அடைவதும் கடினம். பசியொன்றே இப்பொழுதுள்ள அபரிமிதமான எண்ணங்களுக்குக் காரணம் எனலாம். சமூக அமைப்பைக் கெடுக்காமல், அபிவிருத்தியை அழிக்காமல், தனி நபர்களின் சுதந்திரத்தைச் சிதைக்காமல், கொடூரமான அமைப்பின் அடிமையாக்காமல் தொழிலாளிகளின் நிலையை மாற்றி இன்பமான வாழ்க்கையைச் செய்ய முடியாதா?

பிரபஞ்ச முழுவதும் நிலைத்துள்ள சமூக அமைப்பிற்கு விரோதமாய், ஏதோ ஒருவன் மனதில் நினைத்த வண்ணம் யதேச்சாதிகாரம் நிறைந்த ஒரு சங்கத்தை நிர்மாணிப்பதாலேயே நிகழ்ச்சியிலுள்ள புன்மைகளுக்கு மருந்தாகாது. அதைத் திடீரென ஒரு சட்டத்தினலும்

நிறைவேற்ற முடியாது. ஜனங்களை சிருஷ்டி செய்வதற்காக நாம் ஏற்படவில்லை. அதை தொடர்ச்சி செய்யவேண்டியுதே நம்கடமை. இப்பொழுது நிலவும் அடிப்படையான சில நோக்கங்களை நாம் மாற்றுவதன்னியில் அவைகளை அமிழ்த்த முடியாது. அத்தகைய முயற்சிக்கு எப்பொழுதும் ஜன சமூகம் எதிர்க்கும். இம்மாயையில் காலத்தைக் கழிப்பது பயனற்றதேயாகும். அரசாங்கத்தினுல் கூலியை உயர்த்துவதினுலேயே நிலைமை மாறிவிடாது. அதற்கேற்றவாறு முதலையும் மேன்மையாக்க முயலவேண்டும். கூலியை உயர்த்துவதனுல் பொருள்களைச் செய்வதில் செலவு அதிகமாகி, விலை அதிகரித்து ஜனங்கள் குறைவாய் உபயோகஞ் செய்துகொள்வதால் தொழிலாளிகளின் வேலையும் குறைவாகும்.

ஆதிக்கம் வேண்டாம்

நிகழ்ச்சியில் முதலையும் உழைப்பையும் ஒன்றுசேர்த்து ஒற்றுமையுடன் காரியங்களைச் செய்வதே உய்யும் வழியாகும். உங்கள் முன்னிலையினின்று எளிமை என்பது அடியிற்கண்ட காரணங்களினுலேயே கழியும். விளையற் செய்பவன், உண்பவன் என்னும் வேற்றுமை யன்னியில் ஒவ்வொருவரும் விளையச் செய்பவராகவும், உண்பவராகவும் உதிக்கவே சமூகம் முயலவேண்டும். நடுவிலுள்ளதரகர்கள் தொலைவார்களே யானுல் குடியானவர்கள் பாதிக்கு அதிகமான இலாபத்தைப் பெறுவார்கள். கேள்வி முறையன்னியில் இஷ்டம்போல் ஏராளமாக தோற்றுவிக்கப்படும் முதலாளிகளின் யதேச்சாதிகாரத்தினின்று விடுதலையாவதே உங்களுக்கு மோட்சத்தை யளிக்கும்.

உங்கள் பொருளாதார ஒழுக்கங்களின் எதிர்கால நிலையைப்பற்றி நான் மொழியட்டும். உங்களைச் சுற்றி நோக்கவும். முதலும் உழைப்பும் ஒன்றாகச் சேர்ந்து, உழைப்பிற்கேற்றவாறு இலாபம் எங்கு அளிக்கப்படுகின்றதோ அங்கு ஏழ்மை குறைந்து ஒழுக்கமும் அதிகரிக்கும். ஸூரிச், ஸ்விட்ஜர்லாண்டு, நார்வே, பெல்ஜியம் முதலிய நாடுகளில் நிலம், முதல், உழைப்பு எல்லாம் ஒற்றுமையாய் கலந்துள்ளபடியால், ஐரோப்பாவின் குடியானவனுக்குச் சொந்தமில்லாத நிலங்களுள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும், ஐசுவரியங்கள் அதிகமாக நிலவுகின்றன. இந்நாடுகளில் கண்ணியமும், குணமும், நேர்மையும் நிறைந்த குடியானவர்கள் இருப்பது கண் கூடு. வியாபாரத்தில் பங்குகளை அடைந்துள்ள காரன்வால் சுரங்கக் காரர்களும், அமெரிக்க செம்படவர்களும் வெறும் கூலியே கதி என பிழைக்கும்* தொழிலாளிகளை விட மேன்மையான நிலையிலிருப்பதாக சர்க்கார் கெஜட்டுகளினின்று அறிகிறோம்.

வேலைகளுக் கேற்றவாறு விளை பொருள்களிலே ஒரு பாகத்தைப் பெறுவதும் தொழிலாளிகளின் நோக்கமாகும். நீங்கள் விடுதலையாகும் சூட்சமம் இந் நோக்கத்திலேயே நிறைந்துள. நீங்கள் ஒரு காலம் அடிமையாயிருந்தீர்கள். அப்பால் நிரந்தரக்கூலிகள்; பிறகு கூலிக்குப் பிழைப்பவர்கள்; இனி சுதந்திர உழைப்பாளிகளாகவும், சமூகத்தின் சகோதரர்களாகவு மாவீர்கள்!

புற அதிகாரத்தால் வற்புறுத்தி, நிலையாகிய அன்பு ஆதாரவற்று, இயந்திரம் போல் நிகழும் சமூகமாயில்லாமல் பரஸ்பர அன்பால் மரியாதையுடன் சுதந்திரமாக உங்க

ளிஷ்டம் போல் நிர்மாணிக்கப்படும் சமூகங்களே வேண்டும்.

தொழிலாளர் கடமை

உங்கள் பிரதிநிதிகளால் குடியரசு சகோதர உணர்வுடன் சங்கங்கள் நடை பெறவேண்டும். இஷ்டமானால் நீங்கள் விலகவும், உங்களுக்கு உரிமை வேண்டும். உங்கள் அவசியத்திற்கும், இஷ்டத்திற்கும் மாருக உள்ள யதேச்சாதிகார சர்க்கார் சட்ட திட்டங்களுக்கும் உட்படலாகாது.

ஒவ்வொரு வகை தொழில்களுக்கும் உங்கள் நிலைகளுக் கேற்றவாறு தனித்தனி சங்கங்களாக அமையவேண்டும். உங்கள் அதிகாரிகளின் இஷ்டம்போல் அமைக்கப்படலாகாது.

சர்க்கார் அமைப்பில் எல்லோரும் ஒரு நிலையத்தில் சேர்வதும், ஒரே சமூகத்தில் யாவரும் ஒன்ருகக்கூடுவதும் பழைய யதேச்சாதிகார குரூரத்தன்மைக்கு இட மளிப்பதாகும். அதனல் வாங்குபவனுக்கு விலை அதிகமாக சந்தர்ப்ப மேற்பட்டு, சிறுபான்மையோர் அமிழ்த்தப்பட அதிகார மளிப்பதாகும். மறுபடியும் அதனல் அதிருப்தியுள்ள தொழிலாளிக்கு வேலை யன்னியிலாகி, போட்டி என்பது பிரிந்து அபிவிருத்தி யெல்லாம் விலகி புதியதாய்க்கண்டு பிடிக்கப்பட்ட ஊக்கமெல்லாம் ஒழியும்.

கடந்த 20 வருஷங்களில் அச்சமுடன், அசந்தர்ப்ப மான நிலையிலும், பிரான்சு, இங்கிலாந்து, பெல்ஜியத்தில் சங்கங்களை நிர்மாணஞ் செய்ய முயற்சி செய்யப்பட்டன. ஊக்கம், உற்சாகம் தியாகத்துடன் செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் அவை ஜெயத்தையே அளித்தது எனலாம்.

சமூகமெல்லாம் மாறுவதற்கான மர்மங்களெல்லாம் இச் சங்கங்களிலேயே சாய்ந்துள்ளன. இதை எல்லாம் அடைந்துள்ள நீங்கள் முதன் முதலாக இத்தாலியிலே இதை நிர்மாணஞ் செய்யவேண்டும். இம்மாறுதலானது அடிமைக்கூலி நிலையினின்று உங்களை அகற்றி, விளை பொருள்களிலே விடுதலையை அளித்து, எல்லா வகுப்பினர்களுக்கும் ஆதாயமாகி, நாட்டின் பொருளாதார நிலையையே மாற்றி விடும். வேலையினின்று பிறகு நிரந்தரமாய் விலக எத்துணை செல்வம் சேர்க்க முடியுமோ, அத்துணை சேகரிப்பதே முதலாளிகளின் கடமை என நிகழும் அமைப்பில் காண்கின்றோம். ஆனால் சங்கங்கள் நிர்மாணிக்கப் பட்டால், நிரந்தரமாய் வேலை இருக்க வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும். நிகழ்ச்சியில் முதலாளிகளின் தலைவன் பண மொன்றைத் தவிர வேறு எவ்விதமான யோக்கியதையையும் யடைந்துள்ளதாக நாம் அறியவில்லை. கடூரம், கொடுமை, முதலிய குறைகளைத் தவிர வேறு எக்குணங்கள் அவனிடமுண்டு. பிரதிநிதிகளால் பரிபாலனஞ் செய்யப்பட்டு, அங்கத்தினர்களால் கவனிக்கப்படும் சங்கங்களில் இக்குறைகளிராது அவசியமானவைகளை அகற்றி, அனுவசியங்களை அதிகரிப்பதிலேயே தொழிலாளிகள் தோய்ந்துளார்கள். ஆதலால் கூலியிலேயே சில இடங்களில் அநியாயமாயும் நிலையற்றதாகவும் நிகழும் திட்டமான கூலி ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால் அவன் உற்சாகங்களை யெல்லாம் தூண்டுவதற்கு ஊக்கம் எங்கிருந்து தோன்றும்? நிலையற்று நேர்மை குறைந்த விளைபொருள்களின் குணக்கேடுகளை சங்கங்கள் நீக்குமென இவைகளிலிருந்து நிதர்சனமாகும்.

அத்தியாயம் 21.

சங்க அமைப்பு—முயற்சி திருவினையாக்கும்.

சங்க அமைப்பு

சங்கத்திற்குக் கேடன்னியில் இஷ்டம்போல் விலகவும், குறிப்பிட்ட காலத்திற்கு அதிகார அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திரமும்; சங்கத்தில் சேர சுதந்திரமும் கடையில் முதற் பொருளன்னியில் சபையில் சேர உரிமையும், உழைப்பினால் இலாபத்தினின்று வருஷந்தோறும் பொது பொருளுக்கு முதலையளிக்க சுதந்திரமும், பொதுப் பொருளை நிரந்தரமாக்கி ஒரு பொழுதும் சின்னா பின்னஞ் செய்ய இயலாத நியமமும், அவரவர்களுடைய உழைப்பிற்குத் தகுந்தவண்ணம் சாமான்களை அளிப்பதுமே உங்கள் சங்கங்களின் நோக்கமாக வேண்டும். உங்கள் சமூகத்திற்கு எதிர்கால நன்மையைக் கோரினால், இச்சங்கங்களை நிர்மாணஞ்செய்ய நிகழ்ச்சியில் தன்னலமற்ற தியாகச் செயல்கள் வேண்டும்.

நாம் சொன்ன ஒவ்வொரு நோக்கமும் முதன்மையாக பொதுப் பொருளை நிரந்தரமாக நிலைக்கச் செய்யும் நியமங்களால், நீங்கள் விடுதலையாவீர்கள் என்னும் நிலையான நினைவும், எதிர்காலத்தில் நீங்கள் எங்ஙனம் இணைக்கப் பட்டீர்கள் என்பதையும் விளக்க ஒரு தனி அத்தியாயமே வேண்டும். ஆனால் தொழிலாளிகளின் சங்கங்களைப்பற்றி தனிமையாய் இப்பொழுது விளக்கவேண்டுமென என்

நோக்கமில்லை. நான் ஜீவிக்க இன்னம் சில வருஷங்களை எனக்கு ஈசனருளுவானேயானால், உங்களிடமுள்ள ஆசையினால் அதைப்பற்றி தன்னந் தனிமையாய் ஒரு நூல் எழுதுவேன். இதுவரை நான் எழுதிய தெல்லாம் ஆழ்ந்து அமைதியாய் கற்றதின் பயனே என அறிந்து ஒவ்வொன்றையும் கவனமாய் நோக்கவேண்டுமென விரும்புகிறேன்.

சங்கங்களை ஸ்தாபிக்க முதற்பொருளுக்கு என்ன செய்வது?

இவ்வினாவிற்குப் பதில் அளிப்பதே கடினம். என்னிஷ்டம் போல் விடையளிக்க இது தருணமில்லை. ஆனால் உங்களின் கடமைகளையும், மற்றவர்களின் கடமைகளையுமே இங்கு கூறுகிறேன்.

பொருள்களின் ஆதிமூலத்தை நாடினால் அது நீங்கள், நீங்கள் சேகரிக்கும் பொருள், உங்கள் தியாகம் எனவே புலனாகும். உங்களில் பெரும்பான்மையோரின் நிலைமையை நானறிவேன். உங்களில் சற்று அதிகமாக சம்பளம் வாங்கும் பத்துப்பதினைந்து நபர்கள் ஒன்றுசேர்ந்து வெகு ஜாக்கிரதையுடன் கொஞ்சம் பணம் சேகரித்து உங்கள் பொறுப்பிலேயே சிறிய சங்கமொன்றை சேகரிக்கவேண்டும். ஏதோ புனித கடமை செய்வதாவும், உங்கள் விடுதலைக்கே என்னும் எண்ணமும் செட்டாய் செலவழித்தாலும் சுகமாயிருப்பதாகவே சிந்தனையிலாக்கவேண்டும். சில தொழிலாளிகள் தினந்தோறும் ஒரு அணா சந்தா செலுத்தி, பொருளாதாரத்தில் பெரும் பிரக்யாதியை யடைந்துள்ள பல சங்கங்களை இங்கிலாந்தில் நான் காண்பிப்பேன். ஏராளமான முதற்பொருளை நிகழ்ச்சியில் அடைந்து பல வருடங்களுக்குமுன் பெரும் தியாகங்களைச்

செய்த பிரஞ்சு தொழிலாளர் கூட்டங்களைப்பற்றி நான் பல கதைகள் கூறலாம்.

1848-ம் வருஷத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் சார்பாக தொழிலொன்றை நடத்த இதாலியிலே சர்க்காரை மூன்று லட்சம் ரூபா கடன் வேண்டுமென விரும்பிக்கேட்டார்கள். சர்க்காரோ அளிக்கவில்லை. ஆனால் 14 தொழிலாளர்கள் ஒன்றாக சேர்ந்து அரைக் கஞ்சியைக் குடித்து, பல நாட்கள் ஒரே எண்ணத்துடன் ஒன்று சேர்ந்து, தொழிலை யாரம்பித்து, இரவும் பகலும் கஷ்டப்படவே சில வருடங்களுக்குள் மூன்று லட்சம் இலாபத்தை அடைந்தார்கள். இச்சங்கம் நாளொரு பொருளுடன் பொழுதொரு பெருமையாய் அபிவிருத்தியாகின்றது கண்கூடு.

முயற்சி திருவினையாக்கும்

விடா சங்கற்பம் இருந்து நன்மை செய்வேன் என நிலையான நினைவு நிலவுமானால், சாத்தியமாகாத செயலே இல்லை. உங்கள் சிறிய தொகையினாலோ, கருவியினாலோ, உழைப்பினாலோ நீங்கள் ஒவ்வொரு சங்கத்திற்கு உதவி புரியலாம். நம்பிக்கையை நீங்கள் ஸ்தாபனம் செய்துவிட்டீர்களே யானால், வட்டியன்னியில் பொருளை நண்பர்களிடமிருந்தோ, தொழிலாளர்களிடமிருந்தோ பெறலாம். எத்துணையோ தொழில்களுக்கு அதிகமுதல் அவசியமே இல்லை. பிடிவாதமிருந்தால் ஜயத்தை அடைவதில் கஷ்டமே இல்லை. உங்களுடைய முயற்சியினாலேயே, உங்கள் நாணயத்தினாலேயே, நீங்கள் சிறிய முதற்பொருளை சேகரிப்பது உங்களுக்கு எல்லையில்லா நன்மையை யளிக்கும். தங்கள்

இரத்தத்தினாலேயே சுதந்திரத்தை பெற்றவர்கள் நெடுநாள் யனுபவிப்பதுபோல், கஷ்டத்துடன் செட்டுஞ் சீருமாய் பொருளை யடைந்த சங்கங்கள் மிகுதியான இலாபத்துடன் பொருளை யதிகரிக்கச் செய்வார்கள். இதுவே இயல்பு. பாரிஸ் நகரிலே சர்க்கார் உதவியினால் ஸ்தாபிக்கப்பட்ட பலசங்கங்களைக் காட்டிலும் தன்னந்தானாகவே தலையோங்கிய சங்கங்களே அதிகமான அபிவிருத்தியை அடைந்தன.

நீங்கள் தியாகஞ் செய்யவேண்டுமென நான் உங்களிடம் சொல்வது எனது அன்பினாலேயேயாகும். முகஸ்துதி செய்பவனா யிருந்தால் உங்கள் குறைகளை நான் கூறியிரேன். உங்கள் குறைகளைச் சொல்வதால் மற்றவர்களின் கடமைகளை நான் குறைக்கிறேன் என கனவிலும் கருதவேண்டாம். இயல்பாகவே பொருளை யடைந்தவர்கள் இதை அறியவேண்டும். விடுதலை என்பது விமலனின் நோக்கமென அவர்கள் விளக்கவேண்டும். அவர்களுடனோ அவர்களுக்கு மாறாகவோ அது நிச்சயமாக நிலவுமென் பதை நினைவிலாக்க வேண்டும். குடியரசு என்னும் கருத்தில் கனிந்தவர்கள் இதை நன்றாய் அறிவதால், உங்கள் மனம் பூர்வமான எண்ணத்தையும் பிடிவாதத்தையும் அவர்களுக்கு விளக்கினால் உதவியைப் பெறுவீர்கள். மயான வைராக்கியம் போல் சில நாளில்கூட உங்களுக்கு சங்கற்பமில்லை என அறிந்து நீங்கள்யாவரும் ஏகோபித்து பிடிவாதத்துடனிருப்பதாக அவர்கள் கண்டுகொண்டால், உங்களுக்குத் தேவையான பொருளையும், சாமக்கிரியைகளையும் அளிப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. எதிர்கால பாங்கிகள் ஜனங்களின் பாங்கிகள் என பெல்ஜியத்திலே லேவாதேவி செய்யும் பல உண்டியல்

கடைகளைக் காணலாம். ஸ்காட்லாந்திலே, மனிதரின் மொழிகளை நம்பியும், நண்பர்களின் வார்த்தைகளை மதித்தும் ஏராளமான பொருள் கடனளிக்கின்றார்கள். தொழிலாளிகளுக்கு லாபத்தில் பாகமளிப்பதால் அதிக பயன் புலனாகின்ற தென்பதை யறிந்து முதலாளிகளும் இவ்வழக்கத்தைக் கையாளுகின்றார்கள்.

அத்தியாயம் 22.

வேண்டுகோள்—போலிகளை நம்பாதீர்கள்—புனிதவாழ்க்கை—ஒற்றுமையாலேயே விடுதலை.

சர்க்கார், ஆட்சி என்பது கல்வி அபிவிருத்தி என்னும் நோக்கத்திலேயே நிலைத்துள்ளது. ஆனால் இன்னம் இதுவரை ஜனங்கள் இவைகளை அறியவில்லை. இது உங்களுக்குப் புனிதமானக் கடனொன்றை செய்ய கடமைப்பட்டுள்ளது. சுதந்திரமும், ஐக்கியமான ஜனங்களின் சத்தியமான தேசிய சர்க்காராயிருந்தால் இக்கடனை யெல்லாம் சுலபமாய் நிறைவேற்றும். அத்தகைய தேசிய சர்க்காரானது துராக்கிருதமன்னியில் ஜனங்கள் சம்பாதித்த பொருள்களில் கைவைக்காமல், நிகழ்ச்சியிலே பிரஞ்சு நாட்டை நாசஞ்செய்யும் அநீதி அக்கிரமத்தை வளர்ச்சியாக்கும் வகுப்புப் போர்களை வளர்ச்சி செய்யாமல் பல சமூக பிரசினைகளை தீர்த்து மகா ஜனங்களுக்குப் பலவிதமான பேருதவிகளைச் செய்யும்.

அடியிற் கண்ட வழிகளில் வன்மையுடன் உதவியைப் பெறலாம்.

ஜனப்பிரதிநிதி சபைகளில் சங்கங்களின் அடிப்படை யான நோக்கங்களை விவாதிப்பது, இத்தகைய ஜனங்கள் செழித்தோங்க சட்டங்களைச் செய்வது முதலிய நற்காரி யங்களைச் செய்யவேண்டும்.

போக்கு வரவு சாதனங்களை விருத்தி செய்து அதற் கான யிடையூறுகளை யெல்லாம் அறுக்கவேண்டும்.

ஏராளமான விளைபொருள்களை அடைந்திருந்தால், அதை ஈடாக அடைந்து பொருள் வேண்டுமானால் ஜனங் களுக்குக் கடன் அளிக்கவேண்டும்.

தனி நபர்களின் நாணயத்திற்கு உதவி புரிவதுபோல் சங்கங்களுக்கும் ஆதரவளிக்கவேண்டும்.

ஏழைகளுக்கு முடியாமல், அல்லது அவர்களை நாசஞ் செய்ய நிகழும் நீதிஸ்தல ஏற்பாடுகளெல்லாம் சுலபமாய் சுருக்கமாகவேண்டும்.

விற்று நிலம் வாங்குவதில் சுலபமான சட்ட திட்டங் கள் வேண்டும்.

நேராகவும், பின்புறமாகவுமுள்ள வரியின் விபரீதங்க ளெல்லாம் அடியோடு விலக்கப்படவேண்டும். ஜீவன் என் பது புனிதப் பொருளாகும். ஜீவன் சரீரத்துடன் இணைவ தற்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களுக்கு அதிக மானு லொழிய வரி என்பதே கூடாது. ஜீவன் அன்னி யில் செயலோ கஷ்டம், அபிவிருத்தியும், கடமைகளைச் செய்வதும் கஷ்டமாவதால் ஜீவனுக்கு மிகுதியானு லொழிய வரி என்பதையே விட்டுவிட வேண்டும்.

இதற்கு வேறு வழிகளுண்டு. கல்வியும், வளர்ச்சியும் நோக்கமென நாடிவிட்டால் தேவஸ்தானத்தின் ஏராள மான பொருள்களும் சர்க்காருக்கு உதவியாகும். பயிரிடா

ம்லுள்ள பாழான நிலங்களைப் பெருமைப்படுத்தி அதனால் புலனாகும் பொருள்களுடன், ரயில் போக்கு வரவு சாதனங்களால் சேரும் பணத்தையும் அனாதிகளின் ஆஸ்திகளையும், இன்னும் வேறு பல வகையில் சேரும் பணங்களையெல்லாம் ஒன்று திரட்டி தேசிய பொக்கிஷ மொன்றைத் திகழச் செய்தால், நாட்டின் கல்வி, பொருளாதார விருத்திக்கு எத்துணை சாதகமாகும்? சும்மா யிருக்கும் இப்பொருள்களை யெல்லாம் ஒன்றுசேர்த்து, வீணாகாம லிருப்பதற்கு ஒரு வழியைத் தேடி, மேற் கூறிய சங்கங்களுக்கு சொற்ப வட்டியில் கடனளித்தால் நாட்டிற்கு அதனால் நிலவும் நன்மையைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? முதற் பொருள் என்பது நிகழும் தலைமுறைக்கு மாத்திரமன்னியில் எதிர்காலத்திற்கும் அது ஒரு பெரிய ஆதரவாகும். பெரும் திரளாய் இங்ஙனம் செயல் செய்வதால் அடிக்கடி யுண்டாகும் எதிர் பாராத பல கஷ்டங்களும் புலனாகாது.

கடனை, சர்க்காரும் தேசிய பாங்கியும் நேராக யளித்தல் கூடாது. ஜனங்கள் பிரதிநிதிகளை யடைந்துள்ள உள்ளூர் பாங்கிகளினாலேயே கடனளிக்கப்பட வேண்டும். பல வகுப்புககளின் பொருளைக் குறைக்காமல் சர்வஜனங்களிடம் வசூலிக்கப்படும் வரிப்பணத்தை ஒரு சமூகமே சுவாதீனஞ் செய்து கொள்ளாமல் மேற் சொன்ன வழிகளில் யாவருக்குமே உதவியாகும் வண்ணஞ் செய்யவேண்டும். நாணயத்தை அபிவிருத்தியாக்கி, வளர்ச்சியை நானாவழிகளிலும் செய்து, வட்டியைக் குறைத்து, ஊக்கத்தைப் பெருக்கி, நிரந்தரமான உழைப்பை ஸ்தாபித்து, சகலரும் சம்பத்தை அடையும்படிச் செய்வதே, தொழிலாளிகளான

உங்கள் நோக்கமாகும். நீங்கள் இதைத் துரிதமாக்கலாம். உங்கள் தேயத்தை வெற்றி பெறச் செய்யுங்கள். ஜனங்களின் சேர்ந்த வாழ்க்கை, சந்தேசம், சிந்தனையைச் சிறப்பிக்கும் ஜனநாயக சர்க்காரை ஸ்தாபியுங்கள். சிலர் சேர்ந்த சங்கமாயிராமல் கோடிக்கணக்கான ஜனங்களின் சத்தம் நிறைந்த புவியின் மகாஜன சபையாக ஸ்தாபனஞ் செய்யுங்கள். சத்தியமும் நீதியும் உங்கள் பக்கமாகில் தேசம் உங்களுக்குச் செவி கொடுக்கும்.

போலிகளை நம்பாதீர்கள்

ஆனால் ஜாக்கிரதை! ஐரோப்பா நிகழ்ச்சிகளின்முறைகளை முப்பது வருட காலம் கற்றவன் கூறுவதை நம்புங்கள். ஜனங்களின் ஒழுக்கக்குறைவால் தவபெருங்காலத்தில் புனிதமும் பயனுமுள்ள முயற்சிகள் பாழாவதை பார்த்தவனின் மொழியை நம்புங்கள். நீங்கள் மேன்மையாகாமல் வெற்றியை அடையப்போவதில்லை. தியாகம், முயற்சி, அன்பு வழியாகவுள்ள யோக்கியதையை நீங்கள் அடைந்தாலொழிய உரிமைகளை ஜெயிக்கப்போவதில்லை. கடமையை நிறைவேற்ற வேண்டுமென்னும் எண்ணத்தால் நீங்கள் அதை நாடினல் பெறுவீர்கள். நானென்னும் நினைவினலோ, நன்மை என கற்பிக்கப் பட்டதாலோ நீங்கள் அதை நாடினல் நிரந்தரமற்ற ஜெயத்தை அடைந்து திடீரென திகைப்பை அடைவீர்கள். நலமுடனிருப்பாய் பொருள்களை அடைவாய் எனப் புகல்பவர்கள் காட்டிக் கொடுப்பவர்கள் என அறியவும். உங்களுக்கு இடையூறுசெய்ய சுய நலக்காரர்கள் சேர்ந்து, சுய நலம் பெற்றவுடன் தனிமையாவார்கள். இதுதான் கடந்த

அரை நூற்றாண்டின் சரிதையாகும். இதையே இன்பத்தை நாடிய அரை நூற்றாண்டு எனலாம்.

உபத்திரவமும் உதிரமும் தோய்ந்த சரிதையேயாகும் இது. கடவுள், தர்மம், கடமையின் குணங்கள் தியாகம். முதலியவைகளை வெறுத்து, இன்பம் சுகம் உரிமை என்னும் மொழிகளை மொழிந்து, ஜனங்கள் சுதந்திரம் என்னும் சொற்களை வீரத்துடன் வாய்ச்சண்டைசெய்து, புதிய நோக்க முள்ளவர்களுடன் கலந்து கவனமன்னியில் சேர்க்கப்படும் பலரை நான் கண்டுளேன். ஜெயத்தாலோ குறுகிய சமாதானத்தாலோ, அவர்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தவுடன், இன்பம் தங்கள் சுகத்தை நாடியவுடன் நம்மைவிட்டு மறுதினம் நமது சத்துருக்களாய் விடுவார்கள். சில விபத்தான வருஷங்களும் கஷ்டங்களும் அவர்களைக் களைப்பிலாக்கிவிடும். கடமையின் கட்டளை யறியாமல் சர்வேசனால் ஸ்தாபிக்கப்பட்ட சந்தேகத்தில் சிரத்தையற்றிருப்பவன், வாழ் நாள் முடிவுவரை தியாகத்திலேயே ஏன் திணரவேண்டும்? முட்டாள் தனத்தில் மயக்கமாகி, குரூரத் துவத்தின் குணம் கருத்திலே கொண்டு சுகத்தை நாடுபவர்கள் இத்தகைய கற்பனைகளில் கனிந்தபடியால் தங்கள் நோக்கத்திற்கு மாறாகவும், எதிர்காலத்திற்கு விரோதமாகவும், தேசத்திற்கும் தங்களுக்கும் பொய்யாகப் போகும் தேச மக்களை நான் பார்த்துளேன். டிசம்பர் மாதம் இரண்டாந்தேதி கவனமன்னியில் தொழிலாளிகளுடன் உணர் வன்னியில் நின்று வேடிக்கை பார்த்த பிரஞ்சு ஜனங்களைக் கண்டுளேன். அவர்கள் அதை இன்பமாக நாடியபடியால் அவர்கள் வாக்குறுதியையே நம்பி யிருந்தார்கள். சுதந்திரத்தைப் புதைத்த

வர்கள் மறுபடியும் அளிப்பார்கள் என கனவு கண்டார்கள். இன்றும் இழந்த சுதந்திரத்திற்காக, ஜனங்கள் தவிக்கிறார்கள். நலமான வாழ்க்கையை இன்னும் அடையவில்லை. இல்லவே இல்லை! மனப்பூர்வமான எண்ண மன்னியிலும், ஈசனன்னியிலும் அவன் சட்டத்திலே சிந்தனையன்னியிலும் ஒழுக்கம் தியாகமன்னியிலும், சிரத்தை, சத்தியோபாசனை, புனிதவாழ்க்கை, அகம் அகன்றவன் இவர்களிடமிருந்து நீங்காமலும் ஒரு பொழுதும் நீங்கள் ஜயத்தை அடைய இயலாது. நீங்கள் மாறுதலைக் கொண்டு வரலாம். நானும் நீங்களும் நாடும் உண்மையான பெரும் சத்தியப்புரட்சியை கொண்டு வருவது கடினம். அகம் பாவம் அகன்று, பழிக்குப்பழியான புத்தியினின்று பிரிந்து, புரட்சி புலனாகவேண்டுமேயானால் அது தர்மத்தின் செயலாகவே கருதவேண்டும்

ஒவ்வொரு சீர்திருத்தத்தின், சமூகமாறுதலின் முதன்மையும் முக்கியமான நோக்கம் உங்களையும் மற்றவர்களையும் மேன்மையாக்குவதே. ஆன்மா சூன்யமாகில் அடிமையின் காயமே புலனாகும். இப்பழம்வீட்டை வெள்ளை பூசுவதாலும் அலங்கரிப்பதாலும் மனிதவாழ்க்கை மாறிவிடாது. எல்லா திருத்தங்களும் பயனற்றதே. அலங்காரமும் அழகும் அமைந்த வீடு வெண்மையாய் விளங்கும் கல்லறையைத் தவிர வேறு இல்லை. சங்கத்தை நிகழ்ச்சியிலுள்ள மற்றவைகளின் நிலைகளில் ஸ்தாபனஞ் செய்ய வேண்டுமானால் உங்கள் சங்கத்தால் ஆதாயமாகுமென்பதை நிரூபிக்கவேண்டும். சத்தியம், பரஸ்பரப்ரீதி, தியாகவன்மை, உழைப்பிலே அன்பு முதலியவைகளால் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்து நிலைக்கச் செய்யலா

மென்பதை உங்கள் யோக்கியதையால் நிரூபணஞ் செய்ய வேண்டும். வளர்ச்சியை அடைய வளர்ச்சியாகும் வன்மையை நீங்கள் விளக்கவேண்டும்.

புனித வாழ்கை

வழக்கம், வளர்ச்சி சங்கம் என்னும் இப்பொருள்கள் புனிதமாகும். இருபது வருடங்கள் முன் நான் எழுதியதாவது—சர்வஜன வழக்கமெனப்படும் கற்பனை வழியாய் கடவுள் பல நூற்றாண்டுகளின் வழியாய் தன் கருத்தையறிவிக்கின்றார். மனிதனானவன் பொதுநலத்திற்காக குடும்பம், நாடு, தேசம் என்னும் மூன்று நிலைகளிலே உழைக்க வேண்டும். அதனால் அவனும் அன்னியர்களும் புனிதமாவார்கள். இவனால் மற்றவனும், மற்றவனால் இவனும் புனிதமாவான். பூஸ்திதி என்பது பொருள் அபிவிருத்தியைப் புலனாக்கும். இராஜீய உலகத்தில் அவன் உரிமையையும் புலனாக்கும். இவ் வுரிமையை பயன் செய்வதால் ஈசன் முன்னணியில் எத்துணை யோக்கியதையை ஒருவன் அடைந்துள்ளான் என்பதைக் காட்டுவான். இவைகளெல்லாம் நாள் செல்லச்செல்ல மாறுதலும் திருத்திக் கொண்டே போகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் நோக்கங்கள் என்பதோ அழியாது. அதைக் காண்பதும் கஷ்டம். தனி மனிதன் அழிந்து எல்லோரும் சகோதரர்களாக குடும்பம்போல் வாழ்வோ மென்பதை நிச்சயமாகக் கருத்தில் எண்ணவும், நிரந்தரமான வளர்ச்சி, நினைவு செயல்களில் அபிவிருத்தி, புராதன மேன்மையிலே நம்பிக்கையில்லாமல் எதிர்காலத்திலும் சிறப்பை நோக்குவது இவை எல்லாம் என் நம்பிக்கை. வளர்ச்சியின் நிலை எங்

னமெனக் குறிப்பிட நான் கருதவில்லையாயினும் மதக் கல்வியின் வழியாய் வளர்ச்சியின் ஒவ்வொரு பாதையை யுட் விளக்கவும் அறிவிக்கவுமே விரும்புகிறேன். இன்ப மெனச் சொல்லப்படும் தூல மகிழ்ச்சியே துரியவாழ்க்கை எனவும், அதனாலேயே மேன்மை வாழ்க்கையை அடை வான் எனவும் நான் நினைக்கவில்லை. வளர்ச்சியை அடைய சங்கமொன்றே என நான் எண்ணுகிறேன். விளைபொருள் களை அது விஸ்தாரஞ் செய்வதன்னியில் மனிதர்களை யெல் லாம் திரட்டி ஐக்கியமான வாழ்க்கையில் தனி நபர்களை திக ழச் செய்யும். சுதந்திர புருஷர்களுடைய சேர்க்கையன்னி யில், நோக்கங்களை நிறைவேற்றும் புருஷர்களிட மன்னி யில் சங்கம் செம்மையாகாதென்பதை நானறிவேன். நாளெல்லாம் உழைப்பிலே செலுத்தாமல் உண்டு உல்லா சமா யிருப்பதற்குக் காலம் வேண்டும். கல்வியை விருத்தி செய்யவும் போதுமான சமயமும் வேண்டும். மனிதன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும். சுக வாழ்க்கையே அவன் உரிமை எனச் சொல்லும் கடூர மொழிகள் என் காதில் வீழ்கின்றது. இத்தகைய நினைவு கள் அகங்காரங்களையே விருத்திசெய்யும் பிரஞ்சு நாட் டைப்போல் ஊக்கம், உற்சாகம், தியாக நினைவு, பெரு வாழ்க்கையின் ஆதாரவான இவைகளை யெல்லாம் அது அழித்துவிடும்.

மனித சமூகத்தை அடியோடு அழிப்பது பொது வான சிரத்தை சூன்ய மெனலாம். சிரத்தை என்னும் நம்பிக்கையே சகத்தையும் சுவர்க்கத்தையும் ஒன்றாக்கி பிரபஞ்சத்தையும் பரமனையும் இணைக்கும். இப்பொது வான நம்பிக்கையினின்று நழுவி மனிதர்கள் சீவனற்ற

சடத்திலே சாய்ந்துளார்கள். தந்நலம் என்னும் தேவனை உபாசனை செய்கிறார்கள். இவ்விபத்தான உபாசனையின் புரோகிதர்களே அரசர்கள், இராஜாக்கள், கடும் சர்க்கார்களாகும். ஒவ்வொருவனும் அவனவனுக்கே என்னும் கடும் நியமத்தை ஸ்தாபித்தவர்களும் இவர்களே. இப்படித் தான் தந்நலத்தை ஸ்தாபிக்கலாமென அவர்கள் எண்ணினார்கள்போலும்! தந்நலமுள்ளவர்களுக்கும் அடிமைகளுக்கும் மயிரிழையே வேற்றுமை.

ஒற்றுமையாலேயே விடுதலை.

இதாலியத் தொழிலாளிகளே! சகோதரர்களே! இதை அடைவதினாலேயே உங்கள் எதிர்காலம் நிலைக்கும்.

உங்கள் நோக்கம் புனிதமாகும். நாம் யாவரும் சகோதரர்களே, சர்வேசனின் மக்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். நீங்களே மேன்மையாகி கடமைகளை நிறைவேற்றுவதே நீங்கள் இதை பரிபூரணஞ் செய்வதாம்.

எனது எல்லா வன்மையுடன் உங்கள்கடமை என்னவென்பதை விளக்கிவிட்டேன். இதில் முதன்மையும் முக்கியமான கடமை உங்கள் தேசத்திற்கேயாகும். தேசத்திலே ஐக்கியத்தையும் சுதந்திரத்தையும் ஸ்தாபிப்பது உங்கள்கடமை; அது அவசியமுமாகும். நான் சொல்லிய ஆதரவுகளையும் சாதனங்களையும், சுதந்திரமும் ஐக்கியமும் நிறைந்த நாட்டிலேயே அடையலாம். தேசத்தின் இராஜீய வாழ்க்கையில் ஈடுபட்டாலொழிய சமூக சீர்திருத்தமாகாது வாக்காளர் உரிமை சகலருக்கும் இருந்தாலன்னியில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதும் கஷ்டம். ஜனங்களின் சம்மதத்துடன் எல்லாருடைய நன்மையை நாடி

ரோமாபுரியில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிதமானு லொழிய நீங்கள் நன்மையை எதிர் பார்க்கலாகாது. பிரஞ்சு சமூக வாதிகளைப்போல் இராஜீயத்தையும் சமூகப் பிரசினையையும் தேசத்தில் எந்த ஆட்சி நிலவினாலும் நாமே முன்னடையலாம்—எனப் பிரித்துவிட்டால் சமூக அடிமையாக நீங்களே அஸ்திவாரம் நாட்டியவர்களாவீர்கள்.

கடைசியாக இன்னுமொரு வார்த்தை. சுதந்திரத்தையும் ஐக்கியமான தேசத்தை ஸ்தாபனஞ் செய்யும் உங்கள் கடமையைப்பற்றியும் கூற விரும்புகிறேன்,

மனித குடும்பத்தை ஐக்கியமாக்கி ஒன்றாக இணைக்கும் ஜயத்திலேயே உங்கள் விடுதலையை ஸ்தாபிக்கலாம. இன்று மனித குடும்பத்தில் பாதி உணர்வையும், உற்சாகத்தையும் அடையும் அப் பெரும்பான்மையோரிடம் நமது குழந்தைகள் முதற் கல்வியைப் பெருகின்றார்கள்: எதோ மூடமான சித்தாந்தத்தால் இராஜீய சமூக சமத்துவம் அவர்களுக்கு அளிக்கப்படாமல் இவ் வைக்கியத்தினின்று பிரிக்கப்பட்டுள்ளார்கள். உங்கள் விடுதலையை நாடும் நீங்கள் பதமான தர்மத்தின் பெயரால் ஐக்கியத்திற்கு மாறான இவைகளை ஒவ்வொரு வழியிலும் தகர்த்து மறுக்கவேண்டும்.

தொழிலாளிகளின் விடுதலையோடு பெண்களின் விடுதலையையும் இணைக்கவேண்டும். உங்கள் வேலைக்கு பிரபஞ்சம் சத்தியத்தை அளிக்கும்.

இவை தான் மாஜினி அவர்கள் மனிதர்கடமைகளைப் பற்றிக் கூறியவைகள். இங்ஙனம் கடமையைப்பற்றி அற்புதமாய் விளக்கிய மாஜினியின் ஆன்மாவிற்கு சாந்தமளிக்கவேண்டுமென ஈசனைப் போற்றுகிறோம்.

Kesari Printing Works, Madras.